XLKO79

ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருக்கோவையார்.

[பேராசிரியர் உரையைத்தழுவி எழுதப்பட்ட துறைவிளக்கம் முதலியவற்றோடு கூடிய சுத்தப்பதிப்பு.]

---

லாங்மென்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனியார்

167, மவுன்ட் ரோட், சென்னை.

பம்பாய், கல்கத்தா.

1917

*Copy Right registered.*] [ரிஜிஸ்தர் செய்தது.

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௭ | 1 | வினையிலிருந்து | [illegible] |
| ,, | 9 | தொழுதில்லாமல் | [illegible] |
| ,, | 21 | உணர்ந்தார் | [illegible] |
| ௯ | 3 | பாடலை | [illegible] |
| ௧௦ | 21 | [illegible] | [illegible] |
| ௧௨ | 18 | கொடையங்கூடல் | [illegible] |
| [illegible] | 11 | பலைக்கினர் | பலைக்கனர் |

௨௨௪ ஆம் பக்கத்தின் கடைசி வரியை நீக்கிவிடுக.

உ

பரமபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய

# திருக்கோவையார்.

விநாயக வணக்கம்.

* எண்ணிறைந்த தில்லை யெழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகமே—நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யென்கின்ற
நானூறு மென்மனத்தே நல்கு.

நூற்சிறப்பு:

* ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்ப
ரேரணங் காணென்ப ரெண்ணரே ழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.

* இவ்விரண்டு செய்யுளும் பிற்காலத்து ஆன்றோரால் செய்யப்பட்டன.

## ௧. இயற்கைப்புணர்ச்சி.

இது பதினெட்டுக் கிளவியுடைத்து. அவை வருமாறு:—

[1]காட்சி [2]ஐயம் [3]தெளிதல் [4]நயப்பே
[5]உட்கோள் [6]தெய்வத் [7]துணிதலைக் கிளவியொடு
[8]கலவி யுரைத்த [9]இருவயி னொத்தல்
[10]கிளவி வேட்டல் [11]நலம்புனைந் துரைத்தல்
[12]பிரிவுணர்த் தல்லொடு [13]பருவர லறிதல்
[14]அருட்குண முரைத்த [15]இடமணித் தெனக்கூற
[16]ஆடிடத் துய்த்த [17]அருமை யறிதல்
[18]பாங்கியை யறிச லெனவீ ரொன்பான்
இயற்கை யியற்கை நெறியென மொழிப.

### காட்சி.

[illegible]

திருவளர்தாமரைசீர்வளர்காவிகளீசர்தில்லைக் [மரு
குருவளர்பூங்குமிழ்கோங்குபைங்காந்தள்கொண்டோங்குதெய்வ
மருவளர்மாலையொர்வல்லியினொல்கியனநடைவாய்ந்
துருவளர்காமன்றன்வென்றிக்கொடிபோன்றொளிர்கின்றதே. ௧

### ஐயம்.

[illegible]

போதோவிசும்போபுனலோபணிகளதுபதியோ
யாதோவறிகுவதேதுமரிதியமன்விடுத்த
தூதோவனங்கன்றுணையோவிணையிலிதொல்லைத்தில்லை
மாதோமடமயிலோவெனநின்றவர்வாழ்பதியே. (௨)

## தெளிதல்.

[அணங்கல்லளென் றயில்வேலவன்
துணங்களைநோக்கித் துறிந்துரைத்தது.]

பாயும்விடையரன் றில்லையன்னாள்படைக்கண்ணிமைக்குந்
தோயுநிலத்தடி தூமலர்வாடுந் துயரமெய்தி
யாயுமனனேயணங்கல்லளம்மாமுலைசுமந்து
தேயுமருங்குற்பெரும்பணைத்தோளிச்சிறுநுதலே. (௩)

## நயப்பு.

[வண்டமர்புரிகுழ லொண்டொடி மடந்தையை
நயந்தவண்ணல் வியந்துள்ளியது.]

அகல்கின்றவல்குற்றடமதுகொங்கையவையவநீ
புகல்கின்றதென்னைநெஞ்சுண்டேயிடையடையார்புரங்க
ளிகல்குன்றவில்லிற்செற்றோன்றில்லையீசனெம்மானெதிர்ந்த
பகல்குன்றப்பல்லுகுத்தோன்பழனம்மன்னபல்வளைக்கே (௪)

## உட்கோள்.

[இறைதிருக்காத்து மறிமானோக்கி—யுள்ளக்கருத்து வள்ளலறிந்தது]

அணியுமமிழ்துமென்னாவியுமாயவன்றில்லைச்சிந்தா
மணியும்பராரறியாமறையோனடிவாழ்த்தவரிற்
பிணியுமதற்குமருந்தும்பிறழப்பிறழமின்னும்
பணியும்புரைமருங்குற்பெருந்தோளிபடைக்கண்களே. (௫)

## தெய்வத்தை மகிழ்தல்.

[அன்னமென்னடை யரிவையைத்தந்த
மன்னிருந்தெய்வத்தை மகிழ்ந்துரைத்தது.]

வளைபயி லக்பூங்கடனின் றிடமேல்கடல்வானுகத்தின்
றுளைவழிநேர்கழிகோத்தெனத்தில்லைத் தொல்லோன்கயிலை
கிளைவயினீக்கியிக்கெண்டையங்கண்ணியைக்கொண்டுதந்த
விளைவையல்லால்வியவேனயவேன்றெய்வமிக்கனவே (சு)

## புணர்ச்சி துணிதல்.

[கோவ்வைச்சேவ்வாய்க் கோடியிடைப்பேதையைத்
தேய்வப்புணர்ச்சி சேம்மறுணிந்தது.]

ஏழுடையான்பொழிலெட்டுடையான்புயமென்னைமுன்னு
ளூழுடையான்புலியூரன்னபொன்னிவ்வுயர்பொழில்வாய்ச்
சூழுடையாயத்தைநீக்கும்விதிதுணையாமனனே
யாழுடையார்மணங்காணணங்காய்வந்தகப்பட்டதே. (எ)

## கலவியுரைத்தல்.

[கோலைவேலவன் கோடியிடையோடு
கலவியின்பங் கட்டுரைத்தது.]

சொற்பாலமுதிவள்யான்சுவையென்னத்துணிந்திங்ஙனே
நற்பால்வினைத்தெய்வந்தந்தின்றுநானிவளாம்பகுதிப்
பொற்பாரறிவார்புலியூர்ப்புனிதன்பொதியில்வெற்பிற்
கற்பாவியவரைவாய்க்கடிதோட்டகளவகத்தே. (அ)

## இருவயினொத்தல்.

[ஆராவின்பத் தன்புமீதூர—வாரார்முலையை மகிழ்ந்துரைத்தது.]

உணர்ந்தார்க்குணர்வரியோன்றில்லைச்சிற்றம்பலத்தொருத்தன்
குணந்தான்வெளிப்பட்டகொவ்வைச்செவ்வாயிக்கொடியிடைதோள்
புணர்ந்தாற்புணருந்தொறும்பெரும்போகம்பின்னும்புதிதாய்
மணந்தாழ்புரிகுழலாளல்குல்போலவளர்கின்றதே. (கூ)

## கிளவிவேட்டல்.

[அன்னமன்னவ ளவயவங்கண்டு
மென்மொழிகேட்க விருப்புற்றது.]

அளவியையார்க்குமறிவரியோன்றில்லையம்பலம்போல்
வளவியவான்கொங்கைவாட்டடங்கண்ணுதன்மாமதியின்
பிளவியன்மின்னிடைபேரமைதோளிதுபெற்றியென்றாற்
கிளவியையென்னோவினிக்கிள்ளையார்வாயிற்கேட்கின்றதே.

## நலம்புனைந்துரைத்தல்.

[பொங்கிழையைப் புனைநலம்புகழ்ந்
தங்கதிர்வேலோ னயர்வுநீங்கியது.]

கூம்பலங்கைத்தலத்தன்பரென்பூடுருகக்குனிக்கும்
பாம்பலங்காரப்பரன்றில்லையம்பலம்பாடலரிற்
றேம்பலஞ்சிற்றிடையீங்கிவடீங்கனிவாய்கமழு
மாம்பலம்போதுளவோவளிகாணும்மகன்பணையே. (கக)

## பிரிவுணர்த்தல்.

[பணிவளரல்குலைப் பயிர்ப்புறுத்திப்
பிணிமலர்த்தாரோன் பிரிவுணர்த்தியது.]

சிந்தாமணிதெண்கடலமிர்தந்தில்லையானருளால்
வந்தாலிகழப்படுமேமடமான்விழிமயிலே
யந்தாமரையன்னமேநின்னையானகன்றாற்றுவனோ
சிந்தாகுலமுற்றென்னோவென்னைவாட்டந்திருத்துவதே. ()

## பருவரலறிதல்.

[பிரிவுணர்ந்த பெண்கொடிதன்—பருவரலின் பரிசுநினைந்தது.]

கோங்கிற்பொலியரும்பேய்கொங்கைபங்கன்குறுகலரூர்
தீங்கிற்புகச்செற்றகொற்றவன்சிற்றம்பலமனையா
ணீங்கிற்புணர்வரிதென்றேநெடிதிங்ஙனேயிருந்தா
லாங்கிற்பழியாமெனவோவறியேனயர்கின்றதே. (கங)

## அருட்குணமுரைத்தல்.

[கூட்டியதெய்வத் தின்னருட்குணம்
வாட்டமின்மை வள்ளலுரைத்தது.]

தேவரிற்பெற்றநஞ்செல்வக்கடிவடிவார்திருவே
யாவரிற்பெற்றினியார்சிதைப்பாரிமையாதமுக்கண்
மூவரிற்பெற்றவர்சிற்றம்பலமணிமொய்பொழில்வாய்ப்
பூவரிற்பெற்றகுழலியென்வாடிப்புலம்புவதே. (கச)

## இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

[மடவரலை வற்புறுத்தி—இடமணித்தென் றவனியம்பியது.]

வருங்குன்றமொன்றுரித்தோன்றில்லையம்பலவன்மலயத்
திருங்குன்றவாணரிளங்கொடியேயிடரெய்தலெம்மூர்ப்
பருங்குன்றமாளிகைநுண்களபத்தொளிபாயநும்மூர்க்
கருங்குன்றம்வெண்ணிறக்கஞ்சுகமேய்க்குங்கனங்குழையே.

## ஆடிடத்துய்த்தல்.

[வன்புறையின் வற்புறுத்தி—அன்புறுமொழியை யகன்றது.]

தெளிவளர்வான்சிலைசெங்கனிவெண்முத்தந்திங்களின்வாய்ந்
தளிவளர்வல்லியன்னாய்முன்னியாடுபின்யானளவா
வொளிவளர்தில்லையொருவன்கயிலையுகுபெருந்தேன்
றுளிவளர்சாரற்கரந்துங்ஙனேவந்துதோன்றுவனே. (கரு)

## அருமையறிதல்.

[சுற்றமுமிடனுஞ் சூழலுநோக்கி—மற்றவளருமை மன்னனறிந்தது.]

புணர்ப்போனிலனும்விசும்பும்பொருப்புந்தன் பூங்கழலின்
றுணர்ப்போதெனக்கணியாக்குந்தொல்லோன் றில்லைச்சூழ்பொழில்வா
யிணர்ப்போதணிகுழலேழைதன் னீர்மையிந்நீர்மையென்
புணர்ப்போகனவோபிறிதோவறியேன்புகுந்ததுவே. [௱ற்

## பாங்கியையறிதல்.

[கடல்புரையாயத்துக் காதற்றோழியை
மடவரல்காட்ட மன்னனறிந்தது.]

உயிரொன்றுளமுமொன்றொன்றேசிறப்பிவட்கென்றொடென்னப்
பயில்கின்றசென்றுசெவியுறநீள்படைக்கண்கள்விண்வாய்ச்
செயிரொன்றுமுப்புரஞ்செற்றவன் றில்லைச்சிற்றம்பலத்துப்
பயில்கின்றகூத்தனருளெனலாகும்பணிமொழிக்கே. (கஅ)

---

## உ. பாங்கற்கூட்டம்.

---

இது பதினெட்டுத்துறையுடைத்து. அவை வருமாறு:—

1நினைதல் 2வினுத 3லுற்ற துரைத்தல்
4கழறன் 5மறுத்தல் 6கவன்றுரைத் தல்லே
7வலியழி வுரைத்தல் 8விதியொடு வெறுத்த
9ன்றொந்து கூற லேதை னீங்கி
10யியலிடங் கேட்ட 11லியலிடங் கூறல்
12வற்புறுத்தல் 13குறிவழிச் சேறல் 14காண்டல்

[15]வியந்து ரைத்தலம் மெல்லிய றன்னைக்
[16]கண்டமைகூறல் கருத்துக் கேற்பச்
[17]செவ்வி செப்ப [18]லவ்விடத் தேக
லிங்கிவை நிற்க விடந்தலை தனக்கு
[1]மாங்கவண் மெலிதல் [2]பொழில்கண்டு மகிழ்த
லீங்கா மகிழ்வொடு [3]நிலைகண்டு வியத்த
[4]றளர்வகன் றுரைத்தன் [5]மொழிபெற வருந்தல்
[6]கண்புதை [7]வருத்தங் காவ [8]ணண்விட
ணண்பொடு சென்று நன் [9]மருங் கணைத
[10]லின்றி யமையாமை [11]யாயத் துய்த்த
[12]னின்று வருந்த னிகழா றைந்துந்
துன்று பாங்கற் றுறையென மொழிப.

## பாங்கனை நினைதல்.

[எய்துதற்கருமை யேழையிற்றோன்றப்
பையுணுற்றவன் பாங்கனை நினைந்தது.]

பூங்கனையார் புனற்றென் புலியூர் புரிந்தம்பலத்து
ளாங்கெனையாண்டு கொண்டாடும் பிரானடித்தாமரைக்கே
பாங்கனையானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தா
லீங்கெனையார் தடுப்பார் மடப்பாவையை யெய்துதற்கே.

## பாங்கன் வினாதல்.

[கலிகெழுதிரடோள் மெலிவதுகண்ட
இன்னுயிர்ப்பாங்கன் மன்னனை வினாயது.]

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென்சிந்தையுள்ளு
முறைவா னுயர்மதிற் கூடலினாய்ந்த வொண்டீந்தமிழின்

றுறைவாய் நுழைந்தனையோவன்றியேழிசைச்சூழல்புக்கோ
விறைவாதடவரைத்தோட்கென்கொலாம்புகுந்தெய்தியதே.

## உற்றதுரைத்தல்.

[மற்றவன் வினவ உற்ற துரைத்தது.]

கோம்பிக்கொதுங்கிமேயாமஞ்ஞைகுஞ்சரங்கோளிழைக்கும்
பாம்பைபிடித்துப் படங்கிழித்தாங்கப் பணைமுலைக்கே
தேம்பற்றுடி யிடைமான் மடநோக்கி தில்லைச்சிவன்றா
ளாம்பொற்றட மலர்சூடு மென்னுற்ற லகற்றியதே. (உக)

## கழறியுரைத்தல்.

[வெற்பனைத்தன் மெய்ப்பாங்கன்—கற்பனையிற் கழறியது.]

உளமாம் வகைநம்மை யுய்யவந் தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய தில்லைத் தொல்லோன் கயிலை
வளமாம் பொதும்பரின் வஞ்சித்து நின்றோர் வஞ்சிம்மருங்கு
லிளமான் விழித்ததென் றோவின் றெம்மண்ண லிரங்கியதே.

## கழற்றெதிர்மறுத்தல்.

[ஆங்குயிரன்ன பாங்கன்கழற
வளந்தருவெற்ப னுளந்தளர்ந் துரைத்தது.]

சேணிற்பொலிசெம்பொன்மாளிகைத்தில்லைச்சிற்றம்பலத்து
மாணிக்கக்கூத்தன்வடவான்கயிலைமயிலைமன்னும்
பூணிற்பொலிகொங்கையாவியையோவியப்பொற்கொழுந்தைக்
காணிற்கழறலைகண்டிலைமென்றோட்கரும்பினையே. (உரு)

## கவன்றுரைத்தல்.

[கோலக்களிற்றண்ணல் துறைநயந்துரைப்பக்
கலக்கஞ்செய்பாங்கன் கவன்றுரைத்தது.]

விலங்கலைக்கால்விண்டுமேன்மேலிடவிண்ணுமண்ணுமுந்நீர்
கலங்கலைச்சென்றவன்றுங்கலங்காய்கமழ்கொன்றைதுன்று[க்
மலங்கலைச்சூழ்ந்தசிற்றம்பலத்தானருளில்லவர்போற்
றுலங்கலைச்சென்றி தென்னோவள்ளலுள்ளந் துயர்கின்றதே

## வலியழிவுரைத்தல்.

[நிறைபொறைதேற்ற நீதியோடுசால்பு
மறியுறுநோக்கிற்த வாடினேனென்றது.]

தலைப்படுசால்பினுக்குந்தளரேன்சித்தம்பித்தனென்று
மலைத்தறிவாரில்லையாரையுந்தேற்றுவனெத்துணையுங்
கலைச்சிறு திங்கண்மிலைத்தசிற்றம்பலவன்கயிலை
மலைச்சிறுமான்விழியாலழிவுற்று மயங்கினனே. (உரு)

## விதியொடுவெறுத்தல்.

[கல்விமிகுபாங்கன் கழறவெள்கிச்
செல்வமிகுசிலம்பன் றெரிந்துசெப்பியது.]

நல்வினையுந்நயந்தந்தின்றுவந்துநடுங்குமின்மேற்
கொல்வினை வல்லனகோங்கரும்பா மென்றுபாங்கன்சொல்ல
வில்வினை மேருவில் வைத்தவன்றில்லை தொழாரின்வெள்கித்
தொல்வினையாற்றுயரும்மென தாருயிர்துப்புறவே. (உசா)

## பாங்கனொந்துரைத்தல்.

[இன்னுயிர்ப்பாங்க னேழையைச்சுட்டி
நின்னதுதன்மை நினைந்திலையென்றது.]

ஆலத்தினாலமிர் தாக்கிய கோன்றில்லை யம்பலம்போற்
கோலத்தினாள் பொருட்டாக வமிர்தங் குணங்கெடினுங்
காலத்தினான் மழைமாறினு மாறாக்கவிகை நின்பொற்
சீலத்தை நீயுநினையா தொழிவதென் றீவினையே. (உஎ)

## இயலிடங்கேட்டல்.

[கழுமலெய்திய காதற்றோழன்
செழுமலைநாடனைத் தெரிந்துவினவியது.]

நின்னுடைநீர்மையு நீயுமிவ்வாறு நினைத்தெருட்டு [க்கண்
மென்னுடைநீர்மையிதென்னென்பதே தில்லையோர்கொண்மூ
மன்னுடை மால்வரையோ மலரோ விசும்போ சிலம்பா
வென்னிடம்யா தியனின்னையின்னே செய்தவீர்ங்கொடிக்கே.

## இயலிடங்கூறல்.

[அழுங்கலெய்திய வாருயிர்ப்பாங்கற்குச்
செழுங்கதிர்வேலோன் றெரிந்துசெப்பியது.]

விழியாற்பிணையாம்விளங்கியலான்மயிலாமிழற்று
மொழியாற்கிளியாமுதுவானவர்தமுடித்தொகைகள்
கழியாக்கழற்றில்லைக்கூத்தன்கயிலைமுத்தம்மலைத்தேன்
கொழியாத்திகழும்பொழிற்கெழிலாமெங்குலதெய்வமே. ()

## வற்புறுத்தல்.

[பெயர்ந்துரைத்த பெருவரைநாடனை
வயங்கெழுபுகழோன் வற்புறுத்தியது.]

குயிலைச்சிலம்படிக்கொம்பினைத்தில்லையெங்கூத்தப்பிரான்
கயிலைச்சிலம்பிற்பைம்பூம்புனங்காக்குங்கருங்கட்செவ்வாய்
மயிலைச்சிலம்பகண்டியான்போய்வருவன்வண்பூங்கொடிகள்
பயிலச்சிலம்பெதிர்கூய்ப்பண்ணைநண்ணும்பளிக்கறையே. ()

## குறிவழிச்சேறல்.

[அறைகழலண்ண லருளினவழியே
நிறைவுடைப்பாங்க னினைவொடுசென்றது.]

கொடுங்கால்குலவரையேழேழ்பொழிலெழில்குன்றமன்று
நடுங்காதவனைநடுங்கநுடங்குநடுவுடைய
விடங்காலயிற்கண்ணிமேவுங்கொலாந்தில்லையீசன்வெற்பிற்
றடங்கார்தருபெருவான்பொழினீழலந்தண்புனத்தே. (௩க)

## குறிவழிக்காண்டல்.

[துளிர்வரைநாடன் குறிவழிச்சென்று
தளிர்புரைமெல்லடித் தையலைக்கண்டது.]

வடிக்கண்ணிவைவஞ்சியஞ்சுமிடையிதுவாய்பவளந்
துடிக்கின்றவாவெற்பன்சொற்பரிசேயாண்டொடர்ந்துவிடா
வடிச்சந்தமாமலரண்ணல்விண்ணோர்வணங்கம்பலம்போற்
படிச்சந்தமுமிதுவேயிவளேயப்பணிமொழியே. (௩உ)

## தலைவனைவியந்துரைத்தல்.

[நயந்தவுநவு நலனுங்கண்டு—வியந்தவனையே மிகுத்துரைத்தது.]

குவளைக்களத்தம்பலவன்குரைகழல்போற்கமலத்
தவளைப்பயங்கரமாகநின்றாண்டவவயவத்தி
னிவளைக்கண்டிங்குநின்றங்குவந்தத்துணையும்பகர்ந்த
கவளக்களிற்றண்ணலேதிண்ணியானிக்கடலிடத்தே. (௩௩)

## கண்டமைகூறல்.

[பிடிமிசைவைத்துப் பேதையதுநிலைமை
அடுதிறலண்ணற் கறியவுரைத்தது.]

பணந்தாழரவரைச்சிற்றம்பலவர்பைம்பொற்கயிலைப்
புணர்ந்தாங்ககன்றபொருகரியுன்னிப்புனத்தயலே
மணந்தாழ்பொழிற்கண்வடிக்கண்பரப்பிமடப்பிடிவாய்
நிணந்தாழ்சுடரிலைவேலகண்டேனென்றுநின்றதுவே. (௩.௪)

## செவ்விசெப்பல்.

[அற்புதன்கயிலை மற்போலிசிலம்பற்
கவ்வுநக்கண்டவன் செவ்விசெப்பியது.]

கயலுளவேகமலத்தலர்மீதுகனிபவளத்
தயலுளவேமுத்தமொத்தநிரையரனம்பலத்தி
னியலுளவேயிணைச்செப்புவெற்பாநினதீர்ங்கொடிமேற்
புயலுளவேமலர்சூழ்ந்திருடேங்கிப்புரள்வனவே. (௩௫)

## அவ்விடத்தேகல்.

[அரிவையதுநிலைமை யறிந்தவனுரைப்ப
எரிகதிர்வேலோ னேகியது.]

எயிற்குலமூன்றிருந்தீயெய்தவெய்தவன்றில்லையொத்துக்
குயிற்குலங்கொண்டு தொண்டைக்கனிவாய்க்குளிர்முத்தநி
தயிற்குலவேல்கமலத்திற்கிடத்தியனநடக்கு [ரைத்
மயிற்குலங்கண்டதுண்டேலதுவென்னுடைமன்னுயிரே. ()

---

## ௩. இடந்தலைப்பாடு.

——(o)——

இதுபதின்மூன்று துறையுடைத்து. அவை வருமாறு:—

பொழிலிடைச் சேற விடந்தலை சொன்ன
வழியொடு கூட்டி வகுத்திசி ஞேரே.

இதனையும் மேலைப்பாங்கற் கூட்டமுணர்த்திய சூத்தி
ரத்தில் " ஈங்கிவை நிற்க விடந்தலைதனக்கும் " எனக்கூறிய

வாறே மின்னிடைமெலிதல் முதல்நின்று வருந்துதலீறுகக் கூறப்பட்ட கிளவிகளோடு கூட்டி இடந்தலைப்பாடா மென்று வகுத்துரைத்துக்கொள்க. அவை பாங்கற் கூட்டத்திற்கும், இடந்தலைப்பாட்டிற்கும், உரியவாமாறு என்னை யெனின், பாங்கற்கூட்டம் நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும், இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற்கூட்ட நிகழும் ஆதலின்.

## மின்னிடை மெலிதல்.

[மன்னனை நினைந்து—மின்னிடைமெலிந்தது.]

ஆவியன்னாய்கவலேலகலேமென்றளித்தொளித்த
வாவியன்னார்மிக்கவாவினராய்க்கெழுமற்கழிவுற்
றுவியன்னார்மன்னியாடிடஞ்சேர்வர்கொலம்பலத்தெம்
மாவியன்னான்பயிலுங்கயிலாயத்தருவரையே. (கஎ)

## பொழில்கண்டுமகிழ்தல்.

[மணங்கமழ்பொழிலின் வடிவுகண்
டணங்கெனநினைந் தயர்வுநீங்கியது.]

காம்பிணையாற்களிமாமயிலாற்கதிர்மாமணியால்
வாம்பிணையால்வல்லியொல்குதலான்மன்னுமம்பலவன்
பாம்பிணையாக்குழைகொண்டோன்கயிலைப்பயில்புனமுந்
தேம்பிணைவார்குழலாளெனத்தோன்றுமென்சிந்தனைக்கே.()

## உயிரென வியத்தல்.

[வெறியுறு பொழிலின் வியன்பொதும்பரின்
நெறியுறுகுழலி நிலைமைகண்டது.]

நேயத்ததாய்நென்னலென்னைப் புணர்ந்துநெஞ்சநெகப்போ
யாயத்ததாயமிழ்தாயணங்காயரனம்பலம்போற்

றேயத்ததாயென் றன்சிந்தையதாய்த்தெரியிற்பெரிது
மாயத்ததாகியிதோவந்துநின் றதென்மன்னுயிரே. (௩௯)

## தளர்வகன் றுரைத்தல்.

[பனிமதிநுதலியைப் பைம்பொழிலிடைத்
தனிநிலைகண்டு தளர்வகன் றுரைத்தது.]

தாதிவர்போதுகொய்யார்தையலாரங்கைகூப்பநின்று
சோதிவரிப்பந்தடியார்சுனைப்புனலாடல்செய்யார்
போதிவர்கற்பகநாடுபுல்லென்னத்தம்பொன்னடிப்பா
யாதிவர்மாதவமம்பலத்தான்மலையெய்துதற்கே. (௪0)

## மொழிபெற வருந்தல்.

[கூடற்கரிதென வாடி யுரைத்தது.]

காவிநின்றேர்தருகண்டர்வண்டில்லைக்கண்ணார்கமலத்
தேவியென்றேயையஞ்சென் றதன்றேயறியச்சிறிது
மாவியன் றன்னமென்னோக்கிநின்வாய்திறவாவிடிலென்
னாவியன்றேயமிழ்தேயணங்கேயின் றழிகின்றதே. (௪௧)

## நாணிக்கண்புதைத்தல்.

[ஆயிடைத்தனிநின் றுற்றதழிந்து
வேயுடைத்தோளியோர் மென்கொடிமறைந்தது.]

அகலிடந்தாவியவானோறிந்திறைஞ்சம்பலத்தி
னிகலிடந்தாவிடையீசற்றொழாரினின்னற்கிடமா
யுகலிடந்தான்சென்றெனதுயிர்நையாவகையொதுங்கப்
புகலிடந்தாபொழில்வாயெழில்வாய்தருபூங்கொடியே. (௪௨)

## கண்புதைக்க வருந்தல்.

[வேற்றநங்கண்ணிணை மிளிர்வனவன்றுநின்
கூற்றநமேனியே கூற்றெனக் கென்றது.]

தாழச்செய்தார்முடி தன்னடிக்கீழ்வைத்தவரைவிண்ணோர்
சூழச்செய்தானம்பலங்கைதொழாரினுள்ளந்துளங்கப்[ன்னைநீ
போழச்செய்யாமல்வைவேற்கண்புதைத்துப்பொன்னேயெ
வாழச்செய்தாய்சுற்றுமுற்றும்புதைநின்னைவாணுதலே. ().

## நாண்விடவருந்தல்.

[ஆங்ஙனங்கண் டாற்றனாகி
நீங்கினநாணொடு நேரிழைநின்றது.]

குருநாண்மலர்ப்பொழில்சூழ்தில்லைக்கூத்தனையேத்தலர்போ
வருநாள்பிறவற்கவாழியரோ மற்றென்கண்மணிபோன் [ல்
றொருநாள்பிரியாதுயிரிற்பழகியுடன்வளர்ந்த
வருநாணளியவழல்சேர்மெழுகொத்தழிகின்றதே. (உசு)

## மருங்கணைதல்.

[ஒளிதிகழ்வார்குழ லளிகுலம்விலக்கிக்
கருங்களிற்றன்னனன் மருங்கணைந்தது.]

கோலத்தனிக் கொம்பரும்பர் புக்கஃதே குறைப்பவர்தஞ்
சீலத்தன கொங்கைதேற்றகிலேஞ் சிவன்றில்லையன்னா[யாற்
ணூலொத்தநேரிடைநொய்ம்மையெண்ணாதுநுண்டேனசை
சாலத்தகாதுகண்டீர் வண்டுகாள் கொண்டைசார்வதுவே.

## இன்றியமையாமைகூறல்.

[வென்றிவேலவன் மெல்லியறனக்
கின்றியமையாமை யெடுத்துரைத்தது.]

நீங்கரும்பொற்கழற்சிற்றம்பலர்நெடுவிசும்பும்
வாங்கிருந்தெண்கடல்வையமுமெய்தினும்யான்மறவேன்
றீங்கரும்பும்மமிழ்துஞ்செழுந்தேனும்பொதிந்துசெப்புங்
கோங்கரும்புந்தொலைத்தென்னையுமாட்கொண்டகொங்கை
[களே.

## ஆயத்துய்த்தல்.

[தேங்கமழ் சிலம்பன் பாங்கிற் கூட்டியது.]

சூளாமணியும்பர்க்காயவன்சூழ்பொழிற்றில்லையன்னாய்க்
காளாயொழிந்தவென்னுருயிராரமிழ்தேயணங்கே
தோளாமணியேபிணையேபலசொல்லியென்னை துன்னு
நாளார்மலர்ப்பொழில்வாயெழிலாயநணுகுகவே. (சஎ)

## நின்றுவருந்தல்.

[பாங்கிற்கூட்டிப் பதிவயிற்பெயர்வோ
னீங்கற்கருமை நின்றுநினைந்தது.]

பொய்யுடையார்க்கரன்போலகலும்மகன்றுற்புணரின்
மெய்யுடையார்க்கவனம்பலம்போலமிகநணுகு
மையுடைவாட்கண்மணியுடைப்பூண்முலைவாணுதல்வான்
பையுடைவாளரவத்தல்குல்காக்கும்பைம்பூம்புனமே. (சஅ)

## பொழிலிடைச்சேறல்.

[ஐயரிக்கண்ணியை யாடிடத்தேசென்
றெய்துவனெனநினைந் தேந்தல்சென்றது.]

என்னறிவால்வந்ததன்றிதுமுன்னுமின்னும்முயன்றுன்
மன்னெறிதந்ததிருந்தன்றுதெய்வம்வருந்தனெஞ்சே
மின்னெறிசெஞ்சடைக்கூத்தப்பிரான்வியன்றில்லைமுந்நீர்
பொன்னெறிவார்துறைவாய்ச்சென்றுமின்றோய்பொழிலிடத்தே. ()

இவற்றுட் பொழி லிடைச்சேற லொன்றுமே இடந்தலைப் பாடாகவைத்து, மற்றைப் பன்னிரண்டினையும் பாங்கற்கூட்டத்திற் சேர்த்தலுமாம்.

---

## ௪. மதியுடம்படுத்தல்.

இது பத்துத் துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]சேற [2]றுணிதல் [3]வேழம் வினாதல்
[4]கலைமான் [5]வழி [6]பதி [7]பெயர்வினா தல்லே
[8]மொழிபெறா துரைத்தல் [9]கருத்தறி வித்த
[10]லிடைவி னாதலோ டிவையீ ரைந்து
மடவாற் றோழிக்கு மதியுடம் படுத்தல்.

### பாங்கியிடைச்சேறல்.

[கரந்துறைகிளவியிற் காதற்றோழியை
இரந்துகுறையுறுவலென் றேந்தல்சென்றது.]

எளிதன்றினிக்கனிவாய்வல்லிபுல்லலெழின்மதிக்கீற்
றொளிசென்றசெஞ்சடைக்கூத்தப்பிரானையுன்னாரினெங்கட்
டெளிசென்றவேற்கண்வருவித்தசெல்லலெல்லாந்தெளிவித்
தளிசென்றபூங்குழற்றோழிக்குவாழியறிவிப்பனே. (௩0)

## குறையுறத்துணிதல்.

[ஓரிடத்தவரை யொருங்குகண்டுதன்
பேரிடர்ப்பெருந்தகை பேசத்துணிந்தது.]

குவளைக்கருங்கட்கொடியேரிடையிக்கொடிகடைக்க
ணுவளைத்தனதுயிரென்றதுதன்னொடுவேற்றுமையில்லா
தவளைத்தன்பால்வைத்தசிற்றம்பலத்தானருளிலர்போற்
றுவளத்தலைவந்தவின்னலின்னேயினிச்சொல்லுவனே. (௫௧)

## வேழம்வினாதல்.

[ஏழையரிருவரு மிருந்தசெவ்வியுள்
வேழம்வினாஅய் வெற்பன்சென்றது.]

இருங்களியாயின்றியானிறுமாப்பவின்பம்பணிவோர்
மருங்களியாவனலாடவல்லோன்றில்லையான்மலையீங்
கொருங்களியார்ப்பவுமிழ்ம்மதத்திருகோட்டொருநீள்
கருங்களியார்மதயானையுண்டோவரக்கண்டதுவே. (௫௨)

## கலைமான்வினாதல்.

[சிலைமானண்ணல் கலைமான் வினாயது.]

கருங்கண்ணனையறியாமைநின்றோன்றில்லைக்கார்ப்பொழில்
வருங்கண்ணனையவண்டாடும்வளரிளவல்லியன்னீர் [வாய்
ரிருங்கண்ணனையகணைபொருபுண்புணரிப்புனத்தின்
மருங்கண்ணனையதுண்டோவந்ததீங்கொருவான்கலையே. ()

## வழிவினாதல்.

[கலைமான்வினாயகந்துவேறறிய மலைமானண்ணல் வழிவினாயது.]

சிலம்பணிகொண்டசெஞ்சீறடிபங்கன்றன்சீரடியார்
குலம்பணிகொள்ளவெனைக்கொடுத்தோன்கொண்டுதானணிபுங்

கலம்பணிகொண்டிடமம்பலங்கொண்டவன்கார்கயிலைச்
சிலம்பணிகொண்டநஞ்சீறூர்க்குரைமின்கள்சென்னெறியே.

## பதிவினுதல்.

[பதியோடுபிறவினுய் மொழிபலமொழிந்து
மதியுடம்படுக்க மன்னன்வலிந்தது.]

ஒருங்கடமூவெயிலொற்றைக்கணைகொள்சிற்றம்பலவன்
கருங்கடமூன்றுகுநால்வாய்க்கரியுரித்தோன்கயிலை
யிருங்கடமூடும்பொழிலெழிற்கொம்பரன்னீர்களின்னே
வருங்கடம்மூர்பகர்ந்தாற்பழியோவிங்குவாழ்பவர்க்கே. (ருரு)

## பெயர்வினுதல்.

[போமைத் தோளியர் பேர்வினுயது.]

தாரென்னவோங்குஞ்சடைமுடிமேற்றனித்திங்கள்வைத்த
காரென்னவாருங்கரைமிடற்றம்பலவன்கயிலை
யூரென்னவென்னவும்வாய்திறவீரொழிவீர்பழியேற்
பேரென்னவோவுரையீர்விரையீர்ங்குழற்பேதையரே. (ருசா)

## மொழிபெறுதுகூறல்.

[தேமொழியவர் வாய்மொழிபெறுது
யட்டவிழ்தாரோன் கட்டுரைத்தது.]

இரதமுடையநடமாட்டுடையவரெம்முடையர்
வரதமுடையவணிதில்லையன்னவரிப்புனத்தார்
விரதமுடையர்விருந்தொடுபேச்சின்மைமீட்டதன்றேற்
சரதமுடையர்மணிவாய்திறக்கிற்சலக்கென்பவே. (ருஎ)

## கருத்தறிவித்தல்.

[உரைத்த துரையாது கருத்தறிவித்தது.]

வின்னிறவாணுதல்வேனிறக்கண்மெல்லியலைமல்லற்
றன்னிறமொன்றிலிருத்திநின்றோன்றனதம்பலம்போன் [யீர்
மின்னிறநுண்ணிடைப்பேரெழில்வெண்ணகைப்பைந்தொடி
பொன்னிறவல்குலுக்காமோமணிநிறப்பூந்தழையே. (௫அ)

## இடைவினாதல்.

[வழிபதி பிறவினாய் மொழிபல மொழிந்தது.]

கலைக்கீழகலல்குற்பாரமதாரங்கண்ணார்ந்திலங்கு
முலைக்கீழ்ச்சிறிதின்றிநிற்றன்முற்றாதன்றிலங்கையர்கோன்
மலைக்கீழ்விழச்செற்றசிற்றம்பலவர்வண்பூங்கயிலைச்
சிலைக்கீழ்க்கணையன்னகண்ணீரெதுநுங்கள்சிற்றிடையே. ( )

---

# ௫. இருவருமுள்வழியவன்வரவுணர்தல்.

——(o)——

இஃது இரண்டு துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]ஐய [2]நாடலாங்கவை யிரண்டு
மையறு தோழி யவன்வர வுணர்தல்.

## ஐயுறுதல்.

[அடற்கதிர்வேலோன் றொடர்ச்சிநோக்கித்
தையற்பாங்கி யையமுற்றது.]

பல்லிலனாகப்பகலைவென்றோன்றில்லைபாடலர்போ
லெல்லிலனாகத்தொடேனம்விழவிவன்யாவன்கொலாம்

வில்லிலஞகத்தழைகையில்வேட்டைகொண்டாட்டமெய்யோர்
சொல்லிலஞகற்றவாகடவானிச்சுனேப்புனமே. (சுo)

## அறிவுநாடல்.

[வெற்பன்வினய சொற்பதநோக்கி
நெறிதழற்பாங்கி யறிவுநாடியது.]

ஆழமன்றேவுடைத்திவ்வையர்வார்த்தையனங்கனேந்து
விழமுன்றேக்கியவம்பலத்தான்வெற்பினிப்புனத்தே
வேழமுன்னய்க்கலேயாய்ப்பிறவாய்ப் பின்னுமென்றழையாய்
மாழைமென்றேக்கியிடையாய்க்கழிந்ததுவந்துவந்தே. (சுக)

---

## சு. முன்னுறவுணர்தல்.

—(o)—

இஃது ஒரு துறையுடைத்து. அது வருமாறு:—

வாட்டம் வினுதன் முன்னுற வுணர்தல்
கூட்டி யுணருங் குறிப்புரை யாகும்.

## வாட்டம்வினுதல்.

[மின்னிடைமடந்தை தன்னியனேக்கி
வீங்குமென்முலைப் பாங்கி பகர்ந்தது.]

நிருத்தம்பயின்றவன்சிற்றம்பலத்துநெற்றித்தனிக்க
ணொருத்தன்பயிலுங்கயிலேமலேயினுயர்குடுமித்
திருத்தம்பயிலுஞ்சுனேகுடைந்தாடிச்சிலம்பெதிர்கூய்
வருத்தம்பயின்றுகொல்லோவல்லிமெல்லியல்வாடியதே. ()

## எ. குறையுறவுணர்தல்.

இது நான்கு துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]குறையுற்று நிற்ற [2]லவன்குறிப் பறித
[3]லவள்குறிப் பறிதலோ [4]டவர்நினை வெண்ணல்
கூறிய நான்குங் குறையுற வுணர்வெனத்
தேறிய பொருளிற் றெரிந்திசி னோரே.

### குறையுற்று நிற்றல்.

[கறையுற்ற வேலவன் குறையுற்றது.]

மடுக்கோகடலின்விடுதிமிலன்றிமறிதிரைமீன்
படுக்கோபணிலம்பலகுளிக்கோபரன்றில்லைமுன்றிற்
கொடுக்கோவளைமற்றுநும்மையர்க்காயகுற்றேவல்செய்கோ
தொடுக்கோபணியீரணியீர்மலர்துஞ்சுரிகுழற்கே. (௫௫)

### அவன்குறிப்பறிதல்.

[பொற்றொடித்தோளிதன் சிற்றிடைப்பாங்கி
வெறிப்பூஞ்சிலம்பன் குறிப்பறிந்தது.]

அளியமன்னும்மொன்றுடைத்தண்ணலெண்ணரன்றில்லையன்
னிளியைமன்னுங்கடியச்செல்லநிற்பிற்கிளராளகத் [னாள்
தளியமர்த்தேறின்வறிதேயிருப்பிற்பளிங்கடுத்த [முகத்தே.
வொளியமர்ந்தாங்கொன்றுபோன்றொன்றுதோன்றுமொளி

### அவள்குறிப்பறிதல்.

[ஆங்கவள் குறிப்புப் பாங்கி பகர்ந்தது.]

பிழைகொண்டொருவிக்கெடாதன்புசெய்யிற்பிறவியென்னு
மூழைகொண்டொருவன்செல்லாமைநின்றம்பலத்தாடுமுன்னே

னுழைகொண்டொருங்கிருநோக்கம்பயின்றவெம்மொண்ணுதன்மாந்
தழைகொண்டொருவனென்னுமுன்னமுள்ளந்தழைத்திடுமே. (௬௯)

## இருவர்நினைவுமொருவழியுணர்தல்.

[அன்புறுநோக் காங்கறிந் தின்புறுதோழி யெண்ணியது.]

மெய்யேயிவற்கில்லைவேட்டையின்மேன்மனமீட்டிவரும்
பொய்யேபுனத்தினைகாப்பதிறைபுலியூரனையாண்
மையேர்குவளைக்கண்வண்டினம்வாழுஞ்செந்தாமரைவா
யெய்யேமெனினுங்குடைந்தின்பத்தேனுண்டெழிதருமே ().

---

## ௮. நாண நாட்டம்.

இஃது ஐந்து துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]பிறைதொழு கென்றல் பின்னு மவளை
[2]யுறவென வேறு படுத்தி யுரைத்தல்
[3]சுனையாடல் கூற [4]றோற்றங் கண்டு
புணர்ச்சி யுரைத்தல் [5]பொதுவெனக் கூறி
மதியுடம் படுதல் வழிகாண னடுங்கல்
[6]புலிமிசை வைத்தல் புகலுங் காலே.

### பிறைதொழுகென்றல்.

[பிறைதொழுகென்று பேதைமாதரை
நறுநுதற்பாங்கி நாணநாட்டியது.]

மைவார்கருங்கண்ணிசெங்கரங்கூப்புமறந்துமற்றப்
பொய்வானவரிற்புகாதுதன்பொற்கழற்கேயடியே
னுய்வான்புகவொளிர்தில்லைநின்றோன்சடைமேலதொத்துச்
செவ்வானடைந்தபசுங்கதிர்வெள்ளைச்சிறுபிறைக்கே. ()

## வேறுபடுத்துக்கூறல்.

[வேய்வளைத்தோளியை வேறுபாடுகண்
டாய்வளைத்தோழி யணங்கென்றது.]

அக்கின்றவாமணிசேர்கண்டனம்பலவன்மலயத்
திக்குன்றவாணர்கொழுந்திச்செழுந்தண்புனமுடையா
ளக்குன்றவா றமர்ந்தாடச்சென்றாளங்கமவ்வவையே
யொக்கின்றவாறணங்கேயிணங்காகுமுனக்கவளே. (சு௯)

## சுனையாடல் கூறி நகைத்தல்.

[மாணநாட்டிய வார்குழற்பேதையை
நாணநாட்டி நகைசெய்தது.]

செந்நிறமேனிவெண்ணீறணிவோன்றில்லையம்பலம்போ
லந்நிறமேனிநின்கொங்கையிலங்கழிகுங்குமமு
மைந்நிறவார்குழன்மாலையுந்தாதும்வளாய்மதஞ்சே
ரிந்நிறமும்பெறின்யானுங்குடைவனிருஞ்சுனையே. (சுசு)

## புணர்ச்சியுரைத்தல்.

[மணக்குறி நோக்கிப் புணர்ச்சி யுரைத்தது.]

பருங்கண்கவர்கொலைவேழப்படையோன்படப்படர்தீத்
தருங்கண்ணுதற் றில்லையம்பலத்தோன்றடமால்வரைவாய்க்
கருங்கண்சிவப்பக்கனிவாய்விளர்ப்பக்கண்ணாரளிபின்
வருங்கண்மலைமலர்சூட்டவற்றேமற்றவ்வான்சுனையே. (எ0)

## மதியுடம்படுதல்.

[அயில்வேற்கண்ணியோ டாடவன்றனக்குயிரொன்றென்
மயிலியற்றோழி மதியுடம்பட்டது.]

காகத்திருகண்ணிற்கொன்றேமணிகலந்தாங்கிருவ
ராகத்துளோருயிர்கண்டனம்யாமின்றியாவையுமா
மேகத்தொருவனிரும்பொழிலம்பலவன்மலையிற்
றோகைக்குந்தோன்றற்குமொன்றாய்வருமின்பத்துன்பங்களே. (எக)

---

## சு. நடுங்கநாட்டம்.

---

இஃது ஒரு துறையுடைத்து. அது வருமாறு:—மேல் "நடுங்
கல், புலிமிசை வைத்தல் புகலுங் காலே."

### புலிமிசைவைத்தல்.

[நுடங்கிடைப் பாங்கி நடுங்க நாடியது.]

ஆவாவிருவரறியாவடிதில்லையம்பலத்து
மூவாயிரவர்வணங்கநின்றோனையுன்னாரின்முன்னித்
தீவாயுழுவைகிழித்ததந்தோசிறிதேபிழைப்பித்
தாவாமணிவேல்பணிகொண்டவாறின்றோராண்டகையே.()

---

## கo. மடற்றிறம்.

---

இஃது ஒன்பது துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]ஆற்றா துரைத்த [2]லுலகின்மேல் வைத்த
[3]றன்றுணி புரைத்தலொடு [4]வகை யுரைத்த
[5]லருளா லரிதென [6]னடையா லரிதென

[7]லவயவ மெழுத லரிதென விலக்க
[8]லுடம்படாது விலக்க [9]லுடம்பட்டு விலக்க
றிடம்பட வொன்பதுஞ் செப்புங் காலை
வடம்படு முலைமேன் மடலா கும்மே.

## ஆற்றாதுரைத்தல்.

[மலிலற்றிரள் வரைத்தோளவன் சொல்லாற்றது சொல்லியது.]

பொருளாவெனைப்புகுந்தாண்டுபுரந்தரன்மாலயன்பா
லிருளாயிருக்குமொளிநின்றசிற்றம்பலமெனலாஞ்
சுருளார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்துடியிடையீ
ரருளாதொழியினொழியாதழியுமென்னாருயிரே. (எங)

## உலகின்மேல்வைத்துரைத்தல்.

[புலவேலண்ணல் புனைமடலேற்
றுலகின்மேல்வைத் துய்த்துரைத்தது.]

காய்சினவேலன்னமின்னியல்கண்ணின்வலைகலந்து
வீசினபோதுள்ளமீனிழந்தார்வியன்றென்புலியூ
ரீசனசாந்துமெருக்குமணிந்தோர்கிழிபிடித்துப்
பாய்சினமாவெனவேறுவர்சீறூர்ப்பனைமடலே. (எச)

## தன்றுணிபுரைத்தல்.

[மானவேலவன் மடன்மாமிசை
யானுமேறுவ னென்னவுரைத்தது.]

விண்ணை மடங்கவிரிநீர்பரந்துவெற்புக்கரப்ப
மண்ணை மடங்கவருமொருகாலத்துமன்னிநிற்கு
மண்ணன்மடங்கலதளம்பலவனருளிலர்போற் [யே
ண்ணை மடன்மிசையான்வரப்பண்ணிற்றோர்பெண்கொடி.

## மடலேறும் வகையுரைத்தல்.

[அடல்வேலவ னழிவுற்று மடலேறும் வகையுரைத்தது.]

கழிகின்றவென்னையுநின்றநின்கார்மயிறன்னையும்யான்
கிழியொன்றநாடியெழுதிக்கைக்கொண்டென்பிறவிகெட்டின்
றழிகின்றதாக்கியதாளம்பலவன்கயிலையந்தேன்
பொழிகின்றசாரனுஞ்சீறூர்த்தெருவிடைப்போதுவனே. ()

## அருளாலரிதெனவிலக்கல்.

[அடல்வேலன்ன லருளுடைமையின்
மடலேற்றுனக் கரிதென்றது.]

நடலும்வணங்குந்தொல்லோனெல்லைநான்முகன்மாலறியாக்
கடலுமுருவத்தரன்றில்லைமல்லற்கண்ணார்ந்தபெண்ணை
யுடலும்பெடையொடொண்சேவலுமுட்டையுங்கட்டழித்து
மடலும்புனைதரின்யார்கண்ணதோமன்னவின்னருளே.(எஎ)

## மொழிநடையெழுதலரிதெனவிலக்கல்.

[அவயவமரிதி னன்னணறீட்டினும்
இவையிவைதீட்ட லியலாதென்றது.]

அடிச்சந்தமால்கண்டிலாதனகாட்டிவந்தாண்டுகொண்டென்
முடிச்சந்தமாமலராக்குமுன்னோன்புலியூர்ப்புரையுங்
கடிச்சந்தயாழ்கற்றமென்மொழிக்கன்னியனநடைக்குப்
படிச்சந்தமாக்கும்படமுளவோநும்பரிசகத்தே. (எஅ)

## அவயவமெழுதலரிதெனவிலக்கல்.

[அவயவ மானவை யிவையிவை யென்றது.]

யாழுமெழுதியெழின்முத்தெழுதியிருளின்மென்பூச்
சூழுமெழுதியொர்தொண்டையுந்தீட்டியென்றொல்பிறவி

யேழுமெழுதாவகைசிதைத்தோன்புலியூரிளமாம்
போழுமெழுதிற்றொர்கொம்பருண்டேற்கொண்டுபோ குகவே.

## உடம்படாதுவிலக்கல்.

[அடுபடையண்ணலழிதுயரொழிகென
மடநடைத்தோழி மடல்விலக்கியது.]

ஊர்வாயொழிவாயுயர்பெண்ணைத்திண்மடனின்குறிப்புச்
சீர்வாய்சிலம்பதிருத்தவிருந்திலமீசர்தில்லைக்
கார்வாய்குழலிக்குன்றுதரவோதிக்கற்பித்துக்கண்டா
லார்வாய்தரினறிவார்பின்னைச்செய்கவறிந்தனவே. (அ0)

## உடம்பட்டுவிலக்கல்.

[அரவருநுண்ணிடைக் குரவருகூந்தலென்
னுள்ளக்கருத்து விள்ளாளென்றது.]

பைந்நாணரவன்படுகடல்வாய்ப்படுநஞ்சமுதா
மைந்நாண்மணிகண்டன்மன்னும்புலியூர்மணந்தபொன்னிம்
மொய்ந்நாண்முதுதிரைவாயானழுந்தினுமென்னின்முன்னு
மிந்நாளிதுமதுவார்குழலாட்கென்கணின்னருளே. (அக)

---

## கக. குறைநயப்புக்கூறல்.

---

இஃது எட்டுத்துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]குறிப்பறிதலோடு [2]மென்மொழி கூறல்
[3]விரவிக் கூற [4]லறியாள் போறல்
[5]வஞ்சித் துரைத்தல் [6] புலந்து கூறல்

[7]வன்மொழி கூறன் [8]மனத்தொடு நேர்தல்
சொன்னவிரு நான்குந் துறைதுறை நயப்பென
மன்னிய பொருளில் வகுத்திசி னோரே.

## குறிப்பறிதல்.

[நறைவளர்கோதையைக் துறைநயப்பித்துத்
தன்னறிதற்ற வொள்ளிழை யுரைத்தது.]

தாதேய்மலர்க்குஞ்சியஞ்சிறைவண்டுதண்டேன்பருகித்
தேதேயெனுந்தில்லையோன்சேயெனச்சினவேலொருவ
னாதேபுனத்திடைவாளாவருவர்வந்தியாதுஞ் சொல்லார்
யாதேசெயத்தக்கதுமதுவார்குழலேந்திழையே. (௮௨)

## மென்மொழியார்கூறல்.

[ஒளிநறுவேலவன் றளர்வுறுகின்றமை
இன்மொழியவட்கு மென்மொழிமொழிந்தது.]

வரிசேர்தடங்கண்ணிமம்மர்கைம்மிக்கென்னமாயங்கொலோ
வெரிசேர்தளிரன்னமேனியனீர்ந்தழையன்புலியூர்ப் [ன்னத்
புரிசேர்சடையோன்புதல்வன்கொல்பூங்கணைவேள்கொலெ
தெரியேமுரையான்பிரியானொருவனித்தேம்புனமே. (௮௩)

## விரவிக்கூறல்.

[வன்மொழியின்மன மெலிவதஞ்சி
மென்மொழிவிரவி மிகுத்துரைத்தது.]

நீகண்டனையெனின்வாழலைநேரிழையம்பலத்தான்
சேய்கண்டனையன்சென்றாங்கோரலவன்றன்சீர்ப்பெடையின்
வாய்வண்டனையதோர்நாவற்கனிநனிநல்கக்கண்டு
பேய்கண்டனையதொன்றாகின்றானப்பெருந்தகையே (௮௪)

## அறியாள்போறல்.

[அறியாள் போன்று தறியாள் கூறியது.]

சங்கந்தருமுத்தியாம்பெறவான்கழிதான்கெழுமிப்
பொங்கும்புனற்கங்கைதாங்கிப்பொலிகலிப்பாறுலவு
துங்கமலிதலையேந்தலினேந்திழைதொல்லைப்பன்மா
வங்கமலிகலிநீர்தில்லைவானவனேர்வருமே. (அரு)

## வஞ்சித்துரைத்தல்.

[நேந்சநேகிழ்வகை வந்சித்திவையிவை
சேந்சடையோன்புகழ் வந்சித்துரைத்தது.]

புரங்கடந்தானடிகாண்பான்புவிவிண்டுபுக்கறியா
திரங்கிடெந்தாயென்றிரப்பத்தன்னீரடிக்கென்னிரண்டு
கரங்கடந்தானொன்றுகாட்டமற்றாங்கதுங்காட்டிடென்று
வரங்கிடந்தான்றில்லை யம்பலமுன்றிலம்மாயவனே. (அகூ)

## புலந்துகூறல்.

[திருந்தியசோல்லிந் சேவ்விபேறாது
வருந்தியசோல்லின் வருந்துரைத்தது.]

உள்ளப்படுவனவுள்ளியுரைத்தக்கவர்க்குரைத்து
மெள்ளப்படிறுதுணிதுணியேலிதுவேண்டுவல்யான்
கள்ளப்படிறர்க்கருளாவரன்றில்லைகாணலர்போற்
கொள்ளப்படாதுமறப்பதறிவிலென்கூற்றுக்களே. (அஎ)

## வன்மொழியாற்கூறல்.

[கடலுலகறியக் கமழலந்துறைவன்
மடலேறும்மேன வன்மொழிமொழிந்தது.]

மேவியந்தோலுடுக்குந்தில்லையான்பொடிமெய்யிற்கையி
லோவியந்தோன்றுங்கிழிநின்னெழிலென்றுரையுளதாற்
றூவியந்தோகையன்னுயென்னபாவஞ்செல்வாடல்செய்யா
பாவியந்தோபனைமாமடலேறக்கொல்பாவித்ததே. [ன் ()

## மனத்தொடுநேர்தல்.

[அடல்வேலவ னுற்றனைளக் கடலமிழ்தன்னவள் கானலுற்றது.]

பொன்னார்சடையோன்புலியூர்புகழாரெனப்புரிநோ
யென்னுவறிவில்லையானென்றுரைக்கிலன் வந்தயலார்
சொன்னாரெனுமித்துரிசுதுன்னமைத்துணைமனனே
யென்னும்துயர் வல்லையேற் சொல்லுநீர்மையினியவர்க்கே.

## கஉ. சேட்படை.

இஃது இருபத்தாறு துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]தழைகொண்டு சேற [2]றகாதென்று மறுத்த
[3]னிலத்தின்மை கூற [4]னினைவறிவு கூறல்
[5]படைத்து மொழிதலொடு [6]பனிமதி நுதலியை
யெடுத்துநா னுரைத்த [7]லிசையாமை கூறல்
[8]செவ்வியில ளென்றல் [9]சேட்பட நிறுத்த
[10]லவ்வினிய மொழிநீ யவட்குரை யென்றல்
[11]குலமுறை கிளத்தல் [12]கோதண் டத்தொழில்
வலிசொல்லி மறுத்தன் [13]மற்றவற் கிரங்கல்
[14]சிறப்பின்மை கூறல் [15]சிறியளென் றுரைத்தன்
[16]மறைத்தமை கூறி நகைத்துரை செய்த
[17]னகைகண்டு மகிழ்த [18]ளுனவடன் னை
யறியே னென்ற [19]லவயவங் கூறல்
[20]கண்ணயந் துரைத்தல் [21]கையுறை யெதிர்தன்

[22]முகம்புக வுரைத்தன் [23]முகங்கண்டு கூறல்
[24]வகுத்து ரைத்தலொடு [25]வண்டழை யவட்கு
மிகுத்துரை செய்து விரும்பிக் கொடுத்த
[26]றழைவிருப் புரைத்த ருனிரு பத்தா
றிழைவளர் முலையா யிவைசேட் படையே.

## தழைகொண்டுசேறல்.

[கோய்ம்மலர்க்குழலி துறைநயந்தபின்
கையுறையோடு காளைசென்றது.]

தேமென்கிளவிதன்பங்கத்திறையுறைதில்லையன்னீர்
பூமென்றழையுமம்போதுங்கொள்ளீர்தமியேன்புலம்ப
வாமென்றருங்கொடும்பாடுகள்செய்துநுங்கண்மலராங்
காமன்கணைகொண்டலைகொள்ளவோமுற்றக்கற்றதுவே.

## சந்தனத்தழை தகாதென்று மறுத்தல்.

[பிறைநுதற்பேதையைத் துறைநயப்பித்தபின்
வாட்படையண்ணலைச் சேட்படுத்தது.]

ஆரத்தழையராப்பூண்டம்பலத்தனலாடியன்பர்க்
காரத்தழையன்பருளிநின்றோன்சென்றமாமலயத்
தாரத்தழையண்ணறந்தாலிவையவளல்குற்கண்டா
லாரத்தழைகொடுவந்தாரெனவருமையுறவே. (௬௧)

## நிலத்தின்மைகூறி மறுத்தல்.

[கோங்கலர்தாரோய் கொணர்ந்தகொய்தழை
எங்குலத்தார்க் கேலாதென்றது.]

மூன்றகர்த்தெல்லாவிமையோரையும்பின்னைத்தக்கன்முத்தீ
சென்றகத்தில்லாவகைசிதைத்தோன்றிருந்தம்பலவன் [ச்

குன்றகத்தில்லாத்தழையண்ணறந்தாற்கொடிச்சியருக்
கின்றகத்தில்லாப்பழிவந்துமூடுமென்றெள்குதுமே. (௯௨)

## நினைவறிவு கூறி மறுத்தல்.

[மைதழைக்கண்ணி மனமறிந்தல்லது
கொய்தழைதந்தாற் கொள்ளேமென்றது.]

யாழார்மொழிமங்கைபங்கத்திறைவனெறிதிரைநீ
ரேழாயெழுபொழிலாயிருந்தோனின்றதில்லையன்ன [ற்
சூழார்குழலெழிற்றொண்டைச்செவ்வாய்நவ்விசொல்லறிந்தா
றூழாதெதிர்வந்துகோடுஞ்சிலம்பதருந்தழையே. (௯௩)

## படைத்துமொழியான் மறுத்தல்.

[அருந்தழைமேன்மேற் பெருந்தகைகொணரப்
படைத்துமொழிகிளவியிற் றடுத்தவண்மொழிந்தது.]

எழில்வாயிளவஞ்சியும்விரும்புமற்றிறைகுறையுண்
டூழ்வாயவிரொளியம்பலத்தாடுமஞ்சோதியந்தீங்
குழல்வாய்மொழிமங்கைபங்கன்குற்றாலத்துக்கோலப்பிண்
பொழில்வாய்தடவரைவாயல்லதில்லையிப்பூந்தழையே [டிப் .

## நாணுரைத்து மறுத்தல்.

[வாணுதற் பேதையை நாணுத லுரைத்தது.]

உறுங்கண்ணிவந்தகணையுரவோன்பொடியாயொடுங்கத்
தெறுங்கண்ணிவந்தசிற்றம்பலவன்மலைச்சிற்றிலின்வாய்
நறுங்கண்ணிசூட்டினுநாணுமென்வாணுதனத்தொண்பூங்
குறுங்கண்ணிவேய்க்கிளமந்திகணுணுமிக்குன்றிடத்தே. ()

## இசையாமைகூறி மறுத்தல்.

[வசைதீர் குலத்திற் கிசையா தென்றது.]

நறமனைவேங்கையின்பூப்பயில்பாறையைநாகநண்ணி
மறமனைவேங்கையெனநனியஞ்சுமஞ்சாரிலம்பா
குறமனைவேங்கைச்சுணங்கொடணங்கலர்கூட்டுபவோ
சிறமனைவேங்கையதளம்பலவனெடுவரையே. (௬௬)

## செவ்வியிலளென்று மறுத்தல்.

[நவ்வி நோக்கி செவ்வியில ளென்றது.]

கற்றிலகண்டன்னமென்னடைகண்மலர்நோக்கருளப்
பெற்றிலமென்பிணைபேச்சுப்பெறுகிள்ளைபிள்ளையின்றேன்
றுற்றிலளுற்றதறிந்திலளாகத்தொளிமிளிரும்
புற்றிலவாளரவன்புலியூரன்னபூங்கொடியே. (௬௭)

## காப்புடைத்தென்று மறுத்தல்.

[காப்புடைத்தென்று சேட்படுத்தது.]

முனிதருமன்னையுமென்னையர்சாலவுமூர்க்கரின்னே
தனிதருமிந்நிலத்தன்னையகுன்றமுந்தாழ்சடைமேற்
பனிதருதிங்களணியம்பலவர்பகைசெகுக்குங்
குனிதருதிண்சிலைக்கோடுசென்றான்சுடர்க்கொற்றவனே. ()

## நீயேகூறென்று மறுத்தல்.

[அஞ்சுதும்பெரும பஞ்சின்மெல்லடியைக்
கூறுவநீயே கூறுகென்றது.]

அந்தியின்வாயெழிலம்பலத்தெம்பரனம்பொன்வெற்பிற்
பந்தியின்வாய்ப்பலவின்சுளைபைந்தேனொடுங்கடுவன்
மந்தியின்வாய்க்கொடுத்தோம்புஞ்சிலம்பமனங்கனிய
முந்தியின்வாய்மொழிநீயேமொழிசென்றம்மொய்குழற்கே.

## குலமுறைகூறி மறுத்தல்.

[தோழிகுலத்தீர் சொற்காதேம் இழிகுலத்தேமெனவுரைத்தது.]

தெங்கம்பழங்கமுகின்குலைசாடிக்கதலிசெற்றுக்
கொங்கம்பழனத்தொளிர்குளிர்நாட்டினைநீயுமைகூர்
பங்கம்பலவன்பரங்குன்றிற்குன்றன்னமாப்பதைப்பச்
சிங்கந்திரிதருஞ்சீறூர்ச்சிறுமியெந்தேமொழியே. (௧௦௦)

## நகையாடி மறுத்தல்.

[பாட்டுரையெதிராது சேட்படுத்தற்கு
மென்னகைத்தோழி யின்னகைசெய்தது.]

சிலையொன்றுவாணுதல்பங்கன்சிற்றம்பலவன்கயிலை
மலையொன்றுமாமுகத்தெம்மையரெய்கணைமண்குளிக்குங்
கலையொன்றுவெங்கணையோடுகடுகிட்டதென்னிற்கெட்டேன்
கொலையொன்றுதிண்ணியவாறையர்கையிற்கொடுஞ்சிலையே.

## இரக்கத்தொடு மறுத்தல்.

[கையுறையெதிராது காதற்றோழி
யையநீபோ ரிதுயர்த்துவையென்றது.]

மைத்தழையாநின்றமாமிடற்றம்பலவன்கழற்கே
மெய்த்தழையாநின்றவன்பினர்போலவிதிர்விதிர்த்துக்
கைத்தழையேந்திக்கடமாவினாய்க்கையில்வில்லின்றியே
பொய்த்தழையாதிற்பாலென்னபாவம்பெரியவரே. (௧௦௨)

## சிறப்பின்மைகூறி மறுத்தல்.

[மாந்தளிரு மலர்நீலமும் ஏந்தலிம்மலை யில்லையென்றது.]

அக்குமரவுமணிமணிக்கூத்தன்சிற்றம்பலமே
யொக்குமிவளொடொளிருருவஞ்சிமஞ்சார்சிலம்பா
கொக்குஞ்சுனையுங்குளிர்தளிருங்கொழும்போதுகளு
மிக்குன்றிலென்றுமலர்ந்தறியாதவியல்பினவே. (௧௦௩)

## இளமைகூறி மறுத்தல்.

[முளையெயிற் றரிவை விளைவில ளென்றது.]

உருகுதலைச்சென்றவுள்ளத்துமம்பலத்துமொளியே
பெருகுதலைச்சென்றுநின்றேன்பெருந்துறைப்பிள்ளைகள்ளா
முருகுதலைச்சென்றகூழைமுடியாமுலைபொடியா
வொருகுதலைச்சின்மழலைக்கென்னோவையவோதுவதே.

## மறைத்தமைகூறி நகைத்துரைத்தல்.

[என்னைமறைத்தபி னெண்ணியதரிதென
நன்னுதற்றோழி நகைசெய்தது.]

பண்டாலியலுமிலைவளர்பாலகன்பார்கிழித்துத்
தொண்டாலியலுஞ்சுடர்க்கழலோன்றொல்லைத்தில்லையின்வாய்
வண்டாலியலும்வளர்பூந்துறைவமறைக்கினென்னைக்
கண்டாலியலுங்கடனில்லைகொல்லோகருதியதே. (௧௦௫)

## நகைகண்டு மகிழ்தல்.

[இன்னகைத்தோழி மென்னகைகண்டு
வண்ணக்கதிர்வே லண்ணலுரைத்தது.]

மத்தகஞ்சேர்தனிநோக்கினன்வாக்கிறந்தூறமுதே [கு
யொத்தகஞ்சேர்ந்தென்னையுய்யநின்றோன்றில்லையொத்திலங்
முத்தகஞ்சேர்மென்னகைப்பெருந்தோளிமுகமதியின்
வித்தகஞ்சேர்மெல்லெனேக்கமன்றோவென்விழுத்துணையே.

## அறியாள்போன்று நினைவுகேட்டல்.

[வேந்தன்சொன்ன மாந்தளிர்மேனியை
வெறியார்கோதை யறியேனென்றது.]

விண்ணிறந்தார்நிலம்விண்டவரென்றுமிக்காரிருவர்
கண்ணிறந்தார்தில்லையம்பலத்தார்கழுக்குன்றினின்று
தண்ணறுந்தாதிவர்சந்தனச்சோலைப்பந்தாடுகின்றா
ரெண்ணிறந்தாரவர்யார்கண்ணதோமன்னநின்னருளே. ()

## அவயவங்கூறல்.

[அவயவ மவளுக் கிவையிவை யென்றது.]

குவவினகொங்கைகுரும்பைகுழல்கொன்றைகொவ்வைசெவ்வா
கவவினவாணகைவெண்முத்தங்கண்மலர்செங்கழுநீர் [ய்
தவவினைதீர்ப்பவன்றாழ்பொழிற்சிற்றம்பலமனையாட்
குவவினநாண்மதிபோன்றொளிர்கின்றதொளிமுகமே. ()

## கண்ணயந்துரைத்தல்.

[கண்ணிணைபிறழ்வன வண்ணமுரைத்தது.]

ஈசற்கியான்வைத்தவன்பினகன்றவன்வாங்கியவென்
பாசத்திற்காரென்றவன்றில்லையின்னொளிபோன்றவன்றோள்
பூசத்திருநீறெனவெளுத்தாங்கவன்பூங்கழல்யாம்
பேசத்திருவார்த்தையிற்பெருநீளம்பெருங்கண்களே. (௧0௯)

## தழையெதிர்தல்.

[அகன்றவிடத் தாற்றாமைகண்டு
கவன்றதோழி கையுறையெதிர்ந்தது.]

தோலாக்கரிவென்றதற்குந்துவள்விற்குமில்லின்றொன்மைக்
கேலாப்பரிசுளவேயன்றியேயேவமிருஞ்சிலம்ப
மாலார்க்கரியமலர்க்கழலம்பலவன்மலையிற்
கோலாப்பிரசமன்னாட்கையநீதந்தகொய்தழையே. (௧௧௦)

## குறிப்பறிதல்.

[தழையெதிரா தொழிவதற்கோர்
சொல்லறியேனெனப் பல்வளைக்குரைத்தது.]

கழைகாண்டலுஞ்சுளியுங்களியானையன்னான்கரத்திற்
றழைகாண்டலும்பொய்தழைப்பமுன்காண்பனின்றம்பலத்தா
னுழைகாண்டலுநினைப்பாகுமென்னோக்கிமன்னோக்கங்கண்டா
லிழைகாண்பணைமுலையாயறியேன்சொல்லுமீடவற்கே. ()

## குறிப்பறிந்து கூறல்.

[ஏழைக் கிருந்தழை தோழிகொண்டுரைத்தது.]

தவளத்தநீறணியுந்தடந்தோளண்ணறன்னொருபா
லவளத்தனாமகனாந்தில்லையானன்றுரித்ததன்ன
கவளத்தயானைகடிந்தார்கரத்தகண்ணார்தழையுந்
துவளத்தகுவனவோசுரும்பார்குழற்றூமொழியே. (௧௧௨)

## வகுத்துரைத்தல்.

[கடித்தழைகொணர்ந்த காதற்றோழி
மடக்கொடிமாதர்க்கு வகுத்துரைத்தது.]

ஏறும்பழிதழையேற்பின்மற்றேலாவிடின்மடன்மா
வேறுமவனிடபங்கொடியேற்றிவந்தம்பலத்து
ளேறுமரன்மன்னுமீங்கோய்மலைநம்மிரும்புனங்காய்ந்
தேறுமலைதொலைத்தாற்கென்னையாஞ்செய்வதேந்திழையே.

## தழையேற்பித்தல்.

[கருங்குழன்மடந்தைக் கரும்பெறற்றோழி
இருந்தழைகொள்கென விரும்பிக்கொடுத்தது.]

தெவ்வரைமெய்யெரிகாய்சிலையாண்டென்னையாண்டுகொண்
செவ்வரைமேனியன்சிற்றம்பலவன்செழுங்கயிலை [ட
யவ்வரைமேலன்றியில்லைகண்டாயுள்ளவாறருளா
னிவ்வரைமேற்சிலம்பன்னொளிதிற்றந்தவிர்ந்தழையே. ( )

## தழைவிருப்புரைத்தல்.

[விருப்பவ டோழி பொருப்பற் குரைத்தது.]

பாசத்தளையறுத்தாண்டுகொண்டோன்றில்லையம்பலஞ்சூழ்
தேசத்தனசெம்மலர்தந்தனசென்றியான்கொடுத்தேன்
பேசிற்பெருகுஞ்சுருங்குமருங்குல் பெயர்த்தரைத்துப்
பூசிற்றிலளன்றிச் செய்யாதனவில்லைபூந்தழையே. (ககரு)

---

## கங. பகற்குறி.

இது முப்பத்திரண்டு துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]குறியிடங் கூற [2]லாடிடம் படர்தல்
[3]குறியிடைச் சேற [4]லிடத்துய்த்து நீங்க
[5]லுவந்துரைத் தலொடு [6]மருங்கணை தல்லே

[7]பறிவறி வித்த [8]லவனுண் மகிழ்த
[9]லாயத் துய்த்த [10]றோழிவந்து கூட
[11]லாடிடம் புகுத [12]றனிகண் டுரைத்த
[13]றடமென் முலையாள் பருவங் கூறி
வரவு விலக்கல் [14]வரைவுடம் படாது
மிகுத்துரைத் தலொடு [15]மெய்ம்மை யுரைத்தல்
[16]வருத்தங் கூற[17]றுயச்சங் கூற
[18]லிற்செறி வறிவித்த [19]றமர்நினை வுரைத்த
[20]லெதிர்கோள் கூற [21]லேறுகோள் கூற
[22]லேதிலார் தம்முரை கூற [23]லவளொடு
கூறுவாள் போன்று தினைமுதிர் வுரைத்தல்
[24]பகல்வரல் விலக்கல் [25]லையு ளெய்தித்
தினையொடு வெறுத்தல் [26]சிறைப்புற மாக
வேங்கையொடு வெறுத்தல் [27]வெற்பமர் நாடற்குக்
கழுமலுற் றிரங்கல் [28]கடிப்புனங் கையறக்
கொய்தமை கூறல் [29]பிரிவருமை கூறன்
[30]மயிலொடு கூறல் [31]வறும்புனங் காண்டல்
[32]பயில்பதி நோக்கிப் பதிமிக வாடல்
சொன்னநா லெட்டுந் தோன்று மியற்கை
மன்னிய பகற்குறி வகையா கும்மே.

## குறியிடங்கூறல்.

[வாடிடத்தண்ணலை வண்டழையெதிர்ந்தவள்
ஆடிடத்தின்னியல் பறியவுரைத்தது.]

வானுழைவாளம்பலத்தரன்குன்றென்றுவட்கிவெய்யோன்
றானுழையாவிருளாய்ப்புறநாப்பண்வண்டாரகைபோற்
றேனுழைநாகமலர்ந்துதிகழ்பளிங்கான்மதியோன் *[லே
கானுழைவாழ்வுபெற்றாங்கெழில்காட்டுமொர்கார்ப்பொழி

## ஆடிடம்படர்தல்.

[வண்டலையெதிர்ந்த வொண்டொடிப்பாங்கி
நீடமைத்தோளியோ டாடிடம்படர்ந்தது.]

புயல்வளரூசன்முன்னாடிப்பொன்னே பின்னைப்போய்ப்பொ
மயல்வளர்குன்றினின்றேற்றுமருவி திருவுருவிற் [லியு
கயல்வளர்வாட்கண்ணிபோதருகாதரந்தீர்த்தருளுந்
தயல்வளர்மேனியனம்பலத்தான்வரைத்தண்புனத்தே. ()

## குறியிடத்துக் கொண்டுசேறல்.

[அணிவளராடிடத் தாயவெள்ள
மணிவளர்கோங்கையை மருங்ககன்றது.]

தினைவளங்காத்துச்சிலம்பெதிர்கூஉய்ச் சிற்றின்முற்றிழைத்
சுனைவளம்பாய்ந்து துணைமலர்கொய்துதொழுதெழுவார் [துச்
வினைவளநீறெழநீறணியம்பலவன்றன்வெற்பிற்
புனைவளர்கொம்பரன்னாயன்னகாண்டும்புனமயிலே. (௧௧௮)

## இடத்துய்த்து நீங்கல்.

[மடத்தகைமாதரை யிடத்தகத்துய்த்து
நீங்கலுற்ற பாங்கி பகர்ந்தது.]

நரல்வேயினநினதோட்குடைந்துக்கநன்முத்தஞ்சிந்திப்
பரல்வேயறையுறைக்கும்பஞ்சடிப்பரன்றில்லையன்னாய்
வரல்வேய்தருவனிங்கேநில்லுங்கேசென்றுன்வார்குழற்கீர்ங்
குரல்வேயளிமுரல்கொங்கார்தடமலர்கொண்டுவந்தே(௧௧௯)

## உவந்துரைத்தல்.

[களிமயிற்சாயலை யோநசிறைக்கண்ட
ஒளிமலர்த்தாரோ னுவந்துரைத்தது.]

படமாசுணப்பள்ளியிக்குவடாக்கியப்பங்கயக்க
ணெடுமாலெனவென்னை நீநினைந்தோ நெஞ்சத்தாமரையே
யிடமாவிருக்கலுற்றோ தில்லைநின்றவனீர்ங்கயிலை
வடமார்முலைமடவாய்வந்துவைகிற்றிவ்வார்பொழிற்கே. ()

## மருங்கணைதல்.

[வாணுதலரிவை நாணுதல்கண்ட
கோதைவேலவ னாதரவுரைத்தது.]

தொத்தீன்மலர்ப்பொழிற்றில்லைத்தொல்லோனருளென்னமுன்னி
முத்தீன்குவளைமென்காந்தளின்மேடித்தன்னேரளப்பா
ளொத்தீர்ங்கொடியினொதுங்குகின்றாண்மருங்குன்னெருங்கப்
பித்தீர்பணைமுலைகாளென்னுக்கின்னும்பெருக்கின்றதே. ()

## பாங்கியறிவுரைத்தல்.

[நெறிகுழற்பாங்கி அறிவறிவித்தது.]

அளிநீடளகத்தினட்டியதாதுமணியணியு
மொளிநீள்சுரிகுழற்சூழ்ந்தவொண்மாலையுந்தண்ணறவுண்
களிநீயெனச்செய்தவன்கடற்றில்லையன்னாய்கலங்க
றெளிநீயனையபொன்னேபன்னுகோலந்திருநுதலே. (கஉஉ)

## உண்மகிழ்ந்துரைத்தல்.

[தண்மலர்க்கோதையை யுண்மகிழ்ந்துரைத்தது.]

செழுநீர்மதிக்கண்ணிச்சிற்றம்பலவன் றிருக்கழலே
கெழுநீர்மையிற்சென் றுகிண்கிணிவாய்க்கொள் ளுங்கள்ளகத்
கழுநீர்மலரிவள்யானதன்கண்மருவிப்பிரியாக் [த
கொழுநீர்நறப்பருகும்பெருநீர்மையளிகுலமே. (கஉ௩)

## ஆயத்துய்த்தல்.

[கனைகடலன்ன கார்மயிற்கணத்துப் புனைமடமானைப் புகவிட்டது.]

கொழுந்தாரகைமுகைகொண்டலம்பாசடைவிண்மடுவி
லெழுந்தார்மதிக்கமலம்மெழிறந்தெனவிப்பிறப்பி
லழுந்தாவகையெனையாண்டவன்சிற்றம்பலமனையாய்
செழுந்தாதவிழ்பொழிலாயத்துச்சேர்கதிருத்தகவே. (கஉ௪)

## தோழிவந்து கூடல்.

[நெறியுறுகுழலியை நின்றிடத்துய்த்துப்
பிறைநுதற்பாங்கி பெயர்ந்தவட்குரைத்தது.]

பொன்னனையான்றில்லைப்பொங்கரவம்புன்சடைமிடைந்த
மின்னனையானருண்மேவலர்போன்மெல்விரல்வருந்த
மென்னனையாய்மறியேபறியேல்வெறியார்மலர்க
ளின்னனயான்கொணர்ந்தேன்மணந்தாழ்குழற்கேய்வனவே.

## ஆடிடம்புகுதல்.

[தனிவிளையாடிய தாழ்குழற்றோழி
பனிமதிநுதலியோடாடிடம்படர்ந்தது.]

அறுகானிறைமலரைம்பானிறையணிந்தேனணியார்
துறுகான்மலர்த்தொத்துத்தோகைதொல்லாயமெல்லப்புகுக
சிறுகான்மருங்குல்வருந்தாவகைமிகவென்சிரத்தி
னுறுகால்பிறர்க்கரியோன்புலியூரன்னவொண்ணுதலே. ()

## தனிகண்டுரைத்தல்.

[வேயொத்ததோளியை யாயத்துய்த்துக்
துனிசிலையண்ணலைத்தனிகண்டுரைத்தது.]

தழங்குமருவியெஞ்சீறூர்பெருமவிதுமதுவுங்
கிழங்குமருந்தியிருந்தெம்மொடின்றுகிளர்ந்துகுன்றர்
முழங்குங்குரவையிரவிற்கண்டேகுகமுத்தன்முத்தி
வழங்கும்பிரானெரியாடிதென்றில்லைமணிநகர்க்கே. (கஉஎ)

## பருவங்கூறி வரவுவிலக்கல்.

[மாந்துளிர்மேனியைவரைந்தெய்தாதேந்தலிவ்வாறியங்கலென்றது.]

தள்ளிமணிசந்தமுந்தித்தறுகட்கரிமருப்புத்
தெள்ளிநறவந்திசைதிசைபாயுமலைச்சிலம்பா
வெள்ளிமலையன்னமால்விடையோன்புலியூர்விளங்கும்
வள்ளிமருங்குல்வருத்துவபோன்றவனமுலையே. (கஉஅ)

## வரைவுடம்படாது மிகுத்துக்கூறல்.

[வரைவுடாயா வாணுதற்றோழிக்த
விரைமலர்த்தாரோன் மிதத்துரைத்தது.]

மாடஞ்செய்பொன்னகருந்நிகரில்லையிம்மாதர்க்கென்னப்
பீடஞ்செய்தாமரையோன்பெற்றபிள்ளையையுள்ளவரைக்
கீடஞ்செய்தென்பிறப்புக்கெடத்தில்லைநின்றோன்கயிலைக்
கூடஞ்செய்சாரற்கொடிச்சியென்றேநின்றுகூறுவதே. ()

## உண்மைகூறி வரைவுகடாதல்.

[கல்வரைநாட னில்லதுரைப்ப ஆங்கவளுண்மை
பாங்கி பகர்ந்தது.]

வேய்தந்தவெண்முத்தஞ்சிந்துபைங்கார்வரைமீன்பரப்பிச்
சேய்தந்தவானகமானுஞ்சிலம்பதன்சேவடிக்கே
யாய்தந்தவன்புதந்தாட்கொண்டவம்பலவன்மலையிற்
றாய்தந்தைகானவரேனலெங்காவலித்தாழ்வரையே. (கரு௦)

## வருத்தங்கூறி வரைவுகடாதல்.

[கனங்குழைமுகத்தவன் மனங்குழைவுணர்த்தி
நிரைவளைத்தோளி வரைவுகடாயது.]

மன்னுந்திருவருந்தும்வரையாவிடினீர்வரைவென்
றுன்னுமதற்குத்தளர்ந்தொளிவாடி திரும்பரெலாம்
பன்னும்புகழ்ப்பரமன்பரஞ்சோதிசிற்றம்பலத்தான்
பொன்னங்கழல்வழுத்தார்புலனென்னப்புலம்புவனே. ()

## தாயச்சங்கூறி வரைவுகடாதல்.

[மடத்தகைமாதர்க் கடுப்பனவறியா வேற்கட்டாங்கி
யேற்கவுரைத்தது.]

பனித்துண்டஞ்சூடும்படர்சடையம்பலவனுலகந்
தனித்துண்டவன்றொழுந்தாளோன்கயிலைப்பயில்சிலம்பா
கனித்தொண்டைவாய்ச்சிகதிர்முலைப்பாரிப்புக்கண்டழிவுற்
றினிக்கண்டிலம்பற்றுச்சிற்றிடைக்கென்றஞ்சுமெம்மனையே. ()

## இற்செறிவறிவித்து வரைவுகடாதல்.

[விற்செறி நுதலியை இற்செறி வுரைத்தது.]

ஈவிளையாடநறவிளையோர்ந்தெமர்மாவ்பியற்றும்
வேய்விளையாடும்வெற்பாவுற்றுநோக்கியெம்மெல்லியலைப்

போய்விளையாடலென்றுளன்னையம்பலத்தான்புரத்திற்
றீவிளையாடநின்றேவிளையாடி திருமலைக்கே. (௧௩௩)

## தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்.

[விற்சேறிநுதலியை யிற்செறிவிப்பரென்
றெளிவேலவற்கு வெளியேயுரைத்தது.]

சுற்றுஞ்சடைக்கற்றைச்சிற்றம்பலவற்றொழாதுதொல்சீர்
கற்றுமறியலரிற்சிலம்பாவிடைநைவதுகண்
டெற்றுந்திரையின்னமிர்தையினித்தமரிற்செறிப்பார்
மற்றுஞ்சிலபலசீறூர்பகர்பெருவார்த்தைகளே. (௧௩௪)

## எதிர்கோள்கூறி வரைவுகடாதல்.

[ஏந்திழைத்தோழி யேந்தலைமுன்னிக் கடியாமாறு நொடிகென்றது.]

வழியுமதுவன்னையென்னின்மகிழும்வந்தெந்தையுநின்
மொழியின்வழிநிற்குஞ்சுற்றமுன்னேவயமம்பலத்துக்
குழியும்பரேத்துமெங்கூத்தன்குற்றாலமுற்றும்மறியக்
கெழியும்மவேபணைத்தோள்பலவென்னோகிளக்கின்றதே. ()

## எறுகோள்கூறி வரைவுகடாதல்.

[என்னையர்துணி வின்னதென்றது.]

படையார்கருங்கண்ணிவண்ணப்பயோதரப்பாரமுநுண்
ணிடையார்மெலிவுங்கண்டண்டர்களிர்முல்லைவேலியெம்மூர்
விடையார்மருப்புத்திருத்திவிட்டார்வியன்றென்புலியூ
ருடையார்கடவிவருவதுபோலுமுருவினதே. (௧௩௬)

## அயலுரையுரைத்து வரைவுகடாதல்.

[கயல்புரை கண்ணியை யயலுரை யுரைத்தது.]

உருப்பனை யன்னகைக்குன்றொன் றுரித்துரவூரெரித்த
நெருப்பனையம்பலத்தாதியையும்பர்சென்றேத்திநிற்குந்
திருப்பனையூரனையாளைப்பொன்னாளைப்புனைதல்செப்பிற்
பொருப்பனைமுன்னின்றென்னோவினையேன்யான்புகல்வதுவே. ()

## தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல்.

[ஏனல்விளையாட் டினியில்லையென
மானற்றோழி மடந்தைக்குரைத்தது.]

மாதிடங்கொண்டம்பலத்துநின்றோன்வடவான்கயிலைப்[ன்று
போதிடங்கொண்டபொன்வேங்கைதினைப்புனங்கொய்கவெ
தாதிடங்கொண்டுபொன்வீசித்தன்கள்வாய்சொரியநின்று
சோதிடங்கொண்டிதெம்மைக்கெடுவித்ததுதூமொழியே. ()

## பகல்வரல்விலக்கி வரைவுகடாதல்.

[அகல்வரை நாடனைப் பகல்வரலென்றது.]

வடிவார்வயற்றில்லையோன்மலயத்துநின்றும்வருதேன்
கடிவார்களிவண்டுநின்றலர்தூற்றப்பெருங்கணியார்
நொடிவார்நமக்கினிநோதகயானுமக்கென்னுரைக்கேன்
றடிவார்தினையெமர்காவேம்பெருமவித்தண்புனமே. (கக௯)

## தினையொடுவெறுத்து வரைவுகடாதல்.

[தண்புனத்தோடு தளர்வுற்றுப்
பண்புனைமொழிப் பாங்கிபகர்ந்தது.]

நினைவித்துத்தன்னையென்னெஞ்சத்திருந்தம்பலத்துநின்று
புனைவித்தவீசன்பொதியின்மலைப்பொருப்பன்விருப்பிற்
றினைவித்திக்காத்துச்சிறந்துநின்றேழுக்குச்சென்றுசென்று
வினைவித்திக்காத்துவிளைவுண்டதாகிவிளைந்ததுவே. (கச0)

## வேங்கையொடுவெறுத்து வரைவுகடாதல்.

[நீங்குகவினி நெடுந்தகையென
வேங்கைமேல்வைத்து விளம்பியது.]

கனைகடற்செய்தநஞ்சுண்டுகண்டார்க்கம்பலத்தமிழ்தாய்
வினைகெடச்செய்தவன்விண்டோய்கயிலைமயிலனையாய்
நனைகெடச்செய்தனமாயினமைக்கெடச்செய்திடுவான்
றினைகெடச்செய்திடுமாறுமுண்டோவித்திருக்கணியே. ()

## இரக்கமுற்று வரைவுகடாதல்.

[செழுமலை நாடற்குக் கழுமலுற் றிரங்கியது.]

வழுவாவியலெம்மலையர்விதைப்பமற்றியாம்வளர்த்த
கொழுவார்தினையின்குழாங்களெல்லாமெங்குழாம்வணங்குஞ்
செழுவார்கழற்றில்லைச்சிற்றம்பலவரைச்சென்றுநின்று
தொழுவார்வினைநிற்கிலேநிற்பதாவதித்தொல்புனத்தே. ()

## கொய்தமைகூறி வரைவுகடாதல்

[நீடுநம்புனத்தினி யாடேமென்று
வரைவுதோன்ற வுரைசெய்தது.]

பொருப்பர்க்கியாமொன்றுமாட்டேம்புகலப்புகலெமக்காம்
விருப்பர்க்கியாவர்க்குமேலர்க்குமேல்வருமூரெரித்த
நெருப்பர்க்குநீடம்பலவருக்கன்பர்குலநிலத்துக்
கருப்பற்றுவிட்டெனக்கொய்தற்றதின்றிக்கடிப்புனமே. ()

## பிரிவருமைகூறி வரைவுகடாதல்.

[மறைப்புறக் கிளவியிற் சிறைப்புறத் துரைத்தது.]

பரிவுசெய் தாண்டம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வா
யருவிசெய் தாழ்புனத் தைவனங் கொய்யவு மிவ்வனத்தே
பிரிவுசெய் தாலரிதே கொள்க பேயொடு மென்னும் பெற்றி
யிருவிசெய் தாளினிருந் தின்று காட்டு மிளங்கிளியே. (கசச)

## மயிலொடுகூறி வரைவுகடாதல்.

[நீங்கநம் புனம்விடு நீள்பெருந் துயராம்
பாங்கி பகர்ந்து பருவரலுற்றது.]

கணியார் கருத்தின்று முற்றிற்றி யாஞ்சென்று மங்கார்ப் புனமே
மணியார் பொழில்காண் மறத்திர் கண்டீர் மன்னு மம்பலத்தோ
னணியார் கயிலை மயில்காள் பயில்வேலொருவர் வந்தாற்
றுணியாதன துணிந்தாரென்னு நீர்மைகள் சொல்லுமினே. ()

## வறும்புனங்கண்டு வருந்தல்.

[மென்புனம் விடுத்து மெல்லியல் செல்ல
மின்போலி வேலோன் மெலிவுற்றது.]

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூரான் பொருப்பே
யிதுவெனி லென்னின் றிருக்கின்றவா றெம்மிரும் பொழிலே
யெது நுமக் கெய்திய தென்னுற்றனி ரறையீண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்தவா மற்றிவ் வான்புனமே.

## பதிநோக்கி வருந்தல்.

[மதிநுதலிவை பதியுகலிதேன
மதிநனிகலங்கிப் பதிமிகவாடியது.]

ஆனந்தமாக்கடலாடுசிற்றம்பலமன்னபொன்னின்
றேனுந்துமாமலைச்சீறூரிதுசெய்யலாவதில்லை
வானுந்துமாமதிவேண்டியழுமழப்போலுமன்றே
நானுந்தளர்ந்தனனீயுந்தளர்ந்தனைநன்னெஞ்சமே. (கரு௭)

## கரு. இரவுக்குறி.

இது முப்பத்துமூன்று துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]இரவுக்குறி வேண்ட [2]லாற்றருமை கூற
[3]னின்றுநெஞ் சுடைத [4]னிலைகண்டு நேர்த
[5]லுட்கோள் வினுத [6]லுட்கொண்டு வினுதல்
[7]குறியிடங் கூறல் [8]குறியேற் பித்த
[9]லிரவர வுரைத்த [10]லேதங் கூறல்
[11]குறைநேர்த லோடு [12]குறைநயப் புரைத்தன்
[13]மயின்மே லிசைத்து வரவுணர்ந் துரைத்த
[14]ருய்த்துயி லறித [15]றலைவி துயி லெடுத்த
[16]லிடத்துய்த்து நீங்க [17]றளர்வகன் றுரைத்தன்
[18]மருங்கணைத லோடு [19]முகங்கண்டு மகிழ்தல்
[20]பள்ளியிடத் துய்த்தல் [21]பள்ளியிடத் துய்த்து
வரைவு கடாவி வரவு விலக்கல்
[22]வரைவு டம்படா தாற்று துரைத்த
[23]லதரிடைச் செலவிற் கிரக்கங் கூற
[24]லிருளற நிலவு வெளிப்பட வருந்தல்
[25]வேற்றுக் குறிகூறல் [26]கடலிடை வைத்துத்
துயரறிவித்த [27]லூழியு மின்றித்
தானே கிடந்து தனிமையுற் றாற்றுங்
காம மிக்க கழிபடர் கிளவி
[28]காப்புச் சிறைமிக்க கையறு கிளவி

[29]யாறுபார்த் துற்ற வச்சக் கிளவி
[30]தன்னுட்கையா றெய்திடு கிளவி
[31]நிலைகண் டுரைத்த [32]னெடுங்கடர் சேர்த்த
[33]லவரறி வித்தலோ டாறைம் மூன்று
மிரவுக் குறியிவை யென்றிசி னோரே.

## இரவுக்குறி வேண்டல்.

[நள்ளிருட்குறியை வள்ளனினைந்து
வீங்குமென்முலைப் பாங்கிக்குரைத்தது.]

மருந்துநம்மல்லற்பிறவிப்பிணிக்கம்பலத்தமிர்தா
யிருந்தனர்குன்றினின்றேங்குமருவிசென்றேர்திகழப்
பொருந்தினமேகம்புதைந்திருடூங்கும்புனையிறும்பின்
விருந்தினன்யானுங்கள்சீறூரதனுக்குவெள்வளையே.(௧௪௮)

## வழியருமைகூறி மறுத்தல்.

[இரவரலேந்தல் கருதியுரைப்பப் பருவரற்பாங்கியருமையுரைத்தது.]

விசும்பினுக்கேணிநெறியன்னசின்னெறிமேன்மழைதூங்
கசும்பினிற்றுன்னியளைநுழைந்தாலொக்குமையமெய்யே
யிசும்பினிற்சிந்தைக்குமேறற்கரிதெழிலம்பலத்துப்
பசும்பனிக்கோடுமிலைந்தான்மலயத்தெம்வாழ்பதியே.(௧௪௯)

## நின்று நெஞ்சுடைதல்.

[பாங்கிவிலங்கப் பருவரைநாட னீங்கிவிலங்காது நெஞ்சுடைந்தது.]

மாற்றேனெனவந்தகாலனையோலமிடவடர்த்த
கோற்றேன்குளிர்தில்லைக்கூத்தன்கொடுங்குன்றினீள்குடுமி
மேற்றேன்விரும்புமுடவனைப்போலமெலியுநெஞ்சே
யாற்றேனரியவரிவைக்குநீவைத்தவன்பினுக்கே. (௧௫௦)

## இரவுக்குறிநேர்தல்.

[தடவரைநாடன் றளர்வுதீர மடநடைப்பாங்கி வகுத்துரைத்தது.]

கூளிநிரைக்கநின் றம்பலத்தாடிகுரைகழற்கீழ்த்
தூளிநிரைத்தசுடர்முடியோயிவடோணசையா
லாளிநிரைத்தடலானைகடேருமிரவில்வந்து
மீளியுரைத்திவினையேனுரைப்பதென்மெல்லியற்கே. (௧௫௧)

## உட்கோள் வினாதல்.

[நெறிவிலக்குற்றவ னுறுதுயர்நோக்கி
யாங்கோருசூழல் பாங்கிபகர்ந்தது.]

வரையன்றொருகாலிருகால்வளையநிமிர்த்துவட்கார்
நிரையன்றழலெழவெய்துநின்றோன்றில்லையன்னநின்னூர்
விரையென்னமென்னிழலென்னவெறியுறுதாதிவர்போ
துரையென்னவோசிலம்பாநலம்பாவியொளிர்வனவே (௧௫௨)

## உட்கொண்டு வினாதல்.

[தன்னைவினவத் தானவள்குறிப்பறிந்
தென்னைநின்னாட்டியலணியென்றது.]

செம்மலராயிரந்தூய்க்கருமாறிருக்கண்ணணியு
மொய்ம்மலரீர்ங்கழலம்பலத்தோன்மன்னுதென்மலயத்
தெம்மலர்சூடிநின்றெச்சாந்தணிந்தென்னநன்னிழல்வா
யம்மலர்வாட்கணல்லாயெல்லிவாய்நுமராடுவதே. (௧௫௩)

## குறியிடங் கூறல்.

[இரவுக்குறியிவ ணென்றுபாங்கி
அரவக்கழலவற் கறியவுரைத்தது.]

பனைவளர்கைம்மாப்படாத்தம்பலத்தான்பாதம்விண்ணோர்
புனைவளர்சாரற்பொதியின்மலைப்பொலிசந்தணிந்து
சுனைவளர்காவிகள்சூடிப்பைந்தோகை துயில்பயிலுஞ்
சினைவளர்வேங்கைகள்யாங்கணின்றாடுஞ்செழும்பொழிலே.

## இரவுக்குறி யேற்பித்தல்.

[அரவக்கழலவ னுற்றனென இரவுக்குறி யேற்பித்தது.]

மலவன்குரம்பையைமாற்றியம்மான்முதல்வானர்க்கப்பாற்
செலவன்பர்க்கோக்குஞ்சிவன்றில்லைக்கானலிற்சீர்ப்பெடை
டலவன்பயில்வதுகண்டனூர்கூர்ந்தயில்வேலுரவோன் [யோ
செலவந்திவாய்க்கண்டனனென்னதாங்கொன்மன்சேர்துயிலே. ()

## இரவரவுரைத்தல்.

[தூரவந் துழலிக் கிரவர வுரைத்தது.]

மோட்டங்கதிர்முலைப்பங்குடைத்தில்லைமுன்னோன்கழற்கே
கோட்டந்தருநங்குருமுடிவெற்பன்மழைகுழுமி
நாட்டம்புதைத்தன்னநள்ளிருஞ்சகடுங்கச்சிங்கம்
வேட்டந்திரிசரிவாய்வருவான்சொல்லுமெல்லியலே. (கருகூ)

## ஏதங்கூறி மறுத்தல்.

[இழுக்கம்பெரி திரவினென அழுக்கமெய்தி யரிவையுரைத்தது.]

செழுங்கார்முழவதிர்சிற்றம்பலத்துப்பெருந்திருமால்
கொழுங்கான்மலரிடக்கூத்தயர்வோன்கழலேத்தலர்போன்
முழங்காரரிமுரண்வாரணவேட்டைசெய்மொய்பிருள்வாய்
வழங்காவதரின்வழங்கென்றுமோவின்றெம்வள்ளலையே. ()

## குறை நேர்தல்.

[அலைவேலண்ண னிலைமைகேட்டுக்
கோலவேற்கண் ணிகுறைநயந்தது.]

ஓங்குமொருவிடமுண்டம்பலத்தும்பருய்யவன்று
தாங்குமொருவன்றடவரைவாய்த்தழங்குமருவி
வீங்குஞ்சுனைப்புனல்வீழ்ந்தன்றழுங்கப்பிடித்தெடுத்து
வாங்குமவர்க்கறியேன்சிறியேன்சொல்லும்வாசகமே(கரு௯)

## குறைநேர்ந்தமைகூறல்.

[துறைநயந்தன ளெறிகுழலியென
எறிவேலண்ணற் கறியவுரைத்தது.]

ஏனற்பசுங்கதிரென்றாழ்க்கழியவெழிலியுன்னிக்
கானக்குறவர்கள்கம்பலைசெய்யும்வம்பார்சிலம்பா
யானிற்றையாமத்துநின்னருண்மேனிற்கலுற்றுச்சென்றேன்
றேனக்கொன்றையன்றில்லையுறூர்செல்லுஞ்செல்வங்களே.

## வரவுணர்ந் துரைத்தல்.

[வளமயிலெடுப்ப விளமயிற்பாங்கி
சேருவேலண்ணல் வரவுரைத்தது.]

முன்னுமொருவரிரும்பொழின்மூன்றற்குமுற்றுமிற்றூற்
பின்னுமொருவர்சிற்றம்பலத்தார்தரும்பேரருள்போற்
றுன்னுமோரின்பமென்றேகைதந்தோகைக்குச்சொல்லுவபோன்
மன்னுமரவத்தவாய்த்துயில்பேருமயிலினமே. (கசுo)

## தாய் துயிலறிதல்.

[ஊசன்மிசைவைத் தோள்ளமளியிற் றுயதுதுயி றனறிந்தது.]

கூடாரரணெரிகூடக்கொடுஞ்சிலைகொண்டவண்டன்
சேடார்மதின்மல்லற்றில்லையன்னாய்சிறுகட்பெருவெண்
கோடார்கரிகுருமாமணியூசலைக்கோப்பழித்துத்
தோடார்மதுமலர்நாகத்தைநூக்குநஞ்சூழ்பொழிற்கே. ()

## துயிலெடுத்துச் சேறல்.

[தாய்துயிலறிந் தாய்நருபவண் மெல்லியந்துச் சொல்லியது.]

விண்ணுக்குமேல்வியன்பாதலக்கீழ்விரிநீருடுத்த
மண்ணுக்குநாப்பணயந்துதென்றில்லைநின்றோன்மிடற்றின்
வண்ணக்குவளைமலர்கின்றனசினவாண்மிளிர்நின்
கண்ணுக்குமேற்கண்டுகாண்வண்டுவாழுங்கருங்குழலே. ()

## இடத்துய்த்து நீங்கல்.

[மைத்தடங்கண்ணியை யுய்த்திடத்தொருபா
னீங்கலுற்ற பாங்கிபகர்ந்தது.]

நந்தீவரமென்னுநாரணனுண்மலர்க்கண்ணிற்கெஃகந்
தந்தீவரன்புலியூரனையாய்தடங்கண்கடந்த
விந்தீவரமிவைகாணின்னிருள்சேர்குழற்கெழில்சேர்
சந்தீவரமுறியும்வெறிவீயுந்தருகுவனே. (௧௬௩)

## தளர்வகன்றுரைத்தல்.

[வடுவகிரனைய வரிநெடுங்கண்ணியைத்
தடுவரியன்போடு தளர்வகன்றுரைத்தது.]

காமரைவென்றகண்ணோன்றில்லைப்பல்கதிரோனடைத்த
தாமரையில்லினிதழ்க்கதவந்திறந்தோதமியே
பாமரைமேகலைபற்றிச்சிலம்பொதுக்கிப்பையவே
நாமரையாமத்தென்னோவந்துவைகிநயந்ததுவே. (௧௬௪)

## மருங்கணைதல்.

[அன்புமிகுதியி னளவளாயவளைப்
பொன்புனைவேலோன் புகழ்ந்துரைத்தது.]

அகிலின்புகைவிம்மியாய்மலர்வேய்ந்தஞ்சனமெழுதத்
தகிலுந்தனிவடம்பூட்டத்தகாள்சங்கரன்புலியூ
ரிகலுமவரிற்றளருமித்தேம்பலிடைஞெமியப்
புகிலுமிகவிங்ஙனேயிறுமாக்கும்புணர்முலையே. (கசுரு)

## முகங்கண்டு மகிழ்தல்.

[முகையவிழ்குழலி முகமதிகண்டு
திகழ்வேலண்ணன் மகிழ்வுற்றது.]

அழுந்தேனரகத்தியானென்றிருப்பவந்தாண்டுகொண்ட
செழுந்தேன்றிகழ்பொழிற்றில்லைப்புறவிற்செறுவகத்த [ண்
கொழுந்தேன்மலர்வாய்க்குமுதமிவள்யான்குரூஉச்சுடர்கொ
டெழுந்தாங்கதுமலர்த்தும்முயர்வானத்திளமதியே. (கசுசு)

## பள்ளியிடத் துய்த்தல்.

[பிரிவதுகருதிய பெருவரைநாட
னொள்ளிழைப்பாங்கியோடு பள்ளிகோள்கென்றது.]

சுரும்புறுநீலங்கொய்யற்றமிநின்றுதுயில்பயின்மோ
வரும்பெறற்றோழியொடாயத்துநாப்பணமரரொன்னா
ரிரும்புறுமாமதில்பொன்னிஞ்சிவெள்ளிப்புரிசையன்றோர்
துரும்புறச்செற்றகொற்றத்தெம்பிரான்றில்லைச்சூழ்பொழிற்கே.

## வரவு விலக்கல்.

[தெய்வமன்னாளைத் திருந்துமளிசேர்த்தி
மைவரைநாடனை வரவுவிலக்கியது.]

நற்பகற்சோமனெரிதருநாட்டத்தன்றில்லேயன்ன
விற்பகைத்தோங்கும்புருவத்திவளின்மெய்யேயெளிதே
வெற்பகச்சோலையின்வேய்வளர்தீச்சென்றுவிண்ணினின்ற
கற்பகச்சோலைகதுவுங்கன்னுடவிக்கல்லதரே. (கசூஅ)

## ஆற்ருதுரைத்தல்.

[வரைவுகடாய வாணுதற்றேழிக் கருவரைநாடனுற்றதுரைத்தது.]

பைவாயரவரையம்பலத்தெம்பரன்பைங்கயிலைச் [பை
செவ்வாய்க்கருங்கட்பெரும்பணைத்தோட்சிற்றிடைக்கொடி
மொய்வார்கமலத்துமுற்றிழையின்றெண்முன்னைத்தவத்தா
லிவ்வாறிருக்குமென்றேநிற்பதென்றுமென்னின்னுயிரோ. ()

## இரக்கங்கூறி வரைவுகடாதல்.

[அதிர்கழலவ னகன்றவழி யெதிர்வதறியா திரங்கியுரைத்தது.]

பைவாயரவுமறியுமழுவும்பயின்மலர்க்கை
மொய்வார்சடைமுடிமுன்னவன்றில்லையின்முன்னினக்காற்
செவ்வாய்கருவயிர்ச்சேர்த்திச்சிறியாள்பெருமலர்க்கண்
மைவார்குவளைவிடுமன்னநீண்முத்தமாலைகளே. (கஎ0)

## நிலவு வெளிப்பட வருந்தல்.

[தனிவேலவர்க்குத் தந்தளர்வறியப்
பனிமதிவிளக்கம் பாங்கி பகர்ந்தது.]

நாகந்தொழவெழிலம்பலநண்ணிநடநவில்வோ
ஞகமிதுமதியேமதியேநவில்வேற்கையெங்க
ளுகம்வரவெதிர்நாங்கொள்ளுநள்ளிருள்வாய்நறவார்
நாகமலிபொழில்வாயெழில்வாய்த்தநின்னுயகமே. (கஎக)

## அல்லகுறி யறிவித்தல்.

[வல்லியன்னவ ளல்லதறிப்பா
டறைப்புனற்றுறைவற்குச் சிறைப்புறத்துரைத்தது.]

மின்னங்கலருஞ்சடைமுடியோன்வியன்றில்லையன்னா
யென்னங்கலமரலெய்தியதோவெழின்முத்தந்தொத்திப் [று
பொன்னங்கலர்புன்னைச் சேக்கையின்வாய்ப்புலம்புற்றுமுற்
மன்னம்புலருமளவுந்துயிலாதழுங்கினவே. (களஉ)

## கடலிடைவைத்துத் துயரறிவித்தல்.

[எறிகடன்மேல்வைத் திரவருதுயரம்
அறைகழலவற் கறியவுரைத்தது.]

சோத்துன்னடியவென்றோரைக்குழுமித்தொல்வானவர்சூழ்ந்
தேத்தும்படிநிற்பவன்றில்லையன்னாளிவடுவள
வார்த்துன்னமிழ்ந்துந்திருவுமதியுமிழந்தவநீ
பேர்த்துமிரைப்பொழியாய்பழிநோக்காய்பெருங்கடலே. ()

## காமமிக்க கழிபடர்கிளவி.

[தாமமிக்க தாழ்குழலேழை காமமிக்க கழிபடர்கிளவி.]

மாதுற்றமேனிவரையுற்றவில்லிதில்லைநகர்சூழ்
போதுற்றபூம்பொழில்காள்கழிகாளெழிற்புள்ளினங்கா
ளேதுற்றழிதியென்னீர்மன்னுமீர்ந்துறைவர்க்கிவளோ
தீதுற்றதென்னுக்கென்னீரிதுவோநன்மைசெப்புமினே. ()

## காப்புச்சிறைமிக்க கையறுகிளவி.

[மெய்யுறு காவலிற் கையறு கிளவி.]

இன்னறவார்பொழிற்றில்லைநகரிறைசீர்விழவிற்
பன்னிறமாலைத்தொகைபகலாம்பல்விளக்கிருளின்

றன்னறவுய்க்குமில்லோருந் துயிலுற் றுறைறவர்மிக்க
கொன்னிறவேலொடுவந்திடின்ஞாளிகுரைதருமே. (களரு)

## ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

[நாறுவார்குழ லவ்விநோக்கி யாறுபார்த்துற்ற வச்சக்கிளவி.]

தாருறுகொன்றையன்றில்லைச்சடைமுடியோன்கயிலை
நீருறுகான்யாறளவிலநீந்திவந்தானினது
போருறுவேல்வயப்பொங்குருமஞ்சுகமஞ்சிவருஞ்
சூருறுசோலையின்வாய்வரற்பாற்றன்று தூங்கிருளே. (களசு)

## தன்னுட்கையாறெய்திடுகிளவி.

[மின்னுப்புரையு மந்நுண்மருங்கு றன்னுட்கையா றெய்திடுகிளவி.]

விண்டலையாவர்க்கும்வேந்தர்வண்டில்லைமெல்லங்கழிசூழ்
கண்டலையேகரியாகன்னிப்புன்னைக்கலந்தகள்வர்
கண்டிலையேவரக்கங்குலெல்லாமங்குல்வாய்விளக்கு
மண்டலமேபணியாய்தமியேற்கொருவாசகமே. (களஎ)

## நிலைகண்டுரைத்தல்.

[நின்னினழிந்தனன் மின்னிடை மாதென
வரைவுதோன்ற வுரைசெய்தது.]

பற்றொன்றிலார்பற்றுந்தில்லைப்பான்பரங்குன்றினின்ற
புற்றொன்றரவன்புதல்வனெனநீபுகுந்துநின்றான்
மற்றுன்றுமாமலரிட்டுன்னைவாழ்த்திவந்தித்தலன்றி
மற்றொன்றுசிந்திப்பரேல்வல்லளோமங்கைவாழ்வகையே.()

## இரவுறுதுயரங் கடலொடுசேர்த்தல்.

[எறிவேற்கண்ணி யிரவருதுயரஞ்
சேறிகடலிடைச் சேர்த்தியுரைத்தது.]

பூங்கணைவேளைப்பொடியாய்விழவிழித்தோன்புலியூ
ரோங்கணைமேவிப்புரண்டுவிழுந்தெழுந்தோலமிட்டுத்
தீங்கணைந்தோரல்லுந்தேருய்கலங்கிச்செறிகடலே
யாங்கணைந்தார்நின்னையுமுளரோசென்றகன்றவரே (௧௭௬)

## அலரறிவுறுத்தல்.

[அலைவேலண்ணன் மனமகிழநன் பலராலறியப் பட்டதென்றது.]

அலராயிரந்தந்துவந்தித்துமாலாயிரங்கரத்தா
லலரார்கழல்வழிபாடுசெய்தாற்களவில்லொளிக
ளலராவிருக்கும்படைகொடுத்தோன்றில்லையானருள்போன்
றலராய்விளைகின்றதம்பல்கைம்மிக்கையமெய்யருளே. ()

---

## ௧௫. ஒருவழித்தணித்தல்.

———o———

இது பதின்மூன்று துறையுடைத்து. அவைவருமாறு:—

[1]அகன்றணைவு கூற [2]வாழியொடு கேட்ட
[3]வாழியொடு புலத்த [4]லன்னமோ டாய்த
[5]லாழிக் குரைத்த [6]லாழி யிழைத்தல்
[7]சுடரொடு புலம்பல் [8]பொழுதுகண்டு மயங்கல்
[9]பையு ளெய்தல் [10]பரிவுற்று ரைத்த
[11]லன்னமோ டழிதல் [12]வரவுணர்ந் துரைத்தல்
[13]வருத்தங் கூறல் வருபதின் மூன்றுந்
திருத்திய வொருவழித் திறனு கும்மே.

## அகன்றணைவு கூறல்.

[வழிவேறு படமன்னும் பழிவேறு படுமென்றது.]

புகழும்பழியும்பெருக்கிற்பெருகும்பெருகிநின்று
நிகழுநிகழாநிகழ்த்தினல்லாலிதுநீநினைப்பி
னகழுமதிலுமணிதில்லையோனடிப்போதுசென்னித்
திகழுமவர்செல்லல்போலில்லையாம்பழிசின்மொழிக்கே. ()

## கடலொடு வரவுகேட்டல்.

[மணந்தவரொருவழித் தணந்ததற்கிரங்கி
மறிதிரைசேரு மெறிகடற்கியம்பியது.]

ஆரம்பரந்துதிரைபொருநீர்முகின்மீன்பரப்பிச்
சீரம்பரத்திற்றிகழ்ந்தொளிதோன்றுந்துறைவர்சென்றார்
போரும்பரிசுபுகன்றனரோபுலியூர்ப்புனிதன்
சீரம்பர்சுற்றியெற்றிச்சிறந்தார்க்குஞ்செறிகடலே. (கஅஉ)

## கடலொடு புலத்தல்.

[சேறிவளைச் சின்மொழி யெறிகடற் கியம்பியது.]

பாணிகர்வண்டினம்பாடப்பைம்பொன்றருவெண்கிழிதஞ்
சேணிகர்காவின்வழங்கும்புன்னைத்துறைச்சேர்ப்பர்திங்கள்
வாணிகர்வெள்வளைகொண்டகன்றார்திறம்வாய்திறவாய்
பூணிகர்வாளரவன்புலியூர்சுற்றும்போர்க்கடலே. (கஅங)

## அன்னமோடாய்தல்.

[மின்னிடை மடந்தை யன்னமோ டாய்ந்தது.]

பகன்றாமரைக்கண்கெடக்கடந்தோன்புலியூர்ப்பழனத்
தகன்றாமரையன்னமேவண்டுநீலமணியணிந்து [மையா

முகன்றாழ்குழைச்செம்பொன்முத்தணிபுன்னையின்னும்மு
தகன்றாரகன்றேயொழிவர்கொல்லோநம்மகன்றுறையே. ()

## தேர்வழிநோக்கிக் கடலொடுகூறல்.

[மீன்றேய்துறைவர் மீளுமளவு
மான்றேர்வழியை யழியேலென்றது.]

உள்ளுமுருகியுரோமஞ்சிலிர்ப்பவுடையவனுட்
கொள்ளுமவரிலொர்கூட்டந்தந்தான்குனிக்கும்புலியூர்
விள்ளும்பரிசுசென்றார்வியன்றேர்வழிதூரற்கண்டாய்
புள்ளுந்திரையும்பொரச்சங்கமார்க்கும்பொருகடலே. ()

## கூடலிழைத்தல்.

[நீடலந் துறையிற் கூட லிழைத்தது.]

ஆழிதிருத்தும்புலியூருடையானருளினளித்
தாழிதிருத்துமணற்குன்றி னீத்தகன்றார்வருகென்
றூழிதிருத்திச்சுழிக்கணக்கோதிநையாமலைய
வாழிதிருத்தித்தரக்கிற்றியோவுள்ளம்வள்ளலையே. (கஅசு)

## சுடரொடு புலம்பல்.

[துணைகடலேழுசுடர் தடகடந்தளிப்ப
மணமலிகுழலி மனம்புலம்பியது.]

கார்த்தரங்கந்திரைதோணிசுறாக்கடன்மீனெறிவோர்
போர்த்தரங்கந்துறைபானுந்துறைவர்தம்போக்குமிக்க
தீர்த்தரங்கன்றில்லைப்பல்பூம்பொழிற்செப்பும்வஞ்சினமு
மார்த்தரங்குஞ்செய்யுமாலுய்யுமாறென்கொலாழ்சுடரே. ()

## பொழுதுகண்டு மயங்கல்.

[மயறருமாலை வருவதுகண்டு கயறருகண்ணி கவலையுற்றது.]

பகலோன்கரந்தனன்காப்பவர்சேயர்பற்றற்றவர்க்குப்
புகலோன்புகுநர்க்குப்போக்கரியோனெவரும்புகலத்
தகலோன்பயிறில்லைப்பைம்பொழிற்சேக்கைகணேக்கினவா
லகலோங்கிருங்கழிவாய்க்கொழுமீனுண்டவன்னங்களே. ()

## பறவையொடு வருந்தல்.

[செறிபிணிகைம்மிகச் சிற்றிடைப்பேதை
பறவைமேல்வைத்துப் பையுளெய்தியது.]

பொன்னுமணியும்பவளமும்போன்றுபொலிந்திலங்கி
மின்னுஞ்சடையோன்புலியூர்விரவாதவரினுண்ணே
யின்னுமறிகிலவாலென்னைபாவமிருங்கழிவாய்
மன்னும்பகலேமகிழ்ந்திரைதேரும்வண்டானங்களே(கஅகூ)

## பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்.

[முருகவிழ் கானலோடு பரிவுற்றது.]

கருங்கழிகாதற்பைங்கானலிற்றில்லையெங்கண்டர்விண்டா
ரொருங்கழிகாதரமூவெயில்செற்றவொற்றைச்சிலைசூழ்ந்
தருங்கழிகாதமகலுமென்றாழென்றலந்துகண்ணீர்
வருங்கழிகாதல்வனசங்கள்கூப்புமலர்க்கைகளே. (ககூ0)

## அன்னமோடழிதல்.

[இன்னகையவ ளிரவருதுயர மன்னத்தோ டழிந்துரைத்தது.]

மூவறாழீஇயவருண்முதலோன்றில்லைச்செல்வன்முந்நீர்
நாவறாழீஇயவிந்நானிலந்துஞ்சுநயந்தவின்பச்

சேவறழீ இச்சென்று தான்றுஞ்சும்யான்றுயி லாச்செயி ரெங்
காவறழீ இயவர்க்கோ தாதளியகளியன்னமே. (கககை)

## வரவுணர்ந்துரைத்தல்.

[சென்றவர்வரவுணர்ந்து நின்றவணிலைமை
சிறப்புடைப்பாங்கி சிறைப்புறத்துரைத்தது.]

நில்லாவளைநெஞ்சநெக்குருகுங்நெடுங்கண்டுயிலக்
கல்லாகதிர்முத்தங்காற்றுமெனக்கட்டுரைக்கதில்லைத் [டா
தொல்லோனருள்களில்லாரிற்சென்றூர்சென்றசெல்லல்கண்
மெல்லார்மதியேயிதுநின்னையானின்றிரக்கின்றதே. (ககஉ)

## வருத்தமிகுதி கூறல்.

[நீங்கி யணைந்தவற்குப் பாங்கி பகர்ந்தது.]

வளருங்கறியறியாமந்திதின்றுமம்மர்க்கிடமாய்த்
தளருந்தடவரைத்தண்சிலம்பாதனதங்கமெங்கும்
விளரும்விழுமெழும்விம்முமெலியும்வெண்மாமதிநின்
றொளிருஞ்சடைமுடியோன்புலியூரன்னவொண்ணுதலே. ()

---

## கசு. உடன்போக்கு.

---

இஃது ஐம்பத்தாறு துறையுடைத்து. அவை வருமாறு:—

1பருவங் கூறல் படைத்துமொழி தல்லொடு
2மருவமர் கோதையை மகட்பேச் சுரைத்தல்
3பொன்னணி வுரைத்தல் 4பொருள்விலை கூற
5லன்னமென் னடையா ளருணைக்கேட் டழிந்த
6றளர்வறிந் துரைத்த 7ருழ்குழ லாட

னுளநினை வுரைத்த [8]லுடன்கொண்டு சேறற்
கருமை யுரைத்த [9]லாதரங் கூறன்
[10]மருவிய தடங்கயல் வாழா ளென்றல்
[11]பொருவரு கற்பின் புனைநல னுரைத்த
[12]றுணிந்தமை கூற [13]துணிவு கேட்ட
[14]றுணிவறி வித்த [15]முல்லை நாண்விட
[16]றுணிவெடுத் துரைத்தல் [17]கொண்டக லெனவுரைத்த
[18]லடிவழி நினைந்துநின் றவனுளம் வாடல்
[19]கொடியிடை யாளைக் கொண்டுசென் றுய்த்த
[20]லோம்படுத் துரைத்தல் [21]வழிப்படுத் துரைத்த
[22]றேம்படு கோதையைத் திறலடு வேலோன்
பையக்கொண் டேகல் [23]பயங்கெட வுரைத்தன்
[24]மையமர் கண்ணியை வழியயர் வகற்ற
[25]னெறிவிலக் கல்லொடு [26]நெறியிடைக் கண்டவர்
செறிவெடுத் துரைத்தல் [27]சேயிழை யாளுடன்
வழிவிளை யாடல் [28]வழியெதிர் வருவோ
ரெழினக ரணிமை யிதுவென வுரைத்த
[29]னகர்காட் டல்லொடு [30]நகரிடைப் புக்குப்
பதிபரி சுரைத்தல் [31]பாங்கியைக் கிட்டி
மதிநுத லாளை வளர்த்தவள் கேட்ட
[32]லறத்தொடு நிற்ற [33]லதுகேட் டழுங்க
[34]றிறப்பா டுன்னிச் செவிலிகவன் றுரைத்த
[35]லடிநினைந் திரங்க [36]லதுதாய்க் குரைத்தன்
[37]மடவரல் போக வாடி யுரைத்தல்
[38]கிளிமொழிக் கிரங்கல் [39]கிளர்சுடர்ப் பராய்த
[40]லளிபெறு பருவத்திற் கவள்கவன் றுரைத்த
[41]லுடத் துணித [42]னற்றாய் நயந்தவர்
கூடக் கரையெனக் கொடிக்குறி பார்த்தல்

[43]சோதிடங் கேட்டல் [44]சுவடுகண் டறித
[45]லேதமுற் றவைகண் டிரங்கி யுரைத்தல்
[46]வேட்ட மாதரைக் கண்டு வினவல்
[47]புறவொடு புலத்தல் [48]குரவொடு வருந்த
[49]திறலருந் தவத்தொடு செல்வா நின்ற
மாவிர தியரை வழியிடை வினவல்
[50]வேதியர் தம்மை விரும்பி வினவல்
[51]புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவன்
[52]மணந்தரு குழலாண் மன்னிய நிலையொடு
வேங்கை பட்டது கண்டு வியத்த
[53]லாங்கவ ரியைபணி யவட்கெடுத் துரைத்தன்
[54]மீள வுரைத்தன் [55]மீளா தவனுக்
கூழ்முறை யிதுவென வுலகியல் புரைத்த
[56]லழுங்குதாய்க் குரைத்த லெம்பதோ டாறு
முழுங்கொலை வேலோ னுடன்போக் காகும்.

## பருவங் கூறல்

[உருவது கண்டவ ளருமை யுரைத்தது.]

ஓராகமிரண்டெழிலாயொளிர்வோன்றில்லையொண்ணுதலங்
கராகம்பயின்றமிழ்தம்பொதிந்தீர்ஞ்சுணங்காடகத்தின்
பராகஞ்சிதர்ந்தபயோதரமிப்பரிசேபணைத்த
விராகங்கண்டால்வள்ளலேயில்லையேயெமரெண்ணுவதே.()

## மகட்பேச்சுரைத்தல்.

[படைத்துமொழிகிளவியிற் பணிமொழிப்பாங்கி
யடற்கதிர்வேலோற் கறியவுரைத்தது.]

மணியக்கணியுமரனஞ்சமஞ்சிமறுகிவிண்ணோர்
பணியக்கருணைதரும்பரன்றில்லையன்னாடிறத்துத்

துணியக்கருதுவதின்றேதுணிதுறைவாநிறைபொன்
னணியக்கருதுகின்றார்பலர்மேன்மேலயலவரே. (கக௱ரு)

## பொன்னணிவுரைத்தல்.

[பலபரிசினாலு மலர்நெடுங்கண்ணியை
நன்னுதற்பாங்கி பொன்னணிவரோன்றது.]

பாப்பணியோன்றில்லைப்பல்பூமருவுசில்லோதியைநற்
காப்பணிந்தார்பொன்னணிவாரினிக்கமழ்பூந்துறைவ
கோப்பணிவான்றோய்கொடிமுன்றினின்றிவையோர்குழூஉ
மாப்பணிலங்கண்முழங்கத்தழங்குமணமுரசே. (கக௱சா)

## அருவிலையுரைத்தல்.

[பேதையறிவு பேதைமையுடைத்தென
வாதாத்தோழி யருவிலையுரைத்தது.]

எலும்பாலணியிறையம்பலத்தோனெல்லைசெல்குறுவோர்
நலம்பாவியமுற்றுநல்கினுங்கல்வரைநாடரம்ம
சிலம்பாவடிக்கண்ணிசிற்றிடைக்கேவிலைசெப்பலொட்டார்
கலம்பாவியமுலையின்விலையென்னீகருதுவதே. (கக௱எ)

## அருமைகேட்டழிதல்.

[பெருமை நாட்டத்தவள் அருமைகேட் டழிந்தது.]

விசும்புற்றதிங்கட்கழுமழப்போன்றினிவிம்மிவிம்மி
யசும்புற்றகண்ணோடலறாய்கிடந்தான்றில்லையன்னாள்
குயம்புற்றரவிடைகூரெயிற்றூறல்குழன்மொழியி
னயம்பற்றிநின்றுநடுங்கித்தளர்கின்ற நன்னெஞ்சமே. ( ).

## தளர்வறிந்துரைத்தல்.

[தன்றுறைவன் றளர்வறிந்து
கொண்டுநீங்கெனக் குறித்துரைத்தது.]

மைதயங்குந்திரைவாரியைநோக்கிமடலவிழ்பூங்
கைதையங்கானலைநோக்கிக்கண்ணீர்கொண்டெங்கண்டர்தில் [லைப்
பொய்தயங்குந்நுண்மருங்குனல்லாரையெல்லாம்புல்லினள்
பைதயங்கும்மரவம்புரையும்மல்குற்பைந்தொடியே. (௧௬௧)

## குறிப்புரைத்தல்.

[நறைக்குழலி குறிப்புரைத்தது.]

மாவைவந்தாண்டமென்னோக்கிதன்பங்கர்வண்டில்லைமல்லற்
கோவைவந்தாண்டசெவ்வாய்க்கருங்கண்ணிகுறிப்பறியேன்
பூவைதந்தாள்பொன்னம்பந்துதந்தாளென்னைப்புல்லிக்கொண்டு
பாவைதந்தாள்பைங்கிளியளித்தாளின்றென்பைந்தொடியே.

## அருமையுரைத்தல்.

[கானின்கடுமையு மானின் மென்மையும்
பதியின்சேட்சியு மிதுவெனவுரைத்தது.]

மெல்லியல்கொங்கைபெரியமின்னேரிடைமெல்லடிபூக்
கல்லியல்வெம்மைக்கடங்கடுந்தீக்கற்றுவானமெல்லாஞ்
சொல்லியசீர்ச்சுடர்த்திங்களங்கண்ணித்தொல்லோன்புலியூ
ரல்லியங்கோதைநல்லாயெல்லைசேய்த்தெம்மகனகரே. ()

## ஆதரங்கூறல்.

[அழற்றடம்புரையு மருஞ்சுரமதுவு
நிழற்றடமவட்கு நின்னொடேகினென்றது.]

பிணையுங்கலையும்வன்பேய்த்தேரினைப்பெருகீர்நசையா
லணையுமுரம்புநிரம்பியவத்தமுமையமெய்யே
யிணையுமளவுமில்லாவிறையோனுறைதில்லைத்தண்பூம்
பணையுந்தடமுமன்றே நின்னொடேகினெம்பைங்கொடிக்கே.

## இறந்துபாடுரைத்தல்.

[கார்த்தடமுங் கயலும் போன்றீர்
வார்த்தடமுலையு மன்னனுமென்றது.]

இங்கயலென்னீபணிக்கின்றதேந்தலினைப்பதில்லாக்
கங்கையஞ்செஞ்சடைக்கண்ணுதலண்ணல்கடிகொடில்லைப்
பங்கயப்பாசடைப்பாய்தடநீயப்படர்தடத்துச்
செங்கயலன்றேகருங்கயற்கண்ணித்திருநுதலே. (உ௦௯)

## கற்புநலனுரைத்தல்.

[பொய்யோத்தவிடை போக்குத்துணிய
வையத்திடை வழக்குரைத்தது.]

தாயிற்சிறந்தன்றுநாண்டையலாருக்கந்நாண்டகைசால்
வேயிற்சிறந்தமென்றோளிதிண்கற்பின்விழுமிதன்றீங்
கோயிற்சிறந்துசிற்றம்பலத்தாடுமெங்கூத்தப்பிரான்
வாயிற்சிறந்தமதியிற்சிறந்தமதிநுதலே. (௧௦௪)

## துணிந்தமை கூறல்.

[பொருவேலன்னால் போக்குத்துணிந்தமை
செருவேற் கண்ணிக்குச் சென்றுசெப்பியது.]

குறப்பாவைநின்குழல்வேங்கையம் போதொடுகோங்கம்விரா
நறப்பாடலம்புனைவார்நினைவார்தம்பிரான்புலியூர் [ய்

மறப்பானடுப்பதொர் தீவினை வந்திடிற்சென்றுசென்று
பிறப்பானடுப்பினும்பின்னுந் துன்னத்தகும்பெற்றியரே. ()

## துணிவொடுவினவல்.

[சிலம்பன்றுணிவொடு செல்சுரநினைந்து
கலம்புனைகொம்பர் கலக்கமுற்றது.]

கிழற்றலை தீநெறிநீரில்லைகானகமோரிகத்து
மழற்றலைவெம்பரற்றென்பரென்னோதில்லையம்பலத்தான்
கழற்றலைவைத்துக்கைப்போதுகள்கூப்பகக்கல்லாதவர்போற்
குழற்றலைச்சொல்லிசெல்லக்குறிப்பாகுநங்கொற்றவர்க்கே. ()

## போக்கறிவித்தல்.

[போநசுடர்வேலவன் போக்குத்துணிந்தமை
யரிவைக்கவ ளறியவுரைத்தது.]

காயமுமாவியுநீங்கள்சிற்றம்பலவன்கயிலைச்
சீயமுமாவும்வெரீஇவரலென்பல்செறிதிரைநீர்த்
தேயமும்யாவும்பெறினுங்கொடார்நமரின்னசெப்பிற்
றேயமுநாடுமில்லாச்சுரம்போக்குத்துணிவித்தவே. (உ0எ)

## நாணிழந்துவருந்தல்.

[கற்புநாணினு மூற்சிறந்தமையிற்
சேணெறிசெல்ல வாணுதறுணிந்தது.]

மற்பாய்விடையோன்மகிழ்புலியூரென்னொடும்வளர்ந்த
பொற்பார்திருநாண்பொருப்பர்விருப்புப்புகுந்துநுந்தக்
கற்பார்கடுங்கால்கலக்கிப்பறித்தெறியக்கழிக
விற்பாற்பிறவற்கவேழையர்வாழியெழுமையுமே. (உ0அ)

## துணிவெடுத்துரைத்தல்.

[செல்வமாதர் செல்லத்துணிந்தமை
தோல்வரைநாடற்குத் தோழிசொல்லியது.]

கம்பஞ்சிவந்தசலந்தரனாகங்கீறுத்ததில்லை
நம்பன்சிவநகர்நற்றளிர்கற்சுரமாகுநம்பா
வம்பஞ்சியாவம்புகமிகநீண்டரிசிந்துகண்ணாள்
செம்பஞ்சியின்மிதிக்கிற்பதைக்கும்மலர்ச்சீறடிக்கே.(௨0௯)

## குறியிடங்கூறல்.

[மன்னியவிருளிற் றுன்னியகுறியிற்
கோங்கீவர்கோங்கையை நீங்குகொண்டேன்றது.]

முன்னோன்மணிகண்டமொத்தவனம்பலந்தம்முடிதாழ்த்
துன்னாதவர்வினைபோற்பரந்தோங்குமெனதுயிரே
யன்னாளருபெறலாவியன்னாயருளாசையினாற்
பொன்னார்மணிமகிழ்ப்பூவிழயாம்விழைபொங்கிருளே(௨௧0)

## அடியொடுவழிநினைந்தவனுளம் வாடல்.

[நெறியுறுகுழலியோடு நீங்கத்துணிந்த
உறுசுடர்வேலோ னுள்ளம்வாடியது.]

பனிச்சந்திரனொடுபாய்புனல்சூடும்பரன்புலியூ
ரனிச்சந்திகழுமஞ்சீறடியாவவழல்பழுத்த
கனிச்செந்திரளன்னகற்கடம்போந்துகடக்குமென்றா
லினிச்சந்தமேகலையாட்கென்கொலாம்புகுந்தெய்துவதே. ()

## கொண்டுசென்றுய்த்தல்.

[வண்டமர் குழலியைக் கண்டுகோள் கேன்றது.]

வைவந்தவேலவர்சூழ்வரத்தேர்வரும்வள்ளலுள்ளங்
தெய்வந்தருமிருநேர்குமுழுதுஞ்செழுமிடற்றின் [ன்
மைவந்தகோன்றில்லை வாழ்த்தார்மனத்தின் வழுத்துநர்போ
மொய்வந்தவாவிதெளியுந்துயிலுமிம்முதெயிலே. (உகஉ)

## ஓம்படுத்துரைத்தல்.

[தேம்படு கோதையை ஓம்படுத்தது.]

பறந்திருந்தும்பர்பதைப்பப்படரும்புரங்கரப்பச்
சிறந்தெரியாடிதென்றில்லையன்னாடிறத்துச்சிலம்பா
வறந்திருந்துன்னருளும்பிறிதாயினருமறையின்
றிறந்திரிந்தார்கலியும்முற்றும்வற்றுமிச்சேணிலத்தே. ()

## வழிப்படுத்துரைத்தல்.

[மதிநுதலியை வழிபடுத்துப் பதிவயிற்பெயரும் பாங்கிபகர்ந்தது.]

ஈண்டொல்லையாயமுமௌவையுநீங்கவிவ்வூர்க்கவ்வை தீர்த்
தாண்டொல்லைகண்டிடக்கூடுகநும்மையெம்மைப்பிடித்தின்
றூண்டெல்லைதீரின்பந்தந்தவன்சிற்றம்பலநிலவு
சேண்டில்லைமாநகர்வாய்ச்சென்றுசேர்கதிருத்தகவே.(உகச)

## மெல்லக்கொண்டேகல்.

[பஞ்சின்மெல்லடிப் பணைத்தோளியை
வெஞ்சுரத்திடை மெலிவகற்றியது.]

பேணத்திருத்தியசீறடிமெல்லச்செல்பேரரவம்
பூணத்திருத்தியபொங்கொளியோன்புலியூர்புரையு
மாணத்திருத்தியவான்பதிசேருமிருமருங்குங்
காணத்திருத்தியபோலுமுன்னுமன்னுகானங்களே. (உகரு)

## அடலெடுத்துரைத்தல்.

[வரிசிலையவர் வருதவரெனப் புரிதருதழலிக் கருளவனுரைத்தது.]

கொடித்தேர்மறவர்குழாம்வெங்கரிநிரைகூடினென்கை
வடித்தேரிலங்கெஃகின்வாய்க்குதவாமன்னுமம்பலத்தோ
னடித்தோலரென்னவஞ்சுவனின்னையரென்னின்மன்னுங்
கடித்தேர்குழன்மங்கைகண்டிடிவ்விண்டோய்கனவரையே()

## அயர்வகற்றல்.

[இன்னல்வெங்கடத் தேறிவேலவ
னன்னமன்னவ ளயர்வகற்றியது.]

முன்றோனருண்முன்னுமுன்னுவினையின்முனகர்துன்னு
மின்னுக்கடறிதிப்பேர்ழ்தேகடந்தின்றுகாண்டுஞ்சென்று
பொன்னாரணிமணிமாளிகைத்தென்புலியூர்ப்புகழ்வார்
தென்னுவெனவுடையானடமாடுசிற்றம்பலமே. (உகள)

## நெறிவிலக்கிக் கூறல்.

[சுரத்திடைக்கண்டவர் சுடர்க்குழைமாதொடு
சரத்தணிவில்லோய் தங்குகென்றது.]

விடலையுற்றாரில்லைவெம்முனைவேடர்தமியைமென்பூ
மடலையுற்றார்குழல்வாடினண்மன்னுசிற்றம்பலவற்
கடலையுற்றாரினெறிப்பொழிந்தாங்கருக்கன்சுருக்கிக்
கடலையுற்றான்கடப்பாரில்லையின்றிக்கடுஞ்சுரமே. (உகஅ)

## கண்டவர் மகிழ்தல்.

[மண்டழற் கடத்துக் கண்டவ நுரைத்தது.]

அன்பணைத்தஞ்சொல்லிபின்செல்லுமாடவனீடவன்றன்
பின்பணைத்தோளிவருமிப்பெருஞ்சுரஞ்செல்வதன்று
பொன்பணைத்தன்னவிறையுறைதில்லைப்பொலிமலர்மே
னன்பணைத்தண்ணறவுண்ணளிபோன்றொளிர்நாடகமே. ()

## வழிவிளையாடல்.

[வன்றழற்கடத்து வடிவேலண்ணல்
மின்றங்கிடையோடு விளையாடியது.]

கண்கடம்மாற்பயன்கொண்டனங்கண்டினிக்காரிகைநின்
பண்கடமென்மொழியாரப்பருகவருகவின்னே
விண்கடநாயகன்றில்லையின்மெல்லியல்பங்கனெங்கோன்
றண்கடம்பைத்தடம்போற்கடுங்கானகந்தண்ணெனவே. ()

## நகரணிமை கூறல்.

[வண்டமர்குழலியோடு கண்டவநுரைத்தது.]

மின்றங்கிடையொடுநீவியன்றில்லைச்சிற்றம்பலவர்
குன்றங்கடந்துசென்றானின்றுதோன்றுங்குரூஉக்கமலந்
துன்றங்கிடங்குந்துறைதுறைவள்ளைவெள்ளைநகையார்
சென்றங்கடைதடம்புடைசூழ்தருசேணகரே. (உஉக)

## நகர் காட்டல்

[கொடுங்கடங்கடந்த குழைமுகமாதர்க்குத்
தடங்கிடங்குசூழ் தன்னகர்காட்டியது.]

மின்போல்கொடிநெடுவானக்கடலுட்டிரைவிரிப்பப்
பொன்போல்புரிசைவடவரைகாட்டப்பொலிபுலியூர்
மன்போற்பிறையணிமாளிகைசூலத்தவாய்மடவாய்
நின்போனடையன்னந்துன்னிமுன்றோன்றுநன்னீணகரே. ()

## பதிபரிசுரைத்தல்.

[கன்னணிவர்வளநகர் கண்டுசென்றடைந்து
பன்னணிவர்மொழிக்குப் பதிபரிசுரைத்தது.]

செய்குன்றுவையிவைசீர்மலர்வாவிவிசும்பியங்கி
நைகின்றதிங்களெய்ப்பாறும்பொழிலவைஞாங்கரெங்கும்
பொய்குன்றவேதியரோதிடமுந்திடமிந்திடமு
மெய்குன்றவார்சிலையம்பலவற்கிடமேந்திழையே. (௨௨௯)

## செவிலிதேடல்.

[கவலையுற்ற காதற்றோழியைச் செவிலியுற்றுத் தெரிந்துவினாயது.]

மயிலெனப்பேர்ந்திளவல்லியினொல்கிமென்மான்விழித்துக்
குயிலெனப்பேசுமெங்குட்டனெங்குற்றதென்னெஞ்சகத்தே
பயிலெனப்பேர்ந்தறியாதவன்றில்லைப்பல்பூங்குழலா
யயிலெனப்பேருங்கண்ணாயென்கொலாமின்றயர்கின்றதே ()

## அறத்தொடுநிற்றல்.

[சுடர்க்குழைப்பாங்கி படைத்துமொழிகிளவியிற்
சிறப்புடைச்செவிலிக் கறத்தொடுநின்றது.]

ஆளரிக்கும்பரிதாய்த்தில்லையாவருக்கும்மெளிதாந்
தாளரிக்குன்றிற்றன்பாவைக்குமேவித்தழறிகழ்வேற்
கோளரிக்குந்நிகரன்னாரொருவர்குரூஉமலர்த்தார்
வாளரிக்கண்ணிகொண்டாள்வண்டலாயத்தெம்வாணுதலே.

## கற்புநிலைக்கிரங்கல்

[விற்புரைநுதலி கற்புநிலை கேட்டுக்
கோடாயுள்ள நீடாயழுங்கியது.]

வடுத்தான்வகிர்மலர்கண்ணிக்குத்தக்கின்றுதக்கன்முத்தீக்
கெடுத்தான்கெடலிறொல்லோன்றில்லைப்பன்மலர்கேழ்கிளர
மடுத்தான்குடைந்தன்றழுங்கவழுங்கித்தழீஇமகிழ்வுற்
றெடுத்தாற்கினியனவேயினியாவனவெம்மனைக்கே. (உஉரு)

## கவன்றுரைத்தல்.

[அவணிலை நினைந்து செவிலி கவன்றது.]

முறுவலக்காறந்துவந்தென்முலைமுழுவித்தழுவிச்
சிறுவலக்காரங்கள்செய்தவெல்லாமுழுதுஞ்சிதையத்
தெறுவலக்காலனைச்செற்றவன்சிற்றம்பலஞ்சிந்தியா
ருறுவலக்கானகந்தான்படர்வாணுமொளியிழையே. (உஉஎ)

## அடி நினைந் திரங்கல்.

[வெஞ்சுரமும்மவள் பஞ்சிமெல்லடியுஞ்
செவிலிநினைந்து கவலையுற்றது.]

தாமேதமக்கொப்புமற்றில்லவர்தில்லைத்தண்ணணிச்சப்
பூமேன்மிதிக்கிற்பதைத்தடிபொங்குநங்காயெரியுந்
தீமேலயில்போற்செறிபரற்கானிற்சிலம்படிபா
யாமேநடக்கவருவினையேன்பெற்றவம்மனைக்கே. (உஉஅ)

## நற்றாய்க்குரைத்தல்.

[முகிழ்முலைமடந்தைக்கு முன்னியதறியத்
திகழ்மனைக்கிழத்திக்குச் செவிலிசெப்பியது.]

தழுவினகையிறைசோரிற்றமியமென்றேதளர்வுற்
றழுவினைசெய்யுநையாவஞ்சொற்பேதையறிவிண்ணோர்
குழுவினையுய்யநஞ்சுண்டம்பலத்துக்குனிக்கும்பிரான்
செழுவின்தாள்பணியார்பிணியாலுற்றுத்தேய்வித்ததே. ()

## நற்றாய்வருந்தல்.

[கோடாய் கூற நீடாய் வாடியது.]

யாழியன்மென்மொழிவன்மனப்பேதையொரே திலன்பின்
றோழியைநீத்தென்னைமுன்னேதுறந்து துன்னார்கண்முன்னே
வாழியிம்மூதூர்மறுகச்சென்றாளன் றுமால்வணங்க
வாழிதந்தானம்பலம்பணியாரினருஞ்சுரமே. (உ௩௦)

## கிளிமொழிக்கிரங்கல்.

[மெய்த்தகைமாது வெஞ்சுரஞ்செல்லத்
தத்தையை நோக்கித் தாய்புலம்பியது.]

கொன்னுனைவேலம்பலவற்றொழாரிற்குன்றங்கொடியோ
ளென்னணஞ்சென்றனளென்னணஞ்சேருமெனவயரா
வென்னனைபோயினள்யாண்டையளென்னைப்பருந்தடுமென்
றென்னனைபோக்கன்றிக்கிள்ளையென்னுள்ளத்தைமீர்கின்றதே. ()

## சுடரோடிரத்தல்.

[வெஞ்சுரந்தணிக்கெனச் செஞ்சுடரவற்று
வேயமர்தோளி தாயர்பராயது.]

பெற்றேனெடுங்கிள்ளைவாடமுதுக்குறைபெற்றிமிக்கு
கற்றேன்மொழியழற்கானடந்தாண்முகனானுகப்
பெற்றேன்பிறவிபெறுமற்செய்தோன்றில்லைத்தேன்பிறங்கு
மற்றேன்மலரின்மலர்த்திரங்தேன்சுடர்வானவனே. (உ௩உ)

## பருவநினைந்து கவறல்.

[மூற்று மூலைக்கு நற்றாய் கவன்றது.]

வைம்மலர்வாட்படையூரற்குச்செய்யுங்குற்றேவன்மற்றென்
மைம்மலர்வாட்கண்ணிவல்லள்கொல்லாந்தில்லையான்மலைவாய் [துக்

மொய்ம்மலர்க்காந்தளைப்பாந்தளென்றெண்ணித்தண்ணென்றொளித்
கைம்மலராற்கண்புதைத்துப்பதைக்குமெங்கார்மயிலே. [தக்

## நாடத்துணிதல்.

[கோடாய் மடந்தையை நாடத் துணிந்தது.]

வேயினதோளிமெலியல்விண்ணோர் தக்கன்வேள்வியின்வாய்
பாயினசீர்த்தியனம்பலத்தானைப்பழித்துமும்மைத் [ப்
தீயினதாற்றல்சிரங்கண்ணிழந்துதிசைதிசைதாம்
போயினவெல்லையெல்லாம்புக்குநாடுவன்பொன்னினையே. ()

## கொடிக்குறிபார்த்தல்.

[நற்றாய் நயந்து சொற்புட் பாரயது.]

பணங்களஞ்சாலும்பருவரவார்த்தவன்றில்லையன்ன
மணங்கொளஞ்சாயலுமன்னனுமின்னேவரக்கரைந்தா [மாக்
குணங்கலஞ்சாதுண்ணலாமொண்ணிணப்பலியொக்குவன்
குணங்களஞ்சாற்பொலியுங்கலசேட்டைக்குலக்கொடியே. ()

## சோதிடங்கேட்டல்

[சித்தந்தவர்ந்து தேடுங்கோடாய்
உய்த்துணர்வோரை யுரையினென்றது.]

முன்னுங்கடுவிடமுண்டதென்றில்லைமுன்னோனருளா
லின்னுங்கடியிக்கடிமனைக்கேமற்றியாமயர
மன்னுங்கடிமலர்க்கூந்தலைத்தான்பெறுமாறுமுண்டே
லுன்னுங்கடிதின்றியோதுங்கணன்மறையுத்தமரே. (உகூசு)

## கூவடுகண்டறிதல்.

[கூவடுபடு கடத்துச் செவிலிகண் டறிந்தது.]

தெள்வன்புனற்சென்னியோனம்பலஞ்சிந்தியாரினஞ்சேர்
முள்வன்பரன்முரம்பத்தின் முன்செய்வினையேனெடுத்த
வொள்வன்படைக்கண்ணிசீறடியிங்கிவையுங்குவையக்
கள்வன்பகட்டுரவோனடியென்றுகருதுவனே. (௨௬௭)

## சுவடுகண்டிரங்கல்.

[கடத்திடைக்காரிகை யடித்தலங்கண்டு
மன்னநட்கோடா யின்னலெய்தியது.]

பாலொத்தநீற்றம்பலவன்கழல்பணியார்பிணிவாய்க்
கோலத்தவிசின்மிதிக்கிற்பதைத்தடிகொப்புள்கொள்ளும்
வேலொத்தவெம்பரற்கானத்தினின்றோர்விடலைபின்போங்
காலொத்தனவினையேன்பெற்றமாணிழைகான்மலரே. ()

## வேட்டமாதரைக்கேட்டல்.

[மென்மலர்கோதையும் வேட்டமாதரைப்
பின்வருசெவிலி பெற்றிவினாயது.]

பேதைப்பருவம்பின்சென்றதுமுன்றிலெனைப்பிரிந்தா
ஊதைக்கலமரும்வல்லியொப்பாண்முத்தன்றில்லையன்னா
ளேதிற்சுரத்தயலானொடின்றேகினள்கண்டனையே
போதிற்பொலியுந்தொழிற்புலிப்பற்குரற்பொற்றொடியே. ()

## புறவொடுபுலத்தல்.

[காட்டுப் புறவோடு வாட்ட முரைத்தது.]

புயலன்றலர்சடையேற்றவன்றில்லைப்பொருப்பரசி
பயலன்றனைப்பணியாதவர்போன்மிகுபாவஞ்செய்தேற்
கயலன்றமியனஞ்சொற்றுணைவெஞ்சுரமாதர்சென்று
வியலன்றெனக்கிற்றிலைமற்றுவாழியெழிற்புறவே. (௨௭௦)

## குரவொடு வருந்தல்.

[தேடிச்சென்ற செவிலித்தாயர்
ஆடற்குரவொடு வாடியுரைத்தது.]

பாயும்விடையோன்புலியூரனையவென்பாவைமுன்னே
காயுங்கடத்திடையாடிக்கடப்பவுங்கண்டுநின்று
வாயுந்திறவாய்குழையெழில்வீசவண்டோலுறுத்த
நீயுநின்பாவையுநின்றுநிலாவிடுநீள்குரவே. (உசக)

## விரதியரை வினவல்.

[வழிவருகின்ற மாவிரதியரை
மொழிமின்களென்று முன்னிமொழிந்தது.]

சுத்தியபொக்கணத்தென்பணிகட்டங்கஞ்சூழ்சடைவெண்
பொத்தியகோலத்தினீர்புலியூரம்பலவர்க்குற்ற
பத்தியர்போலப்பணைத்திறுமாந்தபயோதரத்தோர்
பித்திதற்பின்வரமுன்வருமோவொர்பெருந்தகையே (உசஉ)

## வேதியரைவினவல்.

[மாதின்பின் வருஞ்செவிலி வேதியரை விரும்பிவினயது.]

வெதிரேய்கரத்துமென்றோலேய்சுவல்வெள்ளைநூலிற்கொண்மூ
வதிரேய்மறையினிவ்வாறுசெல்வீர்தில்லையம்பலத்துக்
கதிரேய்சடையோன்கரமானெனவொருமான்மயில்போ
லெதிரேவருமேசுரமேவெறுப்பவொரேந்தலொடே. (உசங)

## புணர்ந்துடன்வருவோரைப்பொருந்திவினவல்.

[புணர்ந்துடன்வரும் புரவலனைநுபால்
அணங்கமர்கோதையை யாராய்ந்தது.]

மீண்டாரெனவுவந்தேன்கண்டுநும்மையிம்மேதகவே
பூண்டாரிருவர்முன்போயினரேபுலியூரெனைநின்
றாண்டானருவரையாளியன்னானைக்கண்டேனயலே
தூண்டாவிளக்கனையாயென்னையோவன்னைசொல்லியதே. ()

## வியந்துரைத்தல்.

[வேங்கைபட்டதும் பூங்கொடிநிலையும்
நாடாவநங் கோடாய்கூறியது.]

பூங்கயிலாயப்பொருப்பன்றிருப்புலியூரதென்னத்
தீங்கையிலாச்சிறியாணின்றஇவ்விடஞ்சென்றெதிர்ந்த
வேங்கையின்வாயின்வியன்கைம்மடுத்துக்கிடந்தலற
வாங்கயிலாற்பணிகொண்டதுதிண்டிறலாண்டகையே. ()

## இயைபெடுத்துரைத்தல்.

[சேயிழையோடு செம்மல்போதர
ஆயிழைபங்கனேன் றுயிர்த்தேமென்றது.]

மின்றொத்திடுகழனூபுரம்வெள்ளைசெம்பட்டுமின்ன
வொன்றொத்திடவுடையாளொடொன்றும்புலியூரனென்றே
நன்றொத்தெழிலைத்தொழவுற்றனமென்னதோர்நன்மைதான்
குன்றத்திடைக்கண்டனமன்னைநீசொன்னகொள்கையரே. ()

## மீளவுரைத்தல்.

[கடுங்கடங்கடந்தமை கைத்தாய்க் குரைத்து
நடுங்கன்மின்மீண்டு நடமினென்றது.]

மீள்வதுசெல்வதன்றன்னையிவ்வெங்கடத்தக்கடமாக்
கீழ்வதுசெய்தகிழவோனெடுங்கிளர்கெண்டையன்ன
நீள்வதுசெய்தகண்ணாளிந்நெடுஞ்சுரநீந்தியெம்மை
யாள்வதுசெய்தவன்றில்லையினெல்லையணுகுவரே. (௨௬௭)

## உலகியல் புரைத்தல்.

[செவிலியறு கவலைதீர மன்னியவுலகியன் முன்னியுரைத்தது.]

சுரும்பிவர்சந்துந்தொடுகடன்முத்தும்வெண்சங்குமெங்கும்
விரும்பினர்பாற்சென்றுமெய்க்கணியாம் வியன்கங்கையென்
பெரும்புனல்கூடும்பிரான்சிவன்சிற்றம்பலமனைய [னும்
கரும்பனமென்மொழியாருமங்கீர்மையர்காணுநர்க்கே. ()

## அழுங்குதாய்க் குரைத்தல்.

[செழும்பணை யணைந்தமை அழுங்குதாய்க் குரைத்தது.]

ஆண்டிலெடுத்தவராமிவர்தாமவரல்குவர்போய்த்
தீண்டிலெடுத்தவர்தீவினைதீர்ப்பவன்றில்லையின்வாய்த்
தூண்டிலெடுத்தவராறெங்கொடெற்றப்பழம்விழுந்து
பாண்டிலெடுத்தபஃறாமரைகீழ்ம்பழனங்களே. (உசகூ)

---

## கஎ. வரைவுமுடுக்கம்.

---

இது பதினாறு துறையுடைத்து. அவை வருமாறு:—

1வருத்தங் கூற 2லவன்மறுத் துரைத்த
3லுள்ளது கூற 4லேதங் கூறல்
5பகல்வா வென்ற 6ன்றுமூதிரந் துரைத்தல்
7சிறைப்புறங் கூறன் 8மந்திமேல் வைத்தல்
9கண்டுயி லாமை கண்டா றுரைத்தல்
10பகலுடம் பட்டாள்போன் றிரவா வென்ற
11லிரவுடம்பட் டாள்போன்று பகல்வா வென்ற
12லிரவும் பகலும் வரவொழி கென்றல்
13காலங் கூறல் 14கூறுவிக் குற்றல்
15செலவு கூறல் 16பொலிவழி வுரைத்தலென்

நீரென் கிளவியு மியம்புங் காலை
வாரணி முலையாய் வரைவு முடுக்கம்.

## வருத்தமிகுதிகூறி வரைவுகடாதல்.

[இரவுக்குறியிடத் தேந்திழைப்பாங்கி
வரைவுவேண்டுதல் வரவுரைத்தது.]

எழுங்குலை வாழையி னின்கனி தின்றிள மந்தியந்தண்
செழுங்குலை வாழைநிழலிற் றுயில்சிலம் பாமுன்னமே
யுழுங்கொலைவேற்றிருச் சிற்றம்பலவரை யுன்னலர்போ
லழுங்குலை வேலன்ன கண்ணிக்கென்னோநின்னருள்வகையே.

## பெரும்பான்மைகூறி மறுத்தல்.

[துலம்பரி கோம்பர்க்குச் சிலம்பன் செப்பியது.]

பரம்பயன் றன்னடி யேனுக்குப் பார்விசும் பூடுருவி
வரம்பயன் மாலறி யாத்தில்லை வானவன் வானகஞ்சே
ரரம்பையர் தம்மிட மோவன்றி வேழத்தினென் புநட்ட
குரம்பையர் தம்மிட மோவிடந் தோன்றுமிக் குன்றிடத்தே.

## உள்ளதுகூறி வரைவுகடாதல்.

[இன்மையுரைத்த மன்னனுக்கு
மாழைநோக்கி தோழியுரைத்தது.]

சிறார்கவண் வாய்த்தமணியிற் சிதைபெருந் தேனிழுமென்
றிறால்கழி வுற்றெஞ் சிறுகுடி லுந்துமிட மிதெந்தை
யுறாவரை யுற்றார் குறவர்பெற் றாளுங் கொடிச்சியும்பர்
பெறாவருளம்பலவன் மலைக்காத்தும்பெரும்புனமே.

## ஏதங்கூறி யிரவரவு விலக்கல்.

[இரவருதுயா மேந்தலுக்கேண்ணிப்
பருவரலெய்திப் பாங்கிபகர்ந்தது.]

கடந்தொறும்வாரணவல்சியினொடிப்பல்சீயங்கங்கு
லிடந்தொறும்பார்க்குமியவொருநீயெழில்வேலின்வந்தாற்
படந்தொறுந்தீயரவன்னம்பலம்பணியாரினெம்மைத்
தொடர்ந்தொறுந்துன்பென்பதேயன்பநின்னருடோன்றுவதே

## பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கல்.

[ஆங்ஙனமொழிந்த மடல்வேலன்னணைலப்
பாங்கியைய பகல்வரலேன்றது.]

களிறுற்றசெல்லல்களைவயிற்பெண்மரங்கைஞ்ஞெமிர்த்துப்
பிளிறுற்றவாணப்பெருவரைநாடபெடைநடையோ
டொளிறுற்றமேனியன் சிற்றம்பல நெஞ்சுறா தவர்போல்
வெளிறுற்றவான்பழியாம்பகனீசெய்யுமெய்யருளே. (உருச)

## தொழுதிரந்து கூறல்.

[இரவாவி னேதமஞ்சிச் சுரிதநதுழற்றோழி சொல்லியது.]

கழிகட்டலைமலைவோன்புலியூர்கருதாதவர்போற்
குழிகட்களிறுவெரீஇயரியாளிகுழீஇவழங்காக்
கழிகட்டிரவின்வரல்கழல்கைதொழுதேயிரந்தேன்
பொழிகட்புயலின்மயிலிற்றுவளுமிவள்பொருட்டே. (உருரு)

## தாயறிவு கூறல்.

[சிறைப்புறத்துச் செம்மல்கேட்ப
வெறிக்குழற்பாங்கி மெல்லியற் குரைத்தது.]

விண்ணுஞ்செலவறியாவெறியார்கழல்வீழ்சடைத்தீ
வண்ணன்சிவன்றில்லைமல்லெழிற்கானலரையிரவி
னண்ணன்மணிநெடுந்தேர்வந்ததுண்டாமெனச்சிறிது
கண்ணுஞ்சிவந்தன்னையென்னையுநோக்கினள்கார்மயிலே.

## மந்திமேல்வைத்து வரைவுகடாதல்.

[வரிவளையை வரைவுகடாவி யரிவைதோழி யுரைபகர்ந்தது.]

வான்றோய்பொழிலெழின்மாங்கனிமந்தியின்வாய்க்கடுவன்
றேன்றோய்த்தருந்திமகிழ்வகண்டாடிருநீண்முடிமேன்
மீன்றோய்புனற்பெண்ணைவைத்துடையாளையுமேனிவைத்தான்
வான்றோய்மதிற்றில்லைமாநகர்போலும்வரிவளையே. ()

## காவன்மேல்வைத்துக் கண்டுயிலாமை கூறல்.

[நகர் காவலின் மிகுகழி காதல்.]

நறைக்கண்மலிகொன்றையோனின்றுநாடகமாடுதில்லைச்
சிறைக்கண்மலிபுனற்சீர்நகர்காக்குஞ்செவ்வேலிளைஞர்
பறைக்கண்படும்படுந்தோறும்படாமுலைப்பைந்தொடியாள்
கறைக்கண்மலிகதிர்வேற்கண்படாதுகலங்கினவே.

## பகலுடம்பட்டாள் போன்றிரவரவு விலக்கல்.

[விரைதரு தாரோ யிரவா லென்றது.]

கலராயினர்நினையாத்தில்லையம்பலத்தான்கழற்கன்
பிலராயினர்வினைபோலிருளேங்கிமுழங்கிமின்னிப்
புலராவிரவும்பொழியாமழையும்புண்ணின்னுழைவேன்
மலராவருமருந்துமில்லையோநும் வரையிடத்தே. (உ௫௯)

## இரவுடம்பட்டாள்போன்று பகல் வரவு விலக்கல்.

[இதலடு வேலோய் பகல்வாலென்றது.]

இறவரையும்பர்க்கடவுட்பராய்நின்றெழிலியுன்னிக்
குறவரையார்க்குங்குளிர்வரைநாடகொழும்பவள
நிறவரைமேனியன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ
லுறவரைமேகலையாட்கலராம்பகலுன்னருளே. (உ௬௦)

## இரவும்பகலும்வரவு விலக்கல்.

[இரவும் பகலும் வரவொழி கென்றது.]

சுழியாவருபெருநீர்சென்னிவைத்தென்னைத்தன்றொழும்பிற்
கழியாவருள்வைத்தசிற்றம்பலவன்கரந்தருமான்
விழியாவரும்புரிமென்குழலாடிறத்தையமெய்யே
பழியாம்பகல்வரினீயிரவேதும்பயனில்லையே. (உசுக)

## காலங்கூறிவரைவுகடாதல்.

[முந்தியபொருளைச் சிந்தையில்வைத்து
வரைதருகிளவியிற் றெரியவுரைத்தது.]

மையார்கதலிவனத்துவருக்கைப்பழம்விழுதே
னெய்யாதயின்றிளமந்திகள்சோருமிருஞ்சிலம்பா
மெய்யாவரியதெனம்பலத்தான்மதியூர்கொள்வெற்பின்
மொய்யார்வளரிளவேங்கைபொன்மாலையின்முன்னினவே. ()

## கூறுவிக்குற்றல்.

[ஒத்ததோவ்வா துரைத்ததோழி
கோத்தவிழ்கோதையாற் கூறுவிக்குற்றது.]

தேமாம்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்துவிண்ணோர்வணங்க
நாமாதரிக்கநடம்பயில்வோனைநண்ணாதவரின்
வாமாண்கலைசெல்லநின்றூர்கிடந்தநம்மல்லல்கண்டாற்
றூமாவறிகிலராயினென்னுஞ்சொல்லுந்தன்மைகளே. ()

## செலவு நினைந்துரைத்தல்.

[பாங்கிநெருங்கப் பணிமொழிமொழிந்து
தேங்கமழ்சிலம்பந் சிறைப்புறக்கிளவி.]

வல்சியினெண்குவளர்புற்றகழமல்கும்மிருள்வாய்ச்
செல்வரிதன்றுமன்சிற்றம்பலவரைச்சேரலர்போற்
கொல்கரிசீயங்குறுகாவகைபிடிதானிடைச்செல்
கல்லதரென்வந்தவாறென்பவர்ப்பெறிற்கார்மயிலே. (உகூச)

## பொலிவழிவுரைத்து வரைவுகடாதல்.

[வரைவுவிநம்பு மன்னுயிர்ப்பாங்கி
விரைதநதுழலி மெலிவுரைத்தது.]

வாரிக்களிற்றின்மருப்புகுமுத்தம்வரைமகளிர்
வேரிக்களிக்கும்விழுமலைநாடவிரிதிரையி
ஞரிக்களிக்கமர்நன்மாச்சடைமுடிநம்பர்தில்லை
யேரிக்களிக்கருமஞ்ஞையிக்நீர்மையென்னெய்துவதே. ()

## கஅ. வரைபொருட் பிரிதல்.

—(o)—

இது முப்பத்து மூன்று துறையுடைத்தது. அவை வருமாறு:—

[1]முலைவிலை கூறல் [2]வரைவுடம் படுத்தல்
[3]வரைபொருட் கேகலை யுரையவட் கென்ற
[4]னீகூ றென்றல் [5]சொல்லா தேகல்
[6]பிரிந்தமை கூற [7]னெஞ்சொடு கூற
[8]னெஞ்சொடு வருந்தல் [9]வருத்தங்கண் டுரைத்தல்
[10]வற்புறுத் தல்லொடு [11]வன்புறை யழிதல்
[12]வாய்மை கூறன் [13]மன்னவன் மெய்யுரை
தேறு து புலம்பல் [14]காலமறைத் துரைத்த
[15]றூதுவர வுரைத்த [16]றூதுகண் டழுங்கன்
[17]மெலிவு கண்டு செவிலி யுரைத்தன்

[18]மேவிய செவிலி கட்டுவைப் பித்தல்
[19]கலக்குற்று நிற்றல் [20]கட்டுவித் திகூறல்
[21]வேலனை யழைத்த [22]வின்ன லெய்தல்
[23]விலக்க நினைத்த [24]னிலைமை யுரைத்த
[25]லறத்தொடு நிற்ற [26]லையந் தீர்த்த
[27]லவன்வெறி விலக்கல் [28]செவிலிக்குத் தோழி
யறத்தொடு நிற்ற [29]னற்றாய்க்குச் செவிலி
யறத்தொடு நிற்ற [30]றேர்வர வுரைத்தன்
[31]மணமுரசு கேட்டு மகிழ்ந்து ரைத்த
[32]லையுற்றுக் கலங்க [33]லவனிதி காட்ட
லாறைந் துடனே கூறிய மூன்றும்
விரைமலர்க் குழலாய் வரைபொருட் பிரிதல்.

## முலைவிலை கூறல்.

[கோலவேற் கண்ணிக்கு விலையிலை யென்றது.]

குறைவிற்குங்கல்விக்குஞ்செல்விற்குநின்குலத்திற்கும்வந்தோர்
நிறைவிற்குமேதகுநீதிக்குமேற்பினல்லானினையி
னிறைவிற்குலாவரையேந்திவண்டில்லையனேழ்பொழிலு
முறைவிற்குலாநுதலாள்விலையோமெய்ம்மையோதுநர்க்கே.

## வருமது கூறி வரைவுடம்படுத்தல்.

[தோடுத்தனவிடுத்துத் தோகைதோளைய்
திடுக்கவ்வபெரி திரவரினனென்றது.]

வடுத்தனநீள்வகிர்க்கண்ணிவெண்ணித்திலவாணகைக்குத்
தொடுத்தனநீவிடுத்தெய்தத்துணியென்னைத்தன்றொழும்பி
படுத்தநன்னீள்கழலீசர்சிற்றம்பலந்தாம்பணியார்க் [ற்
கடுத்தனதாம்வரிற்பொல்லாதிரவினின்றாருளே. (உசுஎ)

## வரைபொருட்பிரிவையுரையெனக் கூறல்.

[ஆங்கவள்வயி னீங்கலுற்றவன்
இன்னுயிர்த்தோழிக்கு முன்னிமொழிந்தது.]

குன்றங்கிடையுங்கடந்துமர்கூறுநிதிகொணர்ந்து
மின்றங்கிடைநும்மையும்வந்துமேவுவனம்பலஞ்சேர்
மன்றங்கிடைமருதேகம்பம்வாஞ்சியமன்னபொன்னைச்
சென்றங்கிடைகொண்டுவாடாவகைசெப்புதேமொழியே. ()

## நீயே கூறென்றல்.

[காய்கதிர்வேலோய் கனங்குழையவட்கு
நீயேயுரை நின்செலவென்றது.]

கேழேவரையுமில்லோன்புலியூர்ப்பயில்கிள்ளையன்ன
யாழேர்மொழியாளிரவரினும்பகற்சேறியென்று
வாழேனெனவிருக்கும்வரிக்கண்ணியைநீவருட்டித்
தாழேனெனவிடைக்கட்சொல்லியேகுதனிவள்ளலே. ()

## சொல்லாதேகல்.

[நிரைவளை வாட வுரையா தகன்றது.]

வருட்டிற்றிகைக்கும்வசிக்கிற்றுளங்குமனமகிழ்ந்து
தெருட்டிற்றெளியலள்செப்பும்வகையில்லைசீரருக்கன்
குருட்டிற்புகச்செற்றகோன்புலியூர்குறுகார்மனம்போன்
றிருட்டிற்புரிகுழலாட்கெங்ஙனேசொல்லியேகுவனே. ()

## பிரிந்தமை கூறல்.

[தேங்கமழ் குழலிக்குப் பாங்கி பகர்ந்தது.]

நல்லாய்நமக்குற்றதென்னென்றுரைக்கேனமர்தொடுத்த
வெல்லாநிதியுமுடன்விடுப்பானிமையோரிறைஞ்சு

மல்லார்கழலழல்வண்ணர்வண்டில்லைதொழார்களல்லாற்
செல்லாவழற்கடமின்றுசென்றார்நஞ்சிறந்தவரே. (உஎக)

## நெஞ்சொடுகூறல்.

[கல்வரைநாடன் சொல்லாதகல
மின்னெளிமருங்கு றன்னெளிதளர்ந்தது.]

அருந்தும்விடமணியாமணிகண்டன்மற்றண்டர்க்கெல்லா
மருந்துமமிர்தமுமாகுமுன்னேன்றில்லைவாழ்த்தும்வள்ள
திருந்துங்கடநெறிசெல்லுமிவ்வாறுசிதைக்குமென்றால்
வருந்தும்மடநெஞ்சமேயென்னயாமினிவாழ்வகையே. ()

## நெஞ்சொடு வருந்தல்.

[வெற்ப னீங்கப் பொற்பு வாடியது.]

ஏர்ப்பின்னைதோண்முன்மணந்தவனேத்தவெழிறிகழுஞ்
சீர்ப்பொன்னைவென்றசெறிகழலோன்றில்லைச்சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னைபொன்னவிழ்முத்தமணலிற்கலந்தகன்றார் [தேம்
தேர்ப்பின்னைச்சென்றவென்னெஞ்சென்கொலாமின்றுசெய்கின்ற

## வருத்தங்கண்டுரைத்தல்.

[அழலுறுகோதையின் விழுமுறுபேதையை
நீங்கலரெனப் பாங்கி பகர்ந்தது.]

கானமர்குன்றர்செவியுறவாங்குகணைதுணையா
மானமர்நோக்கியர்நோக்கெனமாநற்றொடைமடக்கும்
வானமர்வெற்பர்வண்டில்லையின்மன்னைவணங்கலர்போற்
றேனமர்சொல்லிசெல்லார்செல்லல்செல்லறிருநுதலே. ()

## வழியொழுகி வற்புறுத்தல்.

[சூழிநுங் கூந்தலைத் தோழி தேருட்டியது.]

மதுமலர்ச்சோலையும்வாய்மையுமன்புமருவிவெங்கான்
கதுமெனப்போக்குநிதியினருக்குமுன்னிக்கலுழ்ந்தா [போ
ஞெதுமலர்நோக்கமொர்மூன்றுடையோன்றில்லைநோக்கலர்
விதுமலர்ப்பாவைக்கென்னோ வந்தவாறென்பரேந்திழையே.

## வன்புறை யெதிரழிந்திரங்கல்.

[வன்கறைவேலோன் வரைவுநீட
வன்புறையழிந்தவன்ா மனமழுங்கியது.]

வந்தாய்பவரையில்லாமயின்முட்டையிளையமந்தி
பந்தாடிரும்பொழிற்பல்வரைநாடன்பண்போலினிதே
கொந்தார்நறுங்கொன்றைக் கூத்தன்றென்றில்லைதொழார்குழுப்போற்
சிந்தாகுலமுற்றுப்பற்றின்றிநையுந்திருவினர்க்கே. (உஎகூ)

## வாய்மைகூறிவருத்தந்தணித்தல்.

[வேற்றடங்கண்ணியை யாற்றுவித்தது.]
மொய்யென்பதேயிழைகொண்டவனென்னைத்தன்மொய்கழற்காட்
செய்யென்பதேசெய்தவன்றில்லைச்சூழ்கடற்சேர்ப்பர்சொல்லும்
பொய்யென்பதேகருத்தாயிற்புரிகுழற்பொற்றொடியாய்
மெய்யென்பதேதுமற்றில்லைகொலாமிவ்வியலிடத்தே. ()

## தேறாது புலம்பல்.

[தீதறுகண்ணி தேற்றத்தேறாது போதுறுகுழலி புலம்பியது.]
மன்செய்தமுன்னாண்மொழிவழியேயன்னவாய்மைகண்டு
மென்செய்தநெஞ்சுநிறையுநில்லாவெனதின்னுயிரும்
பொன்செய்தமேனியன்றில்லையுறாரிற்பொறையரிதா
முன்செய்ததீங்குகொல்காலத்துநீர்மைகொன்மொய்குழலே.

## காலமறைத்துரைத்தல்.

[காந்தள்கருவுறக் கடவுண்மழைக்கென்
றேந்திழைப்பாங்கி யினிதியம்பியது.]

கருந்தினையோம்பக்கடவுட்பராவிநமர்கலிப்பச்
சொரிந்தனகொண்மூச்சுரந்தன்பேரருளாற்றொழும்பிற்
பரிந்தெனையாண்டசிற்றம்பலத்தான்பரங்குன்றிற்றுன்றி
விரிந்தனகாந்தள்வெருவரல்காரெனவென்வளையே. (௨௭௯)

## தூதுவரவுரைத்தல்.

[ஆங்கொரு தூதுவரப் பாங்கிகண் டுரைத்தது.]

வென்றவர்முப்புரஞ்சிற்றம்பலத்துணின்றாடும்வெள்ளிக்
குன்றவர்குன்றாவருடரக்கூடினர்நம்மகன்று
சென்றவர்தூதுகொல்லோவிருந்தேமையுஞ்செல்லல்செப்பா
நின்றவர்தூதுகொல்லோவந்துதோன்றுநிரைவளையே. ()

## தூதுகண்டழுங்கல்.

[அயலுற்ற தூதுவரக் கயலுற்றகண்ணி மயலுற்றது.]

வருவனசெல்வனதூதுகளேயிலவான்புலியூ
ரொருவனதன்பரினின்பக்கலவிகளுள்ளுருகத்
தருவனசெய்தனதாவிகொண்டேகி யென்னெஞ்சிற்றம்மை
யிருவினகாதலரேதுசெய்வானின்றிருக்கின்றதே. (௨௮௧)

## மெலிவுகண்டுசெவிலி கூறல்.

[வண்டமர்புரிகுழ லொண்டொடிமெலிய
வாடாநின்ற கோடாய் கூறியது.]

வேயினமென்றோண்மெலிந்தொளிவாடிவிழிபிறிதாய்ப்
பாயினமேகலைபண்டையளல்லள்பவளச்செவ்வி

யாயினவிசனமரர்க்கமரன்சிற்றம்பலத்தான்
சேயினதாட்சியிற்பட்டனளாமித்திருந்திழையே. (உஅஉ)

## கட்டுவைப்பித்தல்.

[மால்கொண்ட கட்டுக் கால்கொண்டது.]

சுணங்குற்றகொங்கைகள்சூதுற்றிலசொற்றெளிவுற்றில
குணங்குற்றங்கொள்ளும்பருவமுறாள்குறுகாவசுரர்
நிணங்குற்றவேற்சிவன்சிற்றம்பலநெஞ்சுறாதவர்போ
லணங்குற்றநோயறிவுற்றுரையாடுமினன்னையரே. (உஅ௩)

## கலக்கமுற்று நிற்றல்.

[தெய்வத்திற் றெரியுமென வெவ்வத்தின் மெலிவுற்றது.]

மாட்டியன்றேயெம்வயிற்பெருநாணினிமாக்குடிமா
சூட்டியன்றேநிற்பதோடியவாறிவளுள்ளமெல்லாந் [போல்
காட்டியன்றேநின்றதில்லைத்தொல்லோனைக்கல்லாதவர்
வாட்டியன்றோர்குழலார்மொழியாதனவாய்திறந்தே.(உஅ௪)

## கட்டுவித்தி கூறல்.

[கட்டுவித்தி விட்டுரைத்தது.]

குயிலிதன்றேயென்னலாஞ்சொல்லிகூறன்சிற்றம்பலத்தா
னியலிதன்றேயென்னலாகாவிறைவிறற்சேய்கடவு
மயிலிதன்றேகொடிவாரணங்காண்கவன்சூர்தடிந்த
வயிலிதன்றேயிதன்றேநெல்லிற்றோன்றுமவன்வடிவே. ()

## வேலனையழைத்தல்.

[வெறியாடிய வேலனைக்கூஉய்
நெறியார்குழலி தாயர்நின்றது.]

வேலன்புகுந்துவெறியாடுகவெண்மறியறுக்க
காலன்புகுந்தவியக்கழல்வைத்தெழிற்றில்லைநின்ற
மேலன்புகுந்தென்கணின்றானிருந்தவெண்காடனைய
பாலன்புகுந்திப்பரிசினினிற்பித்தபண்பினுக்கே. (உஅசு)

## இன்னலெய்தல்.

[ஆடியவேறியிற் கூடுவதறியாது
நன்னறுங்கோதை யின்னலெய்தியது.]

அயர்ந்தும்வெறிமறியாவிசெகுத்தும்விளர்ப்பயலார்
பெயர்ந்துமொழியாவிடினென்னைபேசுவபேர்ந்திருவ
ருயர்ந்தும்பணிந்துமுணரானதம்பலமுன்னலரிற்
றுயர்ந்தும்பிறிதினொழியினென்னாதுந்துறைவனுக்கே. ()

## வெறிவிலக்குவிக்கநினைதல்.

[அயறருவேறியின் மயறருமேனை
விலக்கலுற்ற தலக்கொடிநினைந்தது.]

சென்றார்திருத்தியசெல்லனின்றார்கள்சிதைப்பரென்றா
னன்றாவழகிதென்றேயிறைதில்லைதொழாரினைந்து
மொன்றாமிவட்குமொழிதல்கில்லேன்மொழியாதுமுய்யேன்
குன்றார்துறைவர்க்குறுவேனுரைப்பனிக்கூர்மறையே. ()

## அறத்தொடு நிற்றலையுரைத்தல்.

[வெறித்தலைவேரீஇ வெருவருதோழிக்
கறத்தோடுநின்ற வாயிழையுரைத்தது.]

யாயுக்தெறுகவயலவரேசுகவூர்நகுக
நீயுமுனிகநிகழ்ந்ததுகூறுவலென்னுடைய
வாயுமனமும்பிரியாவிறைதில்லைவாழ்த்துநர்போற்
றாயனினக்குக்கடுஞ்சூடருவன்சுடர்க்குழையே. (உஅகூ)

## அறத்தொடுநிற்றல்.

[செய்தவெறியி னெய்துவதறியாது
நிறத்தொடித்தோழிக் கறத்தொடுநின்றது.]

வண்டலுற்றேமெங்கண்வந்தொருதோன்றல்வரிவளையீ
ருண்டலுற்றேமென்றுநின்றதொர்போழ்துடையான்புலியூர்
கொண்டலுற்றேறுங்கடல்வரவெம்முயிர்கொண்டுதந்து [க்
கண்டலுற்றோர்நின்றசேரிச்சென்றானோர்கழலவனே. (உகூ0)

## ஐயந்திரக் கூறல்.

[விலங்குதல்விரும்பு மேதகுதோழி
யலங்கற்குழலிக் கறியவுரைத்தது.]

குடிக்கலர்கூறினுங்கூறாவியன்றில்லைக்கூத்தனதாண்
முடிக்கலராக்குமொய்பூந்துறைவற்குமுரிபுருவ
வடிக்கலர்வேற்கண்ணிவந்தனசென்றுநம்மாயறியும்
படிக்கலராமிவையென்னுமறைக்கும்பரிசுகளே. (உகூக)

## வெறிவிலக்கல்.

[அறத்தொடுநின்று திறத்தினிற்பாங்கி
வெறிவிலக்கிப் பிறிதுரைத்தது.]

விதியுடையாருண்கவேரிவிலக்கலமம்பலத்துப்
பதியுடையான்பரங்குன்றினிற்பாய்புனல்யாமொழுகக்
கதியுடையான்கதிர்த்தோணிற்கவேறுகருதுநின்னின்
மதியுடையார்தெய்வமேயில்லைகொல்லினிவையகத்தே. ()

## செவிலிக்குத்தோழியறத்தொடுநிற்றல்.

[சிறப்புடைச் செவிலிக் கறத்தொடு நின்றது.]

மனக்களியாயின்றியான்மகிழ்தூங்கத்தன்வார்கழல்க
ளெனக்களியாநிற்குமம்பலத்தோனிருந்தண்கயிலைச்

சினக்களியானைகடிந்தாரொருவர்செவ்வாய்ப்பசிய
புனக்கிளியாங்கடியும்வரைச்சாரற்பொருப்பிடத்தே.(உகூங)

## நற்றாய்க்குச் செவிலி யறத்தொடுநிற்றல்.

[கற்பினின்வழாமை நிற்பித்தெடுத்தோள்
தலக்கொடிதாயர்க் கறத்தொடுநின்றது.]

இளையாளிவளையென்சொல்லிப்பரவுதுமீரெயிறு
முளையாவளவின்முதுக்குறைந்தாண்முடிசாய்த்திமையோர்
வளையாவழுத்தாவருதிருச்சிற்றம்பலத்துமன்னன்
றிளையாவருமருவிக்கயிலைப்பயில்செல்வியையே. (உகூச)

## தேர்வரவு கூறல்.

[மணிநெடுந்தேரோ னணிதினின்வருமென
யாழியன்மொழிக்குத் தோழிசொல்லியது.]

கள்ளினமார்த்துண்ணும்வண்கொன்றையோன்றில்லைக்கார்க்
புள்ளினமார்ப்பப்பொருதிரையார்ப்பப்புலவர்கடம் [கடல்வாய்ப்
வள்ளினுமார்ப்பமதுகரமார்ப்பவலம்புரியின்
வெள்ளினமார்ப்பவரும்பெருந்தேரின்றுமெல்லியலே.

## மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்.

[நிலங்காவலர் நீணிமணத்தி னலங்கண்டவர் நயந்துரைத்தது.]

பூரணபொற்குடம்வைக்கமணிமுத்தம்பொன்பொதிந்த
தோரணநீடுகதூரியமார்க்கதொன்மாலயற்குங்
காரணனேரணிகண்ணுதலோன்கடற்றில்லையன்ன
வாரணவும்முலைமன்றலென்றேங்குமணமுரசே. (உகூரு)

## ஐயுற்றுக் கலங்கல்.

[நல்லவர்முரசுமற் றல்லவர்முரசெனத்
தெரிவரிதென வரிவைகலங்கியது.]

அடற்களியாவற்குமன்பர்க்களிப்பவன்றன்பவின்பம்
படக்களியாவண்டறைபொழிற்றில்லைப்பரமன்வெற்பிற்
கடக்களியானைகடிந்தவர்க்கோவன்றிநின்றவர்க்கோ
விடக்களியாநம்விழுநகரார்க்கும்வியன்முரசே. (உகஎ)

## நிதிவரவு கூறுநிற்றல்.

[மகிழ்தருமனத்தொடு வண்புகழ்த்தோழி
திகழ்நிதி மடந்தைக்குத் தெரியவுரைத்தது.]

என்கடைக்கண்ணினும்யான்பிறவேத்தாவகையிரங்கித்
தன்கடைக்கண்வைத்ததண்டில்லைச்சங்கரன்றாழ்கயிலைக்
கொன்கடைக்கண்டரும்யானைகடிந்தார்கொணர்ந்திறுத்தார்
முன்கடைக்கணிதுகாண்வந்துதோன்றுமுழுநிதியே. ()

---

## ககூ. மணஞ்சிறப்புரைத்தல்.

---

இஃது ஒன்பது துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]மணமுரசு கூறன் [2]மகிழ்ந்துரைத் தல்லொடு
[3]வழிபாடு கூறல் [4]வாழ்க்கைநலங் கூறல்
[5]காதல்கட் டுரைத்தல் [6]கற்பறி வித்தல்
[7]கற்புப் பயப்புரைத்தல் [8]காதன் மருவுரைத்தல்
[9]கலவி யுரைத்தல் கருதிய வொன்பது
நலமிகு மணமிவை நாடுங் காலே.

## மணமுரசு கூறல்.

[வரைவுதோன்ற மகிழ்வுறுதோழி
நிரைவளைக்கு நின்றுரைத்தது.]

பிரசந்திகழும்வரைபுரையானையின்பீடழித்தார்
முரசந்திகழுமுருகியநீங்குமெவர்க்குமுன்னா
மரசம்பலத்துநின்றாடும்பிரானருள்பெற்றவரிற்
புரைசந்தமேகலையாய் துயர்தீரப்புகுந்துநின்றே. (உகூகூ)

## மகிழ்ந்துரைத்தல்.

[மன்னியகடியிற் பொன்னணங்கோதையை
நன்னுதற்றோழி தன்னின் மகிழ்ந்தது.]

இருந்துதியென்பயிற்கொண்டவன்யானெப்பொழுதுமுன்னு
மருந்துதிசைமுகன்மாற்கரியோன்றில்லைவாழ்த்தினர்போ
லிருந்துதிவண்டனவாமெலரிமுன்வலஞ்செய்திடப்பா
லருந்துதிகாணுமளவுஞ்சிலம்பனருந்தழையே. (கூ00)

## வழிபாடு கூறல்.

[மணமனைகாண வந்தசெவிலிக்குத்
துணையலர்க்குழலி தோழிசொல்லியது.]

சீரியலாவியும்யாக்கையுமென்னச்சிறந்தமையாற்
காரியல்வாட்கண்ணியெண்ணகலார்கமலங்கலந்த
வேரியுஞ்சந்தும்வியற்றந்தெனக்கற்பினிற்பரன்னே
காரியல்கண்டர்வண்டில்லைவணங்குமெங்காவலரே. (கூ0க)

## வாழ்க்கைநலங் கூறல்.

[மணமனைச்சென்று மகிழ்தருசெவிலி
யணிமனைக்கிழத்திக் கதன்சிறப்புரைத்தது.]

தொண்டினமேவுஞ்சுடர்க்கழலோன்றில்லைத்தொன்னகரிற்
கண்டினமேவுமியவணின்கொழுநன்செழுமென்
றண்டினமேவுதிண்டோளவன்யானவடற்பணிவோள்
வண்டினமேவுங்குழலாளயன்மன்னுமிவ்வயலே. (கO௨)

## காதல் கட்டுரைத்தல்.

[சோதி வேலவன் காதல் கட்டுரைத்தது.]

பொட்டணியானுதல்போயிறும்பொய்போலிடையெனப்பூ
ணிட்டணியான்றவிசின்மலரன்றிமிதிப்பக்கொடான்
மட்டணிவார்குழல்வையான்மலர்வண்டுறுதலஞ்சிக்
கட்டணிவார்சடையோன்றில்லைபோலிதன்காதலனே (கOக)

## கற்பறிவித்தல்.

[விற்போலிநுதலி கற்பறிவித்தது.]

தெய்வம்பணிகழலோன்றில்லைச்சிற்றம்பலமனையா
டெய்வம்பணிந்தறியாளென்றுநின்றுதிறைவழங்காத்
தெவ்வம்பணியச்சென்றாலுமன்வந்தன்றிச்சேர்ந்தறியாள்
பௌவம்பணிமணியன்னார்பரிசின்னபான்மைகளே. (கO௪)

## கற்புப் பயப்புரைத்தல்.

[கற்புப் பயந்த அற்புத முரைத்தது.]

சிற்பந்திகழ்தருதிண்மதிற்றில்லைச்சிற்றம்பலத்துப்
பொற்பந்தியன்னசடையவன்பூவணமன்னபொன்னின்
கற்பந்திவாய்வடமீனுங்கடக்கும்படிகடந்து
மிற்பந்திவாயன்றிவைகல்செல்லாதவனீர்ங்களிறே. (கOரு)

## மருவுதலுரைத்தல்.

[இருவர் காதலுமருவுத லுரைத்தது.]

மன்னவன்றெம்முனைமேற்செல்லுமாயினுமாலரியே
றன்னவன்றேர்புறத்தல்கல்செல்லாதுவரகுணனாந்
தென்னவனேத்துசிற்றம்பலத்தான்மற்றைத்தேவர்க்கெல்லா
முன்னவன்மூவலன்னாளுமற்றோர்தெய்வமுன்னலனே. ()

## கலவி யின்பங்கூறல்.

[நன்னுதன்மடந்தை தன்னலங்கண்டு
மகிழ்தூங்குளத்தோ டிதுளைகூறியது.]

ஆனந்தவெள்ளத்தழுந்துமொராருயிரீருருக்கொண்
டானந்தவெள்ளத்திடைதிளைத்தாலொக்குமம்பலஞ்சே
ரானந்தவெள்ளத்தறைகழலோனருள்பெற்றவரி
னானந்தவெள்ளம்வற்றாதுமுற்றாதிவ்வணிநலமே. (கOஎ)

---

## உO. ஓதற்பிரிவு.

இது நான்குதுறையுடைத்து. அவைவருமாறு:—
[1]கல்விநலங் கூறல் [2]பிரிவுநினை வுரைத்தல்
[3]கலக்கங்கண் டுரைத்தல் [4]காதலர் தமது
வாய்மொழி கூறல் வருவன நான்குந்
தீமையில் கல்வி தேருங் காலே.

## கல்வி நலங்கூறல்.

[கல்விக்ககல்வர் செல்வத்தவரெனச்
செறிதுழற்பாங்கிக் கறிவறிவித்தது.]

சீரளவில்லாத்திகழ்தருகல்விச்செம்பொன்வரையி
னாரளவில்லாவளவுசென்றாரம்பலத்துநின்ற
வோரளவில்லாவொருவனிருங்கழலுன்னினர்போ
லேரளவில்லாவளவினராகுவரேந்திழையே. (கOஅ)

## பிரிவுநினைவுரைத்தல்.

[கல்விக்ககல்வர் செல்வத்தவரெனப்
பூந்தழன் மடந்தைக்குப் பாங்கி பகர்ந்தது.]

வீதலுற்றார்தலைமாலையன்றில்லைமிக்கோன்கழற்கே
காதலுற்றார்நன்மைகல்விசெல்வீதருமென்பதுகொண்
டோதலுற்றாருற்றுணர்தலுற்றார்செல்லன்மல்லழற்கான்
போதலுற்றார்நின்புணர்முலையுற்றபுரவலரே. (௩௦௧)

## கலக்கங்கண்டுரைத்தல்.

[ஓதற்ககல்வர் மேதக்கவரெனப்
பூங்கொடிகலக்கம் பாங்கிகண்டுரைத்தது.]

கற்பாமதிற்றில்லைச்சிற்றம்பலமதுகாதல்செய்த
விற்பாவிலங்கலெங்கோனைவிரும்பலர்போலவன்பர்
சொற்பாவிரும்பினரென்னமெல்லோதிசெவிப்புறத்துக்
கொற்பாவிலங்கிலைவேல்குளித்தாங்குக்குறுகியதே. (௩௪௦)

## வாய்மொழிகூறித் தலைமகள்வருந்தல்.

[தீதறுகல்விக்குச் செல்வன்செல்லுமெனப்
போதுறுகுழலி புலம்பியது.]

பிரியாமையுமுயிரொன்றாவதும்பிரியிற்பெரிதுந்
தரியாமையுமொருங்கேநின்றுசாற்றினர்தையன்மெய்யிற்
பிரியாமைசெய்துநின்றோன்றில்லைப்பேரியலூரரன்ன
புரியாமையுமிதுவேயினியென்னும்புகல்வதுவே.

## உக. காவற் பிரிவு.

——(o)——

இஃது இரண்டு துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]பிரிவறிவித்தல் [2]பிரிவுகேட்டிரங்கல்
வருபவை யிரண்டும் வையங் காவல்.

### பிரிவறிவித்தல்.

[இருநிலங்காவற் கேகுவர்நமரெனப்
பொருசுடர்வேலோன் போக்கறிவித்தது.]

மூப்பானிளையவன்முன்னவன்பின்னவன்முப்புரங்கள்
வீப்பான்வியன்றில்லையானருளால்விரிநீருலகங்
காப்பான்பிரியக்கருதுகின்றூர்நமர்கார்க்கயற்கட்
பூப்பானலமொளிரும்புரிதாழ்குழற்பூங்கொடியே. (௩கஉ)

### பிரிவு கேட்டிரங்கல்.

[மன்னவன்பிரிவு நன்னுதலறிந்து
பழங்கணெய்தி யழுங்கல் சென்றது.]

சிறுகட்பெருங்கைத்திண்கோட்டுக்குழைசெவிச்செம்முகமா
தெறுகட்டழியமுன்னுய்யச்செய்தோர்கருப்புச்சிலையோ [த்
னுறுகட்டழலுடையோனுறையம்பலமுன்னவரிற்
றுறுகட்புரிகுழலாயிதுவோவின்றுசூழ்கின்றதே.

---

## உஉ. *பகைதணிவினைப் பிரிவு.

——o——

இஃது இரண்டுதுறையுடைத்து. அவை வருமாறு:—

[1]பிரிவு கூறல் [2]வருத்தந் தணித்த
லிருபகை தணித்தற் கேக லென்ப.

## பிரிவு கூறல்.

[துன்னுபகைதணிப்ப மன்னவன் பிரிவு
நன்னாறுங்கோதைக்கு முன்னிமொழிந்தது.]

மிகைதணித் தற்கரி தாமிருவேந்தர்வெம்போர்மிடைந்த
பகைதணித் தற்குப்படர்தலுற்றார்நமர்பல்பிறவித் [வாய்
தொகைதணித் தற்கென்னையாண்டுகொண்டோன்றில்லைச்சூழ்பொழில்
முகைதணித் தற்கரிதாம்புரிதாழ்தருமொய்குழலே. (௩௧௪)

## வருத்தந்தணித்தல்.

[மணிப்பூண்மன்னவன் றணப்பதில்லை
அஞ்சல்போயெனவஞ்சியைத் தணித்தது]

நெருப்புறுவெண்ணெயுநீருறுமுப்புமெனவிங்ஙனே
பொருப்புறுதோகைபுலம்புறல்பொய்யன்பர்போக்குமிக்க
விருப்புறுவோரைவிண்ணோரின்மிகுத்துநண்ணார்கழியத்
திருப்புறுசூலத்தினோன்றில்லைபோலுந்திருநுதலே. (௩௧௫)

---

## ௨௩. வேந்தற்குற்றுழிப்பிரிவு.

---

இது பதினாறு துறையுடைத்து. அவைவருமாறு:—

[1]பிரிந்தமை கூறல் [2]பிரிவாற்றாமை
[3]கார்மிசை வைத்தல் [4]காரை நோக்கி
வருந்தி யுரைத்தன் [5]மலர்க்குழ லரிவை
கூதிர்கண்டு கவறல் [6]குளிர்முன் பனிக்கவ
ணொந்து கூற [7]நோக்கிப் பின்பனிக்
கிரங்கி யுரைத்த [8]இளவேனில் கண்டவ
ளின்ன லெய்த லிதுவவர் குறித்த
பருவ மாமென வரவு கூறல்

[9]பருவமறைத் துரைத்தல் [10]மறுத்துரைத்தலொடு
[11]தேர்வரவு கூறல் [12]வினைமுற்றி நினைத
[13]னிலைமைநினைந் துரைத்தல் [14]முகிலொடு கூறல்
[15]வரவெடுத் துரைத்தல் [16]மறவாமை கூறல்
மற்றிவை யீரெட்டு முற்றுழிப் பிரிவாம்.

## பிரிந்தமை கூறல்.

[விறல்வேந்தர் வெம்முனைக்கட்
டிறல்வேந்தர் செல்வரென்றது.]

போதுகுலாயபுனைமுடிவேந்தர்தம்போர்முனைமேன்
மாதுகுலாயமென்னோக்கிசென்றார்நயர்வண்புலியூர்க்
காதுகுலாயகுழைமெழிலோனைக்கருதலர்போ
லேதுகொலாய்விளைகின்றதின்றென்றரிடுமதிலே. (௩௧௬)

## பிரிவாற்றாமை கார்மிசை வைத்தல்.

[வேந்தற்குற்றுழி விறலோன்பிரிய
ஏந்திழைபாங்கிக் கெடுத்துரைத்தது.]

பொன்னிவளைத்தபுனல்சூழ்நிலவிப்பொலிபுலியூர்
வன்னிவளைத்தவளர்சடையோனைவணங்கலர்போற் [லோ
றுன்னிவளைத்தநங்தோன்றற்குப்பாசறைத்தோன்றுங்கொ
மின்னிவளைத்துவிரிநீர்கவரும்வியன்முகிலே. (௩௧௭)

## வானோக்கி வருந்தல்.

[மானோக்கி வடிவுநினைந்தோன் வானோக்கி வருந்தியது.]

கோலித்திகழ்சிறகொன்றினொடுக்கிப்பெடைக்குருகு
பாலித்திரும்பனிபார்ப்பொடுசேவல்பயிலிரவின்
மாலித்தனையறியாமறையோனுறையம்பலமே
போலித்திருநுதலாட்கென்னதாங்கொலென்போதரவே. ()

## கூதிர்கண்டுகவறல்.

[இருங்கூதி ரெதிர்வுகண்டு கருங்குழலி கவலையுற்றது.]

கருப்பினமேவும்பொழிற்றில்லைமன்னன்கண்ணாரருளால்
விருப்பினமேவச்சென்றார்க்குஞ்சென்றல்குங்கொல்வீழ்பனிவாய்
நெருப்பினமேநெடுமாலெழிறோன்றச்சென்றாங்குநின்ற
பொருப்பினமேறித்தமியரைப்பார்க்கும்புயலினமே. (௩௧௯)

## முன்பனிக்கு நொந்துரைத்தல்.

[ஆன்றபனிக் காற்றுநழிந் தீன்றவளை யேழை நொந்தது.]

சுற்றினவீழ்பனிதூங்கத்துவண்டுதுயர்கவென்று
பெற்றவளேயெனைப்பெற்றாள்பெடைசிறகானொடுக்கிப்
புற்றிலவாளரவன்றில்லைப்புள்ளுந்தம்பிள்ளைதழீஇ
மற்றினஞ்சூழ்ந்துதுயிலப்பெறுமிம்மயங்கிருளே. (௩௨௦)

## பின்பனிநினைந் திரங்கல்.

[இரும்பனியி னெதிர்வுகண்டு சுரும்பிவர்குழலி துயரநினைந்தது.]

புரமன்றயரப்பொருப்புவில்லேந்திப்புத்தேளிர்நாப்பட்
சிரமன்றயனைச்செற்றோன்றில்லைச்சிற்றம்பலமனையாள்
பரமன்றிரும்பனிபாரித்தவாபரந்தெங்கும்வையஞ்
சரமன்றிவான்றருமேலொக்குமிக்கதமியருக்கே. (௩௨௧)

## இளவேனில்கண் டின்னலெய்தல்.

[இன்னிளவேனில் முன்னுவதுகண்டு
மென்னகைப்பேதை யின்னலெய்தியது.]

வாழும்படியொன்றுங்கண்டிலம்வாழியிம்மாம்பொழிற்றேன்
சூழுமுகச்சுற்றும்பற்றினவாற்றொண்டையங்கனிவா

யாழின்மொழிமங்கைபங்கன்சிற்றம்பலமாதரியாக்
கூழின்மலிமனம்போன்றிருளாநின்றகோகிலமே. (௯உஉ)

## பருவங்காட்டி வற்புறுத்தல்.

[கார்வருமெனக் கலங்குமாதரைத்
தேர்வருமெனத் தெளிவித்தது.]

பூண்பதென்றேகொண்டபாம்பன்புலியூரான்மிடற்றின்
மாண்பதென்றேயெணவானின்மலருமணந்தவர்தேர்
காண்பதன்றேயின்றுநாளையிங்கேவரக்கார்மலர்த்தேன்
பாண்பதன்றேர்குழலாயெழில்வாய்த்தபணிமுகிலே. (௯உ௩)

## பருவமன்றென்று கூறல்.

[காரெனக்கலங்கு மேரெழிற்கன்னிக்
கின்றுணைத்தோழி யன்றென்றுமறுத்தது.]

தெளிதரற்காரெனச்சீரனஞ்சிற்றம்பலத்தடியேன்
களிதரக்கார்மிடற்றோனடமாடக்கண்ணார்முழவந்
துளிதரற்காரெனவார்த்தனவார்ப்பத்தொக்குன்குழல்போன்
றளிதர்க்காந்தளும்பாந்தளைப்பாரித்தலர்ந்தனவே. (௯உ௪)

## மறுத்துக்கூறல்.

[பருவமென்றென்று பாங்கிபகர
மருவமர்கோதை மறுத்துரைத்தது.]

தேன்றிக்கிலங்குகழலழல்வண்ணன்சிற்றம்பலத்தெங்
கோன்றிக்கிலங்குதிண்டோட்கொண்டற்கண்டன்குழையெழிலொண்
போன்றிக்கடிமலர்க்காந்தளும்போந்தவன்கையனல்போற்
றோன்றிக்கடிமலரும்பொய்ம்மையோமெய்யிற்றோன்றுவதே.

## தேர்வரவு கூறல்.

[பூங்கொடி மருளப் பாங்கி தெருட்டியது.]

திருமாலறியாச்செறிகழற்றில்லைச்சிற்றம்பலத்தெங்
கருமால்விடையுடையோன்கண்டம்போற்கொண்டலெண்டி
வருமாலுடன்மன்பொருந்தறிருந்தமணந்தவர்தேர் [சையும்
பொருமாலயிற்கணல்லாயின்றுதோன்றுநம்பொன்னகர்க்கே

## வினைமுற்றி நினைதல்.

[பாசறைமுற்றிப் படைப்போர் வேந்தன்
மாசறுபூண்முலை மதிமுக நினைந்தது.]

புயலோங்கலர்சடையேற்றவன்சிற்றம்பலம்புகழு
மயலோங்கிருங்களியானைவரகுணன்வெற்பின்வைத்த
கயலோங்கிருஞ்சிலைகொண்டுமன்கோபமுங்காட்டிவருஞ்
செயலோங்கெயிலெரிசெய்தபினின்றோர்திருமுகமே. ()

## நிலைமை நினைந்து கூறல்.

[பொற்றேடிநிலைமை மற்றவனினைந்து
திருந்துதேர்ப்பாகற்கு வருந்துபு புகன்றது.]

சிறப்பிற்றிகழ்சிவன்சிற்றம்பலஞ்சென்றுசேர்ந்தவர்தம்
பிறப்பிற்றுனைந்துபெருகுகதேர்பிறங்குமொளியார்
நிறப்பொற்புரிசைமறுகினிற்றுன்னிமடநடைப்புள்
ளிறப்பிற்றுயின்றுமுற்றத்திரைதேருமெழினகர்க்கே. ()

## முகிலொடு கூறல்.

[முனைவற்துற்றுழி வினைமுற்றிவருவோன்
கழுமலேய்திச் செழுமுகிற் குரைத்தது.]

அருந்தேரழிந்தனமாலமென்றேலமிடுமிமையோர்
மருந்தோணியம்பலத்தோன்மலர்த்தாள்வணங்கலர்போற்

திருந்தேர ழிந்துப் ழங்கண்டருஞ்செல்விசீர்நகர்க்கென்
வருந்தேரி தன்முன்வழங்கேன் முழங்கேல்வளமுகிலே. ()

## வரவெடுத் துரைத்தல்.

[வினைமுற்றிய வேந்தன்வரவு
புனையிழைத்தோழி போற்றெடுத் துரைத்தது].

பணிவார்குழையெழிலோன் றில்லைச்சிற்றம்பலமனைய
மணிவார்குழன் மடமாதேபொலிகநம்மன்னர்முன்னுப்
பணிவார்திறையும்பகைத்தவர்சின்னமுங்கொண்டுவண்டே
ரணிவார்முரசினொலிக்குமாவோடணுகினரே. (ந ந ௦)

## மறவாமை கூறல்.

[பாசறைமுற்றிப் பைந்தொடியோடிருந்து
மாசறுதோழிக்கு வள்ளலுரைத்தது.]

கருங்குவளைக்கடிமாமலர்முத்தங்கலந்திலங்க
நெருங்குவளைக்கிள்ளை நீங்கிற்றிலணின்றுநான்முகனே
டொருங்குவளைக்கரத்தானுணராதவன்றில்லையொப்பாய்
மருங்குவளைத்துமன்பாசறைநீடியவைகலுமே. (ந ந க)

---

## உச. பொருள்வயிற் பிரிவு.

இஃது இருபது துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]வாட்டங் கூறல் [2]பிரிவுநினை வுரைத்த
[3]லாற்றாது புலம்ப [4]லாற்றாமை கூற
[5]றிணைபெயர்த் துரைத்தல் [6]பொருத்தமறிந்துரைத்தல்
[7]பிரிந்தமை கூறல் [8]பிரிவாற் றாமையா
னிரவுறு துயரத்திற் கிரங்கி யுரைத்த

[9]லிகழ்ச்சி நினைந்தழித [10]லுருவு வெளிப்படுத
[11]னெஞ்சொடு நோத [12]னெஞ்சொடு புலத்த
[13]னெஞ்சொடு மறுத்த [14]ஞெண்ணி வருந்த
[15]லேறு வரவுகண் டிரங்கி யுரைத்தல்
[16]பருவங்கண் டிரங்கன் [17]முகிலொடு கூற
[18]றேர்வரவு கூற [19]லிளையரெதிர் கோட
[20]லுண்மகிழ்ந் துரைத்த லோதிய விருபது
மாமதி நுதலாய் வான்பொருட் பிரிதல்.

## வாட்டங் கூறல்.

[பிரிவுகேட்ட வரிவைவாட்டம்
நீங்கலுற்றவன் பாங்கிக்குரைத்தது.]

முனிவருமன்னருமுன்னுவபொன்னுன்முடியுமெனப்
பனிவருங்கண்பரமன்றிருச்சிற்றம்பலமனையாய்
துனிவருநீர்மையிதென்னென்றுநூநீர்தெளித்தளிப்ப
நனிவருநாளிதுவோவென்றுவந்திக்குநன்னுதலே. (௩௩௨)

## பிரிவு நினைவுரைத்தல்.

[பொருள்வயிற்பிரியும் பொருவேலவனெனச்
சுருளுறுகுழலிக்குத் தோழிசொல்லியது.]

வறியாரிருமையறியாரெனமன்னுமாநிதிக்கு
நெறியாரருஞ்சுரஞ்செல்லலுற்றூர்நமர்நீண்டிருவ
ரறியாவவுநின்றோன்றில்லைச்சிற்றம்பலமனைய
செறிவார்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்திருநுதலே.

## ஆற்றாது புலம்பல்.

[பொருட்பிரியு மருட்பவனெனப்
பாங்கிபகரப் பூங்கொடிபுலம்பியது.]

சிறுவாளுகிருற்றுரு முன்னஞ்சின்னப்படுங்குவளைக்
கெறிவாள்கழித்தனடோழியெழுதிற்கரப்பதற்கே
யறிவாளொழிகுவதஞ்சனமம்பலவற்பணியார்
குறிவாழ்நெறிசெல்வரன்பரென்றம்மகொடியவளே. (கூகூச)

## ஆற்ருமை கூறல்.

[ஏழை யழுங்கத் தோழி சொல்லியது.]

வானக்கடிமதிற்றில்லைபெங்கூத்தனையேத்தலர்போற்
கானக்கடஞ்செல்வர்காதலரென்னக்கதிர்முலைகண்
மானக்கனகந்தருமலர்க்கண்கண்முத்தம்வளர்க்குந்
தேனக்கதார்மன்னனென்னேவினிச்சென்றுதேர்பொருளே.

## திணைபெயர்த் துரைத்தல்.

[துணைவன்பிரியத் துயருறுமனத்தோடு
திணைபெயர்ந்திட்டுத் தேமொழி மொழிந்தது.]

சுருடருசெஞ்சடைவெண்சுடரம்பலவன்மலயத்
திருடருபூம்பொழிலின்னுயிர்போலக்கலந்திசைத்த
வருடருமின்சொற்களத்தனையும்மறந்தத்தஞ்சென்ருே
பொருடரக்கிற்கின்றதுவினையேற்குப்புரவலரே. (கூகூரு)

## பொருத்தமறிந்துரைத்தல்.

[பொருள்வயிற்பிரிவோன் பொருத்தநினைந்து
சுருளுறுகுழலிக்குத் தோழிசொல்லியது.]

மூவர்நின்றேத்தமுதலவனாடமுப்பத்துமும்மைத்
தேவர்சென்றேத்துஞ்சிவன்றில்லையம்பலஞ்சீர்வழுத்தாப்
பாவர்சென்றல்குநரகமனையபுனையழற்கான்
போவர்நங்காதலரென்னுமுரைப்பதுபூங்கொடியே (கூகூஎ)

## பிரிந்தமை கூறல்.

[எதிர்நின்றுபிரியிற் கதிர்நீவாடுதற்
குணர்த்தாதகன்றன் மணித்தேரோனென்றது.]

தென்மாத்திசைவசைத்தீர்தரத்தில்லைச்சிற்றம்பலத்து
ளென்மாத்தலைக்கழல்வைத்தெரியாடுமிறைதிகழும்
பொன்மாப்புரிசைப்பொழிற்றிருப்பூவணமன்னபொன்னே
வன்மாக்களிற்றொடுசென்றனரின்றுநம்மன்னவரே.(௩௩அ)

## இரவுறு துயரத்திற் கிரங்கியுரைத்தல்.

[அயிறநகண்ணியைப் பயிறநமிரவினுட்
டாங்குவதரிதேனப் பாங்கிபகர்ந்தது.]

ஆழியொன்றீரடியும்மிலன்பாகன்முக்கட்டில்லையோ
னூழியொன்றாதனநான்குமைம்பூதமுமாறொடுங்கு
மேழியன்றாழ்கடலும்மெண்டிசையுந்திரிந்திளைத்து
வாழியன்றோவருக்கன்பெருந்தேர்வந்துவைகுவதே.(௩௩௯)

## இகழ்ச்சி நினைந் தழிதல்.

[உணர்த்தாது பிரிந்தாரேன மணித்தாழ்குழலி வாடியது.]

பிரியாரெனவிகழ்ந்தேன்முன்னம்யான்பின்னையெற்பிரியிற்
றரியாளெனவிகழ்ந்தார்மன்னர்தாந்தக்கன்வேள்விமிக்க
வெரியாரெழிலழிக்கும்மெழிலம்பலத்தோனெவர்க்கு
மரியானருளிலர்போலன்னவென்னையழிவித்ததே (௩௪0)

## உருவு வெளிப்பட்டு நிற்றல்.

[பொருள்வயிற்பிரிந்த வொளியுறுவேலவன்
ஓங்கழற்கடத்துப் பூங்கொடியை நினைந்தது.]

சேணுந்திகழ்மதிற்சிற்றம்பலவன்றெண்ணீர்க்கடனஞ்
சூணுந்திருத்துமொருவன்றிருத்துமுலகினெல்லாங்

காணுந்திசைதொறுங்கார்க்கயலுஞ்செங்கனியொடுபைம்
பூணும்புணர்முலையுங்கொண்டுதோன்றுமொர்பூங்கொடியே.

## நெஞ்சொடு நோதல்.

[வல்லழற்கடத்து மெல்லியலைநினைந்து
வெஞ்சுடர்வேலோ னெஞ்சோடு நொந்தது.]

பொன்னணியீட்டியவோட்டருநெஞ்சமிப்பொங்குவெங்கா
னின்னணிநிற்குமிதென்னென்பதேயிமையோரிறைஞ்சு
மன்னணிதில்லைவளநகரன்னவன்னநடையான்
மின்னணிநுண்ணிடைக்கோ பொருட்கோநீவிரைகின்றதே.

## நெஞ்சொடு புலத்தல்.

[அழற்கடத் தழுக்கமிக்கு நிழற்கதிர்வேலோ னீடுவாடியது.]

நாய்வயினுள்ளகுணமுமில்லேனைநற்றொண்டுகொண்ட
தீவயின்மேனியன்சிற்றம்பலமன்னசின்மொழியைப்
பேய்வயினும்மரிதாகும்பிரிவெளிதாக்குவித்துச்
சேய்வயிற்போந்தநெஞ்சேயஞ்சத்தக்கதுன்சிக்கனவே. ()

## நெஞ்சொடு மறுத்தல்.

[நீணெறிசென்ற நாறிணர்த்தாரோன்
சேணெறியஞ்சி மீணெறிசென்றது.]

தீமேவியநிருத்தன்றிருச்சிற்றம்பலமனைய
பூமேவியபொன்னைவிட்டுப்பொன்றேடியிப்பொங்குவெங்கா
னூமேநடக்கவொழிந்தனம்யாநெஞ்சம்வஞ்சியன்ன
வாமேகலையைவிட்டோபொருடேர்ந்தெம்மைவாழ்விப்பதே.

## நாளெண்ணிவருந்தல்.

[சென்றவர்திறத்துநின்றுநனிவாடுஞ்
சூழிநங்கூந்தற்றத் தோழிநனிவாடியது.]

தெண்ணீரணிசிவன்சிற்றம்பலஞ்சிந்தியாதவரிற்
பண்ணீர்மொழியிவளைப்பையுளெய்தப்பனித்தடங்க
ணுண்ணீருகவொளிவாடிடநீடுசென்றார்சென்றநா
ளெண்ணீர்மையினிலனுங்குழியும்விரலிட்டறவே. (௩௪௫)

## ஏறுவரவுகண்டிரங்கியுரைத்தல்.

[நீடியபொன்னி னெஞ்சநெகிழ்ந்து வாடியவன் வரவுற்றது.]

சுற்றம்பலமின்மைகாட்டித்தன்றொல் கழறந்ததொல்லோன்
சிற்றம்பலமனையாள்பரமன்றுதிண்கோட்டின்வண்ணப்
புற்றங்குதர்ந்துநன்னாகொடும்பொன்னார்மணிபுலம்பக்
கொற்றமருவுகொல்லேறுசெல்லாநின்றகூர்ஞ்செக்கரே. ( )

## பருவங்கண்டிரங்கல்.

[மன்னியபருவ முன்னியசெலவின்
இன்னலெய்தி மன்னனேகியது.]

கண்ணுழையாதுவிண்மேகங்கலந்துகணமயிறொக்
கெண்ணுழையாத்தழைகோலிநின்றாலுமினமலர்வாய்
மண்ணுழையாவுமறிதில்லைமன்னனதின்னருள்போற் [கே.
பண்ணுழையாமொழியாளென்னளாங்கொன்மன்பாவியற்

## முகிலொடு கூறல்.

[ஏனைப்பலதுயரமோ டேகாநின்றவன்
துனைக்காதந்துத் துணிந்து சொல்லியது.]

ஆற்படுகாட்டினின்றாடிசிற்றம்பலத்தான்மிடற்றின்
முற்படுநீண்முகிலென்னின்முன்னேன்முதுவோர்குழுமி
விற்படுவாணுதலாள்செல்லநீர்ப்பான்விரைமலர்தூய்
நெற்படுவான்பலிசெய்தயராநிற்குநீணகர்க்கே. (௩௪௮)

## தேர்வரவு கூறல்.

[வேந்தன்போருடுைாேரு விரும்பிவருமென
ஏந்திழைப்பாங்கி யினிதியம்பியது.]

பாவியைவெல்லும்பரிசில்லையேமுகில்பாவையஞ்சீ
ராவியைவெல்லக்கறுக்கின்றபோழ்தத்தினம்பலத்துக்
காவியைவெல்லுமிடற்றோனருளிற்கதுமெனப்போய்
மேவியமாநிதியோடன்பர்தேர்வந்துமேவினதே. (௩௪௯)

## இளைய ரெதிர்கோடல்.

[செறிகழலவன் றிருநகர்புகுதர
எறிவேலிளைஞ ரெதிர்கொண்டது.]

யாழின்மொழிமங்கைபங்கன்சிற்றம்பலத்தானமைத்த
வூழின்வலியதொன்றென்னையொளிமேகலையுகளும்
வீழும்வரிவளைமெல்லியலாவிசெல்லாதமுன்னே
சூழுந்தொகுநிதியோடன்பர்தேர்வந்துதோன்றியதே(௩௫0)

## உண்மகிழ்ந் துரைத்தல்.

[பெருநிதியோடு திருமனைபுகுந்தவன்
வளமனைக்கிழத்தியோ டுளமகிழ்ந்துரைத்தது.]

மயின்மன்னுசாயலிம்மானைப்பிரிந்துபொருள்வளர்ப்பான்
வெயின்மன்னுவெஞ்சுரஞ்சென்றதெல்லாம்விடையோன்புலியூர்க்
குயின்மன்னுசொல்லிமென்கொங்கையென்னங்கத்திடைக்குளிப்பத்
துயின்மன்னுபூவணைமேலணையாமுன்றுவளுற்றதே.(௩௫௧)

## உரு. பரத்தையிற் பிரிவு.

அது நாற்பத்தொன்பது துறையுடைத்து. அவை வருமாறு:—

[1]கண்டவர் கூறல் [2]காதற் றோழி
பொறையுவந் துரைத்தல் [3]பொதுப்படக் கூறி
வாடி யழுங்கல் [4]மாறுகொண் டவனொடு
கனவிழந் துரைத்தல் [5]விளக்கொடு வெறுத்தல்
[6]வாரம் பகர்ந்து வாயின் மறுத்தல்
[7]பள்ளியிடத் தூடல் [8]பணிமொழி யாடன்
செவ்வணி விடுக்க வில்லோர் கூற
[9]லயலறி வுரைத்தவ ளழுக்க மெய்தல்
[10]செவ்வணி கண்ட வாயிலவர் கூறன்
[11]மனைபுகல் கண்ட வாயிலவர் கூறன்
[12]முகமலர்ச்சி கூறன் [13]முனிவதென் னெனக்
காலநிகழ் வுரைத்தல் [14]கலவி யெய்தலை
யெடுத்துரைத் தல்லொடு [15]கலவி கருதிப்
புலத்தல் [16]குறிப்பறிந்து புலந்தமை கூறல்
[17]வாயிலவர் வாழ்த்தல் [18]புனல்வர வுரைத்த
[19]றேர்கண்டு மகிழ்தல் [20]சேடியர் விழவிற்
றம்மூ ருரைத்த [21]றன்னை வியத்த
[22]னகைத்துரைத் தல்லொடு [23]நாண்கண் டுரைத்தல்
[24]பாணன்வர வுரைத்தல் [25]பாங்கியியற் பழித்த
[26]லுழையரியற் பழித்த [27]லொண்ணுத வாளவற்
கியற்பட மொழித [28]லியல்புனைந் துரைத்தல்
[29]வாயில் பெறாது மகன்றிற நினைதல்
[30]வாயிற்க ணின்று தோழிக் குரைத்தல்
[31]வாயில் வேண்டத் தோழி கூறன்

[3] மன்னிய தோழி வாயில் வேண்டன்
[33]மனையவர் மகிழ்தல் [34]வாயின் மறுத்தல்
[35]பாணனொடு வெகுடல் [36]பாணன் புலத்தல்
[37]விருந்தொடு செல்லத் துணிந்தமை கூற
[38]லூடறணி வித்த [39]லணைந்தவழி யூடல்
[40]புனலாட்டு வித்தமை கூறிப் புலத்தல்
[41]கலவி கருதிப் புலவி புகறன்
[42]மிகுத்துரைத் தூடல் [43]விறல்வேற் காளை
யூட னீட வாடி யுரைத்த
[44]றுனியொழிந் துரைத்த [45]றுகளொன் றில்லாப்
புதல்வன்மேல் வைத்துப் புலவி தீர்தல்
[46]கல்வியிடத் தூடன் [47]முன்னிகழ் வுரைத்தல்
பரத்தையைக் கண்டமை பயன்படக் கூற
[48]லூதியமெடுத் துரைத் தூட நீர்த்த
லெண்ணு ரொன்றிவை பரத்தையிற் பிரிவெனப்
பண்ணார் மொழியாய் பகர்ந்திசி னோரே.

## கண்டவர் கூறல்.

[ஊரத்ததுவேலோன் பரத்தையிற்பிரியத்
திண்டேர் வீதியிற் கண்டோருரைத்தது.]

உடுத்தணிவாளரவன்றில்லையூரன்வரவொருங்கே
யெடுத்தணிகையேறினவளையார்ப்பவிளமயிலேர்
கடுத்தணிகாமர்கரும்புருவச்சிலைகண்மலரம்
படுத்தணிவாளினையோர்சுற்றும்பற்றினர்மாதிரமே.(௩௬௨)

## பொறை யுவந் துரைத்தல்.

[கள்ளவிழ் கோதையைக் காதற்றோழி
உள்ளவிழ் பொறைகண் டுவந்துரைத்தது.]

சுரும்புருகொன்றையன்றொல்புலியூர்ச்சுருங்கும்மருங்குற்
பெரும்பொறையாட்டியையென்னின்றுபேசுவபேரொலிநீர்க்
கரும்புறையூரன்கலந்தகன்றானென்றுகண்மணியு
மரும்பொறையாகுமென்னாவியுந்தேய்வுற்றழிகின்றதே. ()

## பொதுப்படக்கூறி வாடியழுங்கல்.

[போற்றிகழரவன் மற்றிகழ்தில்லைப்
பிரிந்தவூரனொ டிருந்துவாடியது.]

அப்புற்றசென்னியன்றில்லையுறாரினவருறுநோ
யொப்புற்றெழினலமூரன்கவரவுள்ளும்புறம்பும்
வெப்புற்றுவெய்துயிர்ப்புற்றுத்தம்மெல்லணையேதுணையாச்
செப்புற்றகொங்கையர்யாவர்கொலாருயிர்தேய்பவரே ()

## கனவிழந்துரைத்தல்.

[சினவிற்றடக்கைத் தீம்புனலூரனைக்
கனவிற்கண்ட காரிகையுரைத்தது.]

தேவரசுரரிறைஞ்சுங்கழலோன்றில்லைசேரலர்போ
லாவாகனவுமிழந்தேனனவென்றமளியின்மேற்
பூவாரகலம்வந்தூரன்றரப்புலம்பாய்நலம்பாய்
பாவாய்தழுவிற்றிலேன்விழித்தேனரும்பாவியனே. (௬௫)

## விளக்கொடு வெறுத்தல்.

[பஞ்சணைத்துயின்ற பஞ்சின்மெல்லடி
அன்பனொடழுங்கிச் செஞ்சுடர்க்குரைத்தது.]

செய்ம்முகநீலமலர்தில்லைச்சிற்றம்பலத்தரற்குக்
கைம்முகங்கூம்பக்கழல்பணியாரிற்கலந்தவர்க்குப்
பொய்ம்முகங்காட்டிக்கரத்தல்பொருத்தமன்றென்றிலையே
நெய்ம்முகமாந்தியிருண்முகங்கீழ்நெடுஞ்சுடரே. (௬௬

## வாரம்பகர்ந்து வாயின் மறுத்துரைத்தல்.

[வார்புனலூர னேர்திகழ்தோள்வயிற்
கார்புரைகுழலி வாரம்பகர்ந்தது.]

பூங்குவளைப்பொலிமாலையுமூரன்பொற்றோளிணையு
மாங்குவளைத்துவைத்தாரேனுங்கொள்கநள்ளாரரணந்
தீங்குவளைத்தவில்லோன்றில்லைச்சிற்றம்பலத்தயல்வா
யோங்குவளைக்கரத்தார்க்கடுத்தோமன்னுறுவரையே. ( )

## பள்ளியிடத்தூடல்.

[பீடிவர்கற்பிற் றேடிவர்கோதை ஆடவன்றன்னோ டூடியுரைத்தது.]

தவஞ்செய்திலாதவெந்தீவினையேம்புன்மைத்தன்மைக்கெள்ளா
தெவஞ்செய்துநின்றினியின்றனைநோவதெனத்தன்முத்தன்
சிவன்செய்தசீரருளார்தில்லையூரநின்சேயிழையார்
நவஞ்செய்தபுல்லங்கண்மாட்டேந்தொடல்விடுநற்கலையே. ( )

## செவ்வணிவிடுக்க வில்லோர்கூறல்.

[பாற்செலுமொழியார் மேற்செலவிநம்பல்
பொல்லாதென்ன வில்லோர்புகன்றது.]

தணியுறப்பொங்குமிக்கொங்கைகடாங்கித்தளர்மருங்குல்
பிணியுறப்பேதைசென்றின்றெய்துமாலரவம்பிறையு [னே
மணியுறக்கொண்டவன்றில்லைத்தொல்லாயநல்லார்கண்முன்
பணியுறத்தோன்றுநுடங்கிடையார்கள்பயின்மனைக்கே. ( )

## அயலறிவுரைத்தவளழுக்கமெய்தல்.

[உலகியலறியச் செலவிடலுற்று
விழுத்தகைமாதர்க் கழுக்கஞ்சென்றது.]

இரவணையும்மதியேர்நுதலார்நுதிக்கோலஞ்செய்து
குரவணையுங்குழலிங்கிவளாலிக்குறியறிவித்

தரவணையுஞ்சடையோன்றில்லையூரனையாங்கொருத்தி
தரவணையும்பரிசாயினவாறுநந்தன்மைகளே. (௩௬0)

## செவ்வணிகண்டவாயிலவர் கூறல்.

[மணிக்குழைபூப்பிய லுணர்த்தவந்த
ஆயிழையைக்கண்ட வாயிலவருரைத்தது.]

சிவந்தபொன்மேனிமணிதிருச்சிற்றம்பலமுடையான்
சிவந்தவந்தாளணியூரற்குலகியலாறுரைப்பான்
சிவந்தபைம்போதுமஞ்செம்மலர்ப்பட்டுங்கட்டார்முலைமேற்
சிவந்தவஞ்சாந்தமுந்தோன்றினவந்துதிருமனைக்கே.(௩௬க)

## மனைபுகல்கண்டவாயிலவர் கூறல்.

[கடனறிந்தூரன் கடிமனைபுகுதர
வாய்ந்தவாயிலவ ராய்ந்துரைத்தது.]

குராப்பயில்கூழையிவளின்மிக்கம்பலத்தான்குழையா
மாராப்பயினுண்ணிடையாரடங்காரெவரேயினிப்பண்
டிராப்பகனின்றுணங்கீர்ங்கடையித்துணைப்போழ்திற்சென்று
கராப்பயில்பூம்புனலூரன்புகுமிக்கடிமனைக்கே. (௩௬உ)

## முகமலர்ச்சி கூறல்.

[பூம்புனலூரன் புகமுகமலர்ந்த
தேம்புனைகோதை திறம்பிறருரைத்தது.]

வந்தான்வயலணியூரனெனச்சினவாண்மலர்க்கண்
செந்தாமரைச்செவ்விசென்றசிற்றம்பலவன்னருளான்
முந்தாயினவியனேக்கெதிர்நோக்கமுகமடுவிற்
பைந்தாட்குவளைகள்பூத்திருள்சூழ்ந்துபயின்றனவே. ()

## கால நிகழ்வுரைத்தல்.

[இகழ்வதேவன்கோ னிகழ்வதிவ்வாறெனச்
சேழமலர்க்கோதை யுழையநுரைத்தது.]

வில்லிகைப்போ தின்விரும்பாவரும்பாவியர்களன்பிற்
செல்லிகைப்போ தினெரியுடையோன் றில்லையம்பலஞ்சூழ்
மல்லிகைப்போ தின்வெண்சங்கம்வண்டேவிண்டோய்பிறையோ
டெல்லிகைப்போ தியல்வேல்வயலூ ரற்கெதிர்கொண்டதே.

## எய்தலெடுத்துரைத்தல்.

[சீரியலுலகிற் றிகழ்தரக்கூடி வார்புனலூரன் மகிழ்வுற்றது.]

புலவித்திரை பொரச்சீறடிப்பூங்கலஞ்சென்னியுய்ப்பக்
கலவிக்கடலுட்கலிங்கஞ்சென்றெய் திக்கதிர்கொண்முத்த
நிலவிநிறைமதுவார்ந்தம்பலத்துநின்றோனருள்போன்
றுலவியலாத்தனஞ்சென்றெய்தலாயினவூரனுக்கே. (௩௬௫)

## கலவிகருதிப்புலத்தல்.

[மன்னியவுலகிற் றுன்னியவன்போடு
கலவிகருதிப் புலவியெய்தியது.]

செவ்வரிய் துடிப்பக்கருங்கண்பிறழச்சிற்றம்பலத்தெம்
மொய்வார்சடையோனருளின்முயங்கிமயங்குகின்றாள்
வெவ்வாயுயிர்ப்பொடுவிம்மிக்கலுழ்ந்துபுலந்துநைந்தா
ளிவ்வாறருள்பிறர்க்காகுமெனநினைந்தின்னகையே. (௩௬௬)

## குறிப்பறிந்து புலந்தமைகூறல்.

[குறிப்பினிற்குறிப்பு நெறிப்படநோக்கி
மலர்நெடுங்கண்ணி புலவியுற்றது.]

மலரைப்பொருவடிமானுந்தமியண்மன்னன்றொருவன்
பலரைப்பொருதென்றிழிந்துநின்றாள்பள்ளிகாமனெய்த

வலரைப்பொரு தன்றழல்விழித்தோனம்பலம்வணங்காக்
கலரைப்பொருச்சிறியாளென்னைகொல்லோகருதியதே. ()

## வாயிலவர்வாழ்த்தல்.

[தலைமகனது தகவுடைமை நிலைதருவாயி னின்றேநுரைத்தது.]

வில்லைப்பொலிநுதல்வேற்பொலிகண்ணிமெலிவறிந்து
வல்லைப்பொலிவொடுவந்தமையானின்றுவான்வழுத்துந்
தில்லைப்பொலிசிவன்சிற்றம்பலஞ்சிந்தைசெய்பவரின்
மல்லைப்பொலிவயலூரன்மெய்யேதக்கவாய்மையனே ()

## புனல்வரவுரைத்தல்.

[புனலாடுகவெனப் புனைந்துகொண்டு
மனைபுகுந்தவனை வையமுரைத்தது.]

சூன்முதிர்துள்ளுநடைப்பெடைக்கிற்றுணைச்சேவல்செய்வான்
றேன்முதிர்வேழத்தின்மென்பூக்குதர்செம்மலூரன்றிண்டோண்
மான்முதிர்நோக்கினல்லார்மகிழத்தில்லையானருளே
போன்முதிர்பொய்கையிற்பாய்ந்ததுவாய்ந்தபுதுப்புனலே. ()

## தேர்வரவுகண்டுமகிழ்ந்துகூறல்.

[பயின்மணித்தேர்செலப் பரத்தையர்சேரிக்
கயன்மணிக்கண்ணியர் கட்டுரைத்தது.]

சேயேயெனமன்னுதிம்புனலூரன்றிண்டோளிணைக
டோயீர்புணர்தவங்தொன்மைசெய்தீர்சுடர்கின்றகொலந்
தீயேயெனமன்னுசிற்றம்பலவர்தில்லைந்நகர்வாய்
வீயேயெனவடியீர்நெடுந்தேர்வந்துமேவினதே. (ந௭௦)

## புனல்விளையாட்டிற்றம்முளுரைத்தல்.

[தீம்புனல்வாயிற் சேயிழைவருமெனக்
காம்பனதோளியர் கலந்துகட்டுரைத்தது.]

அரமங்கையரெனவந்துவிழாப்புகுமவ்வவர்வா
னரமங்கையரெனவந்தணுகும்மவளன்றுகிராற்
சிரமங்கையனைச்செற்றோன்றில்லைச்சிற்றம்பலம்வழுத்தாப்
புரமங்கையரினையாதையகாத்துநம்பொற்பரையே. (௩எக)

## தன்னைவியந்துரைத்தல்.

[அரத்தத்துவர்வாய்ப் பரத்தைத்தலைவி
முனிவுதோன்ற நனிபுகன்றது.]

கனலூர்கணைதுணையூர்கெடச்செற்றசிற்றம்பலத்தெம்
மனலூர்சடையோனருள்பெற்றவரினமரப்புல்லு
மினலூர்நகையவர்தம்பாலருள்விலக்காவிடின்யான்
புனலூரனைப்பிரியும்புனலூர்கணப்பூங்கொடியே. (௩எஉ)

## நகைத்துரைத்தல்.

[வேந்தன்பிரிய வேந்திழைமடந்தை
பரத்தையைநோக்கி விரித்துரைத்தது.]

இறுமாப்பொழியுமென்றேதங்கைதோன்றினென்னெங்கையங்கைச்
சிறுமான்றரித்தசிற்றம்பலத்தான்றில்லையூரன்றிண்டோள்
பெறுமாத்தொடிந்தன்னபோணுக்குப்பெற்றபெற்றியினோ
டிறுமாப்பொழியவிறுமாப்பொழிந்தவிணைமுலையே.(௩எ௩)

## நாணுதல்கண்டு மிகுத்துரைத்தல்.

[மன்னவன்பிரிய நன்மனைக்கிழத்தியை
நாணுதல்கண்ட வாணுதலுரைத்தது.]

வேயாதுசெப்பினடைத்துத்தமிவைகும்வியினன்ன
தீயாடிசிற்றம்பலமனையாடில்லையூரனுக்கின்
றேயாப்பழியெனநாணியென்கண்ணிங்நனேமறைத்தாள்
யாயாமியல்பிவள்கற்புநற்பாலவியல்புகளே. (௩எச)

## பாணன்வரவுரைத்தல்.

[இகல்வேலவனகல்வறியாப்பாணனைப்
பூங்குழன்மாதர்க்குப் பாங்கிபகர்ந்தது.]

விறலியும்பாணனும்வேந்தற்குத்தில்லையிறையமைத்த
திறலியல்யாழ்கொண்டுவந்துநின்றார்சென்றிராத்திசைபோம்
பறலியல்வாவல்பகலுறைமாமரம்போலுமன்றே
வறலியல்கூழைநல்லாய்தமியோமையறிந்திலரே. (எஙரு)

## தோழியியற்பழித்தல்.

[நலமகனைத் தகவிலனெனச்
சிலைநுதற்பாங்கி தீங்குசெப்பியது.]

திக்கினிலங்குதிண்டோளிறைதில்லைச்சிற்றம்பலத்துக்
கொக்கினிறகதணிந்துநின்றாடிதென்கூடலன்ன
வக்கின்னகையிவணையவயல்வயினல்குதலாற்
றக்கின்றிருந்திலனின்றசெவ்வேலெந்தனிவள்ளலே. (ஙஎசு)

## உழையரியற் பழித்தல்.

[அரத்தவேலண்ணல் பரத்தையிற்பிரியத்
துழைமுகத்தவளுக் குழையருரைத்தது.]

அன்புடைநெஞ்சத்திவள்பேதுறவம்பலத்தடியா
ரென்பிடைவந்தமிழ்தூறநின்றாடியிருஞ்சுழியற்
றன்பெடைநையத்தகவழிந்தன்னஞ்சலஞ்சலத்தின்
வன்பெடைமேற்றுயிலும்வயலூரன்வரம்பிலனே. (ஙஎஎ)

## இயற்படமொழிதல்.

[வரிசிலையூரன் பரிசுபழித்த
உழையர்கேட்ப வெழினகையுரைத்தது.]

அஞ்சார்புரஞ்செற்றசிற்றம்பலவரந்தண்கயிலை
மஞ்சார்புனத்தன்றுமாந்தழையேந்திவந்தாரவரென்
னெஞ்சார்விலக்கினுநீங்கார்நனவுகனவுமுண்டேற்
பஞ்சாரமளிப்பிரிதலுண்டோவெம்பயோதரமே. (ருஎஅ)

## நினைந்துவியந்துரைத்தல்.

[மெல்லியற்பாத்தையை விரும்பிமேவினேன்
அல்லியங்கோதையை யகனமர்ந்துரைத்தது.]

தெள்ளம்புனற்கங்கைதங்குஞ்சடையன்சிற்றம்பலத்தான்
கள்ளம்புகுநெஞ்சர்காணுவிறையுறைகாழியன்று
ளுள்ளம்புகுமொருகாற்பிரியாதுள்ளியுள்ளுதொறும்
பள்ளம்புகும்புனல்போன்றகத்தேவரும்பான்மையளே. ()

## வாயில்பெறாதுமகன்றிறநினைதல்.

[பொற்றொடிமாதர் நற்கடைதுறுகி
நீடியவாயிலின் வாடினன்மொழிந்தது.]

தேன்வண்டுறைதருகொன்றையன்சிற்றம்பலம்வழுத்தும்
வான்வண்டுறைதருவாய்மையன்மன்னுகுதலையின்வா
யான்வண்டுறைதருமாலமுதன்னவன்வந்தணையா
னுன்வண்டுறைதருகொங்கையெவ்வாறுகொனண்ணுவதே. ()

## வாயிற்கணின்றுதோழிக்குரைத்தல்.

[பெருந்தகைவாயில் பெறாதுநின்
றருந்தகைப்பாங்கிக் கறியவுரைத்தது.]

கயல்வந்தகண்ணியர்கண்ணிணையான்மிகுகாதரத்தான்
மயல்வந்தவாட்டமகற்றுவிரதமென்மாமதியி
னயல்வந்தவாடரவாடவைத்தோனம்பலநிலவு
புயல்வந்தமாமதிற்றில்லைநன்னாட்டுப்பொலிபவரே. (ருஅக)

## வாயில்வேண்டத் தோழிகூறல்.

[வைவேலண்ணல் வாயில்வேண்டப்
பையரவல்குற் பாங்கிபகர்ந்தது.]

கூற்றாயினசினவாளியெண்ணீர்கண்கள்கோளிழித்தாற்
போற்றான்செறியிருட்பொக்கமெண்ணீர்கன்றகன்றபுனிற்
றீற்றாவெனநீர்வருவதுபண்டின்றெம்மீசர்தில்லைத்
தேற்றார்கொடிநெடுவீதியிற்போதிரத்தேர்மிசையே. ()

## தோழிவாயில் வேண்டல்.

[வாயில்பெறாது மன்னவனிற்ப
ஆயிழையவட்குத் தோழிசொல்லியது.]

வியந்தலைநீர்வையமெய்யேயிறைஞ்சவிண்டோய்குடைக்கீழ்
வயந்தலைகூர்ந்தொன்றும்வாய்திறவார்வந்தவாளரக்கன்
புயந்தலைதீரப்புலியூரானிருக்கும்பொருப்பிற்
கயந்தலையானைகடிந்தவிருந்தினர்கார்மயிலே. (௩அ௩)

## மனையவர் மகிழ்தல்.

[கன்னிமானேக்கி கனன்றுநோக்க
மன்னியமனையவர் மகிழ்ந்துரைத்தது.]

தேவியங்கண்டிகழ்மேனியன்சிற்றம்பலத்தெழுது [ன்
மோவியங்கண்டன்னவொண்ணுதலாடனக்கோகையுப்பா
மேவியங்கண்டனையோவந்தனனெனவெய்துயிர்த்துக்
காவியங்கண்கழுநீர்ச்செவ்விவௌவுதல்கற்றனவே. (௩அ௪)

## வாயின் மறுத்துரைத்தல்.

[மடவாற்றோழி வாயில்வேண்ட
அடல்வேலவனு ரநுஞரைத்தது.]

உடைமணிகட்டிச்சிறுதேருருட்டியுலாத்தருமிந்
நடைமணியைத்தந்தபின்னர்முன்னுன்முகன்மாலறியா
விடைமணிகண்டர்வண்டில்லைமென்றேகையன்னூர்கண்முன்னங்
கடைமணிவாணகையாயின்றுகண்டனர்காதலரே. (௩அ௫)

## பாணனொடு வெகுளுதல்.

[மன்னியாழ்ப்பாணன் வாயில்வேண்ட
மின்னிடைமடந்தை வேறுகொண்டுரைத்தது.]

மைகொண்டகண்டர்வயல்கொண்டதில்லைமல்கூரர்நின்வாய்
மெய்கொண்டவன்பினரென்பதென்விள்ளாவருள்பெரியர்
வைகொண்டவூசிகொற்சேரியின்விற்றெம்மில்வண்ணவண்ணப்
பொய்கொண்டுநிற்கலுற்றோ புலையாத்தின்னிபோந்ததுவே.

## பாணன் புலந்துரைத்தல்.

[கருமலர்க்கண்ணி கனன்றுகட்டுரைப்பப்
புரியாழ்ப்பாணன் புறப்பட்டது.]

கொல்லாண்டிலங்குமழுப்படையோன் குளிர்தில்லையன்னாய்
வில்லாண்டிலங்குபுருவநெரியச்செவ்வாய்துடிப்பக்
கல்லாண்டெடேல்கருங்கண்சிவப்பாற்றுகறுப்பதன்று
பல்லாண்டடியேனடிவலங்கொள்வன்பணிமொழியே. ()

## விருந்தொடுசெல்லத் துணிந்தமை கூறல்.

[பல்வளை பரிசுகண் டில்லோ ரியம்பியது.]

மத்தக்கரியுரியோன்றில்லையூரன்வரவெனலுந்
தத்தைக்கிளவிமுகத்தாமரைத்தழல்வேன்மிளிர்ந்து
முத்தம்பயக்குங்கழுநீர்விருந்தொடென்றுதமுன்னங்
கித்தக்கருங்குவளைச்செவ்வியோடிக்கெழுமினவே. (௩அஅ)

## ஊடறணிவித்தல்.

[தோன்றலைத் துணையோடு தோழிகண்டு
வான்றகை மடந்தையை வருத்தந்தணித்தது.]

கவலங்கொள்பேய்த்தொகைபாய்தரக்காட்டிடையாட்டுவந்த
தவலங்கிலாச்சிவன்றில்லையன்னாய்தழுவிம்முழுவிச்
சுவலங்கிருந்தநந்தோன்றற்றுணையெனத்தோன்றுதலா
லவலங்களைந்துபணிசெயற்பாலையரசனுக்கே. (௩அ௬)

## அணைந்தவழி யூடல்.

[தெளிபுனலூரன் சென்றணைந்தவழி
ஒளிமதிநுதலி யூடியுரைத்தது.]

சேறான்றிகழ்வயற்சிற்றம்பலவர்தில்லைநகர்வாய்
வேறான்றிகழ்கண்ணிளையார்வெகுள்வர்மெய்ப்பாலன்செய்த
பாறான்றிகழும்பரிசினமேவும்படிறுவவேங்
காறான்றொடறொடரேல்விடுதீண்டலெங்கைத்தலமே. ()

## புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தல்.

[ஆங்கதனுக் கழுக்கமெய்தி
வீங்குமென்முலை விட்டுரைத்தது.]

செந்தார்நறுங்கொன்றைச்சிற்றம்பலவர்தில்லைநகரோர்
பந்தார்விரலியைப்பாய்புனலாட்டிமன்பாவியெற்கு
வந்தார்பரிசுமன்றாய்நிற்குமாறென்வளமனையிற்
கொந்தார்தடந்தோள்விடங்காலயிற்படைக்கொற்றவரே. ()

## கலவி கருதிப் புலத்தல்.

[கலைவளல்ரத றலைமகன்றன்னொடு
கலவிகருதிப் புலவிபுகன்றது.]

மின்றுன்னியசெஞ்சடைவெண்மதியன்விதியுடையோர்
சென்றுன்னியகழற்சிற்றம்பலவன்றென்னம்பொதியி
னன்றுஞ்சிறியவரில்லைமதில்லநல்லூரமன்னோ
வின்றுன்றிருவருளித்துணைசாலுமன்னெங்களுக்கே. (நூகூஉ)

## மிகுத்துரைத்தூடல்.

[நாடுமூரு மில்லுஞ்சுட்டி ஆடப்பூங்கோடி யூடியுரைத்தது.]

செழுமியமாளிகைச்சிற்றம்பலவர்சென்றன்டர்சிந்தைக்
கழுமியகூத்தர்கடிபொழிலேழினும்வாழியரோ
விழுமியநாட்டுவிழுமியநல்லூர்விழுக்குடியீர்
விழுமியவல்லகொல்லோவின்னவாறுவிரும்புவதே. (நூகூந)

## ஊட னீடவாடியுரைத்தல்.

[வாடா வூட னீடா வாடியது.]

திருந்தேனுயநின்றசிற்றம்பலவர்தென்னம்பொதியி
லிருந்தேனுயவந்தினைமலர்க்கண்ணினின்னோக்கருளிப்
பெருந்தேனெனநெஞ்சுகப்பிடித்தாண்டநம்பெண்ணமிழ்தம்
வருந்தேலதுவன்றிதுவோவருவதொர்வஞ்சனையே. (நூகூச)

## துனியொழிந்துரைத்தல்.

[தருதியினூரன் மிருபதநோக்கிப்
பனிமலர்க்கோதை துனியொழிந்தது.]

இயன்மன்னுமன்புதந்தார்க்கென்னிலையிமையோரிறைஞ்சுஞ்
செயன்மன்னுஞ்சீர்க்கழற்சிற்றம்பலவர்தென்னம்பொதியிற்
புயன்மன்னுகுன்றிற்பொருவேறணையாப்பொம்மென்னிருள்வா
யயன்மன்னும்யானைதுரந்தரிதேருமதரகத்தே. (நூகூரு)

## புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்.

[புதல்வனது திறம்புகன்று
மதாரிக்கண்ணி வாட்டந்தவிர்ந்தது.]

கதிர்த்தநகைமன்னுஞ்சிற்றவ்வைமார்களைக்கண்பிழைப்பித்
தெதிர்த்தெங்குநின்றெப்பரிசளித்தானிமையோரிறைஞ்சு
மதுத்தங்கியகொன்றைவார்சடையீசர்வண்டில்லைநல்லார்
பொதுத்தம்பலங்கொணர்ந்தோபுதல்வாவெம்மைப்பூசிப்பதே. (௩௧௬)

## கலவியிடத்தூடல்.

[சீறடிக்குடைந்த நாறிணர்த்தாரவன்
றன்மைகண்டு பின்னுந்தளர்ந்தது.]

சிலைமலிவாணுதலெங்கையதாகமெனச்செழும்பூண்
மலைமலிமார்பினுதைப்பத்தந்தான்றலைமன்னர்தில்லை
யுலைமலிவேற்படையூரனிற்கள்வரிலென்னவுன்னிக்
கலைமலிகாரிகைகண்முத்தமாலைகலுழ்ந்தனவே. (௩௧௭)

## முன்னிகழ்வுரைத்தூடறீர்த்தல்.

[முன்னிகழ்ந்தது நன்னுதற்குரைத்து
மன்னுபுனலூரன் மகிழ்வுற்றது.]

ஆறூர்சடைமுடியம்பலத்தண்டரண்டம்பெறினு
மாறூர்மழவிடையாய்கண்டிலம்வண்கதிர்வெதுப்பு
நீறூர்கொடுநெறிசென்றிச்செறிமென்முலைநெருங்கச்
சீறூர்மரையதளிற்றங்குகங்குற்சிறுதுயிலே. (௩௧௮)

## பரத்தையைக்கண்டமைகூறிப்புலத்தல்.

[பரத்தையைக்கண்ட பவளவாய்மாதர்
அரத்தநெடுவே லன்னாற்குரைத்தது.]

ஐயுறவாய்நம்மகன்கடைக்கண்டுவண்டேருருட்டு
மையுறுவாட்கண்மழவைத்தழுவமற்றுன்மகனே
மெய்யுறவாமிதுன்னில்லேவருகெனவெள்கிச்சென்முள்
கையுறுமான்மறியோன்புலியூரன்னகாரிகையே. (௩௯௯)

## ஊதியமெடுத்துரைத் தூடறீர்த்தல்.

[இரும்பரிசி லேற்றவர்க்கருளி
விரும்பினர்மகிழ மேவுதலுரைத்தது.]

காரணிகற்பகங்கற்றவர்நற்றுணைபாணரொக்கல்
சீரணிசிந்தாமணியணிதில்லைச்சிவனடிக்குத்
தாரணிகொன்றையன்றக்கோர்தஞ்சங்கநிதிவிதிசே
ருருணியுற்றவர்க்கூரன்மற்றியாவர்க்குமூதியமே. (௪00)

திருச்சிற்றம்பலக்கோவையார் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# அநுபந்தம்—I.

## திருக்கோவையார்

# கிளவிக்கொத்து

அல்லது

## அதிகார அட்டவணை

(*விளக்கத்துடன்.)

பக்கம்.

க. இயற்கைப் புணர்ச்சி. ... ... உ.

என்பது, பொருளதிகாரத்திற் கூறப்பட்ட தலைமகனும், தலைமகளும் அவ்வாறொரு பொழிலிடத் தெதிர்ப்பட்டுத் தெய்வம் இடைநிற்பப் பான்மை வழியோடி ஓராவிற்கிருகோடு தோன்றினாற் போலத் தம்முள் ஒத்த அன்பினராய் அவ்விருவரொத்தார் தம்முட் கூடுங்கூட்டம்.

உ. பாங்கற் கூட்டம். ... ...

என்பது, தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தெருண்டு வரைதலைத் தெருளானாயின், பாங்கனானாதல் இடந்தலைப்பாட்டானாதல் இரண்டனுள் ஒன்றாற் சென்றெய்தல் முறைமையென்ப, (அவற்றுள் பாங்கனாற் சென்றெய்தல்.)

---

* இவ்விளக்கம், திருக்கோவையார்க்குப் பேராசிரியர் இயற்றிய உரையினின்று எடுத்துச் சேர்க்கப்பெற்றது.

ரு. இடந்தலைப்பாடு. ... ... கரு.

[என்பது, தலைமகன் தலைமகளைக்குறித்தவிடத்தில் தலைப்படுதல்.] பாங்கற்கூட்டம் நிகழாதாயின் இடந்தலைப்பாடு நிகழும். இடந்தலைப்பாடு நிகழாதாயின் பாங்கற்கூட்டம் நிகழும்.

௪. மதியுடம்படுத்தல். ... ... கஅ.

என்பது, (பாங்கற்கூட்டம், இடந்தலைப்பாடு என்னும்) இரண்டனுள் ஒன்றாற் சென்றெய்திய பின்னர்த் தெருண்டு வரைதலைத்தெருளானாயின் அவள் கண்ணுற் காட்டப்பட்ட காதற்றோழியை வழிப்பட்டுச் சென்றெய்துதல் முறைமையென்ப. வழிப்படுமாறு:—தெற்றெனத் தன் குறைகூறாது இரந்து வைத்துக் கரந்தமொழியால் தன் கருத்தறிவித்து அவளை ஐய உணர்வினளாக்கி அது வழியாகநின்று தன் குறை கூறுதல்.

ரு. இருவருமுள்வழி யவன் வரவுணர்தல். உக.

என்பது, தலைமகளுந் தோழியும் உள்வழிச்சென்று, தலைமகன் கரந்தமொழியால் தன் கருத்து அறிவிக்க, தோழி அவன்நினைவு அறியாநிற்றல்.

௬. முன்னுறவுணர்தல். ... ... உஉ.

என்பது, வாட்டம் வினாதல். அஃதாவது (கரந்தமொழியால் தன் கருத்து அறிவித்து) வினயத்தெல்லாம் தோழி மறுமொழி கொடாளாகத் தலைமகன் வாடினன். வாடவே தலைமகளும் அதுகண்டு வாடினள். ஆதலால் இருவரது

வாட்டமும் வினவப்படுதல். அன்றியும் முன்னர்த் தலைமகனது வாட்டத்தைப் பாங்கன் வினயது போலத் தலைவியது வாட்டத்தையும் பாங்கி வினுதலாம். முன்னுற்றதனை யுணர்தலானே இதற்கு முன்னுறவுணர்த லென்னும் பெயரா யிற்று. அஃதாவது தலைமகனைப் பாங்கன் வினயவாறுபோலத் தலைமகளையும் யாதனுனே இவள் வாடியதென ஐயுற்றுணர்தல். இவள் தலைமகளை வினவுவது, இயற்கை யிறுதி இடந் தலையிறுதியின் எனக்கொள்க. என்னை? தோழி யும் பாங்கனைப் போலப் பிறதொன்றே தலை மகளை வினவப் பெருளோவெனின், வினள். எற்றிற்கு? தலைமகளை ஒரு பொழுதும் விடாத தோழி இவளை இத்தினங்காறும் காணுளோ வெனின், காணும். காணின், இயற்கைப் புணர்ச் சியது நீக்கத்து இவளது வாட்டம் தோழி காணுதொழிவானேன் எனின், இவரைக் கூட்டி முடித்த விதி தோழிக்குத் தலைமகளது வாட்டம் புலனுகாமை மறைக்கும். என்னை? பாங்கற் கூட்டமும் இடந்தலைப்பாடும் நடக்கவேண்டி. அல்லதூஉம், தலைமனுக்குந் தலைமகளுக்கும் வாட்டம் ஒக்க நிகழினும், இயற்கைப் புணர்ச் சியது இறுதிக்கண் தலைமகனைப் பாங்கன் கூடி யும் தலைமகளைப் பாங்கி கூடியுஞ் செய்தாராயி னும், தலைமகனது வாட்டத்தைப் பாங்கன் வினு வுதல் தலைமையாதலான் முன் வினவப்படும். பாங்கன் வினவிய பின்னர்ப் பாங்கி வினவப்படும்.

பக்கம்.

ஆதலால் இடந்தலைப்பாட்டினிறுதியேதோழிக்கு வாட்டம் விறுதற்கு இடமாயிற்றென அறிக.

எ. குறையுற வுணர்தல். ... ... ௨௩.

என்பது தலைமகன் குறையுறத்தோழி அதனைத் துணிந்துணரா நிற்றல்.

அ. நாண நாட்டம். ... ... ... ௨௪.

என்பது, இருவர் நினைவும் ஐயமறத் துணிந்த தோழி அவரதுகூட்டமுண்மை அறிவது காரண மாகத் தலைமகளை நாணநாடாநிற்றல்.

௯. நடுங்க நாட்டம். ... ... ௨௫.

என்பது, கூட்டமுண்மை யுணர்ந்தனளாயினும், தலைமகள் பெருநாணினளாகலானும் தான் அவள் குற்றேவன் மகளாகலானும் பின்னும் தான்சொல் லாடாது அவடன்னைக் கொண்டே கேட்பது காரணமாக நெருங்கிநின்று, ஒரு புலி ஒருவனை ஏதிர்ப்பட்டதெனத் தோழி அவளை நடுங்க நாடா நிற்றல்.

௰. மடற்றிறம். ... ... ... ௨௫.

என்பது, நடுங்க நாடவும் பெருநாணினளாதலின் தலைமகள் தன் குறை சொல்லமாட்டாது நிற்ப, இனி இவள் இறந்துபடவும் கூடுமென உட்கொ ண்டு தலைமகனுடன் சொல்லாடத் தொடங்கா நின்ற தோழி, தானும் பெருநாணினளாதலிற் பின்னுந் தலைமகன் குறையுற வேண்டிநிற்ப, அந்

பக்கம்

நிலைமக்கண் தலைமகன் சென்று, இந்நாளெல்லாம் என் குறை நின்னான் முடியுமென்று நின்னை வந்திரந்தேன். இது நின்னான் முடியாமையின் யான் மடலூர்ந்தாயினும் இக்குறை முடித்துக் கொள்வேன் எனத் தோழிக்குக் கூறா நிற்றல்.

கக. குறை நயப்புக் கூறல். ... ... உக.

என்பது, தலைமகனை மடல்விலக்கிக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறைநயப்பிக்க அவன் குறை கூறா நிற்றல்.

கஉ. சேட்படை. ... ... ... ௩உ.

என்பது, தலைமகளைக் குறை நயப்பித்துத் தன்னினாய கூட்டங் கூட்டலுறுந் தோழி தலைமகளது பெருமையும் தனது முயற்சிய தருமையும் தோன்றுதல் காரணமாகவும், இத்துணையருமையுடையாள் இனி நமக்கு எய்துதற்கு அருமையுடையளென இதுவே புணர்ச்சியாக நீட்டியாது விரைய வரைந்து கோடல் காரணமாகவுந் தலைமகனுக்கு இயைய மறுத்துக் கூறா நிற்றல்.

கக. பகற்குறி. ... ... ... ௪௦.

என்பது தலைமகளைத் தழையேற்பித்த தோழி தலைமகனுடன் அவளைப் பகற்குறிக்கண் தலைப்பெய்வியா நிற்றல்.

க௪. இரவுக்குறி. ... ... ... ௫க.

பகற்குறி புணர்ந்து விலக்கப்பட்ட தலைமகன் தெருண்டு வரைதல் தலை. தெருளானாயின்

பக்கம்.

பின்னையுந் தோழியைத் தலைப்பட்டு இரவுக்குறி வேண்டிச்சென்று எய்துதன் முறைமையென்ப.

௧௫. ஒருவழித் தணத்தல். ... ... ௬௧.

இரவுக்குறி புணர்ந்து, அலரெழுந்ததென்று விலக்கப்பட்டபின்னர்த் தெருண்டுவரைதல் தலை. தெருளானாயின் அவ்வலரடங்கச் சிலநாள் ஒருவழித் தணந் துறைதல், உடன்கொண்டு போதல், தோழியான் வரைவு முடுக்கப்பட்டு அருங்கலம் விடுத்து வரைந்து கோடல் இம்மூன்றனுளொன்று முறைமை யென்ப.

௧௬. உடன் போக்கு. ... ... ... ௬௫.

மேற்கூறிய மூன்றனுள் ஒருவழித்தணத்தல் நிகழாதாயின் உடன்போக்கு நிகழும்.

௧௭. வரைவு முடுக்கம். ... ... ௮௩.

மேற் கூறியவாறு உடன்போக்கு நிகழாதாயின், வரைந்து கோடல் நிகழும். அது நிகழுமிடத்துத் தோழியான் வரைவு முடுக்கப்படும், வரைபொருட் பிரிந்து வந்தும் நிகழுமென்ப.

௧௮. வரைபொருட் பிரிதல். ... ... ௮௮.

[மேல் வரைந்து கோடல் இருவகையான் நிகழும் என்றதனுள் ஒருவகை.]

௧௯. மணஞ்சிறைப்புரைத்தல். ... ... ௯௮.

என்பது, வரைந்தபின்னர் மணஞ் சிறப்புக் கூறா நிற்றல்.

பக்கம்.

உ0. **ஓதற் பிரிவு.** ... ... ... க0க.

என்பது, வரைந்துகொண்ட பின்னர்த் தலைமகனுக்கு முதற்பிரிவு ஓதலாதலாற் கல்வியின் மிகுதி கூறி நீங்கா நிற்றல். என்னை? முன்னர் ஓதலின்றி இவளை வரைந்த பின்னர் ஓத நின்றானோ வெனின், அல்லன். முன்னர் இவனைப் பொருவிறந்தானென்று கூறப்படுதலால் ஓதி முடித்தானென்பது. இவன் தானோதிய புருடார்த்தமாகிய தருமார்த்த காமங்களை யொழிய வேறும் புருடார்த்தமாகக் கூறப்படுவன உளவோ என்பதனை ஆராயவேண்டும் கருத்தினனாதலானும், கல்வியால் தன்னிற் றாழ்ந்தாரை தனது கல்வி மிகுதிகாட்டி அவர்களை அறிவித்தல் தருமநூல் விதியாதலானும் பிரியும் என்ப.

உக. **காவற் பிரிவு.** ... ... ... க0ரு

என்பது, எல்லாவுயிர்களையும் அரசன் பாதுகாக்க என்னும் தருமநூல் விதியான் அக்காவற்குப் பிரிதல்.

உஉ. **பகைதணிவினைப்பிரிவு.** ... ... க0ரு.

என்பது, தம்மிற் பகைத்த வேந்தரைப் பகையைத் தணித்து இருவரையும் பொருந்தப் பண்ணுதல்.

உரு. **வேந்தற் குற்றுழிப் பிரிவு.** ... ... க0ச.

என்பது ஒரு வேந்தனுக்கு ஒரு வேந்தன் றொலைந்து வந்தடைந்தால் அவனுக்கு உதவிசெய்யப் பிரியா நிற்றல்.

பக்கம்.

உச. பொருள்வயிற் பிரிவு. ... ... கΟக.

என்பது, குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள் கொண்டு இல்லறஞ்செய்தால் அதனுன் வரும் பயன் அவர்க்காம் அத்துணை யல்லது தமக்காகா மையால் தமது பொருள்கொண்டு இல்லறஞ் செய்தற்குப் பொருள்தேடப் பிரியா நிற்றல்.

உரு. பரத்தையிற் பிரிவு. ... ... கக௫.

என்பது, தலைமகளை வரைந்தெய்திய பின்னர், வைகலும் பாலே நுகர்வாரொருவன் இடையே புளிங்காடியு நுகர்ந்து அதனின் இனிமையறிந் தாற்போல, அவனுகர்ச்சி யினிமை யறிதற்குப் புறப் பெண்டிர் மாட்டுப் பிரியா நிற்றல்.* அல் லதூஉம், பண்ணும் பாடலு முதலாயின காட்

* வைகலும் பாலே துய்த்துச் செல்வான் ஒருமகன் இடையிடை புளிங்கறியும் உண்டக்காலாம் பாலின் விசேடம் அறிவானுவது. அது போலத் தலை மகள் குணங்களைத் துய்த்துச் செல்லா நின்முன் இடை யிடையே சிறுகுணத்தாராகிய பரத்தையர் மாட்டுப் பிரிந்துவாரத் தலை மகள் மாட்டுக் காதல் மிகும். அல்லாவிட்டால் இவள்குணம் ஒரு வழிய தென்பது அறியாலாகாது. என்னை? இன்னுதது ஒன்று உண்மை யான் இனியதன் இன்பம் அறியப்படும் என்றவாறு. இவ்வுரையும் பொருந்தாதென்ப. என்னே காரணமெனின், அவர் ஓதியொடு சார்த் திக்கொண்டன்றே இவள் குணங்களைப் பெரிய என்றறியுமெனின், அவர்மாட்டுப் பிரியாத காலத்து இவள் குணங்களை மிக்கனகொல்லோ மிக்கிலகொல்லோவென ஐயத்தனுய் நின்முனுதல் வேண்டும். இங்ஙன மாகில் தான் அவள் என்னும் வேற்றுமையிலன் என்பதனெடு மாறு கொள்ளும். என்னை? தங் குணங்களை ஐயப்படுவார் இன்மையானென் பது.—இறையனாகப் பொருள் ௪௦-ஆவது சூத்திரம், நக்கீரர் உரை.

பக்கம்.

டிப் புறப்பெண்டிர் தன்னை காதலித்தால் தான் எல்லார்க்குந் தலைவனாகலின் அவர்க்கும் இன்பஞ் செய்யப் பிரியா நிற்றல் என்றுமாம். அல்லதூஉம், தலைமகளை ஊடலறிவித்தற்குப் பிரிதல் என்றுமாம். இவ்வாறொழிந்து தனக்கு இன்பம் வேண்டிப் பிரிவானாயின், "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு—மொண்டொடி கண்ணே யுள" என்பதனால் இவளுக்குத் தலைமகளென்னும் பெயரோடு மாறுபட்டுத் தனது பெருமையோடு மாறுபடா நிற்கும்.

அநுபந்தம்—

திருக்கோவையார்

# * துறைவிளக்கம்.

க. காட்சி—என்பது தலைமகளைத் தலைமகன் கண்ணுற்று இஃது ஒரு வியப்பென்னென்றல்.

உ. ஐயம்—என்பது கண்ணுற்ற பின்னர், இங்ஙனந் தோன்றுநின்ற இம்மாது திருமகள் முதலாகிய தெய்வமோ அன்றி மக்களுள்ளாள் கொல்லோ என்று ஐயுறாநிற்றல்.

௩. தெளிதல்—என்பது ஐயுற்ற பின்னர் அவயவம் இயங்கக்கண்டு இவள் தெய்வமல்லள் என்று தெளியாநிற்றல்.

௪. நயப்பு—என்பது தெய்வமல்லள் என்று தெளிந்த பின்னர் மக்களுள்ளாளென்று நயந்து இடையில்லை கொலென்ற நெஞ்சிற் கல்குலும் முலையும் காட்டி இடை உண்டென்று சென்றெய்த நினையாநிற்றல்.

ரு. உட்கோள்— என்பது மக்களுள்ளாள் என்று நயந்து சென்றெய்த நினையா நின்றவன் தன்னிடத்து அவளுக் குண்டாகிய காதல் அவள் கண்ணிற் கண்டு தன்னுட் கொள்ளா நிற்றல்.

சா. தெய்வத்தை மகிழ்தல்—என்பது உட்கொண்டு நின்று என்னிடத்து விருப்பத்தையுடைய இவளைத் தந்த தெய்வத்தையல்லது வேறொரு தெய்வத்தை யான் வியவேனெனத் தெய்வத்தை மகிழ்ந்து கூறாநிற்றல்.

---

* இது திருக்கோவையார்க்குப் பேராசிரியர் இயற்றிய உரையினின்றெடுத்துச் சேர்க்கப்பெற்றது.

எ. புணர்ச்சி துணிதல்—என்பது தெய்வத்தை மகிழாநின்றவன் இது நமக்குத் தெய்வப் புணர்ச்சியெனத் தன்னெஞ்சிற்குச்சொல்லி அவளோடு புணரத்துணியாநிற்றல்.

அ. கலவி யுரைத்தல்—என்பது தெய்வப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் புணர்ச்சியின்பத்தியல்பு கூறாநிற்றல்.

கூ. இருவயினொத்தல்— என்பது புணராத முன்னின்ற வேட்கையன்பு புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நின்று வளர்ந்து சேறலால் தலைமகளை மகிழ்ந்து கூறாநிற்றல்.

க0. கிளவி வேட்டல்— என்பது இருவயினொத்து இன்புறாநின்ற தலைமகன் உறுதன் முதலாகிய நான்கு புணர்ச்சியும் பெற்றுச் செவிப்புணர்ச்சி பெறாமையின் ஒருசொல் வேட்டு வருந்தாநிற்றல்.

கக. நலம்புனைந் துரைத்தல்—என்பது கிளவிவேட்டு வருந்தக்கண்ட தலைமகள் மூரன்முறுவல் செய்ய, தலைமகன் அதுபெற்றுச் சொல்லாடாமையானுண்டாகிய வருத்தநீங்கி, நுமதகன்ற மருதநிலத்துக் குறிஞ்சி நிலத்து இவள் வாய்போல நாறும் ஆம்பற்பூக்களுளவோ வென அந்நிலத்து வண்டோடு வினவாநிற்றல்.

கஉ. பிரிவுணர்த்தல்— என்பது ஐவகைப் புணர்ச்சியும் பெற்றுப் புணர்வதன்முன்னும் புணர்ந்த பின்னும் ஒத்தவன்பினனாய் நின்ற தலைமகன் பிரியுமாறென்னையெனின், இப்புணர்ச்சி நெடுங்காலம் செல்லக்கடவதாக இருவரையுங் கூட்டிய தெய்வந்தானே பிரியாமற் பிரிவிக்கும். அது பிரிவிக்குமாறு:— தலைமகன் தனதாதரவினானலம் பாராட்டக் கேட்டு, எம்பெருமான் முன்னின்று வாய்திறந்து பெரிய

தோர் நாணின்மை செய்தேனெனத் தலைமகள் நாணி வருந்தா நிற்ப, அதுகண்டு இவள் வருந்துகின்றது யான் பிரிவேனாக நினைந்தாக வேண்டுமென் றுட்கொண்டு அவளுக்குத் தான் பிரிவின்மை கூறாநிற்றல்.

கங. பருவரலறிதல் — என்பது பிரிவின்மை கூறக் கேட்ட தலைமகள் பிரிவென்பது மொன்றுண்டு போலுமென வுட்கொண்டு முன்னுணிறாற் சென்றெய்திய வருத்த நீங்கிப்பெரியதோர் வருத்தமெய்த அதுகண்டு, இவள்மேலு மேலும் வருந்துகின்றது பிரிந்தாற் கூடுதலரிதென்று நினைந்தோ, நெடும்பொழு திவ்வாறிருந்தால் அவ்விடத்துக் குடிப் பழியாமென்று நினைந்தோ அறிகிலேனென அவள் வருத்த மறியா நிற்றல்.

கச. அருட்குண முரைத்தல்—என்பது இற்பழியாமென்று நினைந்தோவென்று கூறக்கேட்ட தலைமகள் இது நந்தோழியறியின் என்னாங்கொல்லோ வென்று பிரிவுட்கொண்டு பிரிவாற்றாது வருந்தாநிற்ப, அக்குறிப்பறிந்து அவள் பிரிவுடம்படுவது காரணமாகத் தலைமகன் யாம் பிரிந்தேமாயினும் பிரிவில்லையெனத் தெய்வத்தினருள் கூறாநிற்றல்.

கரு. இடமணித்துக்கூறி வற்புறுத்தல் — என்பது அருட்குணமுரைத்து வற்புறுத்தவும் ஆற்றாமை நீங்காத தலைமகட்கு, நும்மூரிடத்திற்கு எம்மூரிடம் இத்தன்மைத்தெனத் தன்னூரின் அணிமைகூறி வற்புறுத்தாநிற்றல்.

கசு. ஆடிடத்துய்த்தல்—என்பது அணிமைகூறி யகலாநின்றவன், இனி நீ முற்பட்டு விளையாடு; யான் இங்ஙனம் போய் அங்ஙனம் வாரா நின்றேனென அவளை ஆடிடத்துச் செலுத்தாநிற்றல்.

கஎ. அருமை யறிதல் — என்பது ஆடிடத்துய்த்து அகலா நின்றவன் ஆயவெள்ளத்தையும் அவ்விடத்தையும் நோக்கி, இவளை யானெய்தினே னென்பது மாயமோ கனவோ இன்னதென்று அறியேன். இனி யிவள் நமக்கு எய்தற்கு அரியவளென அவளது அருமையறிந்து வருந்தா நிற்றல்.

கஅ. பாங்கியையறிதல் — என்பது அருமையறிந்து வருந்தாநின்ற தலைமகன் ஆயத்தோடு செல்லாநின்ற தலைமகளை நோக்க, அந்நிலைமைக்கண் அவளும் இப்புணர்ச்சி இவளுக்குப் புலனாங் கொல்லோவென உட்கொண்டு எல்லாரையும் போலன்றித் தன் காதற்றோழியைப் பலகாற் கடைக்கண்ணாற் பார்க்கக்கண்டு, இவள் போலும் இவட்குச் சிறந்தாள்; இதுவும் எனக்கோர் சார்பாமெனவுட்கொண்டு அவள் காதற்றோழியை அறியாநிற்றல்.

கக. பாங்கனை நினைதல்—என்பது தெய்வப் புணர்ச்சிய திறுதிக்கண் சென்றெய்து தற்கருமை நினைந்துவருந்தாநின்ற தலைமகன் அவள் கண்ணா லறியப்பட்ட காதற்றோழியை நயந்து இவள் அவட்குச் சிறந்த துணையன்றே அத்துணை எனக்குச் சிறந்தாளல்லள்; எனக்குச் சிறந்தானைக் கண்டு இப்பரிசுரைத்தாற் பின்னிவளைச் சென்றெய்தக் குறையில்லை யெனத் தன் காதற்பாங்கனை நினையாநிற்றல்.

உ௦. பாங்கன் வினாதல் — என்பது தன்னை நினைந்து வாராநின்ற தலைமகனைத் தானெதிர்ப்பட்டு அடியிற்கொண்டு முடிகாறு நோக்கி, நின்னுடைய தோள்கள்மெலிந்து நீ யிவ்வாறாதற்குக் காரணமென்னோ வென்று பாங்கன் முந்துற்று வினவா நிற்றல்.

உக. உற்றதுரைத்தல்—என்பது, எதிர்ப்பட்டு வினு வாநின்ற பாங்கனுக்கு, 'நெருநலை நாள் கைலைப் பொழிற்கட் சென்றேன். அவ்விடத்து ஒரு சிற்றிடைச் சிறுமான் விழிக் குறத்தியால் இவ்வாருயினேன்' எனத் தனக்குற்றது கூறு நிற்றல்.

உஉ. கழறியுரைத்தல்—என்பது, உற்றதுரைப்பக் கேட்ட பாங்கன், இஃது இவன் தலைமைப் பாட்டிற்குப் போதாதென உட்கொண்டு 'நீ ஒரு சிறுமான் விழிக்கு யான் இவ்வாருயினே னென்றல் நின் கற்பனைக்குப் போதா து' எனக் கழறிக் கூறுநிற்றல்.

உங. கழற்றெதிர்மறுத்தல்—என்பது, காதற்பாங்கன் கழறவும் கேளானுய்ப் பின்னும் வேட்கை வயத்தனுய் நின்று, 'என்னுற் காணப்பட்ட வடிவை நீ கண்டிலை; கண் டனையாயிற் கழருய்' என்று அவனேடு மறுத்துரைத்து வருந்தாநிற்றல்.

உச. கவன்றுரைத்தல்—என்பது, மறுத்துரைத்து வருந்தாநிற்பக் கண்ட பாங்கன் 'ஒருகாலத்தும் கலங்காத உள்ளம், இவ்வாறு கலங்குவதற்குக் காரணமென்னே?' எனத் தலைவனுடன் கூறுநிற்றல்.

உரு. வலியழிவுரைத்தல்—என்பது, பாங்கன் கவன் றுரையாநிற்ப, 'முன்பு இத்தன்மையேனுகிய யான் இன்று ஒரு சிறுமான் விழிக்கு இவ்வாருயினேன்' எனத் தலைமகன் தன் வலியழிந்தமை கூறி வருந்தாநிற்றல்.

உசா. விதியோடுவெறுத்தல்—என்பது, வலியழிந்த மை கூறி வருந்தாநின்ற தலைமகன் பாங்கனேடு புலந்து

வெள்கி, 'யான் செய்த நல்வினையும் வந்து பயன் தந்ததில்லை' எனத் தன் விதியோடு வெறுத்துக் கூறாநிற்றல்.

உஎ. பாங்கனேந்துரைத்தல்—என்பது, விதியொடு வெறுத்து வருந்தாநிற்பக் கண்ட பாங்கன், 'அமிர்தமும் மழையும் தம் குணங்கெடினும் நின்குணங் கெடாத நீ ஒருத்தி காரணமாக நின் சீலத்தை நினையாதவாறு இவ்வாறாகிய எனது தீவினையின் பயனும் இத்தனையன்றோ' எனத் தானும் அவனோடுகூட வருந்த நிற்றல்.

உஅ. இயலிடங்கேட்டல்—என்பது, தலைமகனுடன் கூட வருந்தாநின்ற பாங்கன் யானும் இவனுடன் கூட வருந்தினால் இவனை ஆற்றுவிப்பாரில்லையென அது பற்றுக் கோடாகத் தானாற்றி நின்று, 'அது கிடக்க. நின்னாற் காணப்பட்ட வடிவுக்கு இயல் யாது? இடம் யாது? கூறுவாயாக' என அவளுடைய இயலும் இடமுங் கேளாநிற்றல்.

உகூ. இயலிடங்கூறல்—என்பது, இயலிடங்கேட்ட பாங்கனுக்குத் தான் அவளை யெய்தினாற்போலப் பெரியதோர் ஆற்றுதலையுடையனாய் நின்று, 'என்னாற் காணப்பட்ட வடிவுக்கு இயல் இவை; இடம் இது' என்று (தலைமகன்) இயலும் இடமுங் கூறாநிற்றல்.

௩௦. வற்புறுத்தல்—என்பது, இயலிடங் கூறக்கேட்ட பாங்கன் 'நீ சொன்ன கைலையிடத்தே சென்று இப்பெற்றியாளைக் கண்டு இப்பொழுதே வருவன்; அவ்வளவும் நீ ஆற்றுவாயாதல் வேண்டும்' எனத் தலைமகனை வற்புறுத்தாநிற்றல்.

௩க. குறிவழிச்சேறல்—என்பது, தலைமகனை வற்புறுத்தி அவன் குறிவழிச் செல்லாநின்ற பாங்கன் 'இத்

தன்மையாளை யான் அவ்விடத்துக் காணலாங் கொல்லோ?' என அங்கினேவோடு செல்லாநிற்றல்.

௩௨. குறிவழிக்காண்டல்—என்பது, குறிவழிச் சென்ற பாங்கன் தன்னை அவள் காணமல் தான் அவளைக் காண்பதோர் அணிமைக்கண் நின்று 'அவன் சொன்ன இடமும் இதுவே, இயலும் இவையே, இவளும் அவளே' என்று ஐயமறத் தெளியக் காணா நிற்றல்.

௩௩. தலைவனை வியந்துரைத்தல்—என்பது, குறிவழிக்கண்ட பாங்கன் 'இவ்வுறுப்புக்களையுடைய இவளைக் கண்டு பிரிந்து இங்குநின்று அங்குவந்து யான் கழறவும் ஆற்றி, அத்தனையுந் தப்பாமற் சொன்ன அண்ணலே திண்ணியான்' எனத் தலைமகனை வியந்து கூறாநிற்றல்.

௩௪. கண்டமைகூறல்—என்பது, தலைமகனை வியந்துரைத்த பாங்கன் விரைந்து சென்று, தானவளைக் கண்டமை தலைமகனுக்குப் பிடிமிசைவைத்துக் கூறாநிற்றல்.

௩௫. செவ்விசெப்பல்—என்பது, பிடிமிசைவைத்துக் கூறக்கேட்ட தலைமகன் அது தனக்குச் செவ்வி போதாமையின் பின்னும் ஆற்றாமை நீங்காணாயினான். அதுகண்டு அவனை ஆற்றுவிப்பது காரணமாக அவனுக்கு அவள் அவயவங் கூறாநிற்றல்.

௩௬. அவ்விடத்தேகல்—என்பது, செவ்வி செப்பக் கேட்ட தலைமகன் 'இவ்வாறு காணப்பட்டதுண்டாயின் அது என் உயிர்' எனத் தான் அவ்விடம் நோக்கிச் செல்லாநிற்றல்.

௩௭. மின்னிடைமெலிதல்—என்பது, நெருநலை நாளில் தலையளிசெய்து நின்னிற் பிரியேன் பிரியினும் ஆற்

றேனென்று கூறிப் பிரிந்தவர் வேட்கை மிகுதியால் இடமறியாது ஆயத்திடை வருவார் கொல்லோ என்னும் பெருநாணினானும், ஆற்றாமையான் இறந்துபட்டார் கொல்லோவென்னும் பேரச்சத்தினானும், யாருமில் ஒருசிறைத் தனியே நின்று, தலைமகனை நினைந்து தலைமகள் மெலியாநிற்றல்.

௩அ. பொழில்கண்டுமகிழ்தல்—என்பது, தலைமகளை நோக்கிச் செல்லாநின்ற தலைமகன் முன்னைநான்று அவளைக் கண்ணுற்ற பொழிலைச் சென்றணைந்து, அப்பொழிலிடை அவளுறுப்புக்களைக் கண்டு, 'இப்பொழில் என் சிந்தனைக்கு அவள்தானே யெனத் தோன்றா நின்றது' என்று இன்புறா நிற்றல்.

௩௯. உயிரெனவியத்தல்—என்பது, பொழில்கண்டு மகிழ்ந்து அப்பொழிலிடைச் சென்றுபுக்கு, அவளைக் கண்டதுணையான் 'என்னுயிர் இவ்வாறு செய்தோ நிற்பது' என வியந்து கூறாநிற்றல்.

௪௦. தளர்வகன்றுரைத்தல்—என்பது, உயிரென வியந்து சென்று, பூக்கொய்தல் முதலிய விளையாட்டை யொழிந்து யாருமில் ஒருசிறைத் தனியேநின்று 'இவர் செய்யாநின்ற பெரியதவம் யாதோ?' என அவளைப் பெரும்பான்மை கூறித் தளர்வு நீங்காநிற்றல்.

௪௧. மொழிபெறவருந்தல்—என்பது, தளர்வு நீங்கிய பின்னர்ச் சார்தலுறாநின்றவன் ஒருசொற் பெறுமுறையாற் சென்று சாரவேண்டிப் பின்னும் அவளைப் பெரும்பான்மை கூறி ஒரு சொல்வேண்டி வருந்தாநிற்றல்.

சஉ. நாணிக்கண்புதைத்தல்-என்பது, தலைமகன் தன் முன்னின்று பெரும்பான்மை கூறக்கேட்ட தலைமகள் பெரு நாணினளாதலின் அவன் முன் நிற்கலாகாது நாணி, ஒரு கொடியினொதுங்கித் தன் கண்புதைத்து வருந்தாநிற்றல்.

சங. கண்புதைக்கவருந்தல்—என்பது, தலைமகள் நாணிக் கண் புதையாநிற்ப, இவள் கண் புதையாநின்றது தன்னுடைய கண்கள் என்னை வருத்தத்தைச் செய்யுமென்றுகாதேயென உட்கொண்டு 'யான் வருந்தாதொழிய வேண்டுவையாயின் நின்மேனி முழுதும் புதைப்பாயாக' எனத் தலைமகன் தன் வருத்தமிகுதி கூறாநிற்றல்

சச. நாண்விடவருந்தல்—என்பது, தலைமகன் தனது ஆற்றாமை மிகுதி கூறக் கேட்டு ஒரு ஞான்றுந் தன்னை விட்டு நீங்காத நாண் அழலைச் சேர்ந்த மெழுகுபோலத் தன்னைவிட்டு நீங்காநிற்ப, தலைமகள் அதற்குப் பிரிவாற்றாது வருந்தா நிற்றல்.

சரு. மருங்கணைதல்—என்பது, தலைமகள் நாண் இழந்து வருந்தா நிற்ப, சென்று சார்தலாகாமையின், தலைமகன் தன் ஆதரவினால் அவ்வருத்தந் தணிப்பான் போன்று மார்பொடு முலைநெருங்கி, ஒரு கையால் இறுமருங்குல் தாங்கியும், ஒரு கையால் அளிகுலம் விலக்கி அளகந்தொட்டும் சென்று அணையாநிற்றல்.

சகூ. இன்றியமையாமை கூறல்—என்பது, கூட்டத்திறுதிக்கண் 'விசும்பும் நிலனும் ஒருங்கு பெறவரினும் இம் மார்பத்தை மறந்து, அதன்கண் முயலேன்' எனப் பிரிவு தோன்றத் தலைமகன் தனது இன்றியமையாமை கூறா நிற்றல்.

சஎ. ஆயத்துய்த்தல்—என்பது, இன்றியமையாமை கூறிப் பிரியலுறுகின்றவன், 'இனிப் பல சொல்லி யென்னே? என்னுயிர் நினக்கடிமையாயிற்று. இனிச் சென்று நின் ஆயத்திடைச் சேர்வாயாக' எனத் தன் பிரிவின்மை கூறித் தலைமகளை ஆயத்துச் செலுத்தா நிற்றல்.

சஅ. நின்று வருந்தல்—என்பது, தலைமகளை ஆயத் துய்த்துத் தானவ்விடத்தே நின்று அப்புனத் தியல்பு கூறித் தலைமகன் பிரிவாற்றாது வருந்தா நிற்றல்.

சகூ. பொழிலிடைச் சேறல்—என்பது, இயற்கைப் புணர்ச்சிய திறுதிக்கட் சென்றெய்துதற்கருமை நினைந்து வருந்தாநின்ற தலைமகன் 'இக்கூட்டம் நெருநலும் என்னறி வோடு கூடிய முயற்சியான் வந்ததன்று, தெய்வந்தர வந்தது. இன்னும் அத்தெய்வந்தானே தரும். யாம் அப் பொழிலிடைச் செல்வேம்' எனத் தன் நெஞ்சொடு கூறா நிற்றல்.

ரு0. பாங்கியிடைச் சேறல்—என்பது, (பாங்கற் கூட்டம், இடந்தலைப்பாடு என்னும்) இரண்டனுள், ஒன்றாற் சென்றெய்திப் புணர்ந்து நீங்கிய தலைமகன் 'இனி இவளைச் சென்றெய்துதல் எளிதன்று. யாம் அவள் கண்ணாற் காட்டப்பட்ட காதற்றோழிக்கு நங்குறை யுள்ளது சொல்வேம்' என்று அவளை நோக்கிச் செல்லாநிற்றல்.

ருக. குறையுறத் துணிதல்—என்பது, பாங்கியை நினைந்து செல்லாநின்றவன் தெய்வத்தினருளால் அவ்விருவரும் ஓரிடத்தெதிர்நிற்பக்கண்டு, 'இவள் இவட்குச் சிறந்தாள். இனி யென் குறையுள்ளது சொல்லுவேன்' எனத் தன் குறைகூறத் துணியாநிற்றல்.

ருஉ. வேழம் வினுதல்—என்பது, குறை கூறத் துணியாநின்றவன் என் குறை யின்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறுவேனாயின் இவள் மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, என்குறை இன்னதென்று இவடானே யுணரு மளவும் கரந்தமொழியாற் சில சொல்லிப் பின் குறையுறு வதே காரியமென, வேட்டைகருதிச் சென்றானாக அவ்விரு வருழைச் சென்று நின்று, தன் காதல் தோன்ற, 'இவ்விடத் தொரு மதயானை வரக் கண்டீரோ?' என வேழம் வினவா நிற்றல்.

ருங. கலைமான் வினுதல்—என்பது, வேழம் வினவி உட்புகுந்த பின்னர், தான் கண்ணிடர்ப்பட்டமை தோன்ற நின்று, 'நும்முடைய கண்கள் போலுங் கணைபொருதலான் உண்டாகிய புண்ணோடு இப் புனத்தின் கண் ஒரு கலைமான் வரக் கண்டீரோ?' என்று கலைமான்வினவாநிற்றல்.

ருச. வழி வினுதல்—என்பது, கலைமான் வினவா நின்றவன், இவன் கருத்து வேறென்று தோழியறிய, அத னோடு மாறுபட நின்று, 'அது கூறீராயின் நும்மூர்க்குச் செல்லுநெறி கூறுமின்' என்று வழிவினவாநிற்றல்.

ருரு. பதிவினுதல்—என்பது, மாறுபடநின்று வழி வினவவும் அதற்கு மறுமொழி கொடாதாரை எதிர்முக மாக நின்று, 'வழி கூறீராயின் நும் பதி கூறுதல் பழி யன்றே. அது கூறுவீராமின்' என்று அவர் பதி வினவா நிற்றல்.

ருகா. பெயர்வினுதல்—என்பது, பதிவினவவும் அதற் கொன்றுங் கூறாதாரை, 'நும் பதி கூறுதல் பழியாயின் அதனை யொழிமின். நும் பெயர் கூறுதல் பழியன்றே? இத னைக் கூறுவீராமின்' என்று அவரதுபெயர் வினவா நிற்றல்.

ருஎ. மொழிபெறாது கூறல்—என்பது, பெயர் வினவவும் வாய்திறவாமையின் 'இப்புனத்தார் எதிர் கொள்ளத் தக்க விருந்தினரோடு வாய்திறவாமையை விரதமாக வுடையராதல், அதுவன்றி வாய்திறக்கின் மணிசிந்துமென் பதனைச் சரதமாகவுடையராதல் இவ்விரண்டனுளொன்று தப்பாது என்று கூறாநிற்றல்.

ருஅ. கருத்தறிவித்தல்—என்பது, 'நீயிர் வாய்திறவாமைக்குக் காரணமுடையீர். அது கிடக்க இத்தழை நும் * * * * * குத் தகுமாயின் அணிவீராமின்' எனத் தழைகாட்டி நின்று தன் கருத்தை அறிவியாநிற்றல்.

ருகூ. இடை வினாதல்—என்பது, தழை காட்டித் தன் கருத்தறிவித்து அது வழியாக நின்று 'நும் * * * லும் மார்பும் அதிபாரமாயிராநின்றன. இவை இவ்வாறு நிற்றற்குக் காரணம் யாதோ?' என்று அவரிடை வினவா நிற்றல்.

கூ0. ஐயுறுதல்—என்பது, தலைமகன் தழை கொண்டு நின்று கரந்தமொழியால் தன் கருத்தறிவிக்க, 'மேனியொளியிலனாய் இப்புனத்தினின்றும் போகாது யானையோடு ஏனம் வினவி இவ்வாறு பொய் கூறாநின்ற இவன் யாவனோ?' எனத் தோழி அவனை ஐயுற்றுக் கூறாநிற்றல்.

கூக. அறிவு நாடல்—என்பது, இவன் யாவனோ என்று ஐயுறாநின்ற தோழி பேராராய்ச்சியளாதலின், அவன் கூறியவழியே நாடாது வந்து தங்களிடைக்கே முடிதலின், இவ்வையர் வார்த்தை இருந்தவாற்றான் ஆழமுடைத்தாயிருந்த தென்று அவன் நினைவறியா நிற்றல்.

கூஉ. வாட்டம் வினாதல்—என்பது, தலைமகன் மதியுடம்படுத்து வருந்தா நிற்பக் கண்டு எம்பெருமான் என்

பொருட்டான் இவ்வாறு இடர்ப்படாநின்றானெனத் தலைமகள் தன்னுள்ளே கவன்று வருந்தாநிற்க, அது கண்டு, 'சுனையாடிச் சிலம்பெதிரழைத்தோ? பிறிதொன்றினானோ? வாடியதென்னோ?' எனத் தோழி தலைமகளது வாட்டம் வினவாநிற்றல்.

௬௩. குறையுற்று நிற்றல்—என்பது, தலைமகளது வாட்டங் கண்டு ஐயுறாநின்ற தோழியிடைச் சென்று, 'யான் உங்களுக்கெல்லாத் தொழிலுக்கும் வல்லேன். நீயிர் வேண்டுவ தொன்று சொல்லுமின்; யான் அது செய்யக் குறையில்லை' என இழிந்த சொல்லால் தலைமகன் தன்னினைவு தோன்ற ஐயுறக் கூறாநிற்றல்.

௬௪. அவன் குறிப்பறிதல்—என்பது, குறையுறாநின்றவன் முகத்தே தலைமகளது செயல் புலப்படக்கண்டு, 'இவ்வண்ணல் குறிப்பு இவளிடத்தது' எனத் தோழி தலைமகளது நினைவு துணிந்துணராநிற்றல்.

௬௫. அவள் குறிப்பறிதல்—என்பது, தலைமகனது நினைவறிந்த தோழி இவளிடத்து இவன் நினைவேயன்றி இவ்விடத்து இவள் நினைவுமுண்டோவெனத் தலைமகளை நோக்க, அவள் முகத்தேயும் அவன் செயல் புலப்படக் கண்டு, இவ்வொண்ணுதல் குறிப்புமொன்றுடைத்தென அவணினைவுந் துணிந்துணராநிற்றல்.

௬௬. இருவர் நினைவு மொருவழி யுணர்தல்—என்பது இருவர் நினைவுங் கண்டு இன்புறாநின்ற தோழி 'இவ்விருவரும் இவ்விடத்து வந்த காரியம் இவன் முகமாகிய தாமரைக்கண் இவள் கண்ணாகிய வண்டு இன்பத் தேனையுண்டு எழில் பெறவந்த இத்துணையல்லது பிறிதில்லை' என அவ்விருவரது நினைவுந் துணிந்துணராநிற்றல்.

கூஎ. பிறைதொழுகென்றல்—என்பது, பிறையைக் காட்டித் தான் தொழுதுநின்று, 'நீயும் இதனைத் தொழுவாயாக' எனத் தோழி தலைமகளது கூட்ட நினைவறியா நிற்றல்.

கூஅ. வேறுபடுத்துக்கூறல்—என்பது, பிறைதொழாது தலைசாய்த்து நாணி நிலங்கிளையா நிற்பக்கண்டு, பின்னும் இவள் வழியே யொழுகி இதனை யறிவோமென உட்கொண்டு, நீ போய்ச் சுனையாடி வாவென்ன, அவளும் அதற்கிசைந்து போய் அவனோடு தலைப்பெய்து வர, அக்குறியறிந்து அவளை வரையணங்காகப் புனைந்து வேறுபடுத்துக் கூறாநிற்றல்.

கூகூ. சுனையாடல் கூறி நகைத்தல்—என்பது, வேறுபடுத்துக்கூற நாணல்கண்டு, 'சுனையாடினால் இவ்வாறு அழிந்தழியாத குங்குமமும் அளகத்து அப்பிய தாதும் இந்நிறமுந் தருமாயின் யானுஞ் சுனையாடிக் காண்பேன்' எனத் தோழி தலைமகளோடு நகையாடா நிற்றல்.

எ0. புணர்ச்சியுரைத்தல்—என்பது, சுனையாடல் கூறி நகையாடாநின்றதோழி 'அதுகிடக்க; நீ யாடிய அப்பெரிய சுனைதான் கண்சிவப்ப, வாய் விளர்ப்ப, அளிதொடரும் வரைமலரைச் சூட்ட வற்றோ' சொல்வாயாக' எனக் கூட்டம் உரையா நிற்றல்.

எக. மதியுடன்படுத்தல்—என்பது, பலபடியும் நாணநாடிக் கூட்ட முண்மை யுணர்ந்த தோழி 'இம்மலையிடத்து இவ்விருவர்க்கும் இன்பத்துன்பங்கள் பொதுவாய் வாரா நின்றன. அதனால் இவ்விருவர்க்கும் உயிரொன்றே' என வியந்து கூறாநிற்றல்.

எ௨. நடுங்கநாட்டம்—என்பது, கூட்டமுண்மையுணர்ந்தனளாயினும், தலைமகள் பெருநாணினளாகலானும் தான் அவள் குற்றேவன் மகளாகலானும் பின்னும் தான் சொல்லாடாது, அவள் தன்னைக்கொண்டே கேட்பது காரணமாக நெருங்கி நின்று, ஒரு புலி ஒருவனை யெதிர்ப்பட்டதெனத் தோழி அவளை நடுங்க நாடாநிற்றல்.*

எ௩. ஆற்றாதுரைத்தல்—என்பது, தலைமகன்மேன் மடற்றிறங் கூறுகின்றானாகலின் அதற்கிசைவுபட அவ்விருவருழைச் சென்று நின்று, 'நீயிர் அருளாமையின் என்னுயிர் அழியாநின்றது; இதனை அறிமின்' எனத் தலைமகன் தனது ஆற்றாமை மிகுதிகூறாநிற்றல்.

எ௪. உலகின்மேல் வைத்துரைத்தல்—என்பது, ஆற்றாமைகூறி அதுவழியாக நின்று, 'ஆடவர்தம் உள்ளமாகிய மீன், மகளிரது கண்வலைப்பட்டால் அதனைப் பெறுதற்கு வேறு உபாயமில்லாதவிடத்து மடலூர்ந்தும் அதனைப் பெறுவர்' என உலகின்மேல் வைத்துக் கூறாநிற்றல்.

---

*இத்துறையுடைய செய்யுளில் 'தலைமகளை நடுங்க நாடியது எவ்வாறெனின், தன் கொடியவாயைப் புலி அங்காந்தது, உழுவையினது தீவாயை வேறொன்று கிழித்தது, உழுவையினது தீவாய் பிறிதொன்றனைக் கிழித்தது என இம்மூன்று பொருளும் படுகையான் இது நடுங்கநாட்டமாயிற்று. என்னை? தலைமகள் இங்ஙனம் நடுங்கி யாராயும் வண்ணம் தோழி நாடுகையால். தீவாயுழுவை கிழித்தது என்ற இம் மூன்று பொருளும் வினை. இங்ஙனந் தோழியுரைப்பத் தலைமகள் நாடி நடுங்காநிற்கக்கண்டு, ஓராண்டகை வேலைப் பணிகொண்டவாறு என்னென நடுக்கந் தீர்த்ததாயிற்று. இது காவு நாடுதல். அஃதாவது வெளிப்படச் சொல்லுஞ் சொல்லன்றிப் பிறிதொன்றின் மேல்வைத்துச் சொல்லுதல்.

எரு. தன்துணிபுரைத்தல்—என்பது, முன் உலகின் மேல் வைத்துணர்த்தி அதுவழியாகநின்று, ‘என்னையும் ஒரு பெண்கொடி பிறரிகழ மடலேறப் பண்ணாநின்றது’ என முன்னிலைப் புறமொழியாகத் தன் துணிபு கூறாநிற்றல்.

எசா. மடலேறும் வகையுரைத்தல்—என்பது, துணிபு கூறவும் பெருநாணினளாதலிற் சொல்லாடாத தோழிக்கு வெளிப்படத் தான் நாணிழந்தமை தோன்ற நின்று, ‘யான் நாளை நின்னூர்த் தெருவே மடலுங் கொண்டுவருவேன். பின்வருவது காண்’ எனத் தலைமகன் தான் மடலேறும் வகை கூறாநிற்றல்.

எஎ. அருளாலரிதெனவிலக்கல்—என்பது, தலைமகன் வெளிப்பட நின்று மடலேறுவேனென்று கூறக்கேட்ட தோழி இனி யிவன் மடலேறவுங் கூடுமென உட்கொண்டு, தன்னிடத்து நாணினைவிட்டுவந்து, எதிர் நின்று, ‘நீர் மடலேறினல் உம்முடைய அருள் யாரிடத்ததாம்’ என்று அவனதருளை யெடுத்துக்கூறி விலக்காநிற்றல்.

எஅ. மொழிநடையெழுதல் அரிதென விலக்கல்—என்பது, அருளொடுத்து விலக்கவும் தன்வழிநில்லாமை கண்டு அவன் வழியொழுகி விலக்குவாளாக, ‘நுமதருள் கிடக்க; மடலேறுவார் மடலேறுதல், மடலேறப்படுவார் உருவெழுதிக்கொண்டன்றே? நுமக்கு அவள் மொழி நடையெழுதல் முடியாதாகலின் நீயிர் மடலேறுமாறென்னோ?’ என விலக்காநிற்றல்.

எகூ. அவயவமெழுதல் அரிதெனவிலக்கல்—என்பது, ‘அவளது மொழி நடை கிடக்க; இவைதாம் எழுத முடியுமோ? முடியுமாயின் யான் சொன்னபடியே தப்பாமல்

எழுதிக்கொண்டுவந்து ஏறும்' என்று அவளது அவயவங் கூறுநிற்றல்.

அ௰. உடம்படாது விலக்கல்—என்பது, எழுதலாகாமை கூறிக்காட்டி, 'அது கிடக்க; நும்மை யாம் விலக்குகின்றே மல்லேம். யான் சென்று அவள் நினைவறிந்து வந்தாற் பின்னை நீயிர் வேண்டிற்றைச் செய்யும். அவ்வளவும் நீவிர் வருந்தாதொழியும்' எனத் தான் உடம்படாது விலக்கா நிற்றல்.

அக. உடம்பட்டு விலக்கல்—என்பது, உடம்படாது முன் பொதுப்பட விலக்கி முகங்கொண்டு, பின்னர்த் தன்னோடு அவளிடை வேற்றுமையின்மைகூறி, 'யான் நின் குறை முடித்துத் தருவேன்; நீ வருந்தவேண்டாம்' எனத் தோழி தானுடம்பட்டு விலக்கா நிற்றல்.

அஉ. குறிப்பறிதல்—என்பது, தலைமகனது குறை கூறத் துணியாநின்ற தோழி தெற்றெனக் கூறுவேனாயின் இவள் இதனை மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, 'நம் புனத்தின்கட் சேயினது வடிவையுடையராய்ச் சினவேல் ஏந்தி ஒருவர் பலகாலும் வாராநின்றார். வந்து நின்று ஒன்று சொல்லுவதுஞ் செய்கின்றிலர். அவரிடத்து யாம் செய்யத் தக்கது யாது?' எனத் தான் அறியாதாள் போலத் தலைமகளோடு உசாவி, அவள் நினைவறியாநிற்றல்.

அ௩. மென்மொழியாற் கூறல்—என்பது, நினைவறிந்து முகங்கண்டு, அதுவழியாகநின்று, 'ஒரு பெரியோன் வாடிய மேனியனும் வாடாத தழையனுமாய் நம் புனத்தைவிட்டுப் போவதுஞ் செய்கின்றிலன்; தன் குறை இன்னதென்று வெளிப்படச் சொல்லுவதுஞ் செய்கின்றிலன். இஃதென்ன

மாயங்கொல்லோ? அறிகின்றிலேன்' எனத் தோழிதான் அதற்கு நொந்து கூறுநிற்றல்.

அச. விரவிக் கூறல்—என்பது, வன்மொழியாற் கூறின் மனமெலியுமென்றஞ்சி, 'ஓரலவன் தன் பெடைக்கு நாவற்கனியை நல்கக்கண்டு ஒரு பெருந்தகை பேய்கண்டாற் போல நின்றான். அந்நிலைமையை நீ கண்டாயாயின் உயிர் வாழமாட்டாய்; யான் வன்கண்மையேனாதலான் ஆற்றியுளேனாய்ப் போந்தேன்' என மென்மொழியோடு சிறிது வன்மொழிபடக் கூறாநிற்றல்.

அரு. அறியாள் போறல்—என்பது, பேய் கண்டாற் போல நின்றானெனத் தலைமகன் நிலைமைகேட்ட தலைமகள் பெருநாணினளாதலின் இதனையறியாதாளைப் போல, 'இஃதொரு கடல்வடிவிருந்தவாறு காணாய்' எனத் தானொன்று கூறாநிற்றல்.

அசு. வஞ்சித்துரைத்தல்—என்பது, நாணினாற் குறை நேரமாட்டாது வருந்தாநின்ற தலைமகள் இவளும் பெருநாணினளாதலின் என்னைக்கொண்டே சொல்லுவித்துப் பின் முடிப்பாளாயிராநின்றாள்; இதற்கு யான் ஒன்றுஞ் சொல்லாதொழிந்தால் எம்பெருமான் இறந்துபடுவனென உட்கொண்டு, தன்னிடத்து நாணினைவிட்டு, பாங்கற்கூட்டம் பெற்றுத் தோழியிற் கூட்டத்திற்குத் துவளாநின்றான் என்பது தோன்ற, பின்னும் வெளிப்படக் கூறமாட்டாது, மாயவன்மேல் வைத்து வஞ்சித்துக் கூறாநிற்றல்.

அஎ. புலந்துகூறல்—என்பது, வெளிப்படக்கூறாது வஞ்சித்துக் கூறுதலான் 'என்னோடு இதனை வெளிப்படக் கூறாயாயின் நின்காதற்றோழியர்க்கு வெளிப்படச்சொல்லி

அவரோடு சூழ்ந்து நினைக்குற்றது செய்வாய்; யான் சொன்ன அறியாமையை நின் உள்ளத்துக்கொள்ளாது மறப்பாயாக. யான்வேண்டுவது இதுவே' எனத் தோழி தலைமகளோடு புலந்து கூறாநிற்றல்.

அஅ. வன்மொழியாற்கூறல்—என்பது, புலந்து கூறாநின்றதோழி 'அக்கொடியோன் அருளுறாமையான் மெய்யிற் பொடியுங் கையிற் கிழியுமாய் மடலேறத்துணியாநின்றான். அக்கிழிதான் நின்னுடைய வடிவென்று உரையுமுளதாயிருந்தது. இனி நீயும் நினைக்குற்றது செய்வாயாக; யானறியேன்' என வன்மொழியாற் கூறாநிற்றல்.

அகூ. மனத்தோடு நேர்தல்—என்பது, ஆற்றாமையான் மடலேறத்துணியாநின்றான் எனத் தோழியால் வன்மொழி கூறக் கேட்ட தலைமகள் அதற்குத் தான் ஆற்றாளாய், தலைமகனைக் காணவேண்டித் தன்மனத்தொடு கூறி நேராநிற்றல்.

கூ0. தழைகொண்டு சேறல்—என்பது, மேல் சேட்படை கூறத் துணியா நின்ற தோழியிடைச்சென்று, அவளது குறிப்பறிந்து, பின்னுங் குறையுறவு தோன்ற நின்று 'நும்மா லருளத் தக்காரை அலையாதே இத்தழை வாங்கிக்கொண்டு என்குறை முடித்தருளுவீரா' மென்று, மறுத்தற்கிடமற, சந்தனத்தழைகொண்டு தலைமகன் செல்லாநிற்றல்.

கூக. சந்தனத்தழை தகாதென்று மறுத்தல்—என்பது, தலைமகன் சந்தனத்தழைகொண்டு செல்ல அது வழியாக நின்று, 'சந்தனத்தழை இவர்க்கு வந்தவாறென்னோ என்று ஆராயப்படுதலான், இத்தழை ஆகாது' எனத் தோழி மறுத்துக் கூறாநிற்றல்.

கூஉ. நிலத்தின்மைகூறி மறுத்தல்—என்பது, சந்தனத்தழை தகாதென்றதல்லது மறுத்துக் கூறியவாறன்

றென மற்றொரு தழைகொண்டுசெல்ல, அதுகண்டு, 'இக்குன்றில் இல்லாத தழையை எமக்கு நீர்தந்தால் எங்குடிக்கு இப்பொழுதே பழியாம். ஆதலான் அத்தழை எமக்காகாது' என்று மறுத்துக் கூறுநிற்றல்.

௬௩. நினைவு கூறி மறுத்தல்—என்பது, இத்தழை தந்நிலத்துக் குரித்தன்று என்றதல்லது மறுத்துக்கூறியவா றன்றென உட்கொண்டு அந்நிலத்திற்குரிய தழைகொண்டு செல்ல, அதுகண்டு நாணுடம்பட்டாளாய், 'யான் சென்று அவள் நினைவறிந்தால் நின்னெதிர்வந்துகொள்வேன். அது வல்லது கொள்ள அஞ்சுவேன்' என மறுத்துக் கூறுநிற்றல்.

௬௪. படைத்து மொழியான் மறுத்தல்—என்பது, நினைவறிந்தல்லது ஏலேமென்றது மறுத்துக் கூறியவா றன்று, நினைவறிந்தால் ஏற்பேமென்றவாறுமென உட்கொண்டு நிற்ப, சிறிது புடைபெயர்ந்து அவள் நினைவறிந்தாளாகச் சென்று, 'இத்தழை யானேயன்றி அவளும் விரும்புமாயினும், இது குற்றாலத்துத் தழையாதலான் இத்தழை இவர்க்கு வந்தவாறு என்னோவென்று ஆராயப்படுமாதலான் இத்தழை யெமக்காகாது' என்று மறுத்துக் கூறுநிற்றல்.

௬௫. நாணுரைத்து மறுத்தல்—என்பது, பலபடியும் தழைகொண்டு செல்ல மறுத்துக் கூறியவழி, இனித் தழையொழிந்து கண்ணியைக் கையுறையாகக் கொண்டுசென்றால் அவள் மறுக்கும் வகையில்லையெனக் கழுநீர் மலரைக் கண்ணியாகப் புனைந்துகொண்டு செல்ல, அதுகண்டு, 'செவிலியர் சூட்டிய கண்ணியின்மேல் யானொன்று சூட்டினும் நாணுநிற்பள்; நீர் கொணர்ந்த இந்தக்கண்ணியை யாங்ஙனம்

சூடும்' 'எனத் தலைமகள் நாணுரைத்து மறுத்துக் கூறு நிற்றல்.

கூசு. இசையாமை கூறி மறுத்தல்—என்பது, தலைமகள் நாணுரைத்து மறுத்த தோழி 'அவள் நாணம் கிடக்க. யாங்கள் வேங்கைமலரல்லது தெய்வத்திற்குரிய வெறிமலர் சூட அஞ்சுதும். ஆதலான் இக் கண்ணி எம் குலத்திற்கு இசையாது' என மறுத்துக் கூறுநிற்றல்.

கூஎ. செவ்வியிலளென்று மறுத்தல்—என்பது, அணங்கலர் தங்குலத்திற்கிசையாதென்ற தல்லது மறுத்துக் கூறியவாறன்றென மாந்தழையோடு மலர்கொண்டு செல்ல, அவைகண்டு உடம்படாளாய், 'அன்னம் பிணை கிள்ளை தம் தொழில் பயில இன்று செவ்விபெற்றன வில்லை. அது கிடக்க. என்னுழை நீர் வந்தவாறும் யான் நுமக்குக் குறை நேர்ந்தவாறும் இன்னும் அறிந்திலள். அதனாற் செவ்வி பெற்றாற் கொணரும்' என மறுத்துக் கூறு நிற்றல்.

கூஅ. காப்புடைத்தென்று மறுத்தல்—என்பது, செவ்வியிலள் என்றது செவ்விபெற்றாற் குறையில்லை யென்றாளாமென உட்கொண்டு நிற்ப, 'கதிரவன் மறைந்தான். இவ்விடம் காவலுடைத்து; நும்மிடமுஞ் சேய்த்து; எம் ஐயன்மாருங் கடியர்; யாம் தாழ்ப்பின் அன்னையும் முனியும்; நீரும் போய் நாளைவாரும்' என இசைய மறுத்துக்கூறுநிற்றல்.

கூகூ. நீயே கூறென்று மறுத்தல்—என்பது இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்கு உரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினானன்றே? இத்துணைப் பரிவுடையாள் எனக்கிது முடியாமையில்லையெனத் தலைவன்

உட்கொண்டுபோய்ப் பிறைஞான்று செல்ல, தோழி 'யான் குற்றேவன் மகளாகலிற் றுணிந்துசொல்ல மாட்டுகின்றிலேன். இனி நீயே சென்று நின் குறையுள்ளது சொல்' எனத் தானுடம்படாது மறுத்துக்கூறாநிற்றல்.

க00. குலமுறை கூறி மறுத்தல்—என்பது, நீயே கூறெனச் சொல்லக்கேட்டு, உலகத்து ஒருவர்கண் ஒருவர் ஒரு குறைவேண்டிச் சென்றால் அக்குறை நீயே முடித்துக் கொள் என்பாரில்லை. அவ்வாறன்றி இவள் இந்நாளெல்லாம் என்குறை முடித்துத் தருவேனென்று என்னை யவமே யுழற்றி இன்று நின்குறை நீயே முடித்துக்கொள் என்றா னின்றாள் எனத் தலைமகன் ஆற்றாது நிற்ப, அவனையாற்றுவிப்பது காரணமாக, 'நீர் பெரியீர்; யாம் சிறியேம்: ஆதலான் எம்மோடு நுமக்குச் சொல்லாடுதல் தகாது' எனக் குலமுறைகூறி மறுத்துரையா நிற்றல்.

க0க. நகையாடிமறுத்தல்—என்பது, இவள் குலமுறை கிளத்தலான் மறுத்துக் கூறியவாறன்று என மனமகிழ்ந்து நிற்ப, இனி இவன் ஆற்றுவான் என உட்கொண்டு, பின்னுந் தழையெதிராது, 'எம் ஐயன்மார் ஏவுங் கண்டறிவேம் இவ் வையர் கையிலேப் போலக் கொலையால் திண்ணியது கண்டறியேம்' என அவனே வாடல்சொல்லி நகையொடு மறுத்துக் கூறாநிற்றல்.

க0உ. இரக்கத்தோடு மறுத்தல்—என்பது, இவள் என்னுடனே நகையாடுகின்றது தழைவாங்குதற் பொருட்டெனை உட்கொண்டு நிற்ப, பின்னையும் தழை ஏலாது, 'இவ்வையர் இவ்வாறு மயங்கிப் பித்தழையா நிற்றற்குக் காரண மென்னோ?' என்று அதற்கு இரங்கி மறுத்துக் கூறாநிற்றல்.

க0ங. சிறப்பின்மை கூறி மறுத்தல்—என்பது, என் வருத்தத்திற்குக் கவலாநின்றனள் இவள்; ஆதலின் எனக்கு இது முடியாமையில்லை என உட்கொண்டு நிற்ப, தோழி 'இக்குன்றிடத்து மாவும் சுனையும் இவள் வடிவுக்கு அஞ்சி, மலர்ந்தறியா வாதலான் ஈண்டில்லாதனவற்றை யாம் அணியில், கண்டார் ஐயுறுவர்' என மறுத்துக் கூறாநிற்றல்.

க0ச. இளமைகூறி மறுத்தல்—என்பது, அவளது வடிவுக்கஞ்சி மலர்ந்தறியா என்றதல்லது மறுத்துக் கூறிய வாறன்று சிறப்பின்மை கூறியவாறென உட்கொண்டு, சிறப்புடைத் தழை கொண்டு செல்ல, அதுகண்டு, 'குழலும் மார்பும் குவியாத குதலைச் சொல்லிக்கு நீ சொல்லுகின்ற காரியம் சிறிதும் இயைபுடைத் தன்று' என அவளது இளமை கூறி மறுத்துரையாநிற்றல்.

க0ரு. மறைத்தமைகூறி நகைத்துரைத்தல்—என்பது, இவளது இளமை கூறுகின்றது தழைவாங்குதற் பொருட்டன்றாகவேண்டும்; அதுவன்றி இந்நாளெல்லாம் இயைய மறுத்து, இப்பொழுது இவள் இளையளென்று இயை யாமை கூறி மறுக்கவேண்டியதென்னை? இனி இவ் வொழுக்கம் இவளையொழிய ஒழுகக் கடவேன் என உட் கொண்டு நிற்ப, 'நீ என்னை மறைத்தகாரியம் இனி நினக்கு முடியாது' என அவனோடு நகைத்துக் கூறாநிற்றல்.

க0சு. நகைகண்டு மகிழ்தல்—என்பது, இவள் தன்னை மறைத்தால் முடியாதென்றது, மறையாதொழிந் தால் முடியும் என்றாளாம் எனத் தலைமகன் உட்கொண்டு நின்று, 'உன்னுடைய சதுரப்பாட்டைச் சேர்ந்த மெல் லென்ற நோக்கமன்றோ எனக்குச் சிறந்த துணை? அல்லது வேறு துணையுண்டோ?' என அவளது நகைகண்டு மகிழா நிற்றல்.

கoஎ. அறியாள்போன்று நினைவுகேட்டல்—என்பது, தலைமகனது மகிழ்ச்சிகண்டு இவன் வாடாமல், தழைவாங்குவேன் என உட்கொண்டு, 'என்னுடைய தோழியர் எண்ணிறந்தாருளர்; அவருள் நின்னுடைய நினைவு யார் கண்ணதோ?' எனத் தான் அறியாதாள் போன்று அவன் நினைவு கேளாநிற்றல்.

கoஅ. அவயவங்கூறல்—என்பது, இன்னும் அவனை இவள் அறிந்திலள்; அறிந்தாளாயின் தழைவாங்குவாளென உட்கொண்டு நின்று, 'என்னாற் கருதப்பட்டாளுக்கு அவயவம் இவை' யெனத் தோழிக்குத் தலைமகன் அவளுடைய அவயவங் கூறாநிற்றல்.

கoகூ. கண்ணயந்துரைத்தல்—என்பது, அவயவங் கூறியவழிக் கூறியும் அமையாது, தனக்கு அன்று தோழியைக் காட்டினமை நினைந்து, பின்னுங் கண்ணயந்து கூறாநிற்றல்.

ககo. தழையெதிர்தல்—என்பது, கண்ணயந்துரைப்பக் கேட்ட தோழி 'இவ்வாறு ஏற்றல் எங்குடிக்கு ஏலாவாயினும், நீ செய்த உதவிக்கும் நின் பேரன்புக்கும் ஏலாநின்றேன்' எனக்கூறித் தலைமகன் மாட்டுத் தழையெதிராநிற்றல்.

கககக. குறிப்பறிதல்—என்பது, தலைமகன் மாட்டுத் தழையெதிர்ந்த தோழி இவளுக்குத் தெற்றெனக் கூறுவேனாயின் இவள் மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, 'இந்நாள் காறுந் தழை ஏலாமைக்குத் தக்க பொய்சொல்லி மறுத்தேன். இன்று அவனது நோக்கங் கண்டபின் பொய்சொல்லு நெறி அறிந்திலேன்; இனி அவனுக்குச் சொல்லுமாறென்னோ?' எனத் தழையேற்பித்தற்குத் தலைமகளது குறிப்பறியாநிற்றல்.

ககஉ. குறிப்பறிந்துகூறல்—என்பது, குறிப்பறிந்து முகங்கண்டு, அதுவழியாகநின்று, 'யானைகடிந்த பேருதவி யார் கையிற் றழையுந் துவளத் தகுமோ? அது துவளா மல் யாம் அவரது குறைமுடிக்க வேண்டாவோ?' எனத் தோழி நயப்பக் கூறுநிற்றல்.

ககங. வகுத்துரைத்தல்—என்பது, உதவிகூறவும் பெருநாணினள் ஆதலின் தழைவாங்கமாட்டாது நிற்ப, அக் குறிப்பறிந்து, 'இருவகையானும் நமக்குப் பழியேறும். அது கிடக்க, நமக்கு உதவிசெய்தாற்கு நாமும் உதவிசெய்யு மாறு என்னோ?' எனத் தலைமகள் தழை எற்குமாறு வகுத் துக் கூறுநிற்றல்.

ககச. தழைஏற்பித்தல்—என்பது, தழை ஏலாதொழி யினும் பழியேறுமாயிற் றழையேற்பதே காரியமென உட் கொண்டு நிற்ப, அக்குறிப்பறிந்து, 'இத்தழை நமக்கு எளிய தொன்றன்று; இதனை ஏற்றுக்கொள்வாயாக' எனத் தோழி தலைமகளைத் தழையேற்பியாநிற்றல்.

ககரு. தழைவிருப்புரைத்தல்—என்பது, தலைமகளைத் தழையேற்பித்துத் தலைமகனுழைச் சென்று, 'நீ தந்த தழை யை யான் சென்று கொடுத்தேன். அதுகொண்டு அவள் செய்தது சொல்லிற் பெருகும்' எனத் தலைமகளது விருப்பங் கூறுநிற்றல்.

ககசு. குறியிடங்கூறல்—என்பது, தழைவிருப்புரை த்த தோழி ஆங்கவள் விளையாடுமிடத்து 'ஒரு கரியபொழில் கதிரவன் நுழையாவிருளாய் நடுவண் ஓர் பளிக்குப்பாறை யை உடைத்தாயிருக்கும்; அவ்விடத்து வருவாயாக' என்று தலைமகனுக்குக் குறியிடங் கூறுநிற்றல்.

கக௭. ஆடிடம் படர்தல்—என்பது, தலைமகனுக்குக் குறியிடங் கூறின தோழி 'யாம் புனத்தின்கட்போய் ஊசலாடி அருவியேற்று விளையாடுவேம் போதுவாயாக' எனத் தலைமகளை ஆயத்தொடுங்கொண்டு சென்று ஆடிடம் படரா நிற்றல்.

கக௮. குறியிடத்துக் கொண்டுசேறல்—என்பது, ஆடிடம் படர்ந்த தோழி தலைமகனுக்குத் தான் சொன்ன குறியிடத்து இவளைக் கொண்டு சென்று உய்க்கும் பொழுது, ஆயத்தாரைத் தம்மிடத்து நின்று நீக்கவேண்டுதலின் தினைகாத்தல் முதலாகிய விளையாட்டுக்களைத் தான் கூறவே அவ்வவ் விளையாட்டிற் குரியார் தலைமகள் அவ்வவ் விடங்களிலே வருவளென்று கருதித் தோழி சொன்னவகையே அவ்வவ் விளையாட்டு விருப்பினுன் எல்லாரும் பிரிவர். அவ்வகை ஆயவெள்ளத்தைப் பிரிவித்து, தமியளாய் நின்ற தலைமகளையுங் கொண்டு, 'யாமும்போய் மயிலாடல் காண்பேம்' என அக்குறியிடத்துச் செல்லாநிற்றல்.

கககூ. இடத்துய்த்து நீங்கல்—என்பது, குறியிடைக் கொண்டு சென்ற தோழி 'யான் அவ்விடத்துச்சென்று நின் குழற்குப் பூக்கொய்து வருவேன். அவ்விடம் வேய்முத்துதிர்தலான் நினது மெல்லடிக்குத் தகாதாதலான் நீ என்னோடு வாராது இங்கேநின்று பூக்கொய்வாயாக' எனத் தலைமகளைக் குறியிடத்து நிறுத்தித் தான் நீங்காநிற்றல்.

கஉ0. உவந்துரைத்தல்—என்பது, தோழி தலைமகளைக் குறியிடை நிறுத்தி நீங்காநிற்பத் தலைமகன் சென்று எதிர்ப்பட்டு, 'இக்குவட்டை மாசுணைப் பள்ளியாகவும் என்னைத் திருமாலாகவும் நினைந்தோ நீ இப்பொழிற்கண் வந்து நின்றது!' எனத் தலைமகளை உவந்து கூறுநிற்றல்.

கஉக. மருங்கணைதல்—என்பது, உவந்துரைப்பக் கேட்ட தலைமகள் பெருநாணினளாதலிற் கண்புதைத்து ஒரு கொடியினொதுங்கி வருந்தாநிற்ப, சென்று சார்தலாகாமையிற் றலைமகன் அவ்வருத்தந் தணிப்பான் போன்று, மார்பொடு முனிந்து அவள் இறுமருங்குல் தாங்கியணையாநிற்றல்.

கஉஉ. பாங்கியறிவுரைத்தல்—என்பது, மருங்கணைவிறுதிக்கண் தலைமகளது ஐயந்தீர, அவளைக் கோலஞ்செய்து, 'இது நின் தோழி செய்த கோலமே; நீ கலங்காதொழிக' எனத் தலைமகன், தான் தோழியோடு தலைப்பெய்தமை தோன்றக் கூறாநிற்றல்.

கஉக. உண்மகிழ்ந்துரைத்தல்—என்பது, பாங்கியறிவுரைப்பக் கேட்ட தலைமகள், இனி நமக்கு ஒரு குறையில்லை என உட்கொண்டு முகமலராநிற்ப, அம்முகமலர்ச்சி கண்டு, அவளைக் கழுநீர்மலராகவும், தான் அதனின் நறவைப் பருகும் வண்டாகவும் புனைந்து, தலைமகன் தன்னுண்மகிழ்ந்து கூறாநிற்றல்.

கஉச. ஆயத்துய்த்தல்—என்பது, மலரணிமேல் வைத்து மகிழ்வுற்றுப் பிரியலுறாநின்ற தலைமகன், 'யாம் இத்தன்மையே மாதலின், நமக்குப் பிரிவில்லை. இனி, அழகிய பொழிலிடத்து விளையாடும் ஆயம் பொலிவுபெறச் சென்று, அவரோடு சேர்ந்து விளையாடுவாய்' எனத் தலைமகளை ஆயத்துச் செலுத்தாநிற்றல்.

கஉரு. தோழிவந்துகூடல்—என்பது, தலைமகனைப் பிரிந்த தலைமகள் தானும் பூக்கொய்யாநின்றாளாகப் பிரிவாற்றாமையானும் பெருநாணினானும் தடுமாறி மொட்டுக்

களைப் பறியாநிற்ப, 'யான் நின் குழற்காம் பூக்கொண்டு வந்தேன், நீ விரல் வருந்த மொட்டுக்களைப் பறிக்கவேண்டா' எனத் தோழிவந்து கூடாநிற்றல்.

கஉசு. ஆடிடம்புகுதல்—என்பது, கொய்து வந்த மலருங் குழற்கு அணிந்து, இனி நின் சிறுமருங்குல் வருந்தாமல் மெல்லச் செல்வாயாக எனத் தோழி தலைமகளையுங் கொண்டு ஆடிடம் புகாநிற்றல்.

கஉஎ. தனிகண்டுரைத்தல் — என்பது, தலைமகளை ஆயத்து உய்த்துத் தலைமகனுழைச் சென்று, 'இஃது எம்மூர், இதன் கண் யாம் அருந்துந் தேனையுங் கிழங்கையும் நீயும் அருந்தி, இன்று எம்மோடு தங்கி, நாளை நின் ஊருக்குப் போவாயாக' என உலகியல் கூறுவாள் போன்று, வரைவுபயப்பக் கூறாநிற்றல்.

கஉஅ. பருவங்கூறி வரவு விலக்கல்—என்பது, உலகியல் கூறுவாள்போன்றகுறிப்பால் வரைவு கடாவி, 'இனி இவ்வாறு ஒழுகாது வரைவொடு வருவாயாக' எனத் தலைமகளது பருவங்கூறி, தலைமகனைத் தோழி வரவு விலக்காநிற்றல்.

கஉகூ. வரைவுடம் படாது மிகுத்துக்கூறல்—என்பது, பருவங்கூறி வரைவுகடாய தோழிக்கு, 'அமராவதிக்கண்ணும் இம்மாதர்க்கு ஒப்பில்லை என நான்முகன் பயந்த பிள்ளையை யான் வரையுந்துணை எளியளாக நீ கூறுகின்றது என்னோ' எனத் தலைமகன் வரைவுடம்படாது தலைமகளை மிகுத்துக் கூறாநிற்றல்.

கங0. உண்மைகூறி வரைவு கடாதல் — என்பது, வரைவுடம் படாது மிகுத்துக் கூறிய தலைமகனுக்கு, 'எங்க

ளுக்குத் தாயுந் தந்தையுங் கானவர்; யாங்கள் புனங்காப் போம் சிலர்: நீர் வரைவு வேண்டாமையின் எம்மைப் புனைந்து கூறல் வேண்டுவதில்லை' எனத் தோழி தங்கள் உண்மை கூறி வரைவு கடாவா நிற்றல்.

கஙக. வருத்தங் கூறி வரைவு கடாதல் — என்பது உண்மை உரைத்து வரைவுகடாய தோழி, 'வரையாமை நினைந்து அவள் வருந்தாநின்ருள்; வரைவென்று நினைக்க நீயிர் வருந்தாநின்றீர்; இவ்வாறு நும்முள்ளம் மாறுபட நிகழ்தலின் இருவர்க்கு மிடையே யான் வருந்தாநின்றேன்' எனத் தலைமகனுக்கு வருத்தங்கூறி வரைவுகடாவாநிற்றல்.

கஙஉ. தாயச்சங் கூறி வரைவு கடாதல் — என்பது, வருத்தங் கூறி வரைவுகடாய தோழி, 'எம்முடைய அன்னை அவள் மார்பு முதிர்வுகண்டு, இவள் சிற்றிடைக்கு ஒரு பற்றுக்கண்டிலேமென்று அஞ்சாநின்ருள். இனி மகட்பேசு வார்க்கு மறுது கொடுக்கவுங் கூடும்' எனத் தாயச்சங் கூறி வரைவு கடாவாநிற்றல்.

கஙங. இற்செறிவறிவித்து வரைவுகடாதல்—என்பது, தாயச்சங் கூறி வரைவு கடாய தோழி, 'எம் அன்னை அவளை உற்றுநோக்கி, இருமலைக்கட் புறம்போய் விளையாடவேண்டாவெனக் கூறினுள்; இனி இற்செறிப்பாள்போலும்' என இற்செறிவறிவித்து வரைவு கடாவா நிற்றல்.

கஙச. தமர் நினைவுரைத்து வரைவு கடாதல்—என்பது, இற்செறிவறிவித்து வரைவுகடாயதோழி, 'அவண் மார்பு தாங்கமாட்டாது இடைவருந்துவதனைக் கண்டு, எமர் இற்செறிப்பாராக நினையாநின்ருர்; அயலவரும் மகட்பேச நினையாநின்ருர்' எனத் தமர் நினைவுரைத்து வரைவுகடாவா நிற்றல்.

கரு௫. எதிர்கோள் கூறி வரைவு கடாதல்—என்பது, தமர்நினைவுரைத்து வரைவுகடாயதோழி, 'நீ வரைவொடு வரின், அன்னையும் ஐயன்மாரும் அயலவரும் நின்வரவெதிர் கொள்ளாநிற்பர்; இனிப் பல நினையாது பலரும் அறிய வரைவொடு வருவாயாக' என எதிர்கோள் கூறி வரைவு கடாவாநிற்றல்.

கரு௬. ஏறுகோள் கூறி வரைவு கடாதல்—என்பது, எதிர்கோள் கூறி வரைவுகடாய தோழி, எம்முடைய ஐயன்மார் அவனுடைய மார்பின் பெருமையும் இடையின் சிறுமையுங் கண்டு 'எம்மூர்க்கண் விடையின் மருப்பைத் திருத்திவிட்டார். இனி அடுப்பன அறியேன்' என ஏறு கோள் கூறி வரைவு கடாவாநிற்றல்.*

கரு௭. அயலுரை யுரைத்து வரைவு கடாதல் — என்பது, ஏறுகோள் கூறி வரைவுகடாய தோழி, 'அயலவர் நாளைப் பொன் புனையப் புகுதாநின்றார்; இதற்குத் தீவினையேன் சொல்லுவதென்னோ' எனத் தான் முன்னிலைப் புறமொழியாக அயலுரையுரைத்து வரைவு கடாவா நிற்றல்.

கரு௮. தினைமுதிர் வுரைத்து வரைவு கடாதல்—என்பது, அயலுரையுரைத்து வரைவு கடாய தோழி, 'இவ் வேங்கை தினைப்புனங்கொய்க என்று சோதிடஞ் சொல்லி தலைப் பொருந்தி எம்மைக் கெடுவித்தது; இனி நமக்கு

---

* "ஏண்டுக் கூறுவான் நுதலுகின்றது முல்லைத்திணை யாகலின் அந்த முல்லைத்திணைக்கு மரபாவது, ஓரிடத்து ஒரு பெண்பிறந்தால் அப்பெண்ணைப் பெற்றவர் தம் தொழுவில் அன்று பிறந்த சேங்கன் றுள்ளன எல்லாம் தன்னுட்டியாகவிட்டு வளர்த்து, அப்பரிசினுல் வளர்ந்த ஏற்றைத் தழுவினுன் ஒருவனுக்கு அப்பெண்ணைக் கொடுத் தல் மரபென்ப."

ஏனல் விளையாட்டு இல்லை' எனச் சிறைப்புறமாகத் தலைமகளோடு கூறுவாள் போன்று, தினைமுதிர்வுரைத்து வரைவு கடாவாநிற்றல்.

௧௩௯. பகல் வரல் விலக்கி வரைவு கடாதல்—என்பது, சிறைப்புறமாகத் தினைமுதிர்வுரைத்து வரைவு கடாய தோழி, எதிர்ப்பட்டு நின்று, 'இப்பெருங்கணியார் நமக்கு நோவுதகப் பருவஞ் சொல்லுவாராயிருந்தார், எம் ஐயன்மார் இவர் சொற்கேட்டு இத்தினையைத் தடிவாரா யிருந்தார். எமக்கும் இனித் தினைப்புனங் காவலில்லை. நீர் இனிப் பகல்வரல் வேண்டா' எனப் பகல்வரல் விலக்கி வரைவு கடாவாநிற்றல்.

௧௪௦. தினையோடு வெறுத்து வரைவு கடாதல்—என்பது, பகல்வரல் விலக்கி வரைவு கடாய தோழி, 'இத்தினைக் காவல் தலைக்கீடாக நாம் அவனை எதிர்ப்படலாம் என்று நினைந்து தினையை வித்திக் காத்தோம்; அதுபோய்த் தீவினையை வித்திக் காத்து அதன் விளைவையும் உண்டதாகி முடிந்தது' எனச் சிறைப்புறமாகத் தினையொடு வெறுத்து வரைவு கடாவாநிற்றல்.

௧௪௧. வேங்கையோடு வெறுத்து வரைவு கடாதல்—என்பது, தினையொடு வெறுத்து வரைவு கடாய தோழி 'இவ்வேங்கை அரும்பியஞான்றே அரும்பறக் கொய்தேமாயின், இவர் இன்று நம்மைக் கெடுப்பான் வேண்டி இத்தினைகெட முயலுமாறு முண்டோ? யாம் அது செய்யப் பெற்றிலேம்' என வேங்கையொடு வெறுத்து வரைவு கடாவாநிற்றல்.

௧௪௨. இரக்கமுற்று வரைவு கடாதல்—என்பது, வேங்கையொடு வெறுத்து வரைவு கடாய தோழி, 'யாம்

அவனை எதிர்ப்படலாமென்று இன்புற்று வளர்த்த தினைத் திரள் இப்புனத்தின்க ணில்லாவாயிருந்தன. இனி நாம் அவனை எதிர்ப்படுமாறு என்னோ?' எனச் சிறைப்புறமாகத் தலைமகனுக்கு இரக்கமுற்று வரைவு கடாவாநிற்றல்.

கசங. கொய்தமை கூறி வரைவு கடாதல்—என்பது, இரக்கமுற்று வரைவு கடாய தோழி எதிர்ப்பட்டு நின்று, 'இப்புனத்துத் தினையுள்ளது இன்று தொடர்பறக் கொய்தற் றது. எமக்கும் இனிப் புனங்காவலில்லை. யாம் உமக்கு அறிவு சொல்லுகின்றேமல்லேம். நீரே அறிவீர்' எனத் தினை கொய்தமைகூறி வரைவு கடாவாநிற்றல்.

கசச. பிரிவருமை கூறி வரைவுகடாதல்—என்பது, கொய்தமை கூறி வரைவு கடாய தோழி, 'இப்புனத்துப்ப யின்ற கிளிகள், தமக்குத் துப்பாகாக்காலத்துந் தினைத்தாளை விடாதிரா நின்றன, நாம் போனால் நம் காதலர் இவ்விடத் தேவந்துநின்று நம்மைத் தேடுவர்கொல்லோ?' எனச் சிறைப் புறமாகப் பிரிவருமைகூறி வரைவுகடாவாநிற்றல்.

கசரு. மயிலோடு கூறி வரைவுகடாதல்—என்பது, பிரி வருமைகூறி வரைவு கடாய தோழி, பிரிவாற்றாமையோடு தலைமகளையுங் கொண்டு புனங்காவல் எறிப்போகாநின்றாள், 'கணியார் நினைவு இன்று முடிந்தது, யாங்கள் போகாநின் றோம், இப்புனத்து ஒருவர் வந்தால் இங்கு நின்றும் போ னவர்கள் துணியாதன துணிந்துபோனா ரென்று அவர்க் குச் சொல்லுமின்' என மயிலொடுகூறி வரைவு கடாவாநிற் றல்.

கசசு. வறும்புனங் கண்டு வருந்தல்—என்பது, தலை மகளும் தோழியும் புனங்காவலேறிப் போகாநிற்ப, தலைம கன் புனத்திடைச் சென்று நின்று, 'இப்புனம் யாம் முன்

பயின்றதன்றே, இஃது இன்று இருக்கின்றவாறென்னே” என்று அதன் பொலிவழிவு கூறித் தலைமகளைத் தேடி வருந்தாநிற்றல்.

கசஎ. பதிநோக்கி வருந்தல்—என்பது, வறும் புனத்திடை வருந்தாநின்ற தலைமகன், ‘இவ்வாறு அணித்தாயினும் நம்மாற் செய்யலாவது ஒன்றில்லை’ என அவளிருந்த பதியை நோக்கித் தன் நெஞ்சோடு உசாவி வருந்தா நிற்றல்.

கசஅ. இரவுக்குறிவேண்டல்—என்பது, பதி நோக்கி வருந்தாநின்ற தலைமகன் ‘இற்றையிரவிற்கு யான் நுங்கள் சீறூர்க்கு விருந்து. என்னை ஏற்றுக்கொள்வாயாக’ எனத் தோழியை இரவுக்குறி வேண்டாநிற்றல்.

கசகூ. வழியருமை கூறி மறுத்தல்—என்பது, தலைமகன் இரவுக்குறி வேண்டிநிற்ப, ‘யாங்கள் வாழும் பதி ஏற்றிழிவுடைத்து. ஆகலின், அவ்விடத்து நினக்குச் சிந்தைக்கும் ஏறற்கு அரிது’ எனத் தோழி வழியருமைகூறி மறுத்துக் கூறாநிற்றல்.

கருo. நின்று நெஞ்சுடைதல்—என்பது, வழியருமை கூறக்கேட்ட தலைமகன் ‘எய்துதற்கு அரியாளை விரும்பி நீ மெலியாநின்ற இதற்கு யான் ஆற்றேன்’ என (தன் நெஞ்சிற்குக்) கூறி, தனது இறந்துபாடு தோன்ற நின்று நெஞ்சுடைந்து வருந்தாநிற்றல்.

சருக. இரவுக்குறி நேர்தல்—என்பது தலைமகன் நெஞ்சு உடைந்து வருந்தாநிற்பக்கண்டு, இவன் இறந்துபடவுங் கூடுமென உட்கொண்டு ‘நீ யாளிகள் நிரைத்து நின்று யானைகளைத் தேடும் இராவழியின் கண் வந்து மீள வேனென்னு நின்றாய். இதற்குத் தீவினையேன் சொல்லுவ

தெவனோ?' என்று மறுத்த வாய்பாட்டால் தோழி இரவுக் குறி நேரா நிற்றல்.

கருஉ. உட்கோள் வினாதல்—என்பது, இரவுக்குறி நேர்ந்த தோழி, தங்கள் நிலத்து மக்கள் கோலத்தனாய் வருதற்கு அவன் உட்கொள்வது காரணமாக, 'நின்னூரிடத்தார் எம் மலர்சூடி, எச்சாந்து அணிந்து, எம்மரநிழலின் கீழ் விளையாடுப' எனத் தலைமகனை வினவாநிற்றல்.

கருஙா. உட்கொண்டு வினாதல்—என்பது, கேட்ட வினாவை உட்கொண்டு அந்நிலத்து மக்கள் கோலத்தனாய்ச் செல்வானாக, 'நின் ஊரிடத்து இராப்பொழுது நுமர் எம் மலரைச்சூடி எச்சாந்தை அணிந்து என்ன மர நிழலின் கீழ்விளையாடுப'எனத் தலைமகன் தோழியை வினவாநிற்றல்.

கருச. குறியிடங் கூறல்—என்பது, உட்கொண்டு வினாவிய தலைமகனுக்கு, 'யாங்கள் சந்தனச் சாந்தணிந்து, சுனைக்காவிகள் சூடி, தோகைகள் துயில் செய்யும் வேங்கைப் பொழிற்கண் விளையாடுவேம். அவ்விடத்து நின் வரவறிய மயிலெழுப்புவாயாக' எனத் தோழி குறியிடங் கூறா நிற்றல்.

கருரு. இரவுக்குறி யேற்பித்தல்—என்பது, தலைமகனுக்குக் குறியிடங்கூறித் தலைமகளுழைச் சென்று, 'அந்திக்காலத்து ஓர் அலவன் தன்பெடையோடு பயிலக்கண்டு ஒரு பெரியோன் வருத்தம் மிக்குச் சென்றான். அதற்குப் பின் அவன்சேர் துயில் அறிந்திலேன்' எனத் தோழி அவனது ஆற்றாமை கூறித் தலைமகளை இரவுக்குறி ஏற்பியா நிற்றல்.

கருசு. இரவரவுரைத்தல்—என்பது, அலவன்மேல் வைத்து இரவுக்குறி ஏற்பித்து முகங்கொண்டு அது வழியாக நின்று, 'வேட்கைமிகவால் யானைகள் நடுங்கச் சிங்கம் திரியும் மலைச்சாரியிடத்து வரவேண்டிச் சொல்லாநின்றான். இதற்கு யாம் செய்வது என்னோ?' எனத் தோழி தலைமகளுக்குத் தலைமகன் இரவரவு கூறாநிற்றல்.

கருஎ. ஏதங் கூறி மறுத்தல்—என்பது, தலைமகன் இரவரவு கேட்ட தலைமகள், தனக்கு அவன் செய்த தலையளியும் உதவியும் நினையாநின்ற உள்ளத்தளாய், 'அரி திரண்டு நின்று யானை வேட்டஞ் செய்யும் வல்லிருட்கண் வள்ளலை வா என்று சொல்லத் 'தகுமோ?' என ஏதங்கூறி மறுத்துரையாநிற்றல்.

கருஅ. குறைநேர்தல்—என்பது, ஏதங்கூறி மறுத்த தலைமகள், அவன் ஆற்றானாகிய நிலைமைகேட்டு, 'யான் புனலிடை வீழ்ந்து கெடப்புக என் உயிர்தந்த பெரியோர்க்குச் சிறியேன் சொல்வதறியேன்' என உடம்பட்டு நேராநிற்றல்.

கருகூ. குறை நேர்ந்தமை கூறல்—என்பது, தலைமகளைக் குறை நயப்பித்துத் தலைமகனுழைச் சென்று, 'இற்றை யாமத்தெல்லாம் நின் அருண்மேல் நிற்கவேண்டித் துன்பமுற்றேன். நீ கருதியதூஉம் முடிந்தது' எனத் தோழி தலைமகனுக்கு அவள் குறைநேர்ந்தமை கூறாநிற்றல்.

கசு0. வரவுணர்ந் துரைத்தல்—என்பது, தலைமகனுக்குக் குறைநயப்புக் கூறிய தோழி, 'யாம் விளையாடாநின்ற பொழிலிடத்து வேங்கைமேலுண்டாகிய மயிலினம் இன்புற்றுத் துயில் பெயராநின்றன. இதற்குக் காரணம் என்னோ?' என அவன் வரவறிந்து கூறாநிற்றல்.

கசுக. தாய்துயிலறிதல்—என்பது, தலைமகன் வரவுணர்ந்து தலைவியைக் கொண்டு செல்லக் கருதா நின்ற தோழி, 'யாம் விளையாடாநின்ற பொழிலிடத்து ஓர் யானை நின்று ஊசலைத் தள்ளாநின்றது. அதற்கு யாம் செய்வது என்னோ?' எனத் தாயது துயிலறியா நிற்றல்.

கசுஉ. துயிலெடுத்துச்சேறல்—என்பது, தாய் துயில் அறிந்த தோழி, 'குவளைப்பூக்கள் மலராநின்றன. அவை நின் கண்ணை ஒக்குமாயின் காண்பாயாக' எனத் துயிலெடுத்துச் செல்லாநிற்றல்.

கசுங. இடத்துய்த்து நீங்கல்—என்பது, துயிலெடுத்துக்கொண்டு சென்று, அக்குறியிடத்து நிறுத்தி, 'இவை நின் கண்கள் வென்ற குவளைமலர். இவற்றைக் காண்பாயாக. யான் நின் குழற்குச் சந்தனத்தழை கொய்யாநின்றேன்' எனத் தான் சிறிது அகலா நிற்றல்.

கசுச. தளர்வகன்றுரைத்தல்—என்பது, தோழி குறியிடை நிறுத்தி நீங்காநிற்ப, தலைமகன் எதிர்பட்டு, 'நும்முடைய கமலக் கோயில் கதிரவன் வருவதன் முன் நீரே திறந்துகொண்டோ போந்தது? இப்பொழிலிடை வந்து நயந்தது என்னோ?' எனத் தலைமகளைப் பெரும்பான்மை கூறித் தன் தளர்வு நீங்கா நிற்றல்.

கசுரு. மருங்கணைதல்—என்பது, பெரும்பான்மை கூறக்கேட்ட தலைமகள் பெருநாணினளாதலின், தன் முன் நிற்கலாது, நாணித் தலையிறைஞ்சி வருந்தா நிற்ப, சென்று சார்தலாகாமையின் தனது ஆதரவு மிகவால், அவ்வருத்தம் தணிப்பான்போன்று, மார்பொடு முனிந்து, அவள் இறுமருங்குல் தாங்கிச்சென்று அணையாநிற்றல்.

கசுசு. முகங்கண்டு மகிழ்தல்—என்பது, மருங்கணைவு இறுதிக்கண், தலைமகளது முகமகிழ்ச்சி கண்டு, 'இவளும் யானும் மலரும் மதியும்' எனத் தலைமகன் தன் நயப்பு உணர்த்தி மகிழாநிற்றல்.

கசுஎ. பள்ளியிடத்துய்த்தல்—என்பது, மலர் மதிமேல் வைத்துக் கூறி மகிழ்வுற்றுப் பிரியலுறா நின்றவன் 'இப்பொழிலிடை இனித் தனியே நின்று நீலப்பூக்களைக் கொய்யாது, நின் அரிய தோழியோடு, ஆயத்திடைச்சென்று துயில் பயில்வாய்' எனத் தலைமகளைப் பள்ளியிடத்துச் செலுத்தாநிற்றல்.

கசுஅ. வரவுவிலக்கல்—என்பது, தோழி தலைமகளைப் பள்ளியிடத்துச் சேர்த்திச் சென்று, 'இக்கல்லதர் இவள் காரணமாக நினக்கு எளிதாயிற்று. ஆயினும், இனி இவ்வாறு ஒழுகற்பாலையல்லை' என வரைவு பயப்பக்கூறித் தலைமகனை வரவு விலக்காநிற்றல்.

கசுகூ. ஆற்றாதுரைத்தல்—என்பது, வரைவுகடாவி வரவு விலக்கின தோழிக்கு, வரைவு உடம்படாது, பின்னும் களவொழுக்கம் வேண்டி, 'யான் முன்செய்த தவப்பயனால் எனக்கு எய்தலாம் வண்ணம் திருமகள் இவ்வாறு கொடிச்சியாயிருந்தாள் எனக் கருதியே எனது இன்னுயிர் நிற்பது. இத்தன்மையாளை யான் வரையும் துணை எளியளாக நீ கூறுகின்றது என்?' எனத் தலைமகன் தனது ஆற்றாமை தோன்றக் கூறாநிற்றல்.

கஎ௦. இரக்கங் கூறி வரைவு கடாதல்—என்பது, களவு விரும்பி வரைவு உடம்படாத் தலைமகனுக்கு, 'நீ செல்லும் நெறிக்கண் நினக்கு இடையூறு உண்டாம் என்னும் அச்சத்தால் அவள் அழுது இரங்காநின்றாள்' என்று

'நீ சென்றமை யறிய நின் குறிகாட்டுவாய்' எனத் தலைமக ளாது இரக்கங் கூறி வரைவு கடாவா நிற்றல்.

கஎக. நிலவு வெளிப்பட வருந்தல்—என்பது, இரக் கங்கூறி வரைவு கடாய தோழி, பிற்றைஞான்று அவன் இரவுக் குறியிடை வந்து நிற்ப, நிலவு வெளிப்பாட்டாற் சென்று எதிர்ப்படமாட்டாமல் தாங்கள் வருந்தா நின்றமை சிறைப்புறமாக மதியொடு புலந்து கூறாநிற்றல்.

கஎஉ. அல்லகுறியறிவித்தல்—என்பது, குறியல்லாத குறியெதிர்ப்பட்டு மீண்டமை, பிற்றை ஞான்று தலைமகன் சிறைப்புறம் வந்துநிற்ப, தோழி தலைமகளுக்குக் கூறுவாள் போன்று, அன்னத்தின்மேல் வைத்து அறிவியாநிற்றல்.

கஎங. கடலிடைவைத்துத் துயரறிவித்தல்—என்பது, தலைமகள் இரவுறு துயரம், தலைமகன் சிறைப்புறமாக, 'இவள் வாட நீ இரையா நின்றாய். இது நினக்கு நன்றோ?' எனத் தோழி கடலொடு புலந்துகூறாநிற்றல்.

கஎச. காமமிக்க கழிபடர்கிளவி—என்பது, தலைமக னைக் காணலுற்றுவருந்தாநின்ற தலைமகள், தனது வேட்கை மிகவால், கேளாதனவற்றைக் கேட்பனவாக விளித்து, 'நீங் கள் என்னை ஏதுற்று அழிகின்றாய் என ஒருகால் வினவு இன்றிலீர். இதுவோ நும் காதன்மை' என அவற்றோடு புல ந்து கூறாநிற்றல்.

கஎரு. காப்புச் சிறைமிக்க கையறுகிளவி—என்பது, காமமிக்கு எதிர்ப்படாநின்ற தலைமகள், 'இவ்விடையிடெல் லாம் நீந்தி ஒருவழியான் வந்தாராயினும், இஞ் ஞாளி குரை தரா நின்றமையான் யாம் இவரை எதிர்ப்படுதலரிது' எனக் காப்புச் சிறைமிக்கு வருந்தாநிற்றல்.

களசா. ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி—என்பது, சிறைப்புறமாகத் தலைமகள் ஆற்றுமை கூறக்கேட்ட தலைமகன், குறியிடைச் சென்று நிற்ப, தோழி எதிர்ப்பட்டு, 'நீ கான்யாறு பலவும் நீந்திக் கைவேல் துணையாக, அஞ்சாது வந்தால், யாங்கள் இச்சோலையிடத்துண்டாகிய தெய்வத்துக்கு அஞ்சுவேம். அதனால், இவ்விருளிடை வாற்பாலையல்லை' எனத் தங்கள் அச்சங் கூறி வரவு விலக்காநிற்றல்.

களஎ. தன்னுட் கையா றெய்திடுகிளவி — என்பது, தலைமகனைக் காணலுற்று வருந்தாநின்ற தலைமகள், 'இக்கண்டல் சான்றாகக்கொண்டு இப்புன்னையிடத்துக் கலந்த கள்வனை இவ்விடத்து வரக் கண்டிலையோ? துணையில்லாதேற்கு ஒரு சொல் அருளாய்' என்று தன்னுட் கையாற்றை மதியொடு கூறி வினவாநிற்றல்.

களஅ. நிலைகண்டுரைத்தல்—என்பது, தலைமகள் தன்னுட் கையாற்றை மதியொடு கூறி வருந்தாநின்றமை, சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன், ஆற்றுமையான் இல்வரைப்பின்கட் புகுந்து நிற்ப, தோழி எதிர்ப்பட்டு, 'நீ இவ்வாறு இல்வரைப்பின்கட் புகுந்து நின்றால், கண்டவர் நின்னைப் பெரும்பான்மை நினையாது மற்றொன்று நினைப்பராயின் அவள் உயிர்வாழ வல்லளோ? இனி இவ்வாறு ஒழுகற்பாலையல்லை' என வரைவு தோன்றக் கூறாநிற்றல்.

களகூ. இரவுறு துயரம் கடலொடு சேர்த்தல்—என்பது, தலைமகனை எதிர்ப்படமாட்டாது வருந்தாநின்ற தலைமகள், 'இற்றை இரவெல்லாம் என்னைப்போல நீயும் துன்பமுற்றுக் கலங்கித் தெளிகின்றிலை. இவ்விடத்து நின்னையும் அகன்று சென்றார் உளரோ?' எனத் தான் உறு துயரம் கடலொடு சேர்த்திக் கூறாநிற்றல்.

கஅ0. அலரறிவுறுத்தல்—என்பது, தலைமகள் இரவுறு துயரங் கடலொடு சேர்த்தி வருந்தா நின்றமை சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன், குறியிடைச் சென்று நிற்ப, தோழி எதிர் பட்டு, 'நின் அருளாய் நின்ற இது, எங்களுக்கு அலராகாநின்றது. இனி நீ இவ்வாறு ஒழுகாதொழிய வேண்டும்' என அலரறிவுறுத்தி வரவு விலக்கா நிற்றல்.

கஅக. அகன்றணைவு கூறல்—என்பது, அலரறிவுறுத்த தோழி, 'இத்தன்மையை நினைந்து நீ சிலநாள் அகன்று அணைவையாயின் அம்பலும் அலருமடங்கி, இப்பொழுதே அவளுக்குப் பழியில்லையாம்' எனத் தலைமகனுக்கு இசைய அகன்றணைவு கூறாநிற்றல்.

கஅஉ. கடலோடு வரவு கேட்டல்—என்பது, ஒருவழித் தணத்தற்கு ஆற்றாது வருந்தாநின்ற தலைமகள், 'நம்மை விட்டுப் போனவர் மீண்டுவரும் பரிசு உனக்கு உரைத்தாரோ?' எனக் கடலொடு தலைமகன் வரவு கேளாநிற்றல்.

கஅ௩. கடலோடு புலத்தல்—என்பது, கடலொடு வரவுகேட்ட தலைமகள், அது தனக்கு வாய்திறவாமையின் 'என் வளை கொண்டுபோனார் திறம் யான் கேட்க நீ கூறாதொழிகின்றதென்?' எனப் பின்னும் அக்கடலொடு புலந்து கூறாநிற்றல்.

கஅச. அன்னமோடாய்தல்—என்பது, கடலொடு புலந்து கூறிய தலைமகள், புன்னையொடு புலந்து, 'அகன்றவர் அகன்றே ஒழிவாரோ? யான் அறிகின்றிலேன். நீயாயினும் சொல்லுவாயாக' என அன்னமோடு ஆய்ந்து வரவு கேளாநிற்றல்.

கஅரு. தேர்வழிநோக்கிக் கடலோடு கூறல்—என்பது, அன்னமொடு வரவுகேட்ட தலைமகள், அதுவும் வாய் திறவாமையின், 'இனி அவர் வருகின்றாரல்லர். எம் உயிர்க்குப் பற்றுக்கோடு இனி இதுவே. இதனை நீ அழியாதொழிவாய்' என அவன் சென்ற தேர்வழி நோக்கிக் கடலொடு கூறாநிற்றல்.

கஅசு. கூடலிழைத்தல்—என்பது, தேர்வழி நோக்கிக் கடலொடு கூறாநின்ற தலைமகள், 'இம் மணற்குன்றின்கண் நீத்தகன்ற வள்ளலை உள்ளத்தை நெகிழ்த்து இவ்விடத்தே தரவல்லையோ?' எனக் கூடற்றெய்வத்தைத் தாழ்த்திக் கூடலிழைத்து வருந்தாநிற்றல்.

கஅஎ. சுடரொடு புலம்பல்—என்பது, கூடலிழைத்து வருந்தாநின்ற தலைமகள், 'துறைவர்போக்கும் அவர் சூளுறவும் என்னை வருத்தாநின்றன. அதன்மேல் நீயும் ஏகாநின்றாய். யான் இனி உய்யுமாறென்னோ?' எனச் செல்லாநின்ற சுடரொடு புலம்பாநிற்றல்.

கஅஅ. பொழுது கண்டு மயங்கல்—என்பது, சுடரொடு புலம்பாநின்றவள், 'கதிரவன் மறைந்தான். காப்பவர் சேயர். அதன்மேல் இவ்விடத்து மீனுண்ட அன்னங்களும் போயத் தம் சேக்கைகளை அடைந்தன. இனி, யான் ஆற்றுமாறு என்னோ?' என மாலைப்பொழுது கண்டு மயங்காநிற்றல்.

கஅகூ. பறவையோடு வருந்தல்—என்பது, பொழுது கண்டு மயங்காநின்ற தலைமகள், 'இந்நிலைமைக்கண்ணும் என்னுண்ணோய் அறியாது கண்ணோட்டமின்றித் தம் வயிறு ஓம்பாநின்றன. இஃதென்னை பாவம்!' என வண்டானப் பறவையோடு வருந்திக் கூறாநிற்றல்.

௧௯௦. பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்—என்பது, பறவையோடு வருந்தாநின்றவள், 'இவை என் வருத்தங் கண்டு, இவள் வருந்தாமல் விரையவர வேண்டுமென்று ஞாயிற்றை நோக்கித் தம் கைகுவியாநின்றன வாதலால், என்மாட்டு அன்புடையன போலும்' எனப் பங்கயத்தோடு பரிவுற்றுக் கூறாநிற்றல்.

௧௯௧. அன்னமோடழிதல் — என்பது, பங்கயத்தை நோக்கிப் பரிவுறாநின்றவள், 'உலகமெல்லாம் துயிலும் இந் நிலைமைக் கண்ணும், யான் துயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைச் சென்று அவர்க்குச் சொல்லாது தான் தன் சேவலைப் பொருந்திக் கவற்சியின்றித் துயிலாநின்றது' என அன்னத்தோடு அழிந்து கூறாநிற்றல்.

௧௯௨. வரவுணர்ந்துரைத்தல்—என்பது, தலைமகள் அன்னத்தோடழிந்து வருந்தாநிற்ப, தலைமகன் ஒருவழித் தணந்துவந்தமை சிறைப்புறமாக உணர்ந்த தோழி, 'வளை கள் நிறுத்த நிற்கின்றனவில்லை; நெஞ்சம் நெகிழ்ந்து உருகா நின்றது; கண்கள் துயிலின்றிக் கலுழாநின்றன. இவை யெல்லாம் யான் சொல்லவேண்டுவதில்லை, நீயே கண்டாய். இதனைச் சென்று அவர்க்குச் சொல்லுவாய்' எனக் கிளியொடு கூறாநிற்றல்.

௧௯௩. வருத்தமிகுதி கூறல்—என்பது, சிறைப்புற மாக மதியோடு வருத்தங் கூறிச் சென்று எதிர்ப்பட்டு வலஞ்செய்து நின்று, 'நீ போய், அவள் படாநின்ற வருத் தம் என்னாற் சொல்லுமளவல்ல' என வரைவுதோன்றத் தலைமகளது வருத்தமிகுதி கூறாநிற்றல்.

௯௪௧. பருவங்கூறல் — என்பது, அலரறிவுறுத்த தோழி, 'இவள் முலைமுதிர்வு கண்டமையால் மகட்பேசு

வார்க்கு எமர் மறுது கொடுக்கவுங் கூடும். அது படாமல் நிற்ப நீ முற்பட்டு வரைவாயாக' எனத் தலைமகனுக்குத் தலைமகளது பருவங் கூறாநிற்றல்.

கசுரு. மகட்பேச்சுரைத்தல்—என்பது, பருவங் கூறிய தோழி, படைத்து மொழியான் 'அயலவர் பலரும் மேன் மேலும் பொன்னணியக் கருதாநின்றார். நீ விரைய வரை வொடு வருவாயாதல், அன்றி உடன் கொண்டு போவாயா தல், இரண்டினுள் ஒன்று துணிந்து செய்யக் கருதுவாய். அதனை இன்றே செய்வாயாக' எனக் கூறாநிற்றல்.

கசுசு. பொன்னணி வுரைத்தல்—என்பது, படைத்து மொழியான் மகட்பேசல் கூறின தோழி, 'அறுதியாக முன் றிற்கண் நின்று முரசொடு பணிலம் முழங்கக், காப்பணிந்து பொன்னணியப் புகுதா நின்றார். இனி நின்கருத்து என்னோ?' எனத் தலைமகனுக்கு அயலவர் பொன்னணி வுரையா நிற்றல்.

கசுஎ. அருவிலையுரைத்தல் — என்பது, பொன்ன ணிவு உரைப்பக் கேட்ட தலைமகன், 'யான் வரைவொடு வருதற்கு நீ முலைப்பரிசங் கூறுவாயாக' என, 'எல்லா உல முகம் நல்கினும் எமர் அவளுடைய சிறிய இடைக்கு விலை யாகச் செப்பலொட்டார். இனிப் பெரிய மார்பினுக்கு நீ விலை கூறுவதென்னோ?' எனத் தோழி, விலை யருமை கூறா நிற்றல்.

கசுஅ. அருமைகேட்டழிதல்—என்பது, அரு விலை கேட்ட தலைமகன், 'நீ அவளது அருமை கருதாது, அவளது அவயவங்களில் உண்டாகிய நயத்தைப்பற்றி விடாது நடுங் கா நின்றாய். இனி மதியைப் பிடித்துத் தரவேண்டி அழும்

அறியாக் குழவியைப் போலக் கிடந்து அரற்றுவாயாக"
எனத் தன் நெஞ்சோடு அழிந்து கூறுநிற்றல்.

கசுகூ. தளர்வறிந் துரைத்தல் — என்பது, வரைவு மாட்சிமைப் பட்டதாயின் நீ அவளை உடன்கொண்டு போ என்பது பயப்ப, 'கடலையும் கானலையும் நோக்கிக் கண்ணீர் கொண்டு, தன் ஆயத்தாரை யெல்லாம் புல்லிக்கொண்டாள். அவள் கருதியது இன்னதென்று தெரியாது' எனத் தோழி தலைமகளது வருத்தம் கூறுநிற்றல்.

உ00. குறிப்புரைத்தல்—என்பது, வருத்தங் கூறிப் போக்குணர்த்தி அதுவழியாக நின்று, 'என்னைப் புல்லிக் கொண்டு தன்னுடைய பூவையும், பந்தையும், பாவையையும், கிளியையும் இன்று என் கைத்தந்தாள்; அது நின்னோடு உடன்போதலைக் கருதிப் போலும்' எனத் தோழி தலைமகனுக்குத் தலைமகளது குறிப்புரையா நிற்றல்.

உ0க. அருமை யுரைத்தல்—என்பது, குறிப்புரைத்துப் போக்குடம் படுத்திய தோழிக்கு, 'கொங்கை பொறாது நடுங்காநின்ற இடையினை யுடையாளது, மெல்லிய அடிக்கு யான் செல்லும் வெஞ்சுரம் தகாது. அதன்மேலும் எம் பதியும் சேய்த்து. அதனால் நீ கருதுகின்ற காரியம் மிகவும் அருமையுடைத்து' எனத் தலைமகன் போக்கருமை கூறுநிற்றல்.

உ0உ. ஆதரங்கூறல்—என்பது, போக்கருமை கூறிய தலைமகனுக்கு, 'நின்னோடு போகப் பெறின், அவளுக்கு வெஞ்சுரமும் தண்சுரமாம். நீ அருமை கூறாது அவளைக் கொண்டுபோ' எனத் தோழி தலைமகளது ஆதரங் கூறுநிற்றல்.

உ0௩. இறந்துபா டுரைத்தல்—என்பது, ஆதரங் கூறிய தோழி, 'நீ உடன்கொண்டு போகாயாகில், அலரானும், காவன் மிகுதியானும் நின்னை எதிர்ப்படுதல் அரிதாகலின், தடந்துறந்த கயல்போல இறந்துபடும்' எனத் தலைமகளது இறந்துபாடு கூறாநிற்றல்.

உ0௪. கற்புநல னுரைத்தல்—என்பது, தலைமகனைப் போக்குடம்படுத்திய தோழி, தலைமகளுழைச் சென்று, 'மகளிர்க்குப் பாதுகாக்கப் படுவனவற்றுள், நாண்போலச் சிறந்தது பிறிதில்லை. அத்தன்மைத்தாகிய நாணும் கற்புப் போலச் சீரியதன்று' என உலகியல் கூறுவாள் போன்று, அவள் உடன்போக்குத் துணியக் கற்புநலங் கூறாநிற்றல்.

உ0௫. துணிந்தமை கூறல்—என்பது, உலகியல் கூறுவாள் போன்று கற்புவழி நிறுத்தி, 'எம்பெருமான் நின்னை நீரில்லாத வெய்யசுரத்தே உடன் கொண்டு போவானாக நினையாநின்றான். இதற்கு நின் கருத்தென்னோ?' எனத் தோழி தலைமகளுக்குத் தலைமகன் நினைவு கூறாநிற்றல்.

உ0௬. துணிவோடு வினவல்—என்பது, தலைமகன் நினைவுகேட்ட தலைமகள் அவன் நினைவின்படியே துணிந்து நின்று, 'இந்நீரில்லாத வெய்ய சுரத்தே இப்பொழுது இவர் நம்மை உடன்கொண்டு போகைக்குக் காரணம் என்னோ?' எனத் தோழியை வினவாநிற்றல்.

உ0௭. போக்கறிவித்தல் — என்பது, இப்பொழுது அவர் போகைக்குக் காரணம் என்னோ என்று கேட்ட தலைமகளுக்கு, நீங்கள் உடம்பும் உயிரும்போல ஒருவரையொருவர் இன்றியமையீராயினீர். இத்தன்மைத் தாகிய நுங் காதலை அறிந்துவைத்தும், அவற்கு வரும் ஏதம் நினைதென்றஞ்சி யான் அவனை வரவு விலக்குவேன். அவனும் அவ்

வாறு வருதலை யொழிந்து வரைவொடுவரிற் பொன் முத லாகிய எல்லாவற்றையும் நினக்கு ** பரிசம் பெறினும் நமர் நின்னைக் கொடார். சொல்லுமிடத்து இதுவன்றோ நீர் அருஞ்சுரம் போகைக்குக் காரணம்' என்று தோழி தலை மகனது போக்கறிவியாநிற்றல்.

உ0அ. நாணிழந்து வருந்தல்—என்பது, உடன் கொண்டு போகைக்குக் காரணங் கேட்ட தலைமகள், 'ஒரு நாளும் என்னைவிட்டு நீங்காது என்னுடனே வளர்ந்த பொலி வுடைத்தாகிய நாண், கற்பின் எதிர்நிற்கமாட்டாது தன்னை விட்டு நீங்காத என்னைக் கழிவதாக! மகளிர் எழுபிறப்பின் கண்ணும் குடியிற் பிறவாதொழிக!' எனத் தான் அதற்குப் பிரிவாற்றாமையான் வருந்தல்.

உ0கூ. துணிவெடுத் துரைத்தல்—என்பது, தலைமக ளைக் கற்புவழி நிறுத்திச் சென்று, 'நின்னோடு போதுமி டத்து நீ செல்லும் கற்சுரம் அவளது சிற்றடிக்கு நற்றளி ராம் போலும்' எனத் தோழி தலைமகனுக்கு அவள் துணி வெடுத்துக் கூறாநிற்றல்.

உக0. குறியிடங்கூறல்—என்பது, துணிவெடுத்து உரைத்த தோழி, 'தாழாது இவ்விருட் காலத்துக் கொண்டு போவாயாக, யான் அவளைக் கொண்டுவாராநின்றேன். நீ முன்புவந்து எதிர்ப்பட்ட அக்குறியிடத்து வந்து நில்' எனத் தலைமகனுக்குக் குறியிடங் கூறாநிற்றல.

உகக. அடியோடு வழிநினைந் தவனுளம் வாடல்—என் பது, தோழி குறியிடை நிறுத்திப் போகாநிற்ப, தலைமகன் அவ்விடத்தே நின்று, 'அனிச்சப் பூப்போலும் அழகிய அடி கள் அழற்கடம் போதுமென்றால், இதற்கென்ன துன்பம் வந்து எய்துங்கொல்லோ?' எனத் தலைமகள் அடியொடு

தான் செல்லாநின்ற வழிநினைந்து, தன் உள்ளம் வாடாநிற்றல்.

உகஉ. கொண்டுசென்றுய்த்தல்—என்பது, தலைமகன் குறியிடை நின்று, அடியொடு வழிநினைந்து தன்னுள்ளம் வாடாநிற்ப, அந்நிலைமைக்கண், 'நின் உள்ளத்துக் கருதியதனை இப்பொழுது நினக்குத் தெய்வந் தாராநின்றது. என் தோழியையும் கொண்டுவந்தேன். நீ இவளைக் கைக்கொள்' எனத் தோழி தலைமகளைக் கொண்டு சென்று, அவனோடு கூட்டாநிற்றல்.

உகங. ஓம்படுத்துரைத்தல் — என்பது, கொண்டு சென்றுய்த்து இருவரையும் வலஞ்செய்து நின்று, 'மறைநிலை திரியினும், கடன்முழுதும் வற்றினும், இவளிடத்து நின் அருள் திரியாமல் பாதுகாப்பாய்' எனத் தோழி தலைமகளைத் தலைமகனுக்கு ஓம்படுத்து உரையாநிற்றல்.

உகச. வழிப்படுத்துரைத்தல்—என்பது, ஓம்படுத்துரைத்த தோழி, 'ஆயமும் அன்னையும் பின்வாராமல், இவ்விடத்தே நிறுத்தி, இவ்வூரிடத்துள்ள அலரையும் ஒருவாற்றால் நீக்கி, யானும் வந்து நுங்களைக் காண்பேனாக, நீயிருந் திருவொடுசென்று நும் பதியிடைச் சேர்வீராமின்' என இருவரையும் வழிப்படுத்துக் கூறாநிற்றல்.

உகரு. மெல்லக்கொண்டேகல்—என்பது, தோழியை விட்டு உடன்கொண்டு போகாநின்ற தலைமகன் 'நின்னொடு சேறலான் இன்று இக்காடு திருந்தச் செய்யப்பட்டாற் போலக் குளிர்ச்சியையுடைத்தாயிருந்து. இனி நின் சீறடி வருந்தாமற் பையச் செல்வாயாக' எனத் தன் ஆயவெள்ளத் தோடும் விளையாடுமாறு போலத் தலைமகளை மெல்லக் கொண்டுசெல்லாநிற்றல்.

உகசு. அடலெடுத்துரைத்தல்—என்பது, மெல்லக் கொண்டு செல்லாநின்றவன், சேய்த்தாகச் சிலரை வரக் கண்டு தலைமகள் அஞ்சாநிற்ப, 'நின் ஐயன்மாராயின் அஞ்சுவேன். அல்லது நால்வகைத் தானையும் திரண்டு வரினும், என் கையில் வடித்திலங்காநின்ற எஃகின்வாய்க்கு இரை போதாது. இதனை இவ்விடத்தே காண்பாயாக' என்று அவளது அச்சந்தீரத் தன் அடலெடுத்துரையாநிற்றல்.

உகஎ. அயர்வகற்றல்—என்பது, அடலெடுத்து உரைத்து அச்சந்தீர்த்துக் கொண்டுபோகாநின்றவன், 'இத்துன்பக் கடறு கடந்து சென்று இப்பொழுதே நாம் இன்பப்பதி காணப் புகாநின்றோம். இனி நமக்கு ஒரு குறைவில்லை' எனத் தலைமகளது வழிவருத்தந்தீரக் கூறாநிற்றல்.

உகஅ நெறிவிலக்கிக்கூறல்—என்பது, அயர்வகற்றிக் கொண்டுசெல்லாநின்ற தலைமகனை 'இனிச் செல்லு நெறிக்கண் நன்மக்களில்லை. நீ தனியை. இவள் வாடினாள். பொழுதுஞ் சென்றது. ஈண்டுத் தங்கிப் போவாயாக' என அவ்விடத்துள்ளோர் வழிவிலக்கிக் கூறாநிற்றல்.

உகசு. கண்டவர் மகிழ்தல்—என்பது, நெறிவிலக்குற்று, வழிவருத்தந் தீர்ந்து, ஒருவரையொருவர் காணலுற்று இன்புற்றுச் செல்லாநின்ற இருவரையுங் கண்டு, 'இவர்கள் செயல் இருந்தவாற்றான் இப்பெருஞ் சுரஞ் செல்வதன்று போலும். அது கிடக்க. இதுதான் இன்புறவுடைத்தாகியதோர் நாடகச் சுவையுடைத்தாயிருந்தது' என எதிர்வருவார் இன்புற்று மகிழ்ந்து கூறாநிற்றல்.

உ௨௦. வழிவிளையாடல்—என்பது, கண்டவர் மகிழக் கொண்டு செல்லா நின்றவன், 'நெறி செல் வருத்தத்தின்

நெகிழ்ந்த மேனியையுடைய நின்னைக்கண்டு கண்கள்தம் மாற்கொள்ளும் பயன்கொண்டனம். இனிச் சிறிது இருந்து இக்கடுங் கானகம் தண்ணெனுமளவும் செவிநிறைய நின் மொழிபருக வருவாயாக' எனத் தலைமகளுடன் விளையாடா நிற்றல்.

உஉக. நகரணிமை கூறல்—என்பது, இருவரும் தம் முள் இன்புற்றுச் செல்லாநின்றமை கண்டு, 'இனிச் சிறிது நெறி சென்று, அக்குன்றத்தைக் கடந்தால், நும் பதியாகிய நகர் விளங்கித் தோன்றுகிற்கும். அத்துணையுங் கடிது செல் விராமின்' என எதிர்வருவார் அவர் நகரணிமை கூறாநிற் றல்.

உஉஉ. நகர்காட்டல்—என்பது, நகரணிமை கூறக் கேட்டு இன்புறக் கொண்டு செல்லாநின்ற தலைமகன், 'அன் னத் துன்னிப் பிறையணிந்த சூலத்தையுடைத்தாகிய மாளி கைமேற் கொடிநுடங்க மதில் தோன்றாநின்ற அப்பெரிய நகர்காண் நம்முடைய நகராவது' எனத் தலைமகளுக்குத் தன் னுடைய நகர்காட்டாநிற்றல்.

உஉ௩. பதியரிசுரைத்தல்—என்பது, நகர் காட்டிக் கொண்டுசென்று, அந்நகரிடைப் புக்கு அவ்விடத்துள்ள குன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளிகைகள், தெய்வப் பதி, இவையெல்லாம் தனித்தனி காட்டி, 'இதுகாண் நம் பதியாவது' எனத் தலைமகளுக்குத் தலைமகன் பதிபரிசு காட்டல்.

உஉச. செவிலி தேடல்—என்பது, இருவரையும் வழிப்படுத்திவந்து பிரிவாற்றாது கவலாநின்ற தோழியை, 'எம் பிள்ளை எங்குற்றது? நீ கவலாநின்றாய். இதற்குக்

காரணமென்னோ ?' என்று வினாவிச் செவிலி தலைமகளைத் தேடாநிற்றல்.

உஉ௫. அறத்தோடு நிற்றல்—என்பது, தேடாநின்ற செவிலிக்கு 'நீ போய் விளையாடச் சொல்ல, யாங்கள் போய்த் தெய்வக் குன்றிடத்தே எல்லாரும் ஒருங்கே விளையாடாநின்றேமாக, அவ்விடத்து ஒரு பெரியோன் வழியே தார்சூடிப் போயினான். அதனைக் கண்டு நின்மகள் "இத் தாரை என்பாவைக்குத் தாரும்" என்றாள். அவனும் வேண்டியது மறாது கொடுப்பானாதலின் பிறிதொன்று சிந்தியாது கொடுத்து நீங்கினான். அன்று அறியாப் பருவத்து நிகழ்ந்த தனை "உற்றார்க் குரியார் பொற்றொடி மகளிர், கொண்டார்க் குரியார் கொடுத்தார்" என்பதனை இன்று உட்கொண்டாள் போலும்! யான் இத்துணையும் அறிவேன்' என்று உடன் போக்குத் தோன்றக் கூறி தோழி அறத்தொடு நில்லாநிற்றல்.

உஉ௬. கற்புநிலைக் கிரங்கல்—என்பது, தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட செவிலி, 'இஃது அறமாயினும் இவள் பருவத்துக்குத் தகாது. அது கிடக்க. இனி அவளுக்கு நன்மையாவது அவனை வழிபடுவதல்லது பிறிதில்லை' எனக் கற்புநிலைக் கிரங்காநிற்றல்.

உஉ௭. கவன்றுரைத்தல்—என்பது, கற்புநிலைக் கிரங்காநின்ற செவிலி, 'நெருநலைநாள் முறுவலைத் தந்து மார்பம் முழுவித்தழுவி, நீசிறிய விரகுகள் செய்தவெல்லாம் இன்று அவ் வலிய காட்டைச் செல்லவேண்டிப்போலும்! இதனை அப்பொழுதே அறியப் பெற்றிலேன்' என்று அவள் நிலை நினைந்து கவலாநிற்றல்.

உஉஅ அடிநினைந்திரங்கல்—என்பது, நிலைமை நினைந்து கவலாநின்ற செவிலி, 'அனிச்சப்பூமேன் மிதிப்பினும் ஆற்றாது பதைத்துப் பொங்காநின்ற அடிகள், இன்று, செறிந்த பரலையுடைய காட்டின்கட் பாவியவா றென்னோ?' என அவள் அடிநினைந் திரங்கா நிற்றல்.

உஉகூ. நற்றாய்க் குரைத்தல்—என்பது, அடிநினைந் திரங்காநின்ற செவிலி, கற்புமுதிர்வு தோன்ற நின்று 'என்னை இடைவிடாமல் தேடி அழாநின்ற பேதை யறிவு இன்று என்னைத் தேய்வியாநின்றது' என்று அவள் உடன் போனமை ஆற்றாது நற்றாய்க்குக் கூறாநிற்றல்.

உ௩௦. நற்றாய் வருந்தல்—என்பது, உடன்போனமை கேட்டு உண்மகிழ்வோடு நின்று, 'ஓர் ஏதிலன் பின்னே தன் தோழியைவிட்டு, என்னையும் முன்னே துறந்து, சேராதார் முன்னே ஊர் அலர்தூற்ற அருஞ்சுரம் போயினாள். இனி யான் எங்ஙனம் ஆற்றுவேன்' என நற்றாய் பிரிவாற்றாது வருந்தாநிற்றல்.

உ௩க. கிளிமொழிக் கிரங்கல்—என்பது, பிரிவாற்றாது வருந்தாநின்றவள், 'அவள்போன போக்கன்றி, இக்கிள்ளை என் நெஞ்சை ஈராநின்றது' எனத் தன் தாய் செலவு உணர்ந்து வருந்தாநின்ற கிளியினது மொழிகேட்டு இரங்கல்.

உ௩உ. சுடரோடிரத்தல்—என்பது, கிளிமொழி கேட்டு இரங்காநின்றவள், 'பெற்ற என்னோடு தன் கிளியிருந்து வருந்த, இதனையும் துறந்து, அறிவு முதிர்ந்து, அழற் கடஞ்சென்றாள் முகத்தை நின் கதிர்களான் வாட்டாது தாமரைமலர்போல மலர்த்துவாயாக' எனச் சுடரோடிரந்து கூறாநிற்றல்.

உருரு. பருவநினைந்து கவறல்—என்பது, சுடரோடு இரந்து வருந்தாநின்றவள், 'கற்பிக்கும் முதுபெண்டிருமின்றித் தான் அவனுக்குச் செய்யத்தகுங் குற்றேவல் செய்யவல்லள் கொல்லோ ?' என்று அவளது பருவம் நினைந்து கவலாநிற்றல்.

உருசு. நாடத்துணிதல்—என்பது, பருவம் நினைந்து கவலாநின்ற தாய்க்கு, 'நீ கவன்று மெலிய வேண்டா. யான் அவள் புக்கவிடம் புக்குத் தேடுவேன்' எனக் கூறி, செவிலி அவளை நாடத் துணியாநிற்றல்.

உருரு. கோடிக்குறி பார்த்தல்—என்பது, செவிலி நாடத் துணியாநிற்ப, 'அவ்விருவரையும் இப்பொழுதே வரும்வண்ணம் நீ கரைந்தால், நினக்கு உணங்கலை அஞ்சாதிருந்து உண்ணலாம். அதுவன்றித் தெய்வத்திற்கு வைத்த நிணத்தையுடைய வலியையும் நினக்கே வரைந்து வைப்பேன். அவ்வாறு கரைவாயாக' என நற்றாய் கொடிக்குறி பாராநிற்றல்.

உருசு. சோதிடங்கேட்டல்—என்பது, கொடி நிமித்தம் பெற்று 'இக்காவன் மனையின் கண்ணே, யாங்கள் மணஞ்செய்ய அவ்விருவரையும் இன்னும் பெறுமாறு உண்டாயின், ஆராய்ந்து சொல்லுமின்' என அறிவாளரைக் கிட்டிச் செவிலி சோதிடங் கேளாநிற்றல்.

உருஎ. சுவடு கண்டறிதல்—என்பது, சோதிடம் பெற்றுச் செல்லாநின்றவள், 'இம் முரம்பின்கட் கிடந்த இவை தீவினையேன் எடுத்து வளர்த்த மாணிழைச் சீறடி ; உவை அக் கள்வனடியாம்' எனச் சுவடு கண்டறியாநிற்றல்.

உருஅ. சுவடுகண்டி
றிந்து, அவ்விடத்தே நின்று '
பதைத்துக் கொப்புட் கொ
இன்று ஒரு விடலைபின்னே போதற்குத தகும ...
வாறு ஒத்தன ?' எனச் சுவடுகண்டு இரங்காநிற்றல்.

உருகூ. வேட்டமாதரைக் கேட்டல்—என்பது, சுவடு கண்டு இரங்காநின்று, அது வழியாகச் சொல்லாநின்றவள், 'இவ்வாறு அறியாப் பருவத்தளாய்த் தனக்கு இயைபில்லாத சுரத்தின்கண் அயலானொருவனுடன் போந்தாள். அவளை நீ கண்டாயோ?' என வேட்ட மாதரைக் கேளாநிற்றல்.

உசo. புறவோடுபுலத்தல்—என்பது, வேட்ட மாதரைக் கேட்டு அதுவழியாகச் செல்லாநின்றவள், 'ஏதிலனுமாய்த் தமியனுமாயவன் சொற்றுணையாக வெய்ய சுரத்தே மாதர் சென்றால், இல்லையுடைய புறவே! இது நினக்குத் தகுதியன்றென்று கூறிற்றிலை. நீ வாழ்வாயாக' எனப் புறவொடு புலந்து கூறாநிற்றல்.

உசக. குரவோடு வருந்தல்—என்பது, புறவொடு புலந்து போகாநின்றவள், 'என்னுடைய பாவை நின்னுடைய முன்னே இக்கொதிக்குங் கடத்தைக் கடப்பக் கண்டுநின்றும், இன்னவாறு போனாளென்று எனக்கு வாயுந் திறக்கின்றிலை. இது நினக்கு நன்றோ?' எனக் குரவொடு வாடியுரையாநிற்றல்.

உசஉ. விரதியரை வினவல்—என்பது, குரவொடு வருந்திச் செல்லாநின்றவள், 'பத்தியர்போல ஒருபித்தி தன் பின்னேவர, ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோ?' என விரதியரை வினவாநிற்றல்.

உ௪௩. வேதியரை வினவல்—என்பது, விரதியரை வினவி, அதுவழியாகச் செல்லாநின்றவள், மான்போலும் நோக்கினையும், மயில்போலுஞ் சாயலையு முடைய மான், ஓர் ஏந்தலோடு நும் எதிரே வரக்கண்டீரோ ?' என வேதியரை வினவாநிற்றல்.

உ௪௪. புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவல்—என்பது, வேதியரை வினவி, அதுவழியாகச் செல்லாநின்றவள், 'நும்மைக் கண்டு, என்னால் தேடப்படுகின்றார் மீண்டார்களென்று கருதி மகிழ்ந்தேன். அது கிடக்க, இவ்வாறு நும்மோடொத்த ஒழுக்கத்தினராய் முன்னே இருவரைப் போகக் கண்டீரோ ?' எனப் புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினவாநிற்றல்.

உ௪௫. வியந்துரைத்தல்—என்பது, புணர்ந்துடன் வருவோரை வினவி, அது வழியாகப் போகாநின்றவள், தன் மகள் நின்ற நிலையையும், அவன் கையின் வேலினான் வேங்கை பட்டுக்கிடந்த கிடையையுங் கண்டு வியந்து கூறாநிற்றல்.

உ௪௬. இயைபெடுத்துரைத்தல்—என்பது, வேங்கை பட்டது கண்டு வியந்து அதுவழியாகச் செல்லா நின்றவள், எதிர்வருவாரை வினவ, அவர், 'நீ கூறுகின்றவரைக் குன்றத்திடைக் கண்டோம். அவ்விருவரும் தம்முள் இயைந்து செல்லாநின்றமை கண்டு, "எல்லாவற்றையும் உடையவனாகிய தன் காதலியோடு ஒருவடிவாய் விளையாடும் புலியூரனென்றே கருதி, யாங்களெல்லாம் ஒத்து, மிகவும் அவ்வெழிலைத் தொழ நினைந்தோம். அந்நன்மை சொல்லலாவது ஒன்று அன்று' என எதிர்வருவார் அவர் இயைபெடுத்துக் கூறாநிற்றல்.

உசஎ. மீள வுரைத்தல்—என்பது, இயைபெடுத்து உரைத்தவர், 'அவ்விருவரும் ஓர் இடுக்கணின்றிப் போய்த் தில்லையின் எல்லையைச் சென்று அணைவர். இனி நீ செல்வ தன்று, மீள்வதே காரியம்' எனத் தேடிச் செல்லாநின்ற செவிலியை மீளக் கூறாநிற்றல்.

உசஅ. உலகியல்புரைத்தல்—என்பது, மீளக் கூற வும் மீளாது கவலாநின்ற செவிலிக்கு, 'சந்தனமும் முத்தும் சங்கும் தாம் பிறந்த இடங்கட்கு யாதும் பயன்படாது. தம்மை விரும்பி அணிவாரிடத்தே சென்று பயன்படா நிற் கும். அதுபோல மகளிரும் தாம் பிறந்தவிடத்துப் பயன் படார். நீ கவலவேண்டா' என உலகியல்பு கூறாநிற்றல்.

உசகூ. அழுங்குதாய்க் குரைத்தல்—என்பது, உல கியல்பு கூறவும் மீளாது நின்று, தான் எடுத்து வளர்த் தமை சொல்லிக் கவலாநின்ற செவிலியை, முன்னிலைப் புற மொழியாக, 'இவர்தாம் இல்லின்கண் எடுத்து வளர்த்தவர் போலும். அவர்போய்த் தம்மை இருவரையுங் கூட்டுவித்த தெய்வப்பதியாகிய தில்லையிடத்துப் பழனங்களைச் சென் றணைவர்' எனத் தம்முட் கூறுவார்போன்று கூறி, மீட்டுக் கொண்டு போகாநிற்றல்.

உரு0. வருத்தமிகுதி கூறி வரைவு கடாதல்—என்பது, அலரறிவுறுத்த தோழி, 'அலரானும் காவன் மிகுதியானும் நின்னை எதிர்ப்படமாட்டாது அழுது வருந்தா நின்றவ ளிடத்து நின் அருள் இருக்கின்றவாறு என்னோ?' எனத் தலைமகளது வருத்த மிகுதிகூறித் தலைமகன் வரைவு கடா வாநிற்றல்.

உருக. பெரும்பான்மை கூறி மறுத்தல்—என்பது, வரைவு கடாவிய தோழிக்கு, 'யான் அவளைத் தெய்வமா

னுடம் என்றறிந்து வரைந்துகோடற்கு இக்குன்றிடத்துத் தோன்றா நின்றவிடம் தெய்வமகளிரது, இடமோ? அன்றிக் குறத்தியர் இடமோ? கூறுவாயாக' எனத் தலைமகன் தலைமகளைப் பெரும்பான்மைகூறி மறுத்துரையாநிற்றல்.

உருஉ. உள்ளதுகூறி வரைவு கடாதல்—என்பது, பெரும்பான்மைகூறி மறுத்த தலைமகனுக்கு, 'இவ்விடம் எந்தையது முற்றூட்டு; எமக்கு உற்றார் குறவரே; எம்மைப் பெற்றாளும் கொடிச்சியே, யாங்களும் புனங்காப்போம் சிலர். நீ வரைவு வேண்டாமையின் எம்மைப் புனைந்து உரைக்க வேண்டுவதில்லை' எனப் பின்னும் வரைவு தோன்றத் தோழி தங்கள் உண்மை கூறாநிற்றல்.

உருங. ஏதங்கூறியிரவரவு விலக்கல்—என்பது, உண்மையுரைத்து வரைவுகடாய தோழி, 'நீவரைவொடு வாராயாயிற் சிங்கம் திரண்டு தனக்கு யானையாகிய உணவுகளைத் தேடும் இருளின்கண், நினது கைவேல் துணையாக நீ வந்தருளாநின்ற இஃதே எங்களுக்குத் துன்பமாகத் தோன்றாநின்றது. இனி இவ்விருளிடைவாராதொழிவாய்' என ஏதங் கூறித் தலைமகனை இரவரவு விலக்காநிற்றல்.

உருச. பழிவரவுரைத்துப் பகல்வரவு விலக்கல்—என்பது, இவ்விருளிடை வாராதொழிகென்றது, பகல்வாச் சொன்னவாறும் என உட்கொண்டு, பகற்குறிச்சென்று நிற்ப, தோழி எதிர்ப்பட்டுப் 'பகல்வந்து எமக்குச் செய்யாநின்ற மெய்யாகிய அருள் புறத்தார் அறிந்து வெளிப்பட்டுப் பழியாகப் புகுதாநின்றது. இனிப் பகல்வரவு ஒழிவாயாக' எனப் பழிவருதல்கூறிப் பகல்வரவு விலக்காநிற்றல்.

உருரு. தோழுதிரந்து கூறல்—என்பது, பகல்வரவு விலக்கின தோழி, இவன் இரவு வரவுங் கூடுமென உட்

கொண்டு, 'நின்னை எதிர்ப்படவேண்டி அழுது வருந்தாநின்ற இவள் காரணமாக, அரிக்கும் யாளிக்கும் வெருவி யானைகள் திரண்டு புடைபெயராத மிக்க இருளின்கண் வாராதொழி வாயாக' என்று நின் கழல்களைக் கையால் தொழுது, நின்னை இரந்தேன் என வரைவு தோன்றத் தலைமகனைத் தொழுது இரந்து கூறாநிற்றல்.

உருசு. தாயறிவுகூறல்—என்பது, தொழுது இரந்து கூறவும், வேட்கைமிகவாற் பின்னுங் குறியிடைச் சென்று நிற்ப, அக்குறிப்பறிந்து, 'நம்கானலிடத்து அரையிரவின் கண் ஒரு தேர்வந்தது உண்டாகக் கூடுமென உட்கொண்டு, அன்னை சிறிதே கண்ணும் சிவந்து என்னையும் பார்த்தாள். இருந்தவாற்றான் இவ்வொழுக்கத்தை அறிந்தாள் போலும்' எனத் தோழி தலைமகளுக்குக் கூறுவாள் போன்று சிறைப் புறமாகத் தலைமகனுக்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறாநிற்றல்.

உருஎ. மந்திமேல் வைத்து வரைவு கடாதல்—என்பது, சிறைப்புறமாகத் தாயறிவுகூறிச் சென்று எதிர்ப்பட்டு, ஒரு கூடுவன் தன் மந்திக்கு மாங்கனியைத் தேனின்கண் தோய்த்துக் கொடுத்து, நுகர்வித்துத் தம்முள் இன்புறுவது கண்டு, 'இது நம் காதலர்க்கு நம்மாட்டு அரிதாயிற்றென நீ வரையாமையை நினைந்து ஆற்றாளாயினாள்' என மந்தி மேல் வைத்துத் தலைமகளது வருத்தங்கூறி வரைவுகடாவா நிற்றல்.

உருஅ. காவன்மேல் வைத்துக் கண்டுயிலாமை கூறல்—என்பது, மந்திமேல் வைத்து வரைவு கடாவப் பட்ட தலைமகன், இது நம் காதலியிடத்து நமக்கு அரிதா யிற்றெனத் தானும் ஆற்றானாய், இரவுக்குறிச் சென்று

நிற்ப, அந்நிலைமைக்கண் 'இவ்விடத்துள்ளார், இவள் காவற் பறை கேட்குந் தோறும் கண்துயிலாமைக்குக் காரண மென்னோ?' எனத் தம்முட் கூறுநிற்றல்.

உருகூ. பகல் உடம் பட்டாள் போன்று இரவரவு விலக்கல்—என்பது, சிறைப்புறமாகக் கண்துயிலாமை கேட்ட தலைமகன், ஆதரவுமிகவால் எதிர்ப்படலுற்று நிற் பத் தோழி எதிர்ப்பட்டு, 'நீ வந்து ஒழுகாநின்ற இப்புலரா இரவும்பொழியா மழையும் புண்ணின்கண் நுழையும் வேல் மலராம்படி எங்களை வருத்தாநின்றன. இதற்கொரு மருந் தில்லையோ நம் வரையிடத்து' எனப் பகலுடம் பட்டாள் போன்று இரவரவு விலக்காநிற்றல்.

உகூ0. இரவுடம் பட்டாள் போன்று பகல் வரவு விலக்கல்—என்பது, இவள் மருந்தில்லையோ என்றது, யான் இரவுக்குறிச் செல்லின் மழைக்காலிருளின் எதிர்ப்பட லருமையான் வேட்கையுற்றுப் பகற்குறியுடம் பட்டாளென உட்கொண்டு, பகற்குறிச் செல்லாநிற்ப, தோழி எதிர்ப் பட்டு, 'பகல்வந்தருளாநின்றது அவளுக்கு வருத்தமுறும் படியாக மிக்க அலராகா நின்றது. அதனாற் பகற்குறிவரற் பாலையல்லை' என இரவுக்குறியுடம்பட்டாள்போன்று பகற் குறி விலக்காநிற்றல்.

உகூக. இரவும் பகலும் வரவு விலக்கல்—என்பது, இரவுடம் பட்டாள்போன்று பகல் வரவு விலக்கின தோழி, 'நீ பகல்வரின் அலர்மிகுதியான் எங்களுக்கு மிக்கபழி வந் தெய்தும். இராவரின் எவ்வாற்றாலும் நின்னை எதிர்ப்படு தலருமையாற் சிறிதும் பயனில்லை. அதனால், நீ இருபொழு தும் வரற்பாலையல்லை' என இரவும் பகலும் வரவு விலக்கா நிற்றல்.

உசுஉ. காலங்கூறி வரைவு கடாதல்—என்பது, இரு பொழுதும் வரவு விலக்கின தோழி, 'மதிநிரம்பா நின்றது. வேங்கை பூவாநின்றன. இனி நினக்கு வரைவொடு வருதற்குக் காலமிது' எனக் காலங்கூறி வரைவு கடாவா நிற்றல்.

உசுங. கூறுவிக் குற்றல்—காலங்கூறி வரைவு கடாவவும் வரைவுடம் படாமையின் அவள் தன்னைக்கொண்டே கூறுவிப்பாளாக, 'அலரான் வரும் நாணினையும் காணாமையான் வரும் ஆற்றாமையையும் பற்றிக் கிடந்த நம் அல்லலை நம்மால் தலையளிக்கப்படுவார் இவ்வாறு வருந்துதல் தகாது எனத் தாமாக அறிகின்றிலராயின் நாம் சொல்லும் தன்மைகள் என்னோ' எனப்புலந்து, 'நீ யாகிலும் சென்று கூறு' என்பது குறிப்பால் தோன்றத் தலைமகன் வரைவுடம் படாமையைத் தோழி தலைமகட்குக் கூறாநிற்றல்.

உசுச. செலவு நினைந் துரைத்தல்—என்பது, வரைவு உடம் படாமையின் தோழி தலைமகனோடு புலந்துகூறக் கேட்டு, அக்குறிப்பறிந்து, 'இக்கல்லதரின் கண் நீர் வந்தவாறென்னோ என்று வினவுவாரைப் பெற்றேமாயின் இத்தன்மையை யுடைத்தாகிய மிக்க இருளின் கண் யாம் அவருழைச் சேறலரிதன்று. சென்றேமாயினும் அவ்வாறு சொல்லுவாரில்லை' எனத் தலைமகள் செலவு நினைந்து கூறாநிற்றல்.

உசுரு. பொலிவழிவுரைத்து வரைவு கடாதல்—என்பது, தலைமகள் தன்னை எதிர்ப்படலுற்று வருந்தாநின்றமை சிறைப்புறமாகக் கேட்ட தலைமகன் குறியிடை வந்து நிற்ப, தோழி எதிர்ப்பட்டு, 'என் ஐயரது காவலை நீவி நின் வயத்தளாய் நின்று பொலிவழிந்து வருந்தாநின்றவளை நீ வரை

ந்து கொள்ளாது, இவ்வாறு இகழ்ந்து மதித்தற்குக் காரண மென்னோ?" எனத் தலைமகளது பொலிவழிவு கூறி வரைவு கடாவாநிற்றல்.

உகூகூ. முலைவிலை கூறல்—என்பது, வரைவு முடுக் கப்பட்ட தலைமகன், 'யான் வரைவொடு வருதற்கு நீ சென்று அவள் ஐயன்மாரை முலைவிலை கேட்பாயாக' என 'எல்லாவற்றானும் நின் வரைவை எமர் ஏற்றுக்கொள்ளி னல்லது, விலை கூறுவராயின் அவளுக்கு ஏழுலகும் விலை போதாது' எனத் தோழி முலைவிலை கூறாநிற்றல்.

உகூஎ. வருமது கூறி வரைவுடம் படுத்தல்—என்பது, முலைவிலை கூறிய தோழி, 'நீ வரைவொடு வாராது இரா வருள் செய்யாநின்ற இது கெர்ப்பத்துக்கேதுவானால் நம் எல்லார்க்கும் பொல்லாதாம். அது படாமல் எமரால் தொடுக்கப்பட்ட அருங்கலங்களை விரைய வரவிட்டு, அவளை வரைந்தெய்துவாயாக என மேல்வரும் இடுக்கண் கூறித் தலைமகனை வரைவுடம்படுத்தாநிற்றல்.

உகூஅ. வரை பொருட் பிரிவை யுரையெனக் கூறல்—என்பது, மேல் வருமது கூறி வரைவுடம் படுத் தின தோழிக்கு, 'யான் போய் நுமர்கூறும் நிதியமுந்தேடிக் கொண்டு நும்மையும் வந்து மேவுவேன். நீ சென்று அவள் வாடாத வண்ணம் யான் பிரிந்தமை கூறி ஆற்றுவித்துக் கொண்டிருப்பாயாக' எனத் தலைமகன் தான் வரை பொருட் குப் பிரிகின்றமை கூறாநிற்றல்.

உகூகூ. நீயே கூறென்றல்—என்பது, பிரிவறிவிப்பக் கூறின தலைமகனுக்கு, 'நீ இரவுவரினும் பகற்பிரிந்து செல்வையென உட்கொண்டு நின்னோடு கூடிய அப்பொழு

தும் யான் உயிர் வாழேன் என்று நினைந்திருப்பாளுக்குத் தாழேன் என்னும் உரைமுன்னுக நின்பிரிவை நீயே சொல்லிப் போவாயாக' என அவன் விரைய வருவது காரணமாகத் தோழி தலைமகளது பிரிவாற்ருமை கூருநிற்றல்.

உ௭0. சொல்லாதேகல்—என்பது, நீயே கூறென்ற தோழிக்கு 'யான் எவ்வாறு கூறினும் அவள் பிரிவுடம்படாளாதலின் ஒருகாலும் வரைந்துகொள்கையில்லை. யான் விரையவருவேன், அவ்வளவும் நீ ஆற்றுவித்துக்கொண்டிருப்பாயாக' எனக் கூறித் தலைமகன் தலைமகளுக்குச் சொல்லாது பிரியாநிற்றல்.

உ௭௧. பிரிந்தமை கூறல்—என்பது, தலைமகன் முன்னின்று பிரிவுணர்த்த மாட்டாமையிற் சொல்லாது பிரியாநிற்ப, தோழி சென்று, 'நமரால் தொடுக்கப்பட்ட எல்லா நிதியத்தையும் ஒருங்கு வரவிட்டு நின்னை வரைந்து கொள்வாளுக அழற்கட நெறியே பொருள் தேடப்போனுன். அப்போக்கு, அழற்கடஞ் சென்றமையான் நமக்குத் துன்பமென்பேனே' எனப் பொதுப்படக் கூறி, 'வரைவு காரணமாகப் பிரிந்தானுதலின், இது நமக்கின்பமே' யெனத் தலைமகள் வருந்தாமல் அவன் பிரிந்தமை கூருநிற்றல்.

உ௭உ. நெஞ்சொடு கூறல்—என்பது, பிரிந்தமை கூறக் கேட்டு வருந்தா நின்ற நெஞ்சிற்கு, 'நமக்கு ஏதம் பயக்கும் ஒழுக்கமொழிந்து குற்றந் தீர்ந்த முறைமையாகிய ஒழுக்கத்துப் பிரிந்தவிது நம்மைக் கெடுக்குமென்று நீ கருதின் இது வொழிய நமக்கின்புற்று வாழுமுபாயம் வேறு உளதோ' எனத் தலைமகள் அந்நெஞ்சினது வருத்தந் தீரக் கூருநிற்றல்.

உஎந. நெஞ்சொடு வருந்தல்—என்பது, பிரிந்தமை கூறக்கேட்ட தலைமகள், 'அன்று அவரை விடாது என்னை விட்டு அவரது தேர்ப்பின் சென்ற நெஞ்சம் இன்றும் அவ்வாறு செய்யாது என்னை வருத்தாநின்றது' எனத் தன் நெஞ்சொடு வருந்தாநிற்றல்.

உஎச. வருத்தங் கண்டுரைத்தல்—என்பது, தலைமகள் தன் நெஞ்சொடு வருந்தாநிற்பக் கண்ட தோழி, 'இத் தன்மைத்தாகிய வெற்பராகலின் தாழாது விரைய வரைவொடு வருவர்; ஆதலால், நீ இன்னுமையை அடையா தொழிவாயாக' என்று அவள் வருத்தந் தீரக் கூறாநிற்றல்.

உஎரு. வழியொழுகி வற்புறுத்தல்—என்பது, தலைமகளது வருத்தங்கண்ட தோழி, அவளை வழியொழுகி யாற்றுவிக்கவேண்டுமவளாகலின், ஆற்றாமைக்குக் காரணமாகியவற்றைக் கூறித் தானும் அவளோடு வருத்தமுற்று, 'அது கிடக்க; இம்மலர்ப்பாவை யன்னாட்கு இவ்வேறுபாடு வந்தவாறென்னோவென்று அயலவர் ஐயுறாநிற்பாராதலான் நீ யாற்ற வேண்டும்' என்று அவள் வழியொழுகி வற்புறுத்தாநிற்றல்.

உஎசா. வன்புறை யெதிரழிந்திரங்கல்—என்பது, வழியொழுகி வற்புறுத்தின தோழியொடு, 'தலைமகன் வரைவு நீடுதலால் தமக்கோர் பற்றுக்கோடின்றி வருந்துந்திருவினையுடையார்க்கு அவன் வரைவு மிகவுமினிது யான் ஆற்றேன்' எனத் தலைமகள் வன்புறை எதிரழிந்திரங்காநிற்றல்.

உஎஎ. வாய்மை கூறி வருத்தந் தணித்தல்—என்பது, வரைவு நீடுதலான் வன்புறை எதிரழிந்து வருந்தாநின்ற தலைமகளுக்கு, 'அவர் சொன்ன வார்த்தை நினக்குப் பொய்

யென்பதே கருத்தாயின், இவ்வுலகத்து மெய்யென்பது சிறிதும் இல்லை' எனத் தோழி தலைமகனது வாய்மைகூறி அவள் வருத்தந் தணியா நிற்றல்.

உ௭அ. தேறாது புலம்பல்—என்பது, தலைமகனது வாய்மைகூறி வருத்தந் தணியாநின்ற தோழிக்கு, 'யான் அவர் கூறிய மொழியின்படியே மெய்ம்மையைக் கண்டு வைத்தும், என் நெஞ்சமும் நிறையும் என்வயமாய் நிற்கின்றனவில்லை. அதுவேயுமன்றி, என் உயிரும் பொறுத்தற் கரிதாகா நின்றது. இவை இவ்வாறாதற்குக் காரணம் யாதென்றறிகின்றிலேன்' எனத் தான் தேறாமை கூறிப் புலம்பா நிற்றல்.

உ௭௯. காலமறைத்துரைத்தல்—என்பது, தேறாமை கூறிப் புலம்பாநின்ற தலைமகள், காந்தள் கருவுறக் கண்டு, இஃது அவர் வரவு குறித்த காலமென்று கலங்காநிற்ப, 'நம்முடைய ஐயன்மார் தினைக்கதிர் காரணமாகக் கடவுளைப் பராவ, அக்கடவுளதாணையாற் காலமன்றியும் கார் நீரைச் சொரிய, அதனை அறியாது, காலமென்று இக்காந்தண் மலர்ந்தன. நீ அதனைக் காலமென்று கலங்கவேண்டா' எனத் தோழி அவளை ஆற்றுவித்தற்குக் காலமறைத்துக் கூறா நிற்றல்.

உ அ0. தூதுவர வுரைத்தல்—என்பது, காலமறைத்த தோழி, ஒரு தூது வந்து தோன்றாநின்றது. அஃது இன்னார் தூதென்று தெரியாதெனத் தான் இன்புறவோடு நின்று அவள் மனமகிழும்படி தலை மகளுக்குத் தூதுவர வுரையா நிற்றல்.

உ அக. தூது கண்டழுங்கல்—என்பது, தூது வரவு உரைப்பக் கேட்ட தலைமகள் மனமகிழ்வோடு நின்று,'இஃது

பழிவருங்கொல்லோ என்னும் ஐயத்தோடு நின்று, "யாம் முன்பு ஒருநாள் கடற் கரையிடத்தே வண்டல்செய்து விளையாடா நின்றேமாக, அந்நேரத்து ஒரு தோன்றல், நம் வண்டல் மனைக்கு யாம் விருந்தென்று வந்து நின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிது புடைபெயர்ந்தாய். அந்நிலைமைக்கட் கீழ்காற்று மிகுதலால், கரைமேலேறும் கடல்மேல் வந்துற் றது. உற யான், 'தோழியோ! தோழியோ!' என்று நின்னை விளித்தேன். அதுகண்டு இரங்கி, அவன் அருளொடுவந்து தன் கையைத் தந்தான். யானும் மயக்கத்தாலே அதனை நின் கையென்று தொட்டேன். அவனும் பிறிதொன்றும் சிந்தியாது என் உயிர்கொண்டு தந்து என்னைக் கரைக்கண் உய்த்துப்போயினன். அன்று என் நாணினால் நினக்கு அத னைச்சொல்லமாட்டிற்றிலேன். இன்று இவ்வாறாயினபின் இது கூறினேன். இனி நினக்கடுப்பது செய்வாயாக" எனத்தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நில்லா நிற்றல்.

உசுக. வெறி விலக்கல்—என்பது, தலைமகளை ஐயந் தீர்த்து வெறிக்களத்தே சென்று, வேலனை நோக்கி, புன லிடை வீழ்ந்து கெடப்புக வந்தெடுத்துய்த்த கதிர்த்தோள் நிற்க, இந்நோய் தீர்தற்குப் பிறிதோர் உபாயத்தைக் கரு தும் நின்னைப் போல, இவ்வுலகத்தின்கண் அறிவுடையார் இல்லையென, மேல் அறத்தொடு நிற்பாளாகத் தோழி வெறி விலக்கா நிற்றல்.

உசுஉ. செவிலிக்குத் தோழி அறத்தோடு நிற்றல்—என் பது, வெறி விலக்கி நிற்ப, நீ வெறி விலக்குதற்குக் காரணம் என்னோ என்று கேட்ட செவிலிக்கு, "நீ போய்ப் புனங்காக் கச் சொல்ல, யாங்கள் போய்த் தினைக்கிளி கடியாநின்றேம். அவ்விடத்து ஒரு யானை வந்து நின் மகளை வதஞ்செய்யப்

புக்கது. அது கண்டு அருளுடையானொருவன் ஓடி வந்தணைத்துப் பிறிதொன்றும் சிந்தியாமல் யானையைக்கடிந்து அவளது உயிர் கொடுத்துப்போயினான். அறியாப்பருவத்து நிகழ்ந்ததனை இன்று அறியும் பருவமாதலால், 'உற்றார்க் குரியார் பொற்றொடி மகளிர்' என்பதனை உட்கொண்டு, இவ்வாறு உண்மெலியா நின்றாள். இனி அடுப்பது செய்வாயாக" எனத் தோழி அறத்தொடு நில்லா நிற்றல்.

உகூங. நற்றாய்க்குச்செவிலி அறத்தோடு நிற்றல்—என்பது, தோழி அறத்தொடு நிற்பக் கேட்ட செவிலி, 'இளையளாகிய இல்வாழ்க்கைச் செல்வத்தை யுடைய இவளை என் சொல்லிப் புகழுவோம்! முன் எழும் இரண்டெயிறு முளையாத இளமைப்பருவத்தே அறிவு முதிர்ந்தாள்' எனத் தலைமகளது கற்புமிகுதி தோன்ற நற்றாய்க்கு அறத்தொடு நில்லா நிற்றல்.

உகூச. தேர்வரவு கூறல்—என்பது, நற்றாய்க்குச் செவிலி யறத்தொடு நில்லாநிற்ப, அந்நிலைமைக்கண் தலைமகனது தேரொலிகேட்ட தோழி, உவகையோடு சென்று தலைமகளுக்கு அதன் வரவெடுத்துக் கூறா நிற்றல்.

உகூரு. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல்—என்பது, தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறா நின்ற அந்நிலைமைக்கண் மணமுரசு கேட்டு மனையிலுள்ளார், இஃது இவளை நோக்கி ஒலியாநின்றது மணமுரசென உட்கொண்டு, யாம் பூரண பொற்குடம் தோரணம் முதலாயினவற்றான் மனையை அலங்கரிப்போம் என மகிழ்வொடு கூறா நிற்றல்.

உகூசா. மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல்—என்பது, தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறா நின்ற அந்நிலை

மைக்கண் மணமுரசுகேட்டு மனையிலுள்ளார், இஃது இவளை நோக்கி ஒலியா நின்றது மணமுரசெனவுட்கொண்டு, யாம் பூரண பொற்குடம் தோரணம் முதலாயினவற்றான் மனையை அலங்கரிப்போம் என மகிழ்வொடு கூறுநிற்றல்.

௨௯௭. ஐயுற்றுக் கலங்கல்—என்பது, மணமுரசு கேட்டவள் மகிழ்வொடுநின்று மனையை அலங்கரியாநிற்ப, 'மிகவும் களிப்பையுடைத்தாய நமது சிறந்த நகரின்கண் முழங்காநின்ற இப்பெரிய முரசம், யான் எவற்கோ அறிகின்றிலேன்' எனத் தலைமகள் கலக்கமுற்றுக் கூறுநிற்றல்.

௨௯௮. நிதிவரவு கூறுநிற்றல்—என்பது, முரசொலி கேட்டு ஐயுற்றுக் கலங்காநின்ற தலைமகளுக்கு, 'நமர்வேண்டினபடியே அருங்கலங்கொடுத்து நின்னை வரைந்து கொள்வாராக! யானை கடிந்தார், நமது கடைமுன் கொணர்ந்து இறுத்தார் குறைவில்லாத நிதி. இதனை நீ காண்பாயாக' எனத் தோழி மகிழ்தரு மணத்தொடு நின்று நிதிவரவு கூறுநிற்றல்.

௨௯௯. மண முரசு கூறல்—என்பது, வரைபொருட் பிரிந்து வந்த பின்னர் அருங்கலம் விடுத்தற்கு முன்றிற் கண்நின்று தலைமகனது முரசு முழங்காநிற்பக்கண்டு மகிழ்வுறாநின்ற தோழி, நாம் துயர்தீர நம் இல்லின்கட் புகுந்துநின்று யானை கடிந்தார் முரசு முழங்காநின்றது. இனி என்ன குறையுடையோம் என வரைவு தோன்ற நின்று, தலைமகளுக்கு மணமுரசு கூறுநிற்றல்.

௩௦௦. மகிழ்ந்துரைத்தல்—என்பது, மணமுரசொலி கேட்ட தோழி, சிலம்பன் தந்த பெறுதற்கரிய தழைகளை

வாடாமல் வைத்து, அத்தழையே பற்றுக் கோடாக ஆற்றி யிருந்தாள் எனத் தலைமகளைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறு நிற்றல்.

௩0௧. வழிபாடு கூறல்—என்பது, மணஞ் செய்தபின் னர் மணமனை காணவந்த செவிலிக்கு, 'காவலர் உடம்பும் உயிரும்போல ஒருவரையொருவர் இன்றியமையாமையால் இவள் கருத்தை.தக் கடவார். கமலங் கலந்த தேனும் சந்தன மரமும் போல இயைந்து இவள் கற்புவழி நிற்றலையுடைய ராய் இவள் வழியே நின்று ஒழுகாநின்றார்' எனத் தோழி தலைமகள் தலைமகன் வழி யொழுகாநின்றமை கூறுநிற்றல்.

௩0௨. வாழ்க்கை நலங்கூறல்—என்பது, மணமனை கண்ட செவிலி, மகிழ்வோடு சென்று, 'நின் மகளுடைய இல் வாழ்க்கை நலத்திற்கு உவமை கூறில், நின்னுடைய இல் வாழ்க்கை நலமல்லது வேறு உவமையில்லை' என நற்றாய்க் குத் தலைமகளது வாழ்க்கைநலங் கூறுநிற்றல்.

௩0௩. காதல் கட்டுரைத்தல்—என்பது, 'அவள் இல் வாழ்க்கை நலம் கிடக்க. அவன் அவண்மேல் வைத்த காதலான் இவையேயன்றிப் பொறையாம் என்று கருதி நுத லின்கண் இன்றியமையாத காப்பாகிய பொட்டையும் அணி யான். இஃது அவன் காதல்' எனத் தலைமகனது காதன் மிகுதி கூறுநிற்றல்.

௩0௪. கற்பறிவித்தல்—என்பது, தலைமகனது காதன்மிகுதி கூறின செவிலி, 'அது கிடக்க. அவள் அவனை யொழிய வேறொரு தெய்வத்தைத் தெய்வமாகக் கருதா ளாதலான், அவன் தன்னை வணங்காத பகைவரைச் சென்று கிட்டித் திறைகொள்ளச் சென்றாலும், திறைகொண்டுவந்து

அவளது இல்லத்தல்லது ஆண்டுத் தங்கி யறியான். இஃது அவரது இயல்பு' எனக்கூறி நற்றாய்க்குத் தலைமகளது கற்பறிவியாநிற்றல்.

௩0௫. கற்புப்பயப்புரைத்தல்—என்பது, கற்பறிவித்த செவிலி, 'அவள் அவனை யொழிய வணங்காமையின் அவன் ஊரும் களிறும் வினைவயிற் சென்றால், அவ்வினை முடித்துக் கொடுத்துவந்து தன் பந்தியிடத்தல்லது ஆண்டுத் தங்காதாகலான், அவளது கற்பு, அந்திக்காலத்து வடமீனையும் வெல்லும்' என அவளது கற்புப் பயந்தமை நற்றாய்க்குக் கூறாநிற்றல்.

௩0௬. மருவுதலுரைத்தல்—என்பது, கற்புரைத்த செவிலி, 'வேந்தற்குற்றுழிப் பிரியினும் அவன் ஊருந் தேரும் வினைமுடித்துத் தன்னிலையினல்லது புறத்துத் தங்காது. அவளும் அவனையொழிய மற்றோர் தெய்வமும் மனத்தானும் நினைந்தறியாள். இஃது இவர் காதல்' என அவ்விருவர் காதலும் மருவுதல் கூறாநிற்றல்.

௩0௭. கலவியின்பங் கூறல்—என்பது, இருவர் காதலும் மருவுதல் கூறின செவிலி, 'இவ்விருவருடைய காதலும் களிப்பும் இன்பவெள்ளத்திடையழுந்தப் புகுகின்றதோர் உயிர் ஓர் உடம்பால் துய்த்தல் ஆராமையான் இரண்டுடம்பைக் கொண்டு, அவ்வின்பவெள்ளத்திடைக் கிடந்து திளைத்ததனோடு ஒக்கும். அதுவன்றி அவ்வின்பவெள்ளம் ஒரு காலத்து வற்றுவதும் முற்றுவதும் செய்யாது' என நற்றாய்க்கு அவரது கலவியின்பங் கூறாநிற்றல்.

௩0௮. கல்விநலங்கூறல்—என்பது, வரைந்து கொண்டபின்னர் ஓதற்குப் பிரியலுறாநின்ற தலைமகன், தலை

மகனுக்குப் பிரிவுணர்த்துவானாக மிகவும் கற்றோர் நன்மைக்கு எல்லையில்லாத தன்மையராவரெனத் தோழிக்குக் கல்விநலம் கூறாநிற்றல்.

௩0௯. பிரிவு நினைவுரைத்தல்—என்பது, கல்விநலங் கேட்ட தோழி, அவள் பிரிதற் குறிப்பறிந்து, 'மிகவும் கற்றோர் நன்மைக்கு எதிரில்லாத தன்மையராவர் என்பதனை உட்கொண்டு, நின் மார்புற்ற புரவலர், அழற்கானத்தே போய்க் கல்வியான் மிக்காரைக் கிட்டி அவரோடு உசாவித் தம் கல்வி மிகுதி புலப்படுத்தப் பிரியாநின்றார்' எனத் தலைமகன் ஓதுதற்குப் பிரிவு நினைந்தமை தலைமகளுக்குக் கூறாநிற்றல்.

௩௧0. கலக்கங் கண்டுரைத்தல்—என்பது, பிரிவு நினைவுரைப்பக் கேட்ட தலைமகளது கலக்கங் கண்ட தோழி, 'அன்பர் சொற்பா விரும்பினர் என்ன, அச்சொல் இவள் செவிக்கண் காய்ந்தவேல்போலச் சென்றெய்திற்று. இனி மற்றுள்ள பிரிவை எங்ஙனம் ஆற்றுவள்' எனத் தன்னுள்ளே கூறாநிற்றல்.

௩௧௧. வாய்மொழிகூறித் தலைமகள் வருந்தல்—என்பது, கலக்கங் கண்டுரைத்த தோழிக்கு, முன்னிலைப் புறமொழியாக 'நின்னிற் பிரியேன், பிரிவும் ஆற்றேன் என்று சொன்னவர் தாமே பிரிவாராயின், இதற்கு நாம் சொல்லுவதென்னோ?' எனத் தலைமகனது வாய்மொழிகூறித் தலைமகள் வருந்தாநிற்றல்.

௩௧௨. பிரிவறிவித்தல்—என்பது, 'தருமநூல் விதியால் நமர் உலகத்தைப் பாதுகாப்பான் பிரியக் கருதாநின்றார்' எனத் தலைமகன் காவலுக்குப் பிரியாநின்றமை தோழி தலைமகளுக்கு அறிவியாநிற்றல்.

௩௧௩. பிரிவுகேட்டிரங்கல்—என்பது, பிரிவறிவித்த தோழிக்கு, 'முற்காலத்துக் குரவர்களாற் பாதுகாக்கப்படும் நம்மை வந்து யானை தெறப்புக, அதனை விலக்கி நம் உயிர் தந்தவர், இன்று தம்மல்லதில்லாத இக்காலத்துத் தாம் நினைத்திருக்கின்றது இதுவோ? இது தமக்குத் தகுமோ?' எனத்தலைமகனது பிரிவு கேட்டுத் தலைமகள் இரங்காநிற்றல்.

௩௧௪. பிரிவு கூறல்—என்பது, 'ஒருவரது உள்ள மிகுதியை ஒருவர் தணித்தற்கரிதாகிய இருவேந்தர் தம்முட் பகைத்து உடன் மடியப் புகுதாநின்றார் எனக் கேட்டு அவ்விருவரையும் அடக்கவல்ல திறலுடையராதலின், அவரைப் பகைதணித்து அவர் தம்மில் ஒன்றுபட வேண்டி நின்னைப் பிரியக் கருதாநின்றார்' எனத் தலைமகன் பகைதணிக்கப் பிரியலுறாநின்றமை தோழி தலைமகளுக்குக் கூறாநிற்றல்.

௩௧௫. வருத்தந் தணித்தல்—என்பது, தலைமகனது பிரிவுகேட்டு உள்ளுடைந்து தனிமையுற்று வருந்தாநின்ற தலைமகளை, 'நின்னைவிட்டு அவர் பிரியார் நீ நெருப்பையுற்ற வெண்ணெயும் நீரையுற்ற உப்பும்போல இவ்வாறு உருகித் தனிமையுற்று வருந்தாதொழி' எனத் தோழி அவளது வருத்தந் தணியாநிற்றல்.

௩௧௬. பிரிந்தமை கூறல்—என்பது, 'தம்மைவந்தடைந்த வேந்தனுக்குத் தாம் உதவி செய்வாராக, வெய்ய போரையுடைய பாசறைமேல் நமர் சென்றார். இனி, அவ் வேந்தன் பகைவரால் விடப்பட்ட மதில் என்று இடியுமோ!' எனத் தலைமகன் வேந்தற்குற்றுழிப் பிரிந்தமை தோழி தலைமகளுக்குக் கூறாநிற்றல்.

ஙகஎ. பிரிவாற்றாமை கார்மிசை வைத்தல்—என்பது, பிரிவுகேட்ட தலைமகள், தனது வருத்தங்கண்டு காதலர் வினைவயிற்பிரிய நீ வருந்தினால் வினைமுடியுமா றென்னோ என்ற தோழிக்கு, "யான் அவர் பிரிந்ததற்கு வருந்துகின்றேனல்லேன். இக்கார்முகில் சென்று அப்பாசறைக்கண்ணே தோன்றுமாயின், நம்மை நினைந்து ஆற்றாராய், அவ்வினை முடிக்க மாட்டாரென்று அதற்கு வருந்துகின்றேன்' எனக் கார்மிசை வைத்துத் தனது வருத்தங் கூறாநிற்றல்.

ஙகஅ. வானோக்கி வருந்தல்—என்பது உற்றாழிப் பிரிந்த தலைமகன் பார்ப்புக்களோடு பெடைக்குருகைச் சேவல் தன் சிறகான் ஒடுக்கிப் பனியான்வரும் மிக்க குளிரைப் பாதுகாக்கின்ற இரவின்கண் எனது போதரவு அவளுக்கு என்னாங்கொல்லோ எனத் தலைமகளது வடிவை நினைந்து வானை நோக்கி வருந்தாநிற்றல்.

ஙகசு. கூதிர்கண்டு கவறல்—என்பது, 'விழாநின்ற பனியிடத்து எல்லாரும் நெருப்புத்திரளை மேவாநிற்ப மலைத்திரளை யேறித் துணையில்லாதாரைத் தேடும் புயலினம் நமக்கேயன்றித் தம்மை யடைந்தார்க்கு உதவி செய்யச் சென்றார்க்கும் சென்று பொருந்துமோ? பொருந்துமாயின், நம்மை நினைந்து ஆற்றாராய், அவ்வினை முடிக்க மாட்டார்' எனத் தலைமகள் கூதிர்கண்டு கவலாநிற்றல்.

ஙஉ0. முன்பனிக்கு நொந்துரைத்தல்—என்பது, 'மக்களே யன்றிப் புள்ளும் தம் பெடையைச் சிறகின் ஒடுக்கிப் பிள்ளைகளையும் தழுவி இனஞ்சூழ ஒருவாது, துயிலப் பெறுகின்ற இம் மயங்கிருட்கண், இடையறாது விழாநின்ற பனியிடைக் கிடந்து வாடித் துயர்வாயாக என்று என்னைப் பெற்றவளை நோவதல்லது யான் யாரை நோவேன்' என முன்பனிக்காற்றாது, தாயொடு நொந்து கூறாநிற்றல்.

௩உக. பின்பனி நினைந்திரங்கல்—என்பது, 'இப் பெரிய பனி வையம் எங்கும் பரந்து துவலைகளைப் பரப்பிய வாறு, அவள் பொறுக்கும் அளவன்று. அவளைச் சொல்லு கின்றதென்? எனக்கும் ஆற்றுதல் அரிது' என்பது போதர, 'மிக்க தனிமையை யுடையார்க்கு இப்பனி, வான் சரத்தைத் தருமாயின், அதனோடு ஒக்கும்' எனத் தலைமகன் தலைமக ளது துயரம் நினைந்து இரங்காநிற்றல்.

௩உஉ. இளவேனில் கண்டு இன்னலெய்தல்—என் பது, 'மேன்மேலும் நிறம்பெற்று இருளாநின்ற இக்குயில் கள், மாம்பொழிலைச் சுற்றும் வந்து பற்றின. இனி உயிர் வாழுமாறு ஒன்றும் கண்டிலேன்' எனத் தலைமகள் இள வேனில் கண்டு இன்னலெய்தா நிற்றல்.

௩உ௩. பருவங்காட்டி வற்புறுத்தல்—என்பது, தான் வருதற்குக் குறித்துப் போகிய கார்ப்பருவத்தினது வரவு கண்டு கலங்காநின்ற தலைமகளுக்கு, 'இக்கார் வந்து வானி டத்துப் பரந்தமையான், நம்மைக் கலந்தவரது தேர் இன் றாக நாளையாக இங்கே வாரா நிற்பக் காணப்படுவதே இனி உள்ளது' எனத் தோழி அப்பருவந் தன்னையே காட்டி அவளை வற்புறுத்தா நிற்றல்.

௩உச. பருவமன்றென்று கூறல்—என்பது, 'காரும் வந்தது. காந்தளும் மலராநின்றன; காதலர் வாராதிருந்த தென்னோ?' என்று கலங்காநின்ற தலைமகளுக்கு, 'சிற்றம் பலத்தின் கண்ணே குடமுழா முழங்க அதனை அறியாது காரென்றுகொண்டு இக்காந்தண் மலர்ந்தன. நீ இதனைப் பரு வமென்று கலங்காதொழி' எனத் தலைமகன் வரவு நீட்டித் தலால், தோழி அவள் கலக்கந்தீரப் பருவத்தைப் பருவ மன்றென்று கூறாநிற்றல்.

௩௨ரு. மறுத்துக் கூறல்—என்பது, பருவமன்றென்ற தோழிக்கு 'காந்தளேயன்றி இதுவும் பொய்யோ' எனத் தோன்றியினது மலரைக் காட்டி, 'இது பருவமே' என்று அவளோடு தலைமகள் மறுத்துக் கூறாநிற்றல்.

௩௨சு. தேர்வரவு கூறல்—என்பது, மறுத்துக் கூறின தலைமகளுக்கு, 'கொண்டல்கள் எட்டுத்திசைக் கண்ணும் வாராநின்றமையின், இது பருவமே. இனி உடன்ற மன்னர் தம்முட் பொருந்துதலான், நம்மைக் கலந்தவர் தேர் நம் இல்லின்கணின்று வந்து தோன்றும்' என்று அவள் கலக்கந்தீரத் தோழி தலைமகனது தேர்வரவு கூறாநிற்றல்.

௩௨எ. வினைமுற்றி நினைதல்—என்பது, வேந்தற் குற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுற்றிய பின்னர், கயலை யும் வில்லையுங்கொண்டு மன் கோபமுங்காட்டி, 'ஒரு திரு முகம் வாராநின்றது. இனிக் கடிது போதும்' எனத் தேர்ப் பாகன் கேட்பத் தலைமகளது முக நினைந்து கூறாநிற்றல்.

௩௨அ. நிலைமை நினைந்து கூறல்—என்பது, வினை முற்றிய பின்னர் அவள் முகங்கண்டு வாராநின்றவன், புறாக் கள் தந் துணையோடு துயின்று முன்றிற்கண் விளையாடுவ கண்டு, 'இது நமக்கு அரிதாயிற்றென்று என் நிலைமை நினை ந்து ஆற்றகில்லாளாவள். நீ விரையத் தேரைச் செலுத்து வாயாக' எனத் தலைமகளது நிலைமை நினைந்து தேர்ப்பாக னுக்குக் கூறாநிற்றல்.

௩௨௯. முகிலொடு கூறல்—என்பது, காரோட்டங் கண்ட பாகன் அதனோடு விரையத் தேரோட்டா நிற்பான், 'பிரிதலால், திருந்திய அழகெல்லாம் அழிந்து துன்புறா நின்றவளது சீரிய நகரின்கண் வாராநின்ற எனது தேரின்

முற்பட்டுச் சென்று இயங்காதொழியவேண்டும். இயங்கி னும் அத்தமியாள் கேட்ப முழங்கா தொழியவேண்டும், எனத் தலைமகன் முந்துற்றுச் செல்லாநின்ற முகிலொடு கூறுநிற்றல்.

௩௩௦. வரவெடுத்துரைத்தல்—என்பது, தலைமகன் முகிலொடு வாராநிற்பக் கண்ட தோழி 'வணங்குவாராக உடம்பட்டவர் கொடுத்த திறையையும் வணங்காது மாறு பட்டவர் அடையாளங்களையும் தமது தேருக்கு முன்னாகக் கொண்டு, வீரமுரசார்ப்ப, ஆலியாநின்ற மாவினோடும் வந் தணுகினார். இனி நமக்கு ஒரு குறையில்லை' எனத் தலைமக ளுக்கு அவன் வர வெடுத்துக் கூறாநிற்றல்.

௩௩௧. மறவாமை கூறல்—என்பது, வினை முற்றி வந்து தலைமகளோடு பள்ளியிடத்தானாகிய தலைமகன் 'நீயிர் வினையிடத்தெம்மை, மறந்தீரே' என்ற தோழிக்கு, 'யான் பாசறைக்கட் டாழ்த்தவிடத்தும், கண்முகத்திலங்க நின்று, இவள் என்னுடைய நெஞ்சை நீங்கிற்றிலள். ஆதலால், யான் மறக்குமா றென்னோ?' எனத் தான் அவளை மற வாமை கூறாநிற்றல்.

௩௩௨. வாட்டங் கூறல்—என்பது, பொருள்வயிற் பிரியலுறா நின்ற தலைமகன், 'இருமையும் பொருளானே முற்றுப்பெறுமென்று யான் பொதுவகையாற் கூற, அக் குறிப்பறிந்து கண்பனிவர, இத்தன்மையளாய் வாடினாள். இனி என்னாற் பிரிவுரைத்தலரிது. நீ உணர்த்துமாற்றான் உணர்த்து' எனத் தோழிக்குத் தலைமகளது வாட்டங் கூறா நிற்றல்.

௩௩௩. பிரிவு நினைவுரைத்தல்—என்பது, வாட்டங் கேட்ட தோழி, 'பொருளில்லாதார் இருமையின்கண் வரும்

இன்பமும் அறியார் என உட்கொண்டு, அருஞ் சுரம் போய் நமர் பொருள்தேட நினையாநின்றார்' எனத் தலைமகளுக்குத் தலைமகனது பிரிவுநினைவுரையா நிற்றல்.

௧௩௪. ஆற்றாது புலம்பல்—என்பது, பிரிவு நினைவுரைப்பக் கேட்ட தலைமகள், 'இத்தோழியாகிய கொடியவள், இத்தன்மையை அறிந்திருந்தும், அன்பர் பிரிவர் எனக் குவளைப்பூ எறிதற்கு வாளுறை கழித்தாற் போலக் கூறினாள். இதற்கு யான் கூறுவதுண்டோ!' என ஆற்றாது புலம்பாநிற்றல்.

௧௩௫. ஆற்றாமை கூறல்—என்பது, தலைமகளது வருத்தங்கண்ட தோழி, 'காதலர் கானகத்தையுடைய சுரத்தைப் போய்ப் பொருள்தேட நினையாநின்றார் என்றுயான் சொல்லுமளவில், அவளது மார்பும் கண்ணும் பொன்னும் முத்துந் தாராநின்றன. இனி நீ சேட்சென்று தேடும் பொருள் யாதோ?' எனத் தோழி தலைமகனுக்கு அவளது பிரிவாற்றாமை கூறாநிற்றல்.

௧௩௬. திணைபெயர்த்துரைத்தல்—என்பது, 'யான் அவர்க்கு நினது ஆற்றாமை கூறினேன். இனி அவர்நினைவறியேன்' என்ற தோழிக்கு, 'தாம் எனக்கு அருளைப் புலப்படுத்திய சொற்கள் அத்தனையும் மறந்தோ, காவலர் தீவினையேற்குப் பொருளைத் தரத் தொடங்குகிறது!' எனப் பிரிவுள்ளிப் பாலை நிலத்தனாகிய தலைமகனை மருதநிலத்தனாக்கித் தலைமகள் புலந்து கூறாநிற்றல்.

௧௩௭. பொருத்தமழிந்துரைத்தல்—என்பது, திணை பெயர்த்துக் கூறின தலைமகளுக்கு, 'யாம் எல்லாம் சொன்னோமாயினும் காதலர்க்கு நினைவு பொருண் மேலேயா யிருந்

தது. இனி யாம் சொல்லுவதென்னோ ?' எனத் தோழி தலைமகனது பொருத்தமறிந்து தான் அதற்கு நொந்து கூறா நிற்றல்.

௩௩அ. பிரிந்தமை கூறல்—என்பது, பொதுவகையான் உணர்த்தினேமாயின், இனித் தீயதுபிற காண்கின்றோமெனத் தலைமகன் உணர்த்தாது பிரியாநிற்ப, 'நின் முன்னின்று பிரிவுணர்த்தினால், நீ மேனியொளி வாடுவை என உட்கொண்டு, பொருண் முடித்துக் கடிதின் மீள்வாராக, நால்வகைத் தானையோடு நம் மன்னர் வினைவயிற் சென்றார்' எனத் தோழி, தலைமகளுக்குத் தலைமகன் பிரிந்தமை கூறா நிற்றல்.

௩௩௯. இரவுறு துயரத்திற் கிரங்கியுரைத்தல்—என்பது பிரிவுகேட்ட தலைமகளது ஆற்றாமைகண்ட தோழி, 'இவ்வுறுப்புக் குறைவோடு எங்குந் திரிந்து இளைத்து அருக்கனது தேர்வருதல் யாண்டையது ? இவள் ஆற்றுதல் யாண்டையது ?' என அவள் இரவுறு துயரத்திற்குத் தான் இரக்கமுற்றுக் கூறாநிற்றல்.

௩௪0. இகழ்ச்சி நினைந்தழில்—என்பது, தோழி இரக்கமுற்றுக் கூறாநிற்ப, 'முற்காலத்து அவருலகின்மேல் வைத்துணர்த்தியவழி நீட்டித்துப் பிரிவாராயினும், இப்பொழுதைக்கிவர் பிரியார் என யான் அவர் பிரிவிகழ்ந்திருந்தேன். முன்னின்றுணர்த்தின் இவள் உயிர்தரியாள் என்று அவர் உணர்த்துதலை இகழ்ந்து போனார். அத்தன்மையவாகிய இரண்டிகழ்ச்சியும் என்னை இத்தன்மைத்தாக அழிவியாநின்றன' எனத் தலைமகள் இகழ்ச்சிநினைந் தழியா நிற்றல்.

௩௪௧. உருவு வெளிப்பட்டு நிற்றல்—என்பது, தலைமகள் இகழ்ச்சி நினைந்தழியாநிற்ப, தான் உணர்த்தாது

பிரிந்தமை உட்கொண்டு பொருள்வலித்த நெஞ்சோடு செல்லாநின்ற தலைமகன், 'காணுந் திசைதோறும் கயலையும், வில்லையும், சிவந்த கனியையும், மார்பையுங் கொண்ட ஒரு பூங்கொடி தோன்றா நின்றது' எனத் தலைமகளது உருவை நினைந்து மேற்போகமாட்டாது மீளலுற்றுச் சுரத்திடை நில்லாநிற்றல்.

௩௪௨. நெஞ்சொடு நேர்தல்—என்பது, மீள நினைந்த தலைமகன், பின்னும் பொருள்மேற் செல்லாநின்ற உள்ளத்தானாய் நின்று மீளமாட்டாது, 'இவ்விரண்டனுள் இப்பொழுது நீ எதுக்குப் போக முயல்கின்றாய்?' எனத் தன் நெஞ்சொடு நொந்து கூறாநிற்றல்.

௩௪௩. நெஞ்சொடு புலத்தல்—என்பது, நெஞ்சொடு நொந்து கூறாநின்றவன், 'பேயிடத்துஞ் செய்தல் அரிதாம் பிரிவை இவளிடத்தே எளிதாக்குவித்துச் சேய்த்தாகிய இவ்விடத்துப் போந்த நினது சிக்கனவுக்கஞ்சத்தக்கது' எனப் பின்னும் அந்நெஞ்சொடு புலந்து கூறாநிற்றல்.

௩௪௪. நெஞ்சொடு மறுத்தல்—என்பது, நெஞ்சொடு புலந்து கூறிப் பின்னும் பொருண்மேற் செல்லாநின்ற உள்ளத்தோடு தலைமகளை நினைந்து, இத்தன்மைத் தாகிய பொன்னைவிட்டு வேறு பொன் றேடியோ, எம்மை வாழச் செய்வது? இதற்கு யாம் உடம்படேம். நாமே நடக்க' எனச் செலவுடம்படாது பொருள்வலித்த நெஞ்சொடு மறுத்துக் கூறாநிற்றல்.

௩௪௫. நாளெண்ணி வருந்தல்—என்பது, தலைமகனது வரவு நீட்ட நினைந்து வருந்தாநின்ற தலைமகளது வருத்தங் கண்ட தோழி, 'இவளை நோய் பொருந்தச் சென்

றவர் சென்ற நாளை எண்ணுந் தன்மையால் பலகால் இடு தலின் நிலனுங் குழிந்து விரலுந் தேய்ந்தது' என அவன் சென்றநாள் எண்ணி வருந்தாநிற்றல்.

௩சசு. ஏறுவரவுகண் டிரங்கியுரைத்தல்—என்பது, பொருண்முற்றி மீளலுறா நின்ற தலைமகன், மாலைக்காலத்து நாகொடு வாராநின்ற ஏறுவரவுகண்டு, 'இச்சிறந்த செக்கர் மாலை அவள் பொறுக்கும் அளவன்று' என இரங்கிக் கூறா நிற்றல்.

௩சஎ. பருவங்கண்டிரங்கல்—என்பது, ஏறு வரவு கண்டு இரக்கமுற்று வாராநின்ற தலைமகன் 'இம்முகில்கள் ஒன்றோடொன்று தம்மில் விரவுதலால் பொழில்கடோறும் மயில்கள் திரண்டு ஆடாநின்ற இக்கார்காலத்து அவள் என்னை நினைந்தாற்றுளாங்கொல்லோ?' என அப்பருவங் கண் டிரங்காநிற்றல்.

௩சஅ. முகிலோடு கூறல்—என்பது, பருவங்கண்டு இரங்கி விரைவொடு வாராநின்ற தலைமகன், 'இவ்விடந் தெல்லாம் முற்பட்டாயினும் முதுபெண்டிர் திரண்டு அவள் இன்னுமையை நீக்கற்கு இல்லுறை கடவுட்குப் பூசனை செய்யாநிற்கும் நீள் நகரத்திற்கு என்னின் முற்படாதொழிவாயாக' என முந்துற்றுச் செல்லாநின்ற முகிலொடு கூறாநிற்றல்.

௩சகூ. தேர்வரவு கூறல்—என்பது, பொருள்வயிற் பிரிந்த தலைமகன் முகிலொடுவந்து புகாநிற்ப, இம்முகில் இவளது ஆவியை வெகுளாநின்ற காலத்து ஒரு தேர்வந்து காத்தமையான் இனி வரக்கடவதனை வெல்லுமாறில்லை' எனத் தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறாநிற்றல்.

௩௫௦. இளையரெதிர்கோடல்—என்பது, தோழி தலைமகட்குத் தேர்வரவு கூறாநிற்ப, 'இந்நிலைமைக்கண், இவள் ஆவி செல்வதற்குமுன்னே, சூழூந் தொகுதியோடு அன்பர் தேர்வந்து தோன்றிற்று. இனி ஊழின் வலியது வேறொன்றும் இல்லை' எனப் பொருண்முடித்து வாராநின்ற தலைமகனைச் சென்று இளையர் எதிர்கொள்ளாநிற்றல்.

௩௫௧. உண்மகிழ்ந்துரைத்தல்—என்பது, பொருண்முடித்து இளைஞர் எதிர்கொள்ளவந்து புகுந்த தலைமகன், தலைமகளுடன் பள்ளியிடத்தனாயிருந்து, 'இம்மானைப் பிரிந்து பொருள்தேட யான் வெய்ய சுரம் சென்ற துன்பமெல்லாம் இவள் மார்பம் என்னுறுப்புக்களிடை மூழ்க, இப் பூவணைமேல் அணையா முன்னம் துவள்வுற்றது' எனத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறாநிற்றல்.

௩௫௨. கண்டவர் கூறல்—என்பது, 'தலைமகன் பரத்தையர் சேரிக்கட் செல்லாநிற்ப, அப்பரத்தையர் அவனை ஒருங்கெதிர்கொண்டு சுற்றும் பற்றிப் போர் செய்யாநின்றமையின், இஃது இவன்காதலி மாட்டென்னும்?' என அவ்விடத்துக் கண்டவர் தம்முட் கூறாநிற்றல்.

௩௫௩. பொறையுவந்துரைத்தல்—என்பது, தலைமகனைப் பரத்தையர் எதிர்கொண்டமை கேட்ட தலைமகள்நெஞ்சுடைந்து, புறத்து வெளிப்படாமற் பொறுத்தமை கண்ட தோழி, 'யான் இவ்வாறாகவும் கலங்காது நின்ற பெரும் பொறையாட்டியை யான் இன்று பேசுவன என்!' என்று அவளை உவந்து கூறாநிற்றல்.

௩௫௪. போதுப்படக்கூறி வாடியழுங்கல்—என்பது, பொறையுவந்துரைத்த தோழிக்கு முன்னிலைப்புறமொழி

யாக, 'தமது நலங்கவரக் கொடுத்து, வேறு துணை யின்மையின், தமதணையையே தமக்குத் துணையாகக்கொண்டு கிடந்து என்னைப்போல உயிர்தேய்வார் இனி யாவரோ?' எனப் பொதுப்படப் பரத்தையர்க்கிரங்குவாள் போன்று தலைமகனது கொடுமை நினைந்து வாடாநிற்றல்.

௩௫௫. கனவிழந் துரைத்தல்—என்பது, தலைமகனது கொடுமைநினைந்து கிடந்து வாடாநின்ற தலைமகள் கனவிடை வந்து அவன் மார்புதரத் தான் அதனை நனவென்று மயங்கிப் புலந்து அவனோடு புணராதிழந்தமையைத் தோழிக்குச் சொல்லாநிற்றல்.

௩௫௬. விளக்கொடு வெறுத்தல்—என்பது, கனவிழந்தமை கூறி வருந்தாநின்ற தலைமகள் 'நீயாயினும் கலந்தவர்க்குப் பொய்ம்முகங்காட்டிக் கரத்தல், பொருத்தமன்று என்றிலையே' என விளக்கொடு வெறுத்துக் கூறாநிற்றல்.

௩௫௭. வரம்பகர்ந்து வாயின்மறுத்தல்—என்பது, விளக்கொடு வெறுத்து வருந்தாநின்ற தலைமகள், தலைமகன் பரத்தையிற் பிரிந்துவந்து வாயிற்கண் நிற்ப, 'வண்டோரனையர் ஆடவர்; பூவோரனையர் மகளிர்; ஆதலான், நாமும் அவன் தலையளி பெற்றபொழுது ஏற்றுக் கொள்வதன்றோ நமக்குக் காரியம். நாம் அவனோடு புலக்கற்பாலே மல்லேம்' என்று வாயில் நேர்ந்தார்க்கு ஊரனது மாலையும் தோளும் அவ்விடத்து வளைத்துவைத்து 'வேண்டினார் கொள்ள அமையும். யான் மன்னனைப் பரத்தையர்க்கு உறுவரையாகக்கொடுத்தேன்' எனமறுத்துக் கூறாநிற்றல்.

௩௫௮. பள்ளியிடத் தூடல்-என்பது, வாயின் மறுத்த தலைமகள் ஆற்றாமையே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத்

தானாகிய தலைமகனோடு 'நின்னை இடைவிடாது நுகர்தற்கு முற்காலத்துத் தவத்தைச் செய்யாத தீவினையேனை நோவாது, இன்று இவ்வாறாகிய நின்னை நோவதென்னோ? அதுகிடக்க. நின் காதலிமார் புறமே கற்று நினக்குப் புதிதாகச் செய்த அப் புல்லுதலை யாம் செய்ய மாட்டேம். அதனால் எம்மைத் தொடாதே. எம் கலையை விடுவாயாக' எனக் கலவி கருதிப் புலவாநிற்றல்.

௩௫௯. செவ்வணிவிடுக்க வில்லோர்கூறல்--என்பது, இம் மார்பினைத் தாங்கித் தளராநின்ற மருங்குலையுடைய இவள் வருந்த, இவ்வாயத்தார் முன்னே, அப்பரத்தையர் மனைக்கண் இப்பேதை இக்குறியறிவிக்கச் செல்லாநின்ற இது நமக்கு மிகவும்இளிவரவுடைத்து' எனச் செவ்வணி விடுக்க விரையாநின்ற வில்லோர் தம்முட் கூறாநிற்றல்.

௩௬0. அயலறிவுரைத்தவ ளழுக்கமெய்தல்—என்பது, இல்லோர் செவ்வணி விடுக்க நினையா நிற்ப, 'அயலார்முன்னே இவளால் இக்குறியறிந்தவிடத்து ஒருத்தி நமக்குத்தரா நாம் அவனை எய்தும்படியாயிற்று நம்முடைய பெண்தன்மை' என அயலறிவுரைத்துத் தலைமகள் அழுக்கமுற்றுக் கூறாநிற்றல்.

௩௬௧. செவ்வணிகண்ட வாயிலவர்கூறல்—என்பது, தலைமகளிடத்து நின்றுஞ் செவ்வணிசெல்லக் கண்டு, 'நம் ஊரற்கு உலகியலாறு உரைப்பான் வேண்டி செம்மலரும் செம்பட்டும் செஞ்சாந்தும் நமது திருவையுடைய மனையின்கண் வந்து தோன்றின' எனப் பரத்தைவாயிலவர் தம்முண் மகிழ்த்துக் கூறாநிற்றல்.

௩௬௨. மனைபுகல்கண்ட வாயிலவர் கூறல்—என்பது, செவ்வணிகண்ட தலைமகன் பரத்தையிடத்தினின்றும் வந்து தடையின்றி மனைவயிற் புகுதாநிற்ப, 'பண்டு இரவும் பகலும் வாயில் பெறாது நின்றணங்கும் இக் காவலையுடைய கடையை இத்துணைக்காலத்திற் கழிந்து வாயிலின்றிப் புகுதாநின்றான், மனைக்கடன் பூண்டலான் இனிப் புலந்து அடங்காதார் ஒருவருமில்லை' எனத் தலைமகன் வாயிலவர் தம்முட் கூறாநிற்றல்.

௩௬௩. முகமலர்ச்சி கூறல்—என்பது, பரத்தையிற் பிரிந்த தலைமகன் செவ்வணி கண்டு வந்தானென்று சொல்லுமளவில் தலைமகளது கண்கள் சிவந்தன. அப்புலவி நோக்கத்தெதிர் காதலன் நோக்க, அச்சிவப்பு ஆறி முக மலர்ந்தமையை அவ்விடத்துக் கண்டவர் தம்முட் கூறாநிற்றல்.

௩௬௪. காலநிகழ் வுரைத்தல்—என்பது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனது ஆற்றாமையைத் தலைமகள் நீங்காதிருப்ப, வண்டேது மல்லிகைப் போதானும் ஆற்றானாய்ப் புகுதராநின்றான் 'இனி நீ புலக்கற் பாலையல்லை' என உழையர் கூறாநிற்றல்.

௩௬௫. எய்தலெடுத்துரைத்தல்—என்பது, பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன், பூப்பு நிகழ்ந்த கிழத்தியைப் புலவிதீர்த்து இன்புறப் பண்ணி எய்தலுற்று மகிழ்ந்தமையை அவ்விடத்துள்ளார் எடுத்துக் கூறாநிற்றல்.

௩௬௬. கல்வி கருதிப் புலத்தல்—என்பது, புலவி தீர்த்து இன்புறப் புணரப்பட்டு மயங்காநின்ற தலைமகள், பின்னும் ஒரு குறிப்பு வேறுபாடு கண்டு புலந்து, இப்பள்ளி

தனக்கவன் செய்த தலையளியை நினைந்து, இவ்வாறருளும் அருள் ஒரு ஞான்று பிறக்குமாமென உட்கொண்டு பொருமியழுது, பின்னுமவனோடு கலவி கருதிப் புலவா நிற்றல்.

௩௬௭. குறிப்பறிந்து புலந்தமை கூறல்—என்பது, புலவி தீர்ந்து கலுழ்ந்து புணர்ந்து தானும் அவனுமேயாய்ப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், பின்னும் ஒரு குறிப்பு வேறுபாடு கண்டு புலந்து, இப்பள்ளி பலரைப்பொரு்து என்று இழிய, 'இப்பொழுது இவள் இவ்வாறு இழிதற்குக் கருதிய குறிப்பு என்னைகொல்லோ?' என உழையர் தம் முட் கூறுநிற்றல்.

௩௬௮. வாயிலவர் வாழ்த்தல்—என்பது, 'செவ்வணி விடுக்கப் பூப்பியற் செவ்வி கெடாமல் மெலிவறிந்து இவளது பொலிவோடு வந்தமையான் இவன் மெய்யே தக்க வாய்மையன்' எனத் தலைமகனை வாயிலவர் வாழ்த்தா நிற்றல்.

௩௬௯. புனல்வரவுரைத்தல்—என்பது, 'தலைமகளுடன் மனைவயிற் றங்கி இன்புறுநின்றவனது தோள்களைப் பரத்தையர் பொருந்தி மகிழப் புதுப்புனல் வந்து பரந்தது. இனிப் புனலாட்டினுல் இவன் காதலி புலக்கும்போலும்' என வையத்தார் தம்முட் புனல்வரவு கூறுநிற்றல்.

௩௭௦. தேர்வரவு கண்டு மகிழ்ந்து கூறல்—என்பது, புனல்வரவு கேட்ட தலைமகன் புனலாட்டு விழவிற்குப் பரத்தையர் சேரிக்கட் செல்லாநிற்ப, 'இவனைப் புணர்தற்குத்தக்க தவத்தினை முற்காலத்தே செய்தீர்கள். இனிச் சென்று இவனது தோளிணையைத் தோய்மின்' எனத் தேர் வரவு கண்டு பரத்தையர் தம்முண் மகிழ்ந்து கூறுநிற்றல்.

ங எக. புனல்விளையாட்டிற்றம்முளுரைத்தல் — என்பது, தலைமகனுடன் புனலாடாநின்ற பரத்தையர் சேடிமார் அரமங்கையரைப் போலப் புனலாடா நின்ற அவ்வவரே என்று விளித்து 'நாமெல்லாம் இத்தன்மையேமாக வானரமங்கையர் என்று சொல்லும் வண்ணம் மற்றொருத்திவந்து இவனைத் திரித்துக்கொள்ளக் கொடுத்துப் பின் வருந்தாது முன்னுறக் காப்போம்' எனத் தம்முட் கூறாநிற்றல்.

ங எஉ. தன்னை வியந்துரைத்தல்—என்பது, சேடிமார் பின் வருந்தாது முன்னுறக் காப்பேமென்று தம்முட் கூறுவதனைக் கேட்டு, 'இவனை அமரப் புல்லும் பரத்தையர் மாட்டு இவனருள் செல்லாமல் விலக்கேனாயின், என் மாட்டு இவனைத் தந்து அழாநின்ற இவன் மனைக்கிழத்தியாகின்றேன்' எனப் பரத்தைத் தலைவி தன்னை வியந்து கூறாநிற்றல்.

ங எங. நகைத்துரைத்தல்—என்பது, பரத்தைத் தலைவி தன்னை வியந்து கூறினாளென்று கேட்ட தலைமகள், 'எங்கைச்சியார் தமக்கும் ஒரு தங்கைச்சியார் தோன்றின பொழுதே தம் இறுமாப்பொழியத் தம்முடைய இணைமுலைகளினது இறுமாப்பும் ஒழியப் புகாநின்றன. இதனையறியாது தம்மைத் தாம் வியக்கின்றதென்னோ!' எனப் பரத்தையை நோக்கி நகைத்துக் கூறாநிற்றல்.

ங எச. நாணுதல் கண்டு மிகுத்துரைத்தல்—என்பது, தலைமகனைப் பரத்தையர்வசம் புனலாடவிட்டுச் சூடுவாரின்றிச் செப்பின்கணிட் டடைத்துத் தமியே வைகும் பூப்போல்வாள் இஃது அவனுக்குத் தகாத பழியாமெனக் கருதி நாணி அதனை மறைத்திருந்தமை கண்ட தோழி

"இவளது கற்பும் நலனும் நல்ல பகுதியையுடையனவா யிருந்தன' என அவள் நலத்தை மிகுத்துக் கூறுநிற்றல்.

கஎரு. பாணன் வரவுரைத்தல்—என்பது, நாயோடு தனியிருந்து வருந்தாநின்ற தலைமகளுக்கு இராப்பொழுதின் கட் சென்று திசையைக் கடக்கும் வாவல் இரைதேரும் காலம் அன்மையாற் பகற்பொழுதின்கண் உறையும் மரம் போலும் தமியோமை யறியாது விறலியும் பாணனும் நம் வேந்தற்குத் துயிலெழும் மங்கலம் பாட வந்து நின்றார்' எனத் தோழி பாணன் வரவு கூறுநிற்றல்.

கஎசு. தோழியியற்பழித்தல்—என்பது, பாணன் வரவுரைத்த தோழி, 'இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால், எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந்திலன்' எனத் தலைமகனை யியற்பழித்துக் கூறுநிற்றல்.

கஎஎ. உழையரியற்பழித்தல்—என்பது, தோழி தலைமகனை யியற்பழித்துக் கூறுநிற்பக் கேட்டு, 'தன் மாட்டு அன்புடை நெஞ்சத்தையுடைய இவள் பேதுற இதற்குப் பிரியாமையின் வயலூரன் வரம்பிலன்' என உழையர் அவனை இயற்பழித்துக் கூறுநிற்றல்.

கஎஅ. இயற்பட மொழிதல்—என்பது, தலைமகனை இயற்பழித்தவர்க்கு, 'அன்று நம் பொருட்டாக நம் புனத்தின் கண்ணே மாந்தழையேந்திவந்தார் இன்று என் நெஞ்சத்தின் கண்ணார். அதுகிடக்க. மறந்து உறங்கினேனாயின் அமளியிடத்துவந்து என் மார்பகத்தைப் பிரியாதார், இத் தன்மையாரை நீங்கள் கொடுமை கூறுகின்றதென்னோ?" எனத் தலைமகள் அவனை இயற்பட மொழியாநிற்றல்.

௩எகூ. நினைந்துவியந்துரைத்தல்—என்பது, புனலாடப் பிரிந்து பரத்தையிடத் தொழுகாநின்ற தலைமகன், 'யான் தன்னை நினையாது வேறொன்றன்மேல் உள்ளத்தைச் செலுத்தும் வழியும் தான் என்னை நினைந்து என் உள்ளம் புகாநின்றாள். அவ்வாறன்றி யான் தன்னை நினையுந்தோறும், பள்ளத்துப் புகும் புனல்போல நிறுத்த நில்லாது என் மனத்தாளாகாநின்றாள். ஆதலாற் பிரிந்து ஈண்டிருத்தல் மிகவும் அரிது' எனத் தலைமகளை நினைந்து வியந்து கூறாநிற்றல்.

௩அ0. வாயில் பெறாது மகன்றிற நினைதல்—என்பது பரத்தையிற் பிரிந்து நினைவோடு வந்த தலைமகன் வாயிற்கணின்று, 'இத்தன்மையான் என்னை வந்து அணைகின்றிலன். யான் இனி வண்டுறையுங் கொங்கையை எவ்வாறு நண்ணுவது?' என்று வாயில் பெறாது மகன்றிறம் நினையாநிற்றல்.

௩அக. வாயிற்கணின்று தோழிக்குரைத்தல்—என்பது, வாயில்பெறாது மகன்றிற நினையாநின்ற தலைமகன், நல்ல நாட்டுப் பொலியும் மகளிர்தங் கண்ணிணையான் வந்த அச்சத்தால் வந்த மயக்கத்தால் உண்டாகிய வாட்டத்தை நீக்காத இவ்விரதம் யாதாம்?' என வாயில் வேண்டித் தோழிக்குக் கூறாநிற்றல்.

௩அஉ. வாயில் வேண்டித் தோழி கூறல்—என்பது, வாயில் வேண்டிய தலைமகனுக்கு, பண்டு நீர் வரும் வழியிடை வரும் ஏதமும் இருளும் எண்ணாது கன்றையகன்ற ஈற்றாவை யொத்து எம்மாட்டு வருதிர். இன்று எம் பொருந்தாதார் தெருவே அன்று எம்மாட்டு ஊர்ந்து வந்த தேர்

மேல் ஏறிப் போகாநின்றீர்! இதுவன்றோ எம்மாட்டு நும தருள்!' எனத் தோழி அவன் செய்தி கூறாநிற்றல்.

௩அ௩. தோழி வாயில் வேண்டல்—என்பது, தலைமகளுக்கு அவன் செய்தது கூறிச் சென்று, 'அன்று நம் புனத்தின் கண்ணே வந்து யானை கடிந்த விருந்தினர், தாம் தம் பெருமையை நினையாது இன்று நம் வாயிற்கண் வந்து, வேட்கைப் பெருக்கம் தம்மிடத்துச் சிறப்பநின்று ஒன்றும் வாய்திறக்கின்றிலர். இதற்கு யாம் செய்யுமாறு என்னோ?' எனத் தலைமகளைத் தோழி வாயில் வேண்டாநிற்றல்.

௩அ௪. மனையவர் மகிழ்தல்—என்பது, தோழி வாயில் வேண்டத் தலைமகள் துனித்த நோக்கங்கண்டு, ஓகை கொண்டு செல்லவேண்டிக் காதலன் வந்தானென்று சொல்லுமளவில் இவளுடைய காவியங் கண்கள் கழுநீர்ச் செவ்வியை வெளவுதல் கற்றன' என மனையவர் தம்முண் மகிழ்ந்து கூறாநிற்றல்.

௩அ௫. வாயின் மறுத்துரைத்தல்—என்பது, மனையவர் துனிகண்டு மகிழாநிற்ப, 'இவனை நமக்குத் தந்தபின்னர் நம்முடைய ஆயத்தார் முன்னே நம் காதலர் இன்று நம் கடையைக் கண்டார். இதுவன்றோ நம்மாட்டு அவர் அருள்' எனத் தோழிக்குத் தலைமகள் வாயின் மறுத்துக் கூறாநிற்றல்.

௩அ௬. பாணனொடு வெகுளுதல்—என்பது, தோழிக்கு வாயின் மறுத்த தலைமகள், 'நின்னிடத்து அவர் நீங்காத அருள் பெரியரென்று நீ சொல்ல வேண்டுமோ? அது கிடக்க. கொற்சேரியில் ஊசி விற்றுப் புலையா, எம் இல்லத்து நின்னுடைய நல்ல நல்ல பொய்யைப் பொருந்தி

நிற்கலுற்றோ நீ போந்தது?" என வாயில்வேண்டிய பாணனோடு வெகுண்டு கூறாநிற்றல்.

௩௮௭. பாணன் புலந்துரைத்தல்—என்பது, தலைமகள் வெகுண்டுரையா நிற்ப, 'நின் புருவம் நெரிய, வாய் துடிப்ப என்னை எறிதற்குக் கல் எடுக்கவேண்டா: நினது கரியகண்களின் சிவப்பு ஆற்றுவாயாக. நீ வெகுளப்படுவதன்று. நினக்குப் பல்லாண்டு செல்வதாக. யான் வேண்டியவிடத்துப் போக நின் அடியை வலங்கொள்ளாநின்றேன்' என வாயில் பெறாமையிற் பாணன் புலந்து கூறாநிற்றல்.

௩௮௮. விருந்தோடு செல்லத் துணிந்தமை கூறல்—என்பது, வாயில் பெறாது பாணன் புலந்து நீங்காநிற்ப, 'யாவர்க்கும் வாயில் நேராது வெகுண்டுரைத்தலால், தழல்வேல்போல மிளிர்ந்து முத்தம் பயக்கும் இவளுடைய கண்கள் விருந்தொடு வந்தான் என்று சொல்லுமளவிற் பண்டை நிறமாகிய கருங்குவளையது செவ்வி பரந்த; என்னை, மனையறக் கிழத்தியோ?' என இல்லோர் தம்முட் கூறாநிற்றல்.

௩௮௯. ஊடல் தணிவித்தல்—என்பது, விருந்தேற்றுக்கொண்ட தலைமகளுழைச்சென்று, 'நம்முடைய தோன்றலைத் தனக்குத் துணையாகக்கொண்டு வந்து தோன்றுதலான், நினதுளத்துக் கவற்சியை ஒழிந்து இனி நம் அரசற்குக் குற்றேவல் செய்வாயாக' எனத் தோழி ஊடல் தணிவியாநிற்றல்.

௩௯௦. அணைந்தவழி யூடல்—என்பது, தோழியால் ஊடல் தணிவிக்கப்பட்டுப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், 'நீ செய்கின்ற இதனை அறியின் நின் காதலிமார் நின்னை வெகுள்வர். அதுகிடக்க, யாம் மேனி முழுதும் சிறவுறு

னுண்டாக்கப்பட்ட பால் புலப்படும் தன்மையை உடையேம். அதன்மேல் யாமும் நீ செய்கின்ற இக் கள்ளத்தை விரும்பேம். அதனால் எம் காலைத் தொடாதொழி. எம் கையை விடுவாயாக' எனத் தலைமகன் றன்னை அணைந்தவழி ஊடாநிற்றல்.

௩௯௧. புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தல்—என்பது, அணைந்தவழி ஊடாநின்ற தலைமகள் ஊடல் தீராநின்ற தலைமகனோடு 'இவர் செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம். பலருமறிய ஒருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல என் மனையின்கண் இவர் வந்து நிற்கின்ற இது எனக்குப் பொறுத்தலரிது' எனத் தணிக்கத் தணியாது பரத்தையைப் புனலாட்டுவித்தமை கூறிப் புலவாநிற்றல்.

௩௯௨. கலவிகருதிப் புலத்தல்—என்பது, புனலாட்டுவித்தமை கூறிப் புலவாநின்ற தலைமகள், ஊடல் தீர்க்கநுதலும் தோளும் முதலாயினவற்றைத் தைவந்து வருடித் தலையளி செய்யாநின்ற தலைமகனோடு, 'எம்முடைய சிறிய இல்லின்கண் வந்து அன்று நீயிர் செய்த தலையளி எங்கட்கு அன்று வேண்டுதுமாயினும், இன்று உமது திருவருள் எங்கட்கு நீயிர் வந்த இத்துணை அமையும். வேறு நீயிர் தலையளிசெய்யவேண்டுவதில்லை' எனக் கலவி கருதிப் புலவாநிற்றல்.

௩௯௩. மிகுத்துரைத்தூடல்—என்பது, கலவி கருதிப் புலவாநின்ற தலைமகள் புணர்தலுறுநின்ற தலைமகனுடன் நீர் விழுமிய நாட்டு விழுமிய நல்லூர் விழுமிய குடியில் உள்ளீர். எம்போல்வாரிடத்து இவ்வாறு புணர்தல்

விரும்புதல் நமக்கு விழுமியவல்ல' என மிகுத்துரைத் தூடா நிற்றல்.

௧௬௪. ஊடனீடி வாடியுரைத்தல்—என்பது, தணிக் கத் தணியாது மிகுத்துரைத்துத் தலைமகள் மேன்மேலும் ஊடாநிற்ப, 'அன்று அம்மலையிடத்துத் தன்னையெய்து தற்கோர் உபாயமின்றி வருந்தாநிற்ப, யானும்யும் வண்ணம் தன் இணைமலர்க் கண்ணினது இனிய நோக்கத்தைத் தந் தருளி என்னைத் தன்வயமாக்கிய நம் பெண்ணமுதம் அது வன்று. இது நம்மை வருத்துவதோர் மாயமாம்' எனத் தன் நெஞ்சிற்குச்சொல்லி ஊடனீடத் தலைமகன் வாடா நிற்றல்.

௧௬௫. துனியொழிந்துரைத்தல்—என்பது, ஊடல் நீடலால், தலைமகனது ஆற்றா வாயில்கண்ட தலைமகள் 'அன்று நம் குன்றிடத்து மிக்க இருளின்கண்ணே அரி திரண்டு யானைவேட்டஞ் செய்யும் அதரகத்துத் தமது வேலே துணையாக வந்து இயல்பைப் பொருந்திய அன்பை நமக்குத் தந்தவர்க்கு இன்று நாம் உடம்படாது நிற்கும் இந் நிலைமை என்னும்?' எனத் துனியொழிந்து அவனோடு புணர்ச்சிக் குடன்படாநிற்றல்.

௧௬௬. புதல்வன்மேல் வைத்துப் புலவிதீர்தல்—என் பது, துனியொழிந்துக் கூடிப் பிரிந்தவழிப் பின்னும் பரத் தைமாட்டுப் பிரிந்தான் என்று கேட்டுப் புலந்து வாயின் மறுக்க, வாயிற்கணின்று விளையாடாநின்ற புதல்வனை எடுத் தணைத்துத் தம்பலமிட்டு முத்தங்கொடுத்து அது வாயி லாகக்கொண்டு தலைமகன் செல்லாநிற்ப, அவன் வாயிற் றம் பலந் தன் மெய்யிற்படுதலான், 'எல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டுவந்தோ நீ எம்மைக் கொண்டாடு

வது! அது கிடக்க. இதனை நினக்குத் தந்தவாறு சொல்லு வாயாக' எனப் புதல்வன்மேல்வைத்துத் தலைமகள் புலவி தீராநிற்றல்.

௩௯௭. கலவியிடத்தூடல்—என்பது; புதல்வனை வாயிலாகப் புக்குப் புலவிதீர்த்துப் புணர்தலுறாநின்ற தலை மகனைத் தலைமகள் ஒரு காரணத்தால் வெகுண்டு, அவன் மார்பகத்துதைப்ப, அவ்வெகுடல்தீரவேண்டி அவன் அவள் காலைத் தன்றலைமேல் ஏற்றுக்கொள்ள, அது குறையாக அவள் புலந்து அழாநின்றமையை அவ்விடத்து உழையர் தம்முட் கூறாநிற்றல்.

௩௯௮. முன்னிகழ்வுரைத் தூடறீர்த்தல்—என்பது, கலவியிடத் தூடாநின்ற தலைமகளுக்கு; 'யாம் கொடிய நெறியைச் சென்று சிறிய ஊரின்கண் மரையதட் பள்ளி யின் இச் செறிந்த மெல்லிய மார்பகம் என் மார்பிடை வந்து அடர்க்கத் தங்கிய சிறிய துயிற்கு மாறுகண்டிலம். அதனை நீ உள்ளியும் அறிதியோ' என முன்னிகழ்வுரைத்துத் தலை மகன் அவளை ஊடல் தீராநிற்றல்.

௩௯௯. பரத்தையைக் கண்டமைகூறிப் புலத்தல்—என்பது, முன்னிகழ்வுரைத்து ஊடல்தீர்த்து இன்புறப் புணரப்பட்ட தலைமகள் 'பிறர்க்கும் நீ இவ்வாறு இன்பஞ் செய்தி' என்றுகூற 'நின்னையொழிய, யான் வேறொருத்தி யையும் அறியேன்' என்ற தலைமகனுக்கு, 'நின்பரத்தை போகாநின்றவள் நம் வாயிற்கணின்று தேருருட்டி விளை யாடாநின்ற புதல்வனைக் கண்டு, நின்மகனென்று ஐயுற்றுத் தழுவ, "நீ ஐயுறவேண்டா. அவன் உன்மகன். உறவுமெய் ாகிய உறவே. ஈதும் உனதில்லமே. ஈண்டுவருவாயாக"

என்று யான் கூற, அதுகேட்டுத் தான் நாணிப்போயினாள். யான் அவளை அறியேனாக நீ மாயங் கூறவேண்டுவதில்லை எனத் தான் பரத்தையைக் கண்டமை கூறிப் பின்னும் அவனொடு புலவாநிற்றல்.

௪௦௦. ஊதியமெடுத்துரைத் தூடல் தீர்த்தல்—என்பது, பரத்தையைக் கண்டமைகூறிப் புலந்து வேறுபட்ட தலைமகளுக்கு, ' இத்தன்மையனாய் யாவர்க்கும் ஊதியமாகலின் அன்பானன்றி அருளாற் பரத்தையர்க்குந் தலையளிசெய்ய வேண்டுமன்றே? புறப்பெண்டிரைப்போல யாம் அவனோடு புலக்கற்பாலே மல்லேம். அவன் வரும்பொழுது எதிர்தொழுதும், போம்பொழுது புறந்தொழுதும், புதல்வனைப் பயந்திருக்கையன்றோ நமக்குக் கடனாவது' எனத் தோழி தலைமகளது ஊதிய மெடுத்துரைத்து அவளை ஊடல்தீர்த்து அவனோடு பொருந்தப் பண்ணாநிற்றல்.

திருக்கோவையார்

# செய்யுண் முதற்குறிப் பகராதி.


| செய்யுள் | | பக்கம். |
|---|---|---|
| அகலிடந்தா | ... | ௧௫ |
| அகல்கின்ற | ... | ௩ |
| அகிலின் புகை | ... | ௫௭ |
| அக்கின்ற | ... | ௨௫ |
| அக்குமரவு | ... | ௩௭ |
| அஞ்சார் | ... | ௧௨௫ |
| அடற்களி | ... | ௯௮ |
| அடிச்சந்த | ... | ௨௮ |
| அணியுமமிழ்து | ... | ௩ |
| அந்தியின்வாய் | ... | ௩௬ |
| அப்புற்ற | ... | ௧௧௮ |
| அயர்ந்தும் | ... | ௯௫ |
| அரமங்கைய | ... | ௧௨௩ |
| அருந்தும் | ... | ௯௧ |
| அருந்தோழிந்தன | ... | ௧௦௮ |
| அலராயிரம் | ... | ௬௧ |
| அழுந்தேன் | ... | ௫௭ |
| அளவியை | ... | ௫ |
| அளிநீடள | ... | ௪௩ |
| அளியமன்னும் | ... | ௨௩ |
| அறுகாணிறை | ... | ௪௪ |
| அற்படு | ... | ௧௧௪ |
| அன்பனை | ... | ௭௫ |
| அன்புடை | ... | ௧௨௪ |
| ஆண்டிலெடு | ... | ௮௩ |
| ஆரத்தழை | ... | ௩௩ |
| ஆரம்பரந்து | ... | ௬௨ |
| ஆலத்திணை | ... | ௧௦ |
| ஆவாவிரு | ... | ௨௬ |
| ஆவியன்னாய் | ... | ௧௪ |
| ஆழமன்னே | ... | ௨௨ |
| ஆழிதிருத்தும் | ... | ௬௩ |
| ஆழியொன் | ... | ௧௧௨ |
| ஆளரிக்கும் | ... | ௭௬ |
| ஆறார் | ... | ௧௩௦ |
| ஆனந்தமா | ... | ௫௧ |
| ஆனந்தவெ | ... | ௧௦௧ |
| இங்கயலென் | ... | ௭௦ |
| இயன்மன்னு | ... | ௧௨௯ |
| இரதமுடை | ... | ௨௦ |
| இரவணையு | ... | ௧௧௯ |
| இருங்களி | ... | ௧௯ |
| இருந்துதி | ... | ௯௯ |
| இளையாளிவளை | ... | ௯௭ |
| இறவரை | ... | ௮௬ |
| இறுமாப் பொழியும் | ... | ௧௨௩ |
| இன்னறவார் | ... | ௫௯ |
| ஈசற்கியான் | ... | ௩௮ |
| ஈண்டொல்லை | ... | ௭௩ |
| ஈவிளையாட | ... | ௪௬ |
| உடுத்தணி | ... | ௧௧௭ |
| உடைமணி | | ௧௨௭ |
| உணர்ந்தார்க் | ... | ௪ |
| உயிரொன்று | ... | ௭ |
| உருகுதலை | ... | ௩௭ |
| உருப்பணையன்ன | ... | ௪௮ |
| உளமாய்வகை | ... | ௯ |
| உள்ளப்படுவன | ... | ௩௧ |
| உள்ளுருகி | ... | ௬௩ |
| உறங்கண் | ... | ௩௪ |
| ஊர்வாயொழிவாய் | ... | ௨௯ |
| எயிற்குல | ... | ௧௩ |
| எலும்பால | ... | ௬௮ |
| எழில்வாயிள | ... | ௩௪ |
| எழுங்குலை | ... | ௮௪ |
| எளிதன்றி | ... | ௧௮ |
| என்கடை | ... | ௯௮ |
| என்னறி | ... | ௧௮ |
| ஏர்ப்பின்னை | | ௯௧ |

| செய்யுள் | | பக்கம். |
|---|---|---|
| ஏழுடையான் | ... | ௪ |
| ஏறும்பழி | ... | ௪௦ |
| ஏனற்பசுங் | ... | ௫௫ |
| ஐயுறவாய் | ... | ௧௩௧ |
| ஒராகமிரண் | ... | ௬௭ |
| ஒருங்கட | ... | ௨௦ |
| ஓங்குமொரு | ... | ௫௫ |
| கடந்தொறும் | ... | ௮௫ |
| கணியார் | ... | ௫௦ |
| கண்கடம்மாற் | ... | ௭௫ |
| கண்ணுழையாது | ... | ௧௧௪ |
| கதிர்த்தகை | ... | ௧௩௦ |
| கம்பஞ்சிவந்த | ... | ௭௨ |
| கயலுள்வே | ... | ௧௩ |
| கயல்வந்த | ... | ௧௨௫ |
| கருங்கண் | ... | ௧௯ |
| கருங்கழி | ... | ௬௪ |
| கருங்குவளை | ... | ௧௦௯ |
| கருந்தினை | ... | ௯௩ |
| கருப்பினை | ... | ௧௦௬ |
| கலராயினர் | ... | ௮௬ |
| கலைக்கிழகல் | ... | ௨௧ |
| கவலங்கொள் | ... | ௧௨௮ |
| கழிகட்டலை | ... | ௮௫ |
| கழிகின்ற | ... | ௨௮ |
| கழைகாண்டலுஞ் | ... | ௩௯ |
| களிறுற்ற | ... | ௮௫ |
| கள்ளினமார்த் | ... | ௯௭ |
| கற்பாமதிற் | ... | ௧௦௨ |
| கற்றிலகண் | ... | ௩௫ |
| கனலூர் | ... | ௧௨௩ |
| கனைகடற்செய்த | ... | ௪௯ |
| காகத்திரு | ... | ௨௬ |
| காமரை | ... | ௫௬ |
| காம்பிணையாற் | ... | ௧௪ |
| காயமு மாவியு | ... | ௭௧ |
| காய்சின | ... | ௨௭ |
| காரணி | ... | ௧௩௧ |
| கார்த்தரங்கந் | ... | ௬௩ |
| காவிநின் | ... | ௧௩ |
| கானமர் குன்றர் | ... | ௯௧ |
| குடிக்கலர் | ... | ௯௬ |
| குயிலிதன் | ... | ௯௪ |
| குயிலை | ... | ௧௧ |
| குராப்பயில் | ... | ௧௨௦ |
| குருநாண் | ... | ௧௬ |
| குவவின | ... | ௩௮ |
| குவளைக்களத் | ... | ௧௨ |
| குவளைக்கருங்கட் | ... | ௧௯ |
| குறப்பாவை | ... | ௭௦ |
| குறைவிற்குங் | ... | ௮௯ |
| குன்றங்கி | ... | ௯௦ |
| கூடாரரணெரி | ... | ௫௬ |
| கூம்பலங் | ... | ௫ |
| கூளிநிரை | ... | ௫௩ |
| கூற்ருயின | ... | ௧௨௬ |
| கேழேவரை | ... | ௯ |
| கொடித்தேர் | ... | ௭௪ |
| கொடுங்கால் | ... | ௧௨ |
| கொல்லாண் | ... | ௧௨௭ |
| கொழுந்தாரகை | ... | ௪௪ |
| கொன்னுனை | ... | ௭௮ |
| கோங்கிற் | ... | ௬ |
| கோம்பிக் | ... | ௯ |
| கோலத்தனிக் | ... | ௧௬ |
| கோலித்திகழ் | ... | ௧௦௫ |
| சங்கந்தரு | ... | ௩௧ |
| சிந்தாமணி | ... | ௫ |
| சிலம்பணி | ... | ௧௯ |
| சிலைமலி | ... | ௧௩௦ |
| சிவந்தபொன் | ... | ௧௨௦ |

| செய்யுள் | பக்கம். |
|---|---|
| சிலையொன்று ... | ௩௬ |
| சிறப்பிற்றிகழ் ... | ௧0௮ |
| சிறூர்கவண் ... | ௮௪ |
| சிறுகட் ... | ௧0௩ |
| சிறுவாளுகிர் ... | ௧௧௧ |
| சிறைவான் ... | ௮ |
| சிற்பந்திகழ் ... | ௧00 |
| சீரளவில்லா ... | ௧0௧ |
| சீரியலாவி ... | ௯௯ |
| சுணங்குற்ற ... | ௯௪ |
| சுத்தியபொக் ... | ௮௧ |
| சுருடுரு ... | ௧௧௧ |
| சுரும்பிவர் ... | ௮௩ |
| சுரும்புறு ... | ௧௧௮ |
| சுரும்புறுநீலங் ... | ௫௭ |
| சுழியாவரு ... | ௮௭ |
| சுற்றம்பல ... | ௧௧௪ |
| சுற்றினவீழ் ... | ௧0௬ |
| சுற்றுஞ் சடை ... | ௪௭ |
| சூளாமணி ... | ௧௭ |
| சூன்முதிர் ... | ௧௨௨ |
| செந்தார ... | ௧௨௮ |
| செந்நிற் ... | ௨௫ |
| செம்மலராயிரம் ... | ௫௩ |
| செய்குன்று ... | ௭௬ |
| செய்ம்முக ... | ௧௧௮ |
| செவ்வாய் ... | ௧௨௧ |
| செழுங்கார் ... | ௫௪ |
| செழுநீர்மதி ... | ௪௪ |
| செழுமிய ... | ௧௨௯ |
| சென்றூர் ... | ௯௫ |
| சேணிற் ... | ௯ |
| சேணுந்திகழ் ... | ௧௧௨ |
| சேயேயென ... | ௧௨௨ |
| சேறூன்றிக ... | ௧௨௮ |

| செய்யுள் | பக்கம். |
|---|---|
| சொற்பாலமு ... | ௪ |
| சோர்த்துன் ... | ௫௯ |
| தணியுறப் ... | ௧௧௯ |
| தலைப்படு ... | ௧0 |
| தவஞ்செய் ... | ௧௧௯ |
| தவளத்த ... | ௩௯ |
| தழங்குமரு ... | ௪௫ |
| தழுவின கையிறை ... | ௭௭ |
| தள்ளிமணி ... | ௪௫ |
| தாதிவர் ... | ௧௫ |
| தாதேய் ... | ௩0 |
| தாமேதமக் ... | ௭௭ |
| தாயிற்சிறந்தன்று ... | ௭0 |
| தாருறு ... | ௬0 |
| தாரொன்ன ... | ௨0 |
| தாழச்செய் ... | ௧௬ |
| திக்கினில ... | ௧௨௪ |
| திருந்தேனு ... | ௧௨௯ |
| திருமாலறி ... | ௧0௮ |
| திருவளர் ... | ௨ |
| திணைவளங் ... | ௪௨ |
| தீமேவிய ... | ௧௧௩ |
| தெங்கம்பழங் ... | ௩௬ |
| தெண்ணீரணி ... | ௧௧௪ |
| தெய்வம் ... | ௧00 |
| தெவ்வரை ... | ௪0 |
| தெளிதரற்கா ... | ௧0௭ |
| தெளிவளர் ... | ௬ |
| தெள்வன் ... | ௮0 |
| தெள்ளம்பு ... | ௧௨௫ |
| தென்மாத்திசை ... | ௧௧௨ |
| தேமாம்பொழில் ... | ௮௭ |
| தேமென்கிளவி ... | ௩௩ |
| தேவரிற் ... | ௬ |
| தேவாசுர ... | ௧௧௮ |

| செய்யுள் | பக்கம். | செய்யுள் | பக்கம். |
|---|---|---|---|
| தேவியங்க ... | ௧௨௬ | பரிவுசெய் ... | ௫0 |
| தேன்வண்டு ... | ௧௨௫ | பருங்கண் ... | ௨௫ |
| தேன்றிக்கிலங் ... | ௧0௭ | பல்விலனுக ... | ௨௧ |
| தொண்டின ... | ௧00 | பறந்திருந்தும்பர் ... | ௭௩ |
| தொத்தின் ... | ௪௩ | பற்றென்றிலார் ... | ௬0 |
| தோரலாக்கரி ... | ௩௯ | பனிச்சந்திர ... | ௭௨ |
| நடலும் ... | ௨௮ | பனித்துண்டஞ் ... | ௪௬ |
| நந்திவா ... | ௫௬ | பனைவளர் ... | ௫௪ |
| நரல்வேயின ... | ௪௨ | பாசத்தளை ... | ௪0 |
| நல்லாய் ... | ௯0 | பாணிகர் ... | ௬௨ |
| நல்வினை ... | ௧0 | பாப்பணியோன் ... | ௯௮ |
| நறமனை ... | ௩௫ | பாயும்விடையரன் ... | ௩ |
| நறைக்கண் ... | ௮௬ | பாயும்விடையோன் ... | ௮௧ |
| நற்பகற்சோமன் ... | ௫௮ | பாலொத்த ... | ௮0 |
| நாகந்தொழ ... | ௫௮ | பாவியை ... | ௧௧௫ |
| நாய்வயினு ... | ௧௧௩ | பிணையுங்கலையும் ... | ௭0 |
| நிருத்தம் ... | ௨௨ | பிரசந்திகழு ... | ௯௯ |
| நில்லாவளை ... | ௬௫ | பிரியாமை ... | ௧0௨ |
| நிழற்றலை ... | ௭௧ | பிரியாரென ... | ௧௧௨ |
| நினைவித்து ... | ௪௯ | பிழைகொண் ... | ௨௩ |
| நின்னுடை ... | ௧௧ | புகழும்பழியும் ... | ௬௨ |
| நீகண்டனை ... | ௩0 | புணர்ப்போன் ... | ௭ |
| நீங்கரும் ... | ௧௭ | புயலன்றலர்சடை ... | ௮0 |
| நெருப்புற ... | ௧0௪ | புயலோங் ... | ௧0௮ |
| நேயத்ததாய் ... | ௧௪ | புயல்வள ... | ௪௨ |
| பகலோன் ... | ௬௪ | புரங்கடந்தான் ... | ௩௧ |
| பகன்றுமலை ... | ௬௨ | புரமன் ... | ௧0௯ |
| படமாசுண ... | ௪௩ | புலவித்தி ... | ௧௨௧ |
| படையார் ... | ௪௭ | பூங்கணைவேளை ... | ௬௧ |
| பணங்களஞ் ... | ௭௯ | பூங்கயிலாயப் ... | ௮௨ |
| பணந்தாழ் ... | ௧௨ | பூங்கணையார் ... | ௮ |
| பணிவார் ... | ௧0௯ | பூங்குவளை ... | ௧௧௯ |
| பண்டாலியலும் ... | ௩௭ | பூண்பதென் ... | ௧0௭ |
| பரம்பயன் ... | ௮௪ | பூரணபொற் ... | ௯௭ |
| | | பெற்றேன் றெடுங் ... | ௭௮ |

| செய்யுள் | பக்கம். |
|---|---|
| பேணத்திருத்திய ... | ௭௩ |
| பேதைப் பருவம் ... | ௮௦ |
| பைந்நாணரவன் ... | ௨௯ |
| பைவா யரவரை ... | ௫௮ |
| பைவாயரவு ... | ௫௮ |
| பொட்டணி ... | ௧௦௦ |
| பொதுவினிற் ... | ௫௦ |
| பொய்யுடை ... | ௧௭ |
| பொருப்பார்க் ... | ௪௯ |
| பொருளா ... | ௨௭ |
| பொழிலிடை ... | ௧௩ |
| பொன்னணி ... | ௧௧௩ |
| பொன்னனை ... | ௪௪ |
| பொன்னார் ... | ௩௨ |
| பொன்னிவ ... | ௧௦௫ |
| பொன்னு மணியும் ... | ௬௪ |
| போதகுலா ... | ௧௦௫ |
| போதோ ... | ௨ |
| மடுக்கோ ... | ௨௩ |
| மணியக் கணியும் ... | ௬௭ |
| மதுமலர்ச் ... | ௯௨ |
| மத்தகஞ் ... | ௩௮ |
| மத்தக்குழி ... | ௧௨௭ |
| மயிலெனப் ... | ௭௬ |
| மயின்மன்னு ... | ௧௧௫ |
| மருந்தாரம் ... | ௫௨ |
| மலரைப் ... | ௧௨௧ |
| மலவன் ... | ௫௪ |
| மற்பாய் ... | ௭௧ |
| மனக்களி ... | ௯௬ |
| மண்செய்த ... | ௯௨ |
| மன்னவன் ... | ௧௦௧ |
| மன்னுந்திரு ... | ௪௬ |
| மாடஞ்செய் ... | ௪௫ |
| மாட்டியன் ... | ௯௪ |
| மாதிடங்கொண் ... | ௪௮ |
| மாதுற்ற ... | ௫௯ |
| மாவைவர் ... | ௬௯ |
| மாற்றேனென ... | ௫௨ |
| மிகைதணித் ... | ௧௦௪ |
| மின்போல் ... | ௭௫ |
| மின்றங்கிடை ... | ௭௫ |
| மின்றுன்னிய ... | ௧௨௯ |
| மின்னொத்திடு ... | ௮௨ |
| மின்னங்கலருஞ் ... | ௫௯ |
| மீண்டாரென ... | ௮௨ |
| மீள்வது ... | ௮௨ |
| முறுவலக் ... | ௭௭ |
| முனிதருமன்னை ... | ௯௫ |
| முனிவரு ... | ௧௧௦ |
| முன்னுங்கவிட ... | ௭௯ |
| முன்னுமொருவர் ... | ௫௫ |
| முன்னேனருண் ... | ௭௪ |
| முன்னேன் ... | ௭௨ |
| முன்றகர்த் ... | ௩௩ |
| மூப்பானினை ... | ௧௦௩ |
| மூவர்நின்றே ... | ௧௧௧ |
| மூவறழீஇ ... | ௬௪ |
| மெய்யே ... | ௨௪ |
| மெல்லியல் ... | ௬௯ |
| மேவியர் ... | ௩௨ |
| மைகொண்ட ... | ௧௨௭ |
| மைதயங்கு ... | ௬௯ |
| மைத்தழை ... | ௩௬ |
| மையார் ... | ௮௭ |
| மைவார் ... | ௨௪ |
| மொய்யென் ... | ௯௨ |
| மோட்டங் ... | ௫௪ |
| யாயுந்தெறு ... | ௯௫ |
| யாழார்மொழி ... | ௯௪ |
| யாழியன் ... | ௭௮ |

| செய்யுள் | பக்கம். |
|---|---|
| யாழின் ... | ககரு |
| யாழுமெழுதி ... | உஅ |
| வடிக்கணிவை ... | கஉ |
| வடிவார் ... | சஅ |
| வடுத்தன ... | அகூ |
| வடுத்தான் ... | எஎ |
| வண்டலுற்றே ... | கூசா |
| வந்தாய் ... | சாஉ |
| வந்தான் ... | கஉO |
| வரிசேர் ... | ருO |
| வருங்குன்ற ... | சா |
| வருட்டிற் ... | கூO |
| வருவன ... | கூரு |
| வரையன் ... | ருரு |
| வல்சியினெ ... | அஅ |
| வழியுமது ... | சஎ |
| வழுவாவியல் ... | சகூ |
| வளருங்கதி ... | சாரு |
| வளைபயில் ... | ச |
| வறியாரிரு ... | ககO |
| வாரிக்களிற் ... | அஅ |
| வாழும்படி ... | கOசா |
| வானக்கடி ... | ககக |
| வானுழை ... | சக |
| வான்றேய் ... | அசா |
| விசும்பினுக் ... | ருஉ |

| செய்யுள் | பக்கம். |
|---|---|
| விசும்புற்ற ... | சாஅ |
| விடலையுற்று ... | எசா |
| விண்ணிறந்தார் ... | கூஅ |
| விண்ணுக்குமேல் ... | ருசா |
| விண்ணுஞ் ... | அரு |
| விண்ணை ... | உஎ |
| விண்டலை ... | சாO |
| விதியுடை ... | கூசா |
| வியந்தலை ... | கஉகூ |
| விலங்கலை ... | கO |
| வில்விசை ... | கஉக |
| வில்லலைப் ... | கஉஉ |
| விழியாற் ... | கக |
| விறலியும் ... | கஉச |
| வின்னிற வாணுதல் ... | உக |
| வீதலுற்றார் ... | கOஉ |
| வெதிரேய் ... | அக |
| வென்றவர் ... | கூரு |
| வேயாது ... | கஉரு |
| வேயின தோளி ... | எகூ |
| வேயினமெ ... | கூரு |
| வேய்தந்த ... | சகூ |
| வேலன்பு ... | கூரு |
| வைம்மலர் ... | எஅ |
| வைவந்த ... | எரு |


Printed by S. Murthy and Co., at the 'Kapalee Press' 305, Thumbu Chetty St., Madras.